LB:4:6
N51
101719

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Madras Government.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1952
MADRAS

*General Editor :*
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Govt. Oriental Manuscripts Library,
MADRAS.

No. XXXVI.

# சரபேந்திர
# வைத்திய முறைகள்
## (நீரிழிவு சிகித்சை)

LB:4:6
N51

101719

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 38.

# சரபேந்திர வைத்திய முறைகள்

## (நீரிழிவு சிகித்ஸை)

பதிப்பாசிரியர்கள் :
ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி B. A.,
ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதிமஹால்.
Dr. S. வெங்கடராஜன் L. I. M. (Regd.),
ஆயுர்வேத பண்டிதர், ஸரஸ்வதிமஹால்.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக
கௌரவ கார்யதரிசி,
ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களால்
வெளியிடப்பட்டது

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்.

விலை சாதா பைண்டு ரூ. 4    காலிகோ பைண்டு ரூ. 4-8

# PREFACE.

This volume is the 7th in the series of "SARABENDRA VAIDYA MURAIGAL" which contains the tested recipes selected by Raja Serfoji II of Tanjore (1798—1832), the scholar king, in his medical institute called Dhanvantari Mahal. It contains the recipes for Diabetes and other urinary diseases. It is hoped that doctors and patients will derive the same benefit from the recipes in this publication, as from the recipes in the volumes already published.

The editors of this volume have already won the appreciation of the public by their work in the prior publications in this series; and they have devoted the same attention to this work as to its predecessors. In particular, the introductory note on the causes and symptoms of Diabetes and other urinary diseases, in which the standard authorities in Sanskrit and Tamil have been collected and presented clearly, will, it is hoped, be read with profit by practitioners of Indian and other systems of medicine.

Our thanks are due to the Government of Madras for their timely grants that have enabled us to publish this and other valuable manuscripts of this Library.

Saraswathi Mahal,
Tanjore,
Dated 14-12-51.

S. GOPALAN,
*Honorary Secretary.*

# முகவுரை.

'சரபேந்திர வைத்திய முறைகள்—நீரிழிவு சிகித்ஸை' என்ற இவ்வெளியீட்டில் கலை விஞ்ஞான வளர்ச்சியிலேயே தன் வாணாளையும் பொருளையும் செலவிட்ட தஞ்சை சரபோஜி மன்னர் (1798—1832) தமது "தன்வந்தரி மஹால்" என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் பரீக்ஷை செய்து, கைகண்டவைகளை மட்டும் தெரிந்தெடுத்து ஆஸ்தானத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு, செய்யுளாகச் செய்வித்த முறைகளில் நீரிழிவு முதலிய மூத்ர ரோகங்களுக்கான முறைகள் அடங்கியிருக்கின்றன. இதில் கண்ட முறைகளும் இதே தொகுதியில் இதுவரை வெளிவந்துள்ள முறைகளைப் போலவே அனுபவத்தில் நல்ல பலனை அளிக்கும் என்று நம்புகிறோம்.

இதுவரை வெளிவந்த சரபேந்திர வைத்திய முறை நூல்களைப்பதிப்பித்துப் பொதுஜனங்கள், பத்திரிகைகள் முதலியவர்களின் பாராட்டுதலைப் பெற்ற அதே பதிப்பாசிரியர்களால் இவ்வெளியீடும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. முகவுரையில் ப்ரமேகம் முதலிய மூத்ர ரோகங்களின் காரணம், குணாகுணங்கள் முதலியவைகளைப்பற்றி சம்ஸ்கிருதத்திலும், தமிழிலுமுள்ள அரிய நூற்பகுதிகளைத் திரட்டித் தெளிவாகக் கொடுத்திருப்பதை, நம் நாட்டு வைத்தியர்களும், மற்றவர்களும் வாசித்துப் பயன் பெறுவார்கள் என நம்புகிறோம்.

இவ்வெளியீட்டையும் இதுபோன்ற மற்ற அரிய வெளியீடுகளையும் பதிப்பிப்பதற்கான பொருளுதவி செய்துவரும் சென்னை சர்க்கார் அவர்களுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸரஸ்வதி மஹால்
தஞ்சாவூர்,
14—12—51.

S. கோபாலன்
கௌரவகாரியதரிசி.

# GENERAL INTRODUCTION
## TO THE
# Madras Government Oriental Series.

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Impo[illegible] manuscript libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10 Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are members of the Committee:

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.,
2. " R. P. Sethu Pillai, B.A., B.L.,
3. " C. M. Ramachandra Chettiar, B.A., B.L.,
4. Sri R. Krishnamoorthy, (Kalki)
5. Dr. N. Venkataramanayya, M.A., PH.D.,
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A., L.T.,
7. " V. Prabhakára Sastri,
8. " N. Venkata Rao, M.A.,
9. " H. Sesha Ayyangar,
10. " Masthi Venkatesa Ayyangar, M.A.,
11. " M. Mariappa Bhat, M.A., L.T.,
12. Dr. C. Achyuta Menon, B.A., PH.D.,
13. " C. Kunhan Raja, M.A., D. PHIL.,
14. " A. Sankaran, M.A., PH.D., L.T.,
15. Sri P. S. Rama Sastri,
16. " S. K. Ramanatha Sastri,
17. Dr. M. Abdul Haq, M.A., D. Phil. (Oxon),
18. Afzul-ul-Ulma Hakim Khader Ahamed,
19. Sri P. D. Joshi,
20. " S. Gopalan, B.A., B.L.,
21. " T. Chandrasekharan, M.A., L.T.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Marathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government in G.O. No. Mis. 2745 Education, dated



31--8--1949 and they decided to call these publications as the **"Madras Government Oriental Series,"** and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications.

The following manuscripts have been taken up for publication during the current year:

## "A" From the Government Oriental Manuscripts Library, Madras.

### TAMIL

1. Kappal Sattiram
2. Anubhava Vaidya Murai
3. Attanakolahalam
4. Upadesa Kandam
5. Colan Purva Pattayam
6. Konga Desa Rajakkal
7. Sivajnana Dipam
8. Sadasiva Rupam, with commentary.

### TELUGU.

1. Sangitaratnakaramu
2. Aushadha Yogamulu
3. Vaidya Nighantuvu
4. Dhanurvidya Vilasamu
5. Yoga Darsana Vishayamu
6. Khadga Lakshana Siromani.

## SANSKRIT.

1. Vishanarayaniyam
2. Bhargava Nadika
3. Hariharacaturangam
4. Brahmasutravrtti—Mitaksara
5. Nyayasiddhanta Thattvamrtam.

## MALAYALAM.

1. Garbha Cikitsa
2. a. Vastulakshanam
   b. Silpasastram
   c. Silpavishayam
3. Mahasaram
4. Kanakkusaram
5. Kriyakramam

## KANNADA.

1. Lokopakara
2. Rattamata
3. Asvasastram
4. a. Aushadhagalu
   b. Vaidyavishaya
5. Sangitaratnakara
6. Supasastra.

## ISLAMIC LANGUAGES.

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat.

---



# "B" From the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore.

## TAMIL.

1. Sarabhendravaidya Murai (Diabetes)
2. Do. (E N. & T.)
3. Konkanarsarakku Vaippu
4. Tiruccirrambalakovaiyar with Padavurai
5. Sarabhendra Vaidya Murai— (Anæmia & Jaundice)
6. Talasamudram
7. Bharatam
8. a. Pandikeli Vilasa Natakam
   b Pururava Cakravarti Natakam
   c. Madana Sundara Vilasa Natakam
9. Percy Macqueen's Collection in the Madras University Library on Folklore
10. Ramaiyan Ammanai
11. Sarabhendra Vaidya Murai — (Asthma, Cough and other lung diseases)

## TELUGU.

1. Kamandakanitisaramu
2. Taladasapranapradipika
3. Raghunatha Nayakabhyudayamu
4. Rajagopala Vilasamu
5. Ramayanamu by Katta Varadaraju

## MAHRATHI.

1. Natyasastrasangraha
2. a. Folk Songs

b. Dora Dharun Veni Paddhati
c. Asvasa Catula Dumani
3. Pratapasimhendra Vijaya Prabandha
4. a. Sarabhendra Tirthavali
b. Lavani
5. Devendra Kuravanji
6. Bhakta Vilasa
7. Sloka Baddha Ramayana

## SANSKRIT.

1. Asvasastrá with Tricolour Illustrations
2. Rajamrganka
3. Ananda Kandam
4. Ayurvedamahodadhi
5. Gita Govinda Abhinaya
6. a. Colacampu
b. Sahendra Vilasam
7. Dharmakutam-Sundara Kanda
8. Jatakasara
9. Vishnutattvanirnaya Vyakhya
10. Sangita Darpanam
11. Bijapallavam

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them



with other copies The editors have however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books, in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in Selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

MADRAS, 1951.

T. CHANDRASEKHARAN,
*General Editor.*

# முகவுரை.

'சரபேந்திரர் வைத்திய முறைகள் — நீரிழிவு சிகிச்சை' என்னும் இத்தொகுதியில் 'நீரிழிவு,' 'பிரமேஹம்,' 'பிரமியம்,' 'மேஹம்,' 'வெட்டை' என்ற பெயர்களால் வழங்கப்படும் பலவகை மூத்திர ரோகங்களுக்கான முறைகள் அடங்கியிருக்கின்றன. தமிழ் நாட்டில் இச்சொற்கள், 'பிரமேஹம்' என்று வடமொழியிலும், 'Diabetes' என்று ஆங்கிலத்திலும் சொல்லப்படும் ஜல ரோகத்திற்கும், ஸ்திரீகளின் சேர்க்கையாலும் மற்ற காரணங்களாலும் ஏற்படும் ஏனைய மூத்திர ரோகங்களுக்கும் பெயர்களாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஒவ்வொரு சொல்லின் பொருளையும் வைத்திய சாஸ்திர ரீதியில் நிச்சயப்படுத்துவது [illegible] இருக்கிறது. வடமொழியில் 'மேஹம்', 'பிரமேஹம்' என்னும் இரு சொற்களும் ஜலரோகத்தைக் குறிக்கும். 'பிரமியம்' என்ற சொல் 'பிரமேஹம்' என்ற சொல்லின் திரிபு.

பொதுவாகக் கூறுமிடத்து, 'நீரிழிவு' என்ற சொல்லை ஜலரோகத்திற்கும், 'பிரமியம்', 'வெட்டை' என்ற சொற்களை ஸ்திரீகளின் சேர்க்கையால் ஏற்படும் ரோகங்களைக் குறிப்பிடுவதற்கும் நாம் உபயோகிக்கிறோம். 'மேகம்' என்ற சொல் பலவகைப் பொருளில் உபயோகப்பட்டு வருகிறது. 'மதுமேகம்' 'ரக்தமேகம்' முதலிய சொற்றொடர்களில், 'மேகம்' என்பது 'நீரிழிவு', 'பிரமியம்' என்ற சொற்களுக்குப் பிரதிபதமாக வழங்கப்படும். 'மேகநீர்' பலவித மூத்திர ரோகங்களைக் குறிக்கும்.

'மேகப் புண்' முதலிய சொற்றொடர்களில் இரத்தத்தில் சர்க்கர் சம்பந்தப்பட்டு ஏற்படும் தோலைப்பற்றிய வியாதிகளைக் குறிக்கும்.

இந்த நூலில் முதற்பகுதியில் 1—15 பாடல்கள் நீரிழிவின் 20 வகைகளை விவரிக்கின்றன. இவற்றின் குறிகுணங்கள் வடமொழியில் 'பிரமேஹம்' என்ற பெயரின் கீழ் விவரிக்கப்படும் 20 வகை ஜலரோகங்களின் குறிகுணங்களுக்குப் பெரும்பாலும் ஒத்ததாக இருக்கின்றன. பெயர்கள் மாத்திரம் சிறிது மாறியிருக்கின்றன. மூலைகளில் கண்ட மற்ற மூத்திர ரோகங்களைப்பற்றியோ இதர ரோகங்களைப்பற்றியோ இதில் விவரங்கள் சொல்லப்படவில்லை. ஆகையால் வடமொழியிலும் தமிழிலும் இவ்வித ரோகங்களைப்பற்றி நமக்குக் கிடைக்கும் விவரங்கள் இதனடியில் சுருக்கமாக எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன.

## வடமொழி நூல்களில் 'பிரமேஹம்' என்ற ஜலரோகத்தைப்பற்றிய குறிப்புகள்:—

வடமொழியில் இப்போது நமக்குக் கிடைக்கும் மூலக்கிரந்தங்களாகிய 'சரகஸம்ஹிதை,' 'ஸுச்ருதஸம்ஹிதை,' 'காசியபஸம்ஹிதை,' 'பேலஸம்ஹிதை,' 'ஹாரீதஸம்ஹிதை' என்ற 5 நூல்களில் முதலாவதான சரகஸம்ஹிதையில் பிரமேஹ ரோகத்தின் காரணங்கள், வகைகள் அவற்றின் லக்ஷணங்கள், அவற்றின் சிகிச்சைமுறை இவையெல்லாம் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்திய நூல்களில் வியாதிகளின் குறிகுணங்களை மிகவும் நன்றாக விவரிக்கும் *'மாதவ நிதானம்' என்ற நூலில் சரகஸம்ஹிதையிலுள்ள குறிப்புகளே பெரும்பாலும் [illegible]. மற்ற ஸம்ஹிதைகளில் குறிப்புகள் விரிவாக இல்லாததோடு, தெளிவாகவும் சொல்லப்படவில்லை. ஆகையால் சரகஸம்ஹிதையிலுள்ளபடியே பிரமேஹத்தின் நிதானத்தை (காரணங்கள், குறிகுணங்கள் முதலியவைகளை) சுருக்கமாக எழுதுவோம்:—

'பிரமேஹம்' என்ற சொல்லுக்கு 'அதிகமாக [illegible] ஒழுகுதல்' என்று பொருள். 'நீரிழிவு' என்பது அதற்குச் சரியான மொழிபெயர்ப்பாகும். இந்த வியாதியில் உடம்பின் ஸாரமான அம்சங்கள் மூத்திரத்தோடு கலந்து மூத்திரத்தை அதிகப்படுத்தி அதனோடு வெளிப்படுவதால் இந்தப் பெயர் இதற்கு ஏற்பட்டது.

இதன் காரணங்களையும் வகைகளையும் விரித்து [illegible] பொதுவாக எல்லா வியாதிகளும் உண்டாவதற்கான காரணங்களைப்பற்றிய சில [illegible] சொல்லவேண்டியிருக்கிறது. அந்த விதிகள் 'பிரமேஹம்' என்ற வியாதியின் பலாபலத்தைப்பற்றிய [illegible] அவசியமானவை.

## தோஷம், தூஷ்யம், நிதானம்.

(1) ஒரு வியாதி ஏற்பட [illegible] முழுவதும் பரவி [illegible] இருக்கும் பித்தம், வாதம், [illegible] தோஷங்களும் ஓர் குறிப்பிட்ட மாறுபாட்டையடையவேண்டும். [illegible] குறிப்பிட்ட ஒவ்வொரு வியாதிக்கும் வாத, பித்த, [illegible] களில் ஏற்படவேண்டிய மாறுபாடுகள் [illegible]

* 'நிதானே மாதவ: ச்ரேஷ்ட:'—வியாதிகளின் காரணகுணங்களை விவரிப்பதில் 'மாதவ நிதானம்' இயற்றிய மாதவரே சிறந்தவர்—என்பது பிரஸித்தமான வாக்கியம்.

பட்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதை வியாதிக்கு அனுகூலமான 'தோஷ' நிலைமை என்று கூறுகிறார்கள்.

(2) ஆனால் பித்த, வாத, சிலேஷ்மங்களின் மாறுபாடு மட்டும் ஓர் வியாதியை உண்டாக்க வல்லதல்ல. அந்த வியாதி உடம்பின் எந்த அங்கத்தில் அல்லது தாதுக்களில் ஏற்பட்டு அவைகளைக்கெடுக்குமோ அந்த அங்கம் அல்லது தாதுக்களும் குறிப்பிட்ட ஓர் மாறுபாடு அடைந்திருக்கவேண்டும். இதை வியாதிக்கு அனுகூலமான 'தூஷ்ய' நிலைமை என்று கூறுகிறார்கள். 'தூஷ்யம்' என்றால் குறிப்பிட்ட வியாதியினால் கெடுக்கப்படக்கூடிய உடம்பின் பகுதி என்று பொருள்.

(3) இவ்விரண்டு நிலைமைகள் இருந்தால் கூட வியாதி வராமல் இருக்கலாம். அந்த வியாதியை உடனே உண்டாக்குவதற்கான ஆகாரப்பிசகு, நடவடிக்கைப்பிசகுகள் ஏற்பட்டாலொழிய வியாதி உண்டாகாமலே இருந்து விடலாம். இவ்வித ஆகார, நடவடிக்கைப்பிசகுகளுக்கு 'நிதானம்' அல்லது வியாதியின் முக்கிய காரணம் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

ஆகையால், 'தோஷம்', 'தூஷ்யம்' 'நிதானம்' இம்மூன்றும் சேர்ந்து ஒரு வியாதியை உண்டாக்குகின்றன. இம்மூன்றின் நிலைகளும் ஒன்றுக்கொன்று உதவியாக அமையுமாயின் வியாதி வந்தே தீரும். ஒன்றுக்கொன்று உதவியாக இல்லாமற்போனாலும், அல்லது மூன்றும் பலவீனமாக இருந்தாலும் வியாதி வாராமலே இருந்து விடலாம், அல்லது வந்தாலும் கடுமையாக இராது.

## பிரமேகத்தின் 'தோஷ' 'தூஷ்ய' 'நிதானங்கள்'.

இந்த விதிகளை அனுசரித்துப்பிரமேஹம் என்ற



ரோகத்துக்கான தோஷ, தூஷ்ய, நிதானங்கள் கூறப்படுகின்றன :—

(1) தோஷம்.—பிரமேஹ ரோகத்துக்குப் பெரும்பாலும் சிலேஷ்மமே முக்கியமான தோஷமாக இருந்த போதிலும், பித்தமும், வாதமும் சிகிச்சை செய்யமுடியாத பிரமேகங்களை உண்டாக்கக்கூடியவை.

பிரமேஹத்தை உண்டாக்குவதற்கு சிலேஷ்மம் அதிகரித்திருப்பதோடு அதிக திரவமாகவும் (நீர்த்துப் போயும்) இருக்கவேண்டும்.

பித்தப்பிரமேஹத்துக்கு பித்தம் அதிக உஷ்ணத்தோடு, பிரகோபித்து (அதிகரித்து) இருக்கவேண்டும்.

வாதப் பிரமேஹத்துக்கு வாதம் அதிகரித்திருப்பதோடு மற்ற இரு தோஷங்களாகிய பித்தமும், சிலேஷ்மமும் க்ஷயமடைந்து (குறைந்து) இருக்கவேண்டும்.

(2) தூஷ்யம்.—பிரமேஹத்துக்குரிய தூஷ்யங்கள் அடியிற்கண்ட தாதுக்களாகும் :—

1. மேதஸ் (கொழுப்பு).
2. மாம்சம் (தசை).
3. சரீரக்லேதம் (உடம்பிலுள்ள [illegible] ன்).
4. ரத்தம்.
5. வசா (சுத்த மாமிசத்தின் நிணம்).
6. மஜ்ஜை ([illegible]).

7. லஸிகா (தோலுக்கும் மாமிசத்திற்கும் இடையே உள்ள வத்தண்ணீர்).

8. மஜ்ஜை (எலும்பிற்குள் உள்ள மிருதுவான பாகம்).

9. சுக்கிலம்.

10. ஓஜஸ் (எல்லா தாதுக்களின் ஸாரம்).

இவற்றுள் மேதஸ், மாம்சம், உடம்பிலுள்ள த்ரவம் இவை மூன்றுமே முக்கியமான தூஷ்யங்கள்.

பிரமேஹ ரோகத்தை உண்டாக்குவதற்கு தூஷ்யங்களான இந்த தாதுக்கள் மிகுந்தும், தேகத்தில் இறுகிச் சேராமலும் இருத்தல் வேண்டும்.

(3) நிதானம்:-மேதஸ் (கொழுப்பு), மாம்சம் (தசை), உடம்பிலுள்ள கசிவுப் பொருள், இவை மூன்றுமே பிரமேஹத்தினால் கெடுக்கப்படும் முக்கியமான தாதுக்களாகையால், கொழுப்பையும் மாம்சத்தையும், கசிவுப் பொருள்களையும் அதிகப்படுத்தி சரீரத்தில் இறுகிச்சேராமல் இருக்கும்படி செய்யும் பழக்க வழக்கங்களும், ஆகாரங்களுமே இந்த வியாதிக்கு நிதானமாகும். அவையாவன :-

(i) தேகப்பயிற்சியில்லாமலும், உடம்பைத் தேய்த்து ஸ்நானம் செய்தல் அல்லது பிடித்துக்கொள்ளுதல் முதலிய பழக்கங்களில்லாமலும், தூக்கத்திலும் (அதிலும் பகலில் தூங்குவதிலும்), ஒரே இடத்தில் உட்கார்ந்து இருப்பதிலும் உள்ள சுகத்தைக்கருதி அதை அதிகமாக அநுபவிப்பதும், இந்த வியாதியை உண்டாக்கக்கூடிய பழக்க வழக்கங்களாகும்.

(ii) புதிய அரிசி சமைத்த அன்னத்தை அதிகமாகவும் காலந்தவறியும் உண்ணுதலும், புதிய பருப்பு, உளுந்து



இவற்றின் மா; வெல்லம் முதலியவற்றால் செய்த பக்ஷியாரம், தயிர், பால், நெய் முதலிய ஜலப்பிராணிகளின் மாமிசம், இவற்றை அதிகமாக உபயோகித்தலும் இந்த வியாதியை உண்டாக்கக்கூடிய அன்னபானாதிகளாகும்.

(iii) மேலும் மிருதுத்தன்மை, நைப்பு, கபம் இவை மிகுந்த தேகமுள்ள தாய்தகப்பன்மாருக்குப் பிறந்த சந்ததிகளுக்குப் பிறவியிலேயே கப மேதஸ்களின் மிகுதியும் இறுகினமையும் ஏற்படுமாகையால், அவர்களுக்குப் பிரமேஹம் உண்டாகாமல் இருப்பதற்கு ஆகாரத்திலும், பழக்க வழக்கங்களிலும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம். ஆகாரங்களில் யவையென்னும் நெல்லும் (கருங்குருவையும் உபயோகிக்கலாம்) பழக்கங்களில் தேகப்பயிற்சி, ஸ்நானம், உடம்பு பிடித்துக் கொள்ளுதல், சந்தனம் முதலிய வாசனைத்திரவியங்கள், பிரமேஹத்தைக் குணப்படுத்தும் கஷாயங்கள், தைலங்கள், கிருதங்கள் இவைகளை அதிகமாக உபயோகிக்கவேண்டும்.

## பிரமேஹங்களின் வகைகளும் குறிகுணங்களும்.

பிரமேஹங்கள் (1) கபப்பிரமேஹம் (2) பித்தப் பிரமேஹம் (3) வாதப் பிரமேஹம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் கபப் பிரமேஹங்கள் உண்டாகும் விதமும் அவற்றின் 10 வகைகளும் அடியிற் கண்டவாறு :-

### உண்டாகும் விதம்.

மேலே கண்ட அந்த நிதானங்களோடு, கபதோஷத்தின் மிகுதியும் ஏற்பட்டால் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று அநுகூலமாக இருப்பதால் வெகு சீக்கிரத்தில் கபப்பிரமேஹம் உண்டாகின்றது. அது எப்படியெனில், அதிகரித்த கபம் இறுகாத உடம்பில் பல இடங்

களிலும் எளிதில் பரவுகிறது. அப்படிப் பரவிய கபம் தேகத்தில் மேதஸ் அதிகரித்து இறுகாமல் இருப்பதால் முதலில் மேதஸ்ஸுடன் கலந்துகொள்கிறது. மேதஸ்ஸின் குணங்களும் கபத்தின் குணங்களும் பெரும்பாலும் ஒத்திருப்பதால் மேதஸ்ஸோடு நன்றாகக் கலந்துவிடுவதுடன், தனது மாறுபாட்டால் மேதஸ்ஸையும் கெடுத்துவிடுகிறது. கெடுக்கப்பட்ட மேதஸ்ஸுடன் சேர்ந்து உடம்பிலுள்ள கசிவுப் பொருள்களோடு கலந்து அவற்றை அதிகரிக்கச் செய்து மாமிசத்திலும் சம்பந்தப்பட்டு மாமிசத்தைக் கெடுத்து மாமிசத்தில் நாற்றத்தையும், பிளவை, கட்டி, சிரங்கு முதலியவைகளையும் உண்டாக்குகிறது. மேலும் கசிவுப் பொருள்களைக் கெடுத்து அவற்றை மூத்திரமாக மாற்றுகிறது. பிறகு துடையிடுக்கு, மூத்திராசயம் இவற்றில் சம்பந்தப்படும் மூத்திரவாஹி ஸ்ரோதஸ்ஸுகளின் (கால்வாய்களின்) விரிந்த வாய்களை அடைத்ததும் அவற்றில் கொழுப்பு, கசிவுப்பொருள்கள் இவற்றின் சேர்க்கை அதிகமாகியிருப்பதால் அவைகளால் தடைபட்டு இயற்கையான தன்மையை இழந்த இத்தடைப்பொருள்களை 'ஸ்திரமாக' (நகராமல் இருக்கும் தன்மையையடையும்படி) செய்கிறது; அல்லது வியாதியை முற்றிலும் குணப்படுத்த முடியாமல் செய்துவிடுகிறது. இதுவே அதிகரித்த கபத்தினால் ஏற்படும் விளைவுகள்.

இனி கசிவுப்பொருள்களின் சேர்க்கையினாலும் மாறுபாட்டாலும் ஏற்படும் விளைவுகளைக் கவனிப்போம். கசிவுப்பொருள்கள் கபத்தோடும் மேதஸ்ஸோடும் சேர்ந்து மூத்திராசயத்தில் புகுந்து மூத்திரமாக மாறுகிறது. அப்போது அதில், மாறுபாடடைந்த கபகுணங்கள் அடியிற் கண்ட பத்தும், தனித்தோ, ஒன்றிரண்டு சேர்ந்தோ உண்டாகின்றன:—



(1) வெளுப்பு, (2) குளிர்ச்சி, (3) உருவமடைதல், (4) பசை உள்ளது, (5) தெளிதல், (6) கைப்பு அல்லது எண்ணெய்ப் பசை, (7) கெட் [illegible] தல், (8) தித்திப்பு, (9) கெட்ட பகுதி [illegible] தெளிவடைதல், (10) நாற்றம்.

இவ்விதம் பலவகைக் குணங்களைத் [illegible] சேர்ந்தோ அடைந்து நீர் இறங்கும்போது அந்தந்த குணங்களுக்கேற்ப நீரிழிவுக்கு அடிப்படையான 10 பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன.

1. உதக மேஹம் (நீரைப்போன்றது). இதில் மூத்திரம் தெளிவாகவும், அதிகமாகவும், வெண்மையாகவும், குளிர்ச்சி பொருந்தியதாகவும் வாசனையற்றதாகவும், தண்ணீரை ஒத்ததாகவும் இருக்கும்.

2. இக்ஷுவாலிகாரஸ மேஹம் (கரும்புச்சாறு போன்றது). இதில் மூத்திரம் அதிக தித்திப்புள்ளதாகவும், குளிர்ச்சி பொருந்தியதாகவும், பசையுள்ளதாகவும், கலங்கினதாகவும், கரும்புச்சாறு போன்ற தோற்றமுடையதாகவும் இருக்கும்.

3. ஸாந்த்ர மேஹம். (இதுவும் இப்பெயருடையது). மூத்திரம் ஒரு பாத்திரத்தில் [illegible] பொருள் சேர்ந்து [illegible] அடியில் கெட்ட பொருள் [illegible] தங்கியிருக்கும்.

4. ஸாந்த்ர ப்ரஸாத மேஹம். முதலில் இதைப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவது.

5. சுக்ல மேஹம். மாவைக் கரைத்ததுபோல் வெண்மை நிறமாக அடிக்கடி மூத்திரம் இறங்கும்.

6. சுக்ர மேஹம். சுக்லம் சேர்ந்தோ, சுக்லத்தைப் போன்ற தோற்றத்துடனே அடிக்கடி மூத்திரம் இறங்கும்.

7. சீதமேஹம். அதிக தித்திப்பாகவும் குளிர்ச்சியுடையதாகவும் அடிக்கடி மூத்திரம் இறங்கும்.

8. ஸிகதா மேஹம். (ஸிகதா=மணல்) மூத்திரத்தோடு அழுக்குப்போன்ற சிறு அணுக்குகளும் கலந்து வரும்.

9. சனைர்மேஹம். (சனை:=மெதுவாக) கொஞ்சம் கொஞ்சமாகவும், வேகமில்லாமலும், கஷ்டப்பட்டும் நேரம் பிடித்தும் மூத்திரம் இறங்கும்.

10. ஆலாலமேஹம். (லாலா=எச்சில்) நூல் நூற்றதுபோலும், எச்சில் கலந்ததுபோலும், பிசுபிசுப்புடனும் மூத்திரம் இறங்கும்.

## பித்தப்பிரமேஹம்
## உண்டாகும் விதமும் அதன் வகைகளும்.

பிரமேஹத்தின் தூஷ்யங்களான மேதஸ், மாம்ஸம், க்லேதம் (கசிவுப்பொருள்), ரத்தம் முதலியவைகள் அதிகரித்தும், அவற்றுள் மேதஸ், மாம்ஸம் இவைஉடம்பில் இறுகிச் சேராமலும் இருக்கும் நிலைமையில்,

(1) உஷ்ணம் உள்ளதும், புளிப்பு, உப்பு, உறைப்பு, க்ஷாரம் (வேகம் அடிக்கும் காரம்) இவை மிகுந்ததும், இலகுவில் ஜீரணமாகக்கூடாததுமான ஆகாரத்தினாலும், (2) கடுமையான வெய்யில், நெருப்பு, இவைகளில் பழகுவதினாலும், (3) மன வருத்தம், கோபம் இவைகளாலும், (4) பொருத்தமில்லாத ஆகார வகைகளாலும், பித்தம்



அதிகரித்து இருக்கவேண்டிய இடத்தின் எல்லையை மீறுகிறது.

அதிகரித்த பித்தம் மேலே கபப் பிரமேஹத்திற்குச் சொன்ன வகையிலேயே மேதஸ், கசிவுப்பொருள், இரத்தம், வஸை, முதலியவைகளோடு சேர்ந்து பரவி, அவை களைக் கெடுத்து மூத்திராசயத்தை யடைந்து மூத்திரத்தில் பித்தத்தின் ஆறு குணங்களான காரம், புளிப்பு, உப்பு, உறைப்பு, சாற்றம், உஷ்ணம் இவைகளைத் தனித்தோ ஒன்றிரண்டு கலந்தோ உண்டாக்கி ஆறுவித பித்தப்பிரமேஹங்களை வெகு சீக்கிரத்தில் உண்டாக்குகின்றது. அவை அவைகளில் தோன்றும் குணங்களைக்கொண்டு அவைகளுக்குப் பெயர்களும் இடப்பட்டிருக்கின்றன :—

1. க்ஷாரமேஹம் (சுண்ணாம்புக் காரம் போன்றது) சாற்றத்திலும், வர்ணத்திலும், உருசியிலும், கையால் தொட்டுப் பார்க்கும்போதும், சுண்ணாம்பு முதலிய காரத்தைப்போல் மூத்திரம் இருக்கும்.

2. கால மேஹம். மசியைப்போல் கறுத்த வர்ணமாகவும், அடிக்கடியும் மூத்திரம் இறங்கும்.

3. நீல மேஹம். காடை இறகின் நீலம்போல் வர்ணமும், புளிப்பும் உள்ளதாக மூத்திரம் இறங்கும்.

4. லோஹித மேஹம். அஜீர்ண சாற்றத்தோடும், உப்பாகவும், உஷ்ணமாகவும், இரத்த வர்ணமாகவும் மூத்திரம் இறங்கும்.

5. மஞ்சிஷ்ட மேஹம். மஞ்சிஷ்டி என்ற மருந்துச் சக்கைக் கரைத்தது போலவும், அஜீர்ண சாற்றத்தோடும் மூத்திரம் இறங்கும்.

6. ஹரித்ரா மேஹம். மஞ்சள் கரைத்த நீர் போலவும், உறைப்பாகவும் மூத்திரம் இறங்கும்.

இவ்வாறுவகைப் பித்தப்பிரமேஹங்களும் சமனப் படுத்தக்கூடியவையே தவிர முற்றிலும் குணமாவது அரிது. இதன் காரணங்கள் வருமாறு:—

1. இந்த வியாதி, மேதஸ் (கொழுப்பு) ஸின் அதிகரிப்பும், பித்தத்தின் அதிகரிப்பும் சேர்ந்து உண்டாகிறது. பித்தத்தின் முக்கிய ஸ்தானம் ஹ்ருதயத்திற்குக்கீழும், தொப்புளுக்கு மேலும் உள்ள பித்தாசயமாகும். மேதஸ்ஸின் முக்கியஸ்தானமாகிய வபாவஹனம் (Peritonium and Omentum), பித்தாசயத்தின் ஓர் பகுதியிலும் உள்ளது. ஆகையால் வியாதிக்குரிய தோஷமாகிய பித்தமும் தூஷ்யமாகிய மேதஸ்ஸும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

2. பித்தமும், மேதஸ்ஸும் ஒன்றுக்கொன்று விரோதமான குணமுடையவைகளாதலால் ஒன்றுக்காகச் செய்யப்படும் சிகித்ஸை முறை மற்றொன்றுக்கு மாறாக ஏற்படக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் இந்த வியாதியை முற்றிலும் குணப்படுத்துவது பெரும்பாலும் அரிது. வியாதியின் கடுமையைக்குறைத்து ஆயுளை நீடிப்பதற்கான பல முறைகள் உண்டு.

## வாதப்பிரமேஹம்
## உண்டாகும் விதமும் அதன் வகைகளும்.

பிரமேஹ வியாதிக்குரிய தூஷ்யங்களான மேதஸ், கசிவுப்பொருள், முதலியவை அதிகமாகி உடம்பில் இறுகிச் சேராதிருக்கும் உடல் நிலையில்:—

1. துவர்ப்பு, உரைப்பு, கைப்பு, இச்சுவைகளுள்ளதும், வரட்சியுள்ளதும், லகு குணமுள்ளதும், குளிர்ச்சி



யைக்கொடுக்கக்கூடியதுமான அன்னபானங்களை அதிகமாக உட்கொள்வதினாலும்,

2. ஸ்திரீசங்கம், தேகப்பயிற்சி, இவைகளில் அதிகமாக ஈடுபடுவதினாலும்,

3. தேக சிகிச்சைக்காக வாந்திக்கு மருந்து உட்கொள்ளுவதிலாவது, பேதிக்குச் சாப்பிடுவதிலாவது, வஸ்தி செய்துகொள்ளுவதிலாவது அளவுக்கு மீறினாலும்,

4. மல மூத்திராதி வேகங்களை அடக்குவதினாலும்,

5. பட்டினி கிடப்பதனாலும்,

6. உடம்பில் அடிபடுவதினாலும்,

7. அதிக வெய்யிலில் வாடினாலும் துக்கத்தினால் பீடிக்கப்பட்டாலும்,

8. சிகிச்சைக்காக ரத்தம் எடுத்துக்கொள்வது அதிகமாகிவிட்டாலும்,

9. கண் விழித்திருத்தல், உடம்பை மாறுபாடாக வைத்துக்கொண்டு உட்காருதல், படுத்தல் முதலியவைகளாலும்,

வாதம் சரீரத்தில் அதிகரித்துத் தன் [illegible] தின் எல்லையை மீறுகிறது. அவ்விதம் அதிகரித்த வாதம், இறுகிச்சேராத மேதஸ் முதலியவை அதிகரித்த உடம்பில் பரவி,

(a) மாம்சத்தின் நீர் பாகமாகிய 'வசை'யை [illegible] கொண்டு, மூத்திரம் செல்லும் [illegible] அடைந்து 'வஸாமேஹம்' என்னும் பிரமேஹத்தை உண்டுபண்ணுகிறது. இதில் மூத்திரம் [illegible],

வலையைப்போன்ற தோற்றத்தோடும், அடிக்கடி இறங்கும்.

(b) 'மஜ்ஜை' யை இழுத்துக்கொண்டு மூத்திரப்பைக்குக்கொண்டுவந்ததானால் அப்போது 'மஜ்ஜாமேஹம்' என்னும் ப்ரமேஹத்தை உண்டாக்குகிறது. இதில் மூத்திரத்தோடு மஜ்ஜையும இறங்கும்.

(c) தோலுக்கும், மாம்சத்திற்கும் இடையிலுள்ள 'லஸீகா' என்ற நீரை எடுத்துக்கொண்டு மூத்திராசயத்துக்கு வந்து மூத்திரத்தை அதிகப்படுத்தி, மதம் பிடித்த யானையைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக ஓயாமல் மூத்திரத்தை இறங்கச் செய்கிறது. இதற்கு 'ஹஸ்திமேஹம்' (ஹஸ்தி=யானை) என்று பெயர்.

(d) தித்திப்பு குணமுள்ள 'ஓஜஸ்'ஸை துவர்ப்புள்ளதாகச்செய்து, தன் ஸ்தானத்தைவிட்டு மூத்திராசயத்திற்கு வரச்செய்து 'மதுமேஹம்' என்னும் பிரமேஹத்தை உண்டாக்குகிறது. இதில் மூத்திரம் தித்திப்பும், துவர்ப்பும் கலந்தும், வரட்சையுடனும், வெளுப்பாகவும் இறங்கும்.

இந்த நான்குவகை ப்ரமேஹங்களும் முற்றிலும் குணப்படுவது அரிது. இதன் காரணம்:- இந்தப் பிரமேஹங்களால்,

(1) உயிருக்கு ஆதாரமான மஜ்ஜை, ஓஜஸ் முதலியவை வெளிப்பட்டுவிடுவதும்,

(2) வாதமும், மேதஸ் மஜ்ஜை முதலியவைகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட குணமுடையவைகளாதலால் ஒன்றுக்குச் செய்யும் சிகித்ஸை மற்றொன்றுக்கு முரணை ஏற்படுவதுமாகும்.



## ப்ரமேஹங்களின் முதல் அறிகுறிகள்.

இவ்விதமாக 20 வகை ப்ரமேஹங்கள் உற்பத்தியாகும் வரலாறு கூறப்பட்டது. இனி இவை வரும்போது முதலில் காணும் அறிகுறிகள் விவரிக்கப்படுகின்றன:-

1. தலை மயிர் சடை விழுதல்.
2. வாயில் தித்திப்பு.
3. கால் கை மறத்தல் எரிவு.
4. வாய், அண்ணம் (மேல் வாய்), தொண்டை இவைகள் உலர்ந்து போதல்.
5. நீர் வேட்கை.
6. சோம்பல்.
7. உடம்பில் அழுக்கு.
8. உடம்பிலுள்ள இடுக்குகளில் பூச்சுப்போன்ற அழுக்கு.
9. தேகம் பூராவும் எரிவு.
10. அங்கங்கள் மறத்தல்.
11. உடம்பிலும் மூத்திரத்திலும் எறும்பு, வண்டு முதலியவை மொய்த்தல்.
12. மூத்திரத்தில் பலவித மாறுபாடுகள்.
13. உடம்பில் நாற்றம்.
14. தூக்கம்.
15. ஓய்ச்சல்.
16. அதிகமாக வியர்த்தல்.

17. உடம்பு கனத்தல்.

18. மயிர், நகம் இவை சீக்கிரம் வளருதல்.

19. குளிர்ச்சியில் அதிகம் பிரியம் முதலியவை.

## ப்ரமேஹத்தினுல் உண்டாகும் பிந்திய உபத்ரவங்கள்.

இப்போது ப்ரமேஹத்தினுல் ஏற்படும் உபத்திரவங்கள் (பிற்காலத் தொந்தரவுகள்) கூறப்படுகின்றன:—

1. நீர் வேட்கை.
2. ஜுரம்.
3. வயிற்றுப்போக்கு.
4. எரிவு.
5. பலவீனம்.
6. அரோசகம்.
7. அஜீர்ணம்.
8. மாமிசம் அழுகுதல்.
9. பிளவை.
10. ரத்தக்கட்டி.
11. சீழ்க்கட்டி.

முதலியன.

## ப்ரமேஹம் சீக்கிரம் வரக்கூடிய பழக்கவழக்கங்கள்.

1. தின்பண்டங்களில் அதிக ஆசை.
2. ஸ்நானம், நடை இவைகளில் வெறுப்பு.



3. உற்சாகக் குறைவாக இருத்தல்.
4. அதிகப் பருமன்.
5. உடம்பில் அதிக கைப்பு.
6. பெருந்தீனி.

## பிரமேஹம் வராமல் தடுக்கும் பழக்கவழக்கங்கள்

தாதுக்கள் ஸமமாக விருத்தியாகக்கூடிய ஆகார வகைகளைச் சாப்பிட்டுக்கொண்டு ஓடியாடி நடமாட்டத்துடன் காரியங்களைச் செய்து வருபவரை பிரமேஹம் அணுகாது.

---

## தமிழ் நூல்களில் மூத்திர ரோகங்களைப்பற்றிய குறிப்புகள்.

வியாதிகளின் குணகுணங்களைத் தெளிவாகப் பிரித்துக்கூறும் தமிழ் நூல்கள் அரிதாக இருக்கின்றன. கிடைக்கும் நூல்களிலும் வியாதிகளின் கூறுபாடுகளும் பெயர்களும் தெளிவாகக்காணப்படவில்லை. எனினும் 'யூகி முனி வைத்திய சிந்தாமணி' என்னும் நூலில் 'பிரமியம்' 21 வகை தனியாகவும், 'ஜலரோகம்' 20 வகை வேருகவும் பிரிக்கப்பட்டு அவற்றின் குணகுணங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நூல்களில் இவ்வியாதிகளின் குணங்களை விவரிக்கும் நூல்களில் இந்நூலே சிறந்ததாகக் காணப்படுகிறது. ஆகையால் அப்பகுதி இதனடியில் எடுத்தெழுதப்படுகின்றது:—

'யூகி முனி வைத்திய சிந்தாமணி'யில் கண்டபடி 'பிரமியம்', 'ஜலரோகம்' இவற்றின் அட்டவணை:—

(சரஸ்வதிமஹால் சுவடி நெ. 37 பாடல் 422 முதல் 494 வரையில் உள்ளபடி).

பிரமியம் 21 வகை :—

1. வாதப் பிரமியம்
2. பித்தப்பிரமியம்
3. சேற்றுமப்பிரமியம்
4. வாதபித்தப்பிரமியம்
5. பித்த சேற்றுமப் பிரமியம்
6. தொந்தப் பிரமியம் (த்வந்த்வ)
7. கட்டிப் பிரமியம்
8. சலப்பிரமியம்
9. சுறுதக்தப் பிரமியம்
10. இரத்தப்பிரமியம்
11. சீழ்ப்பிரமியம்
12. ஒழுக்குப்பிரமியம்
13. அரித்திரப் பிரமியம் (ஹரித்ரா)
14. மூத்திர கிருச்சிரப் பிரமியம்
15. காப்பான் பிரமியம்
16. கல்பிரமியம்
17. தாதுப்பிரமியம்
18. கிச்சப்பிரமியம்
19. வலிப்பிரமியம்
20. மதுப்பிரமியம்
21. விரணப்பிரமியம்.

ஜலரோகம் 20 வகை

வாதத்தினல் உற்பவித்தவை

1. ஆச்சிய மேகம்
2. சுத்தமேகம்
3. பிரமிய மேகம்
4. மாங்ச சிறவிமேகம்

பித்தத்தினல் உற்பவித்தவை

5. அப்பியம்
6. அபிரமியம்
7. சாம்பிறீணமேகம்
8. மதுமிய மேகம்
9. சாத்திய மேகம்
10. ஆவிருத மேகம்

சிலேற்றும சலரோகம் 1(

11. வசா மேகம்
12. உத்தம மேகம்
13. மச்சமேகம்
14. ஆகிக மேகம்
15. சுராரிமேகம்
16. சுக்கிலமேகம்
17. உதகமேகம்
18. பிணிமேகம்
19. லவணமேகம்
20. தைத்தியமேகம்



இவைகளின் விவரம்:-

மேகம் (என்ற பிரமியம்) இருபத்தொன்றுக்கும் பேர் குணகுணம்.

நூல் வரலாறு

உரைத்திட்டேன் மேகமென்ற பிரமியத்தை
உத்தமனே இருபத்து ஒன்று தன்னைத்
திரைத்திட்ட சிவன்தானுந் தேவிக்குச்சொன்னார்
தேவிதான் தன்மந்திரிக் குபதேசிக்க
உரைத்திட்ட தன்மந்திரி அசுவனி தேவர்க்குச்
சாற்றிடவே அசுவனியாந் தேவர்தாமும்
உரைத்திட்ட அகத்தியற்குப் போதிக்கக்கேட்டுப்
பாங்காகப் புலத்தியற்கு அருள்செய்தாரே.

அருள்செய்தார் புலத்தியரும் யூகியென்ற முனிக்கு
அதிகமாம் யூகியென்ற முனிவன்றானும்
பொருள்செய்தார் பூலோகத்துள்ள பேர்க்குப்
போரான ஆயுரு வேதத்தைத் தானும்
தெருள்செய்தார் திரட்டியே தேர்தானுந்
தேசிகனுய்ச் சகத்திலுள்ள பேர்களுக்கு
மருள்செய்து போகாமல் சாத்திரத்தின்படியே
மார்க்கமாம் பிரமியத்தை வழுத்தக்கேளே.

பிரமியத்தின் வகை 21.

வழுத்தவே பிரமியத்தின் பேரைக்கேளு
வாதத்தின் பிரமியமாம் பித்தபிரமியம்
இழுத்தவே சேற்றுமத்தின் பிரமியந்தான்
சீரான வாதபித்தப் பிரமியமாகும்
வழுத்தவே பித்தசேற்றுமப் பிரமியந்தான்
கலத்தொந்த பிரமியமாங் கட்டிப்பிரமியம்
தழுத்தவே சலப்பிரமியந் தந்திப்பிரமியம்
தனித்தோர்[ர்] ரத்தப்பிரமியந் தானென்றே.

தானென்ற சிப்பிரமியம் ஒழுக்குப்பிரமியந்
தனி அரித்திரப் பிரமியமசன் இருச்சிரப்பிரமியம்
கானென்ற கரப்பானும் பிரமியத்தோடு
கல்வினையும் பிரமியமாம் தாதுப்பிரமியம்
நேனென்ற நீச்சப் பிரமியம் வலிப்பிரமியந்தான்
நேரான மதுப்பிரமியம் விரணப்பிரமியம்
வனென்ற பிரமியந்தான் இருபத்தொன்று
இதினுடைய உற்பத்தி யியம்பக்கேளே.

### பிரமியம் உண்டாகும் காரணங்கள்.

இயம்பவே யெளியோரை யிகழ்ச்சிசொல்லல்
ஏற்றமாம் பெரியோரை யேவல்கொள்ளல்
புயம்பவே பெண்தனையே சோரம்செய்தல்
பொருள்தனையே யபகரித்தல் பெருமைசொல்லல்
நயம்பவே நம்பினர்க்கு கட்டஞ்செய்தல்
நாட்டமா யெந்நேரம் பெண் மோகித்தல்
மயம்பவே பயந்துவந்த பேரைக்காட்டல்
பழிச்சபேர் பிரமியத்தில் படும்பாடாமே.

பாடாகப் பெண் போக மிகவிரும்பிப்
பயின்றிட்டுப் பட்டினியே மிக விருத்தல்
தாடாகத் தான்பதத்தில் சூடு தாங்கல்
சருரமாய் காரத்தை மிகப் புசித்தல்
வடாக உப்புறைப்புத் துவர்ப்பு மிஞ்சில்
உக்கிரமாம பலபலவாம் விசேஷம் செப்பில்
காடான மனக்கிலேசம் காரமான
கைத்தலோடு மிகுக்கிலிது காணுங்காணே.

காணவே முதுகெலும்பு கோர்வைப்பற்றிக்
கனமான நாபியிலுங் கதித்துச்சுற்றி
ஆணவே அடிகுய்யம் மூலாதாரம்
அமுன்று மிகவோவாகிப் பற்றிக் கொண்டும்



காணவே நாடியொடு யெலும்பில் சூழ்ந்து
நலமான சுரோணிதத்தில் மிகக்கலந்து
ஆணவே அடிவயிறு இசித்து நோவாம்
ஆகாத பிரமியத்தின் ஆண்மைதானே.

## 1. வாதப் பிரமியம்

ஆண்மையாய் கோசலம் போல் நீரிறங்கும்
அரிக்கியே அடித்தண்டில் மிகவலிக்கும்
வெண்மையாய்க் கட்டியாய்ச் சீழ்தான் வீழும்
விரைவிலே கனத்துமே நோக்காடுண்டாம்
பாண்மையாய் அடிவயிறு பக்கந்தன்னில்
பரபரத்து நோவாகிப் பாரமுண்டாம்
வாண்மையாய் வயிறுதனில் இசிவுண்டாகும்
வற்றுமே சரீரந்தான் வாதப்பிரமியம்.

## 2. பித்தப்பிரமியம்

சரீரந்தான் மிகவற்றித் தியக்கமுண்டாய்ச்
சந்தொடு கைகால்தான் நோவுண்டாகும்
சரீரந்தான் கறுத்துமே யெரிவுண்டாகும்
கனமான குதங்குய்யம் கடுப்புக்காணும்
வரீரந்தான் மஞ்சள்போலச் சீயாய்வீழும்
மனந்தானும் அருசியாய்க் கைகாலோயும்
பரீரந்தான் லிங்கமது புண்ணிவிம்மும்
போரான லிங்கம்நோம் பித்தப்பிரமியம்.

## 3. சேத்துமப் பிரமியம்

லிங்கத்தில் நோவுண்டாய்க் கடுப்புக்காணும்
[illegible] வெண்மையாய்ச் சலமாய் வீழும்

பங்கத்தில் மேனியெல்லாம் பழுப்பாய்க் காணும்
பாண்டுவாய் கண் நகங்கள் ரெத்தமில்லை
சுங்கத்தில் சுருக்கிட்டு நீரிறங்கும்
துரிசாக அடிக்கடி அருக்கல் காணும்
அங்கத்தில் அனல் மிகவே அழன்று மேனி
அசாத்திய சேற்றுமப்பிரமியம் அறிந்துகொள்ளே.

## 4. வாதபித்தப் பிரமியம்

அறியவே ஆக்கையெல்லாம் வலியுண்டாகி
அடிலிங்கத் தடியிலே சலாகை வைத்தாப்போல்
மறியவே அடிக்கடிக்கு வருத்தமாகும்
மாப்போல் சிறுநீரில் கரைந்துவிழும்
வெரியவே பவுத்திரத்தில் கட்டிக்கட்டும்
மெண்மையாய் வலமதுதான் இறுகிக்கொள்ளும்
துரியவே சுருக்கென்று நீரிறங்கும்
துடிக்குமே வாதபித்தப் பிரமியந்தானாமே.

## 5. பித்த சேற்றுமப் பிரமியம்

பித்தமாய் வாயெல்லாம் மிகவே கைத்துப்
பிரமியே அடிவயறு இசிவுகாணும்
சுத்தமாய் மஞ்சணித்து வெள்ளைவிழும்
சுருக்குத்தான் லிங்கத்தில் மிகுதியாகும்
பத்தமாய்க் கணுக்கணுக்கள் நோவுண்டாகும்
பகலுறக்க மிகுதியாம் பசியெழாது
புத்தமாய் உடம்பெல்லாம் ஊதிக்காணும்
பித்த சேற்றுமப் பிரமியம் பேசுங்காலே.

## 6. தொந்தப் பிரமியம்

பேசுமென்ற சரீரத்தில் தினவுண்டாகிப்
புழுக்கள்தான் ஊர்தல்போல் புளகமாகும்



ஆசுமென்ற அடிவயிற்றில் கரப்புண்டாகும்
அடிக்கடிக்கு நீர்தானும் கடுத்திறங்கும்
கூசுமென்ற லிங்கத்தில் கசிவுண்டாகிக்
குறிகள்தான் பலவர்ணமாகக் காணும்
தூசுதான் அடிதன்னில் தோய்ந்திருக்கும்
தொந்தமாம் பிரமியத்தின் சூட்சந்தானே.

## 7. கட்டிப் பிரமியம்

தானாக சடமெங்கும் கட்டியாகித்
தரிக்காமல் வலியுண்டாய்த் தளர்ச்சிகேடாய்த்
தேனாக லிங்கத்தில் தினவுண்டாகிச்
சொறியாகி விரைரெண்டில் நீர்பாயும்
ஊனாகக் கட்டியாய் லிங்கந்தன்னில்
உறுதியாய்ப் பருக்கைபோற் சீயாய்விழும்
மானாக உடம்பதுதான் வற்றிக் காணும்
மருவு கட்டிப் பிரமியத்தின் வண்மைதானே.

## 8. சலப் பிரமியம்

வண்மையாய் வடிவமெல்லாம் வலியுண்டாதல்
வாய்கைத்து வாந்தியொடு மயக்கமாதல்
தண்மையாய் லிங்கத்தில் சலங்கசித்தல்
தாக்கான அடிவயிற்றில் புடுங்கலுண்டாம்
வெண்மையாய் மலந்தனிலே சீதங்காணல்
வெளுப்பாகி நீரிறங்கிக் குத்தலுண்டாதல்
உண்மையாய் அரையாப்புக்கட்டி உண்டாய்
அழுந்துமே சலப்பிரமியம் ஆண்மைதானே.

## 9. நாறுதந்தப் பிரமியம்

ஆண்மையாய் அடிவயிறு புண்போல நொந்து
அடித்தண்டு விறுவிறுத்து உச்சங்காணும்

தண்மையாய் விங்கத்தில் கின்னரத்தின்
தந்திபோல் நீருக்கு முன்னேவிழும்
வெண்மையாய் வெளுப்புத்தான் சிலைதன்னில்
விந்தையாய் அடிக்கடிக்கு நனைவுகாணும்
நண்மையாய் கால்கையும் எரிச்சலாகும்
நாறுதந்தப் பிரமியத்தின் நாட்டந்தானே.

## 10. இரத்தப் பிரமியம்

தந்திரமாய்த் தியங்கியே தலைதிருப்பும்
சரீரமெங்கும் பஞ்சுபோலத் தளர்ச்சிகேடாம்
மந்திரமாய் வருந்தியே நீரிறங்கும்
மாசற்ற முயல்ரெத்தம் போலேவிழும்
சுந்தரம் போ லிருந்தமுகம் தூசு ஆகும்
சுழுக்குத்தான் சிறுநீரும் சிகப்பாய்விழும்
அந்திரமாய்ப் பிசாசுபோல் அலைச்சலாகும்
அடிக்கடிக்கு நீரிறங்கும் ரத்தப் பிரமியம்.

## 11. சீழ்ப் பிரமியம்

கடுத்துமே சீழ்ப்போலே வெள்ளைகாணும்
கட்டுமே அரையரப்பில் பவுத்திரத்தில்
கடுத்துமே நாபியெல்லாம் விரணமாகும்
கற்சந்துக் கணுக்காலில் குடைச்சலுண்டாம்
அடுத்துமே அடிக்கடிக்கு நீரிறங்கும்
அதிகமாய்க் குளிரோடு சுரமுமுண்டாம்
மடுத்துமே வருத்தமாய் மயக்கமாகும்
வடிவமெல்லாம் சோர்ந்திடுஞ் சீழ்ப்பிரமியமாமே.

## 12. ஒழுக்குப் பிரமியம்

சீழாகித் தண்ணீராய் ரெத்தம்போலச்
சிறுகியே ஒழுகுமே யெக்கோரந்தான்



காயாகிக் கட்டியாய் முளையுண்டாகிக்
கனமான விரணமாய்க் காயமெல்லாம்
ஆயாகி அங்கமெல்லாங் குடைச்சலாகு
மழுன்றுமே அக்கினியா யன்றிக்கொள்ளும்
நோயாகிப் பாய்க்குள்ளே கிடையுமாகி
நுண்மையாய் ஒழுகுமென்ற மேகந்தானே.

## 13. அரித்திரப் பிரமியம்

தாணுமே மஞ்சள்போல் வெள்ளைகாணும்
தழலாக வெதும்பியே நீரிறங்கும்
காணுமே கதிர்தனையே யேற்றினற்போல்
கடுப்பாக விறுவிறுக்கும் கடுஷ்ணமாகும்
வாணுமே மதியம்போல் தானிருந்து
மதிமுகங்கள் மஞ்சள்போல் தானிருக்கும்
தேணுமே கசப்பாகும் நாவுதானும்
திடுக்குண்டாம் அரித்திரமாம் பிரமியந்தான்.

## 14. மூத்திர கிருச்சிரப் பிரமியம்

அரித்திரம்போல் நீரிறங்கும் ஆண்மைகுன்றும்
அருக்கியே மிகக்கடுத்து நீர்தான்விழும்
செரித்திரம்போல் நீர்தனையே கட்டிக்கொள்ளும்
நிச்சயம்போல் சரீரத்தி லுறக்கமில்லை
தரித்திரம்போ லன்னத்தைப் பொசிக்கொட்டாது
சஞ்சலமாய் மனதுதான் தரிகொடாது
விரித்திரம் போல் உடம்பெல்லாம் உளைச்சலுண்டாம்
ஓடு மூத்திரக் கிருச்சிரப் பிரமியந்தானே.

## 15. காப்பான் பிரமியம்

உளைஞ்சுமே வயிறுதான் சிதங்காணும்
உஷ்ணமாய் மூத்திரந்தான் உருக்கிவிழும்
அளைஞ்சுமே அங்கமெல்லாஞ் சொறிவுண்டாகும்
அழலாக வெதும்பலாய்க் கைகாலேயும்

புளிஞ்சுமே லிங்கத்தில் புண்போல் குத்திப்
 பொடிபொடியாய்ச் சுண்ணும்புக் கல்போல் வீழும்
களிஞ்சுமே நீரோடு மலமுஞ் சிக்குந்
 நசியுமே நரப்பானும் பிரமியந்தானே.

## 16. கல் பிரமியம்

கசியுமே லிங்கத்தில் கள்ளுப்போலக்
 கற்றாழை நாற்றந்தான் உடம்பில் வீசும்
தசியுமே சாந்தரைத்துப் படுத்த கல்போல்
 தங்கியே நீர்சிக்கி வயிறு விம்மும்
விசியுமே விறுவிறுப்பாய் வயிறெல்லாந்தான்
 மீறின நாபிதொடுத் துப்பிசமாகும்
பசியுமே யில்லாமல் பாரமாகும்
 பளிங்கு நிறமாகுங் கல் பிரமியந்தானே.

## 17. தாதுப் பிரமியம்

கல்லான சிலந்தியுட நூலைப் போலக்
 கனமான லிங்கத்தில் கலந்து வீழும்
வல்லான வன்மையொடு உதிரங்காணும்
 வலியெடுக்கும் அடித்தண்டு விம்மும்போது
சல்லான கல்பிசந்தான் அடியில் தங்குஞ்
 சமத்தான விலாப்பக்கம் தனிலே குத்தும்
அல்லான மூத்திரந்தான் துளியாய் வீழும்
 தாதுப் பிரமியத்தினுடச் சுருக்குத்தானே.

## 18. பித்தப் பிரமியம்

சுறுக்காகக் கள்ளுப்போல் நீரிறங்கும்
 சூட்சமாய் வெள்ளையொடு சீயுங்காணும்
மறுக்காக லிங்கம் உச்சமாகும் போது
 வருத்தமாம் அடித்தண்டு குதத்தோடொக்க

விறுக்காக விறுவிறுப்பாய் வலியுண்டாகும்
 விசையான நரம்பெல்லாம் சுருக்குமாகும்
குறுக்காக அடிவயிறு தனிலே குத்தும்
 குளிரும் பித்தப் பிரமியத்தின் கூறே

## 19. வலிப்பிரமியம்

கூறுக அடிநரம்பு குதங்குய்யந்தான்
 குத்தியே அடிக்கடிக்கு வலியுண்டாக்கும்
வாறுக வடிவமெல்லாம் மிகஅழற்றி
 மயக்கமாய் நாவோடு கைத்தலாகும்
பாறுகப் புறங்காலில் திமிருண்டாகும்
 பருத்துமே லிங்கத்தில் வெள்ளைவீழும்
ஆறுகத் துன்மாங்கிஷஞ் சுருண்டுகாணும்
 ஆசுமிகப் படியும் வலிப்பிரமியந்தானே.

## 20. மதுப்பிரமியம்

வலியாகி லிங்கமெல்லாம் வருத்தமாகி
 வண்டலாய்த் தேன்போல நீரிறங்கும்
ஒலியாகி யெறும்பரிக்கும் நீர்தன்னில்
 இறைச்சிபோல் உள்ளுக்குள் விரணமாகும்
நலியாகி நாற்றமாம் உடம்பெங்குந்தான்
 நாவிலே உணர்ச்சியில்லா துருசிபோகும்
மலியாகி நாவறண்டு மயக்கமாகும்
 வருத்தமாம் மதுப்பிரமிய மார்க்கமாமே.

## 21. விரணப்பிரமியம்

மார்க்கமாய் உடம்பெங்கும் விரணமாகி
 மகாவருத்த மாகியே சூடாகி
தேர்க்கமாய் லிங்கமது பெருத்துவீங்கிச்
 சீயொடு ரெத்தந்தான் மிகவேகாணும்

கார்க்கமாய் கறடோடு கணுக்களெல்லாங்
கட்டியே நோவாகி கடுப்புமுண்டாம்
வேர்க்கமாய் மேனியெல்லாம் வெதும்பலாகும்
விறுவிறுக்கும் விரணமாம் பிரமியந்தானே.

தானான பிரமியந்தான் இருபத்தொன்றுஞ்
சதாசிவன்தான் தாய்தன்க்கு அருளிச்செய்ய
பானான தாய்தானும் நந்திக்குச் சொல்ல
பராபரமாம் நந்தி தற்மந்திரிக்குச் சொல்ல
ஆனான தற்மந்திரி அசுவனி தேவர்க்கு
அருள்செய்ய அசுவனியும் அகத்தியர்க்குச்
சொல்ல
கோனான அகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்ல
குருவான புலத்தியருங் குறித்திட்டாரே.

குறித்திட்டார் தேரன் மாமுனிவனுக்குக்
கூறான தேரமா முனிவர்தாமும்
உரைத்திட்ட யூகியென்ற முனிக்குச்சொன்னார்
யூகியென்ற முனிதானும் உளந்தான் கூர்ந்து
மறைத்திட்ட ஆயுரு வேதத்தினுள்ள
மறைப்பான பொருளெல்லாம் ஆராய்ந்து
பார்த்து
தெறித்திட்ட திரட்டையெல்லா மொன்றாய்ச்
சேர்த்து
சிவன்சொன்னபடி சொன்னார் தெளிவாய்த்தானே.

[பிரமியம் முற்றும்.]

---

## சலம் இருபதுக்கும் பேர் உற்பத்தி.

தெளிவாக தேவிதான் சிவனைநோக்கித்
தெண்டனிட்டு ஆயுரு வேதத்தைமுன்னே
அளிவாக அனுக்கிரகம் பண்ணித்தல்லோ
ஆத்துமக் கோடிகளிடத்தில் கிருபைவைத்து
களிவாக தேவருக்கும் தேவரான
நடேசரே சகல பேரிடத்தில்தானும்
எளிவாக இருதய கமலத்தில்தானும்
இருந்தவரே சலத்தைநீர் சொல்லுமென்றாள்.

சொல்லுமென்று கேட்டவுடன் சிவனப்போ
தேவியைத்தான் முகம்பார்த்து வாராய்தேவி
அல்லுமென்ற மேகமது யிரண்டுபத்து
அதிதுல்லபமா யிருக்கும் லோகத்துள்ளே
உல்லுமென்ற உன்னுடைய சினேகந்தன்னால்
உரைக்கிறது உரைக்கிறேன் உற்றுக்கேளு
மல்லுமென்ற மகாதேவி பார்க்கில்லாமல்
மகிழ்ந்துநீ கேளுமென்று வசனித்தாரே.

வசனித்த மேகமது ரெண்டுபத்து
வாதத்தில் பிறந்தசலம் நாலே ஆகும்
பிசினித்த பித்தத்தில் உற்பவித்த
பேரான சலந்தானும் ஆறுஆகும்
தெசினித்த சேற்றுமத்தில் உற்பவித்த
சீரான சலந்தானும் பத்தேஆகும்
இசனித்த யிதனுடைய குணகுணங்கள்
எழிலான உற்பத்தி யியம்பக்கேளே.

இயம்பவே ஆறுகுணம் பின்னஞ்செய்தால்
ஏற்றமாய் பிரமணஸ்ரீ சங்கம்பண்ணில்

பயம்பவே பாலருக்கு ஒளிச்சுநின்னில்
　பழமை சலம்போறவழி தடுத்திட்டார்க்கும்
அயம்பவே ஆலயத்தில்சலம் விட்டோர்க்கும்
　ஆதியாம் வேதத்தைத் தூசித்தோர்க்கும்
துயபவே சூரியனை வணங்காதார்க்கும்
　சுறுக்காக மேகம் வந்துற்பவிக்குந்தானே.

உற்பவிக்கும் பால்நெய்பால் இறைச்சிகள்ளால்
　உருசையாய் மீன்தன்னால் அறுவிருத்த
மற்பவிக்கும் பதார்த்தத்தால் மதுரவஸ்தால்
　மத்தங்கள்தனில் போசித்தல் வேகாப்பண்டம்
குற்பவிக்கும் குளுக்க அன்னம் மங்கைகோஷ்டி
　குறித்த சித்திரை தவிர்தல் அக்கினிமந்தம்
தற்பவிக்குஞ் சரீரந்தான் மிகப்பருக்கல்
　சஞ்சலந்தான் பயப்படுதல் தரிக்கும் நோயே.

தரித்திட்ட வர்(த)த்தின் சலந்தானும்
　தனியான நாலுக்கும் பேரேதென்னில்
அரித்திட்ட ஆச்சியமெனத்தி மேகத்தொடு
　அதின்பிறகு சுத்தமா மேகமொன்று
பிரித்திட்ட பிரமியம் மேகமொன்று
　போரான மாங்சசிறவி மேகமொன்று
குரித்திட்ட பிதுவாதசலந் தானும்
　குணகுணத்தின் றுட்பமெல்லாம் குறிப்பாய்க்
　　　　கேளே.

## ஆச்சிய மேகம்

குறிப்பாக ஆச்சியசலம் இறங்கும்போது
　குணமான நெய்போலத் தானிறங்கும்
செறிப்பாகச் சிலேதோய்த்துக் கொளுத்தில்
　நேராக விளக்குப்போல எரியும்பாரு



தெரிப்பாகத் தினமொன்றில் குறுணிதானும்
　சீக்கிரமா யிறங்கிவிடும் தேகம்வாடும்
எறிப்பாக இம்மேகம் கண்ட ஏழு
　நாளுக்குள் எமபுரத்தி லெய்துவாரே.

## சுத்த மேகம்

எய்துவார் சுத்தமா மேகந்தானும்
　இறங்குமே கோசலம்போல் வன்னமாக
நயந்துவார் நாற்றமு மப்படியேயாகும்
　நாளுழிதா னிறங்கும் ஒரு வேளைக்கு
கயதுவார் காச்சினால் விளக்குத்தானும்
　கடுத்துலக்கமா யெரியும் களைமெத்தாகும்
பயதுவார் பதினஞ்சுநாளில் கொல்லும்
　பாலன போல யிருந்த முகம் கிழமுமாமே.

## பிரமிய மேகம்

கிழமாகப் பிரமியந்தான் இறங்கும்போது
　கொழுப்பான நாற்றம் பிறக்கும்
பழமாக வேளைக்கு நாழிதானும்
　பருத்துமே யிறங்குமே அடிக்கடிக்கு
அழமாக அந்தநீர் காச்சினக்கால்
　அதின் வாடை தேன்போலத் தானிருக்கும்
இழமாக யிப்படிதான் கண்டமேகம்
　எமபுரத்துக் காறுமாசத்தையில் தானேகும்.

## மாங்சசிறவி மேகம்

ஏகுமே மாங்சசிறவி யிறங்கும்போது
　இள ஆட்டின் கொழுப்புப்போல் தானிறங்கும்
ஆகுமே காச்சினால் ஆட்டின்நெய் போல
　அடவாக வேளைக்கு குறுணி தானும்

காருமே கருப்பஞ்சாறு போலேநாறும்
கனத்துதான் மூன்றுநாள் எட்டுநாளில்
சாருமே அஞ்சா மாசத்தையிலேதானும்
சதுர்விதமாம் வாதசலந் தானுமாச்சே.

## வாதம் நாலுக்கும் சமுதாய குணம்

ஆச்சென்ற நாலுக்குங் குணத்தைக்கேளு
அழகான கைகால் கண் உடலழத்தும்
நாச்சென்ற நாவறளும் பல்லும் நாக்கு
வெடித்தொண்டை கருப்பேறும் உதடெல்லாந்தான்
பேச்சென்ற பிலச்சியமாம் கண்மேல் நோக்கும்
பெருக அன்னந் தண்ணீரும் மிகவேவாங்கும்
தாச்சென்ற சரீரந்தான் கத்திவெட்டுத்
தான்போலே கடுத்துமே தழலுண்டாமே.

தழலாக வெதும்பியே மயக்கமாகுஞ்
சஞ்சலமாய்க் கிடைகொடாதே பிரட்டும்
அழலாக அடிக்கடிக்கு வாயுத்தானும்
ஆகாத நாற்றமாய்ப் பிரியுமெத்த
குழலாக நாடியே குடிலமாக
குணபேதமாய் நடக்கும் வேகம்மெத்த
வழலாக வாதமேகந் தனக்கு
வகுத்தமுறை பாடுதானுமாச்சே.

## பித்த ஜல மேகம்—6

முறையான பித்தசல மாறுமாகும்
முதுக்க அப்பியமென்று அபிமியமென்று
தறையான சாம்பிறீணம் மதுமியமென்றுஞ்
சாத்தியமே ஆவிருதந் தனேறேடாறு



மறையான மித்தாறு மேகந்தன்னை
மகதேவர் சொல்லிடவே தேவிகேட்கத்
துறையான குணகுணத்தை விரித்துச்சொல்லச்
சுத்தமாய் அப்பியத்தின் சுருவங்கேளே.

## அப்பியம்

சுருவமாய் அப்பியந்தான் இறங்கும்போது
தடியானை மதம்போலேதா னிறங்கும்
வெருவமாய் வேளைக்கு நாளுழிதானும்
விருசாகத் தானிறங்கும் காச்சினுக்கால்
உருவமாய் உவர்மண்போல் படியும்பாரு
உக்கிரமாய் கண்டஎட்டா மாதந்தன்னில்
இருவமாய் எமபுரத்துக் கெய்துவார்கள்
எற்றமாம் அப்பியத்தின் மேகந்தானே.

## அபிரமியம்

தானென்ற கற்றூமஞ்சாறு போலுங்
தன்நாற்றம் போலவே மிகவே நாறும்
கானென்றே காய்ச்சினால் கடிதானாற்றம்
கடிகைக்குள் இருநாழிதா னிறங்கும்
ஏனென்ற விக்குணமா மேகந்தானும்
இறந்தனதோர் மூன்றாகும் ஆண்டுதன்னில்
பானென்ற பரமபதம் எய்துமென்று
பரமனுரைத்தார் அபிரமியப்பண்பு தானே.

## சாம்பிறீண மேகம்

பண்பாகச் சுண்ணாம்பு அழலேநாறும்
படியுமே அடிதனிலே நீறுபோல
நண்பாக வேளைக்கு நாளுழிதானும்
நாழியே யிறங்குமிக எறும்பரிக்கும்

கண்பாகக் காய்ச்சினால் சுண்ணநீறு
கனமாகப் படியுமே அடியில்தானும்
தண்பாகக் கண்டசலம் இரண்டு ஆண்டில்
சாருவரே சாம்பிநீணத் தன்மைதானே.

## மதுமிய மேகம்

தண்மையாய்ச் சலந்தானும் பசப்புமஞ்சள்
தானிறங்கு வீசமுங் கோசமுங் கடுக்கும்
ஆண்மையாய் அடிக்கடிக்கு நீரிறங்கும்
அடிக்கடிக்கு அரைநாழி தனிலேதானும்
வெண்மையாய் அடிதனிலே தான்பிடிக்கும்
மிக்கான சடம்வெளுத்து மேனிகன்னும்
பண்மையாய்ப் பஞ்ச ஆண்டதனில்கொல்லும்
பகர்கின்ற மதுமியத்தின் பாங்குதானே.

## சாத்திய மேகம்

பாங்கான பளிங்கு நிறம் போலிறங்கும்
பரிவீச கோசமுமே கடுத்துக் கூசும்
தாங்கான தாழையும் விழுதுச்சாறு
தனைப்போலே தானிறங்கும் காய்ச்சினக்கால்
தேங்கான சிப்போலே மிகவேதானும்
சீக்கிரமாய் வேளைக்கோர் படிதானாகும்
ஏங்கான விப்படிதான் கண்ட மேகம்
எய்திடுமே அஞ்சாண்டில் சாத்தியந்தானே

## ஆவிருத மேகம்

சாத்தியமாய் முயல் ரெத்தம் போலேவீழும்
சாதகமா யிருநாழிதா னிறங்கிடும்
காத்தியமாய்க் காய்ச்சினால் புலாலேநாறும்
கனமான வீச கோசம் கடுக்கும்



தேத்தியமா யிப்படித்தான் கண்டமேகம்
ஒன்பதா மாதத்தில் ஒடுங்கும் சீவன்
ஆத்தியம் ஆவிருத மேகமென்றே
அவனியிலுள்ளோர் தங்களுக் கறியச்சொல்லே.

## பித்த சலரோகம் ஆறுக்கும் பொதுவான குணங்கள்

அறியவே பித்தசலம் ஆறுக்குந்தான்
அங்கத்தில் செய்கின்ற குணத்தைக்கேளு
தறியவே சரீரம்வற்றி யெரிவுண்டாகும்
சடத்திலுந்தான் நீரிலுந்தான் கவிச்சுண்டாகும்
தெறியவே சிப்போலுங கற்றாழைபோலும்
செல்போலும் தேன்போலும் நாற்றமுண்டாம்
வெரியவே வீசத்தில் கோசத்தில் குதத்தில்
மிகுசுரல் காபிபிலும் வேக்காடாமே.

வேக்காடாய் விரணமுண்டாய் வாய்தானாறும்
விக்கலொடு அருசியாய் சுரமுண்டாகும்
திக்காடாய் தேகந்தான் நிலைகொடாது
தியக்கமொடு மூர்ச்சையுண்டாய் மயக்கமாகும்
சாக்காடாய் நாவறளுந் தண்ணீர்த்தாகம்
சத்தியொடு சரீரமெல்லாந் தளர்ச்சியாகும்
தாக்கடா சஞ்சலந்தான் மிகவுண்டாகும்
சமகுணந்தான் பித்தசலம் ஆறுமாச்சே.

## சிலேற்பன சலரோகம் 10

ஆறான சிலேட்டுமசலம் பத்துந்தன்னை
அரன்சொல்ல ஆத்தாள்தான் கேட்கும்போது
வாறான வசாமேகம் உத்தமேகம்
மச்சியா மேகத்தோடா இக்ஷுமேகம்

தாறான சுராரி சுக்கிலம் உதகமேகம்
சுத்தமாம் பிணியோடு லவணமேகம்
தேறான தெயித்தியமா மேகமென்றுஞ்
செப்பினார் சிலேற்றுமத்தின் சலத்தைத்தானே.

## வசா மேகம்

தானென்ற வசாமேகம் இறங்கும்போது
சலத்தின்மேல் நிணம்போலும் ஆடையுண்டாம்
வேனென்ற வேளைக்குக் குறுணிதானும்
விடுபட்டுத்தா னிறங்கும் காய்ச்சினாக்கால்
நேனென்ற நிணம் உருக்குப் போலோறும்
நிலையாக இப்படித்தான் இறங்கும் மேகம்
ஏனென்ற ஏழாண்டு தன்னில் தானும்
எமபுரத்துக் கேகுமென்று இயம்பிடாயே.

## உத்தம மேகம்

இயம்பவே நல்லதண்ணீர் போலிறங்கும்
எடுத்ததைக் காய்ச்சினால் நல்லதண்ணீர்
நயம்பவே நாற்றமது நல்ல தண்ணீர்
நல்வேளை தனக்குமே குறுணியாகும்
பயம்பவே அப்படித்தான் கண்ட மேகம்
ஐயிரண்டு வருஷத்தில் அறியக்கேளு
மயம்பவே மறலியுட னூர்புக்காகும்
மகத்தான உத்தமமா மேகமாமே.

## மச்ச மேகம்

உத்தமமாய் எலும்புக்குள் சதையைப் போலே
உருகியேதா னிறங்கும் காய்ச்சினாக்கால்
நித்தமமாய் நிணநாற்றமா யிருக்கும்
நிசமாக வேளைமுன் னாழியாகும்



பத்தமமாய்ப் படிதான் கண்டமேகம்
பரமசிவ னடிபணியாப் பாவி யேகும்
இற்றமா இயமனுட னூர் புக்காகும்
இசைந்த அஞ்சு வருஷத்தில் மச்சமேகம்.

## ஆகிக மேகம்

மேகந்தான் இளநீர் போல் தானிறங்கும்
மிகக்காய்ச்சில் குளநீர் போல் தானிருக்கும்
வாகந்தான் வாடையது இளநீர் வீசும்
வகையான வேளைக்கு நாழியாகும்
தாகந்தான் மிகவுண்டாய் உடம்பிளைக்கும்
சஞ்சலந்தான் மிகவுண்டாங் கண்டவேழு
பாகந்தான் வருஷத்தில் சாவுமாகும்
பாங்கான ஆகிக மேகத்தின் பண்பே.

## சுராரி மேகம்

பண்பாக நுரையோடே வெருப்புப் போலப்
பனங் கள்ளுப் போலவேதா னிறங்கும்
நண்பாக வேளைக்கு நாழியாகும்
காய்ச்சினால் கள்ளுதான் மிகவேவீசும்
மண்பாக மாப்போலே மணந்தா னுண்டாம்
மயக்கமாம் இப்படித்தான் கண்டமேகம்
எண்பாக வேழு ஆண்டதனில் கொல்லும்
ஏற்றமாம் சுராரியென்ற மேகந்தானே.

## சுக்கில மேகம்

என்றதோர் மேகந்தா னிறங்கும் போது
ஏற்றமாம் சுக்கிலந்தான் நிறமே போலும்
நன்றதோர் தானியுட சாறு போலும்
தரிச்சமே [illegible] சிறுமிழும்

கன்றதோர் இதைக் காய்ச்சில் கட்டிபோலக்
கனமான ஈரல்போல் தோஞ்சுபோகும்
முன்றதோர் கண்டசலம் மூணு ஆண்டில்
முயற்சியாய்க் கொல்லுஞ் சுக்கில மேகந்தானே.

## உதக மேகம்

மேகமாய்க் கழுநீர்போல் சிக்கிச்சிக்கி
மிகுதியாய்த் தானிறங்குங் காய்ச்சினுக்கால்
சாகமாய்ச் சங்கு சுண்ணம்புபோலே
தாழவே மண்டி மிகப் படியும்பாரு
பாகமா யிப்படிதான் கண்ட மேகம்
பாங்குமாய் ஓராண்டுதனிலே கொல்லும்
வேகமாய் மிகநாறுஞ் சரீரந்தானும்
மிகுஉதக மென்றே விளம்புவாயே.

## பிணி மேகம்

விளமபவே தேன்போல மிக இறங்கும்
மிக்கான தேன்வர்ணம் நாற்றமாகும்
அளம்பவே மெழுகுபோல் அடியில் நிற்கும்
அதிகமா யீயெறும்பு மிகவே மொய்க்கும்
குளம்பவே வேளைக்குக் குறுணியாகும்
குறிகண்ட அஞ்சுமாசத்தினிலே கொல்லும்
தளம்பவே சரீரத்தில் மதுத்தாறுறுங்
தனித்ததோர் பிணியென்ற மேகந்தானே.

## லவண மேகம்

தனித்ததோர் மேகந்தா னிறங்கும்போது
தழலான சுண்ணாம்புக் காரநீர் போல்
மினித்ததோர் மிகுதியாய்த் தானிறங்கும்
வேளைக்கு நாழி தானுமாகும்



கனித்ததைக் காய்ச்சினால் படியும் உப்பு
கண்டசலம் பதினஞ்சு வருடத்தில் தான்
வனித்ததை மறலியுட னார்புக்காகும்
மகாலவண மேகத்தின் வண்மைதானே.

## தைத்திய மேகம்

வண்மையாய் மேகந்தா னிறங்கும்போது
மகா இறச்சி கழுவினதோர் தண்ணீர்போலாம்
கண்மையாய்க் காய்ச்சினால் கவிச்சடிக்கும்
கனமான நீர்த்தாரை முறுக்கிவிழும்
வெண்மையாய் வேளைக்கு முன்னாழியாகும்
மிக்கான குறிகண்ட மூணும் ஆண்டு
தண்மையாய் இயமன்தன்புரத்துக் கேகுக்
தைத்திய மேகந்தானும் தெசமுமாமே.

## சேட்டுமம் பத்துக்கும் குணம்

நிசமான பத்துக்குங் குணத்தைக் கேளு
சரீரந்தான் பருத்துமே வெளுப்புண்டாகும்
அசமான நினவுண்டாம் அடிக்கடிக்கு
அன்னமுமே தண்ணீரு மிகவேதேடும்
கசமான இருமலுடன் கோழையுண்டாம்
கனனரிவாய் ஆயாசம் உழலையாகும்
குசமான குணங்க ளெல்லாஞ் சேஷ்மம்தன்னின்
கொடியசலக் குணமென்றே கூறினரே.

கூறான மேகமது இருபதுக்கும்
குணந்தன்னைச் சிவன்சொல்ல தேவிகேட்க
தாறான தாகமொடு சோகம் ஏக்கம்
தரியாமல் கிரிழிதல் இருமல் மூச்சு

ஆருன அருசி சத்தி சித்தபிரமை
அடிக்கடிக்குத் தண்ணீர்தான் அன்னங்கேட்கல்
ஈருன யிடுப்புக்குள் கடுப்புக்காணல்
எலும்புக்கு ளழற்றலோடு எரிவுண்டாமே.

எரிவோடு சரீரமெல்லாம் அரைபட்டாப் போல
வகமெங்கும் நொய்தல் நித்திரையில்லாதல்
வரிவோடு வாயுவுமெத்தப் பரிதல்
மனது சஞ்சலப் படுதல் காற்று வேண்டல்
மெரிவோடு மேல்மூச்சு மிகவுண்டாதல்
விக்கலோடு மயக்கந்தான் மெத்தக்காணல்
தெரிவோடு தேகமெங்கும் வெளிறுண்டாதல்
தேகமெத்த ஆலோபப் படுதல்காணே.

## மேகம் இருபதுக்கும் அவத்தை

காணவே முதலவத்தை சரீரந்தானும்
கனமாகப் பருத்திறுகி நீர்த்துவாரம்
வேணவே வெண்டாக்கி அகலம்பண்ணும்
மிக்க இரண்டாம் அவத்தை விளம்பக்கேளு
மூணவே மூத்திரப் பீடையுமாய்ச் சுக்கிலம்
முகமழுங்கித் தேசுதான் மிகவேகுன்றும்
காணவே மூன்றாகும் அவத்தைக்குத்தான்
ஈவறனும் வாயுவது மீறுந்தானே.

தானான நாலவத்தை அங்கதாகம்
சன்னி பாதமுண்டாம் அஞ்சவத்தை
தேனான நீர்ப்பெருகுந் தாதுகட்டும்
நிலையாறு மவத்தைஉடல் இடை கொள்ளாது
மூனான மூர்ச்சைவரும் ஏழவத்தை
மிக்க அரோசிகஞ் சுவாசந்தேக



சாட்டியம் எட்டாவதவத்தை தானும்
எழுகிரந்தி பிளவையுந் தான் மிகஉண்டாமே.

உண்டாகும் ஒன்பதாம் அவத்தை கேளு
ஒழுக்கான அதிசாரம் கிருமியுண்டாம்
பண்டாகும் பத்தான்தான் அவத்தை கேளு
பாரமாம் சயங்கண்டு பரத்துக்கேகும்
வெண்டாகும் மேகந்தான் இருபதுக்கும்
விளங்கியதோர் தெசஅவத்தை விபரம் சொன்னோம்

அண்டாகும் அசாத்திய சாத்திய விபரம்
அறிந்துகொண்டு அடவாக அவிழ்தம் செய்யே.

## சாத்திய அசாத்தியம்

செய்யவே வச்சிரமாந் தண்டமான
செயமான முதுகுதண்டைப் பற்றி நிற்கும்
பெய்யவே பெருகரம்பில் மேகந்தாது
பிறக்குமென்றே தானறிந்து வாதந்தன்னால்
பெய்யப் பிறந்தசலம் நாலும் அசாத்தியம்
பித்தத்தில் பிறந்தசலம் ஆறும் யாப்பியம்[1]
பையவே சேற்றுமத்தில் பிறந்த சலம் பத்தும்
பரமனுரைத்தார் சாத்தியம் பாரபரிக்கே.

## மேகம் இருபதுக்கும் பத்தியம்

பரிமேகம் இருபதுக்கும் பத்தியந்தான்
பாங்காக வுரைத்திடவே பசுவின்வெண்ணெய்
பொரிவாக யெருமைமோர் பொன்னு(ங்)காணி
பேர்பெற்ற சிறுக்கீரை முசுட்டையாகும்

1. 'யாப்பியம்' வியாதி முற்றிலும் குணமாகாவிட்டாலும் அதன் கொடுமையைக் குறைத்து ஆயுளை நீடிக்கக்கூடியது (யாப்ய = காலங்கடத்தக்கூடியது).

அரிவாக அவரையொடு புடல்முருங்கை
அதிரசமாங் கற்கண்டு சர்க்கரையாகும்
மரிவாக மாதளையாம் பேரீந்தாகும்
விளாம்பழம் முந்திரிப் பழமுமாமே.

ஆமே பேயன்வாழைப்பழம் வாழைக்கச்சல்
அத்தியுட பிஞ்சு சிறுபயறு பழஞ்சோறு
பாமே பழஞ்சோற்றுநீர் வெந்தயஞ் சீரகமாம்
பாகல் பீர்க்கங்காய் கருவேப்பிலை கொத்தமல்லி
நேமே பொரிஎள்ளு முசுமுசுக்கையாகும்
நேரான நல்லெண்ணெய்ப்புண்ணாக்கு உளுந்து
தாமேகம் இருபதுக்கும் பத்தியவர்க்கம்
சாற்றினார் சிவன்றானும் தாய்க்குத்தானே.

தாயான பார்வதிக்குச் சிவன்தான் சொல்ல
தாய்கேட்டு நந்திக்கு அருளால் சொல்ல
தூயான நந்தி தன்வந்திரிக்குச் சொல்லச்
சுத்தமாய் தன்வந்திரி அசுவனிக்குச்சொல்ல
ஆயான அசுவனியும் அகத்தியர்க்குச்சொல்ல
அகத்தியரும் புலத்தியருக் குபதேசிக்க
பூயான புலத்தியரும் தேரன்மாமுனிக்குப்
புகன்றிட்டார் தேரன்முனி யூகிக்குத்தானே.

தானான யூகிமுனி சந்தோஷித்து
சகல சனத்துபகாரச் சாங்கமாங்
கோனான சிவன்சொன்ன ஆதிநூலின்
குறிப்பெல்லாம் பார்த்துணர்ந்து வடமொழி யின்திரட்டைத்
தேனான சாத்திரமாய்த் தமிழினாலே
தெளிவாக எல்லோரும் அறியவென்று
ஆனான ஆயுருவேதத்தை யெல்லாம்
அடக்கியே சுருக்கினார் மேகம் முற்றே.

---



## பிரமேஹத்திற்குச் சிகித்ஸை செய்யும்போது கவனிக்கவேண்டிய முக்கிய விதிகள்.

இதுவரையில் பிரமேஹத்தின் காரணங்களையும் குணகுணங்களையும் கவனித்து அறிந்தவர்கள் பிரமேஹம் மேதஸ் (கொழுப்பு), மாமிசம் இவை அதிகமாகவும் உடம்பில் இறுகாமலும், இருக்கும் உடல் நிலையிலேயே உண்டாகக்கூடும் என்பதை உணர்வர். ஆகையால் உடம்பில் கொழுப்பும் மாமிசமும் இறக்கக்கூடியதாக அவரவர் தேக நிலைக்குத் தகுந்தபடி, உலாவப்போதல் (walking) முதலிய இலகுவான தேகப்பயிற்சி, உடம்பை நன்றாய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தல், கூடிய வரையில் சுறுசுறுப்பாகவும் உத்ஸாஹத்துடனும் இருக்கப்பழகுதல் இவை மிகவும் அவசியமாகும்.

### சிகித்ஸை.

ப்ரமேஹமானது, வாதம், பித்தம், கபம் இவற்றின் அதிகரிப்பினால் ஏற்படக் கூடியதாகையால் அவற்றைக் குறைப்பது சிகித்ஸையின் முக்ய நோக்கம். இப்படிக் குறைப்பதற்கு மூன்றுவித சிகித்ஸைகள் ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன.

1. சோதனம்:—அதிகமான தோஷத்தை உடம்பிலிருந்து வெளிப்படுத்துவது. இந்த முறை வாத மிகுதியை வஸ்தி (enema)களாலும், பித்த மிகுதியை பேதிக்குக் கொடுப்பதினாலும், கப மிகுதியை வாந்தி செய்விப்பதினாலும் சோதனம் செய்தல் வேண்டும். ஆனால் சோதனம் செய்வதற்கு வியாதிஸ்தர்கள் உடம்பில் நல்ல வலுவுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

2. சமனம்:—அதிகமான தோஷத்தை மருந்துகளாலும் ஆகாரக் கட்டுப்பாட்டாலும் குறைப்பதே இந்த

முறை. வாதத்திற்கு தைல பிரயோகங்களும், பித்தத்திற்கு கிருதங்களும், கபத்திற்கு சுத்தமான தேன் கலந்த மருந்துகளும் சமனம் செய்யக்கூடியவை. இம்முறை அதிக பலம் இல்லாதவர்களுக்கும் தோஷம் அதிகமாகச் சேராதவர்களுக்கும் உரியது.

3. காரணத்தை விலக்குவது :-இதுவே சிகித்ஸையில் முக்யமானது. வியாதி உண்டாவதற்கு இடம் கொடுத்த ஆகார வகைகளையும் பழக்கங்களையும் மாற்றுவதே இந்த சிகித்ஸையின் முக்ய நோக்கம். ஆகாரத்தில் யவை கருங்குருவை இவற்றினால் சமைத்த அன்னமும் பிரமேஹத்தைக் குறைக்கும் மருந்துச் சரக்குகள் சேர்ந்த குடிநீரும், பிரமேஹத்தை குறைக்கக்கூடியவை.

ப்ரம்மணம், லங்கனம் :—பிரமேஹ சிகித்ஸையில் முக்யமாக கவனிக்கவேண்டிய வேறொரு அம்சம் உண்டு. மெலிந்தவர்களுக்குப் புஷ்டியை விருத்தி செய்தும், பருத்தவர்களுக்குப் புஷ்டியை குறைத்தும் சிகித்ஸை செய்ய வேண்டியது மிகவும் முக்கியம்.

---

# சரபேந்திரர் வைத்ய முறைகள்

## நீரிழிவு சிகித்ஸை முறைகளிலுள்ள மருந்து வகைகளின் அட்டவணை

### 1. சூரண வகைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஆவாரம் விதைச் சூரணம் | 10 |
| 2 | பெருமருந்துச் சூரணம் | 12 |
| 3 | தேத்தாங்கொட்டைச் சூரணம் | " |
| 4 | நிலயாவாரைச் சூரணம் | 21 |
| 5 | (நீர்முள்ளி விரைச்) சூரணம் | 23 |
| 6 | தேற்றும் விதைச் சூரணம் | 29 |
| 7 | (ஆவாரைச்) சூரணம் | 31 |
| 8 | ஆவாரை விரைச் சூரணம் | 33 |
| 9 | கொன்றைச் சூரணம் | 47 |
| 10 | ஆவாராதிப்பட்டைச் சூரணம் | 48 |
| 11 | கடலுருஞ்சியாதிப்பட்டைச் சூரணம் | 60 |
| 12 | வெப்பம் பிசினிச் சூரணம் | 62 |
| 18 | வேலம்பூவாதிச் சூரணம் | 63 |
| 14 | கோவையிலைச் சூரணம் | 67 |
| 15 | ஆவாரை விதைத் தூள் | 67 |
| 16 | புளியங்கொட்டைத் தோல் சூரணம் | 69 |
| 17 | கரிசலாங்கண்ணி மருந்து | 81 |

| | | பக்கம் |
|---|---|---|
| 18 | (சூடக்கொத்தான்) சூரணம் | 86 |
| 19 | (வெள்ளைக்குன்றி வேர்) சூரணம் | 88 |
| 20 | சந்தனுதிச் சூரணம் | 95 |
| 21 | (ஏலாதி)ச் சூரணம் | 110 |
| 22 | (பரங்கிப்பட்டைச்) சூரணம் | 114 |
| 23 | (அல்லிப்பூச்) சூரணம் | 118 |
| 24 | (கருங்குங்கிலியச்) சூரணம் | 120 |
| 25 | பஞ்ச சர்க்கரை | 36 |
| 26 | (அதிமதுர)ச் சூரணம் | 135 |
| 27 | (திரிகடுகாதிச்) சூரணம் | 136 |
| 28 | (வட்டத்துத்திச்) சூரணம் | 141 |
| 29 | (மஞ்சள்) மருந்து | 141 |
| 30 | மஞ்சிக் கிழங்குச் சூரணம் | 158 |
| 31 | பிராய்த்தூள் மருந்து | 158 |
| 32 | (புற்றுஞ்சோறுச்) சூரணம் | 186 |
| 33 | கங்காதரச் சூரணம் | 211 |
| 34 | அம்ருதாதிச் சூரணம் | 214 |
| 35 | ஸ்ரீகண்டாதிச் சூரணம் | 218 |
| 36 | சங்காதிச் சூரணம் | 223 |
| 37 | உருளரிசியாதிச் சூரணம் | 225 |
| 38 | (கரிசாலைச்) சூரணம் | 232 |
| 39 | கந்தகாதிச் சூரணம் | 233 |
| 40 | சந்திரகாதிச் சூரணம் | 250 |
| 41 | ஆவாரை வித்தாதிச் சூரணம் | 262 |
| 42 | பரங்கிப்பட்டைப் பதங்கம் | 201 |




## 2. கஷாய வகைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | மருதம்பட்டைக் கஷாயம் | 13 |
| 2 | ஏலாதி கஷாயம் | 14 |
| 3 | நெல்லியாதி கஷாயம் | 15 |
| 4 | மூத்தக்காசுக் குழம்பு | 17 |
| 5 | காரை நீர் | 22 |
| 6 | வில்வாதி கஷாயம் | 24 |
| 7 | வில்வ கடாயம் | ,, |
| 8 | அத்தியாதி கடாயம் | 26 |
| 9 | (பாதிரிக்) கஷாயம் | 27 |
| 10 | (ஆவாரைக்) கஷாயம் | 28 |
| 11 | நிலக்குமிழ் கடாயம் | 29 |
| 12 | (கடலிரஞ்சிப் பட்டைக்) கடாயம் | 37 |
| 13 | வெல்லாதிக் கடாயம் | 38 |
| 14 | (சூரையாதி) கடாயம் | 45 |
| 15 | செங்கலாதி மருந்து | 65 |
| 16 | (சொம்பரக்குக்) கஷாயம் | 74 |
| 17 | பார்ங்கியாதிக் கடாயம் | 142 |
| 18 | (பட்டுத்துணிக் கருக்குக்) கடாயம் | 230 |
| 19 | (நெல்லிமுள்ளிக்) கடாயம் | 238 |
| 20 | (மூங்கிலிலைக்) கடாயம் | 239 |
| 21 | (ஏலாதிக்) கடாயம் | 249 |
| 22 | (நெல்லிமுள்ளிக்) கடாயம் (வேறு) | 262 |
| 23 | (திரிபலாதி)க் கடாயம் | 244 |
| 24 | (வெட்டிவேர்)க் கடாயம் | 244 |

| | | பக்கம் |
|---|---|---|
| 25 | சந்தனாதிக் கடாயம் | 245 |

### 3. எண்ணெய் வகைகள்

| | | |
|---|---|---|
| 1 | (கார்ப்பாஸாஸ்த்தி) தைலம் | 39 |
| 2 | சம்பீர எண்ணெய் | 77 |
| 3 | நீராதார மருந்து | 80 |
| 4 | நல்லெண்ணெய் மருந்து | 74 |
| 5 | (வில்வாதி) எண்ணெய் | 84 |
| 6 | (கையாந்தகரை) எண்ணெய் | 90 |
| 7 | (முடக்கத்தான் சாறு) எண்ணெய் | 91 |
| 8 | (பிருங்காமலகத்) தைலம் | 92 |
| 9 | (ஆமலகத்) தைலம் | 92 |
| 10 | (குங்கிலிய) மெழுகு | 101 |
| 1` | (பருத்திப் பிஞ்சு) எண்ணெய் | 104 |
| 12 | (கஞ்சாயிலைச்சுடர்) தைலம் | 115 |
| 13 | (வெள்ளை வெங்காய) எண்ணெய் | 128 |
| 14 | (வேப்பம் பட்டைக்) குழித் தைலம் | 131 |
| 15 | (மிளகு) எண்ணெய் | 142 |
| 16 | ஆவாரையாதி எண்ணெய் (தவறுதலாக கிருதம் என்று கூறப்பட்டிருக்கிறது.) | 165 |
| 17 | தேங்காய்ப்பாலெண்ணெய் (தவறுதலாக கிருதம் என்று கூறப்பட்டிருக்கிறது.) | 192 |
| 18 | (வெட்பாலை) எண்ணெய் | 193 |
| 19 | (பூர) எண்ணெய் அல்லது (வெள்ளை) எண்ணெய் | 195 |
| 20 | (தேங்காய்) பாலெண்ணெய் | 195 |
| 21 | ஆவாரைத் தைலம் | 196 |





| | | பக்கம் |
|---|---|---|
| 22 | பூண்டு எண்ணெய் | 199 |
| 23 | துளசி நல்லெண்ணெய் மருந்து | 211 |
| 24 | நல்லெண்ணெய் மருந்து | 218 |
| 25 | (திருகுக் கள்ளி) எண்ணெய் | 220 |
| 26 | (வெள்ளை) எண்ணெய் | 235 |
| 27 | (கார்போகி) எண்ணெய் | 236 |
| 28 | (திரிபலாதி) எண்ணெய் | 258 |

### 4. லேகிய வகைகள்

| | | |
|---|---|---|
| 1 | (கருணைக்கிழங்கு) லேகியம் | 155 |
| 2 | பரங்கிப்பட்டை லேகியம் | 177 |
| 3 | வல்லாதி | 179 |
| 4 | பரங்கிப்பட்டை லேகியம் | 203 |
| 5 | அத்திப்பட்டை லேகியம் | 206 |
| 6 | (சர்க்கரை) லேகியம் | 224 |
| 7 | பில்வாதி லேகியம் (முறையின் பெயர் எண்ணெய் என்று கூறப்பட்டிருப்பது சரியல்ல) | 280 |
| 8 | (சங்கங்குப்பி) லேகியம் | 253 |
| 9 | வல்லாதி | 260 |
| 10 | கெங்காதி லேகியம் | 276 |

### 5. நெய் வகைகள்

| | | |
|---|---|---|
| 1 | (நந்தியாவட்டை) நெய் | 96 |
| 2 | பஞ்சகவ்விய கிருதம் | 123 |

| | | பக்கம் |
|---|---|---|
| 3 | (கருணைக் கிழங்கு) நெய் | 126 |
| 4 | (பரங்கிப்பட்டை) நெய் | 133 |
| 5 | கூஷ்மாண்ட கிருதம் | 146 |
| 6 | சிந்தில் நெய் | 148 |
| 7 | நிலப்பனைக் கிழங்கு நெய் | 149 |
| 8 | கல்யாண கிருதம் | 153 |
| 9 | நிலப்பனைக் கிழங்கு நெய் | 168 |
| 10 | செங்கொட்டை நெய் | 180 |
| 11 | கதலீகந்த கிருதம் | 242 |
| 12 | கணேபசிங்க கிருதம் | 245 |
| 13 | ஏலாதி கிருதம் | 279 |


## 6. பற்பம் வகைகள்


| | | |
|---|---|---|
| 1 | வெள்வங்க பற்பம் | 30 |
| 2 | வெள்வங்க பற்பம் | 49 |
| 3 | (பற்ப) மாத்திரை | 101 |
| 4 | வங்க பற்பம் | 138 |
| 5 | வங்க பற்பம் | 162 |
| 6 | காரீய பற்பம் | 173 |
| 7 | காரீய பற்பம் | 181 |
| 8 | அஞ்சனக்கல் பற்பம் | 204 |
| 9 | கிருஷ்ணப்பிரகப் பற்பம் | 205 |
| 10 | கல்நார் பற்பம் | 228 |


## 7. செந்தூரம்


| | | |
|---|---|---|
| 1 | அப்பிரகச் செந்தூரம் | 11 |





| | | பக்கம் |
|---|---|---|
| 2 | அப்பிரகச் செந்தூரம் | 19 |
| 3 | காரீயச் செந்தூரம் | 72 |
| 4 | அப்பிரகச் செந்தூரம் | 108 |
| 5 | இரத செந்தூரம் | 164 |


## 8. சாறு வகைகள்


| | | |
|---|---|---|
| 1 | (தாழை விழுதுச் சாறு) மருந்து | 122 |
| 2 | (ஆவாரையிலைச் சாறு) மருந்து | 130 |
| 3 | தாழைவிழுதுச் சாறு மருந்து | 140 |
| 4 | (முசுமுசுக்கைச் சாறு) மருந்து | 145 |
| 5 | (அத்திப்பிஞ்சுச்) சாறு மருந்து | 157 |
| 6 | (புளியிலைச் சாறு) மருந்து | 177 |
| 7 | (தழுதாழைச் சாறு)மருந்து | 178 |
| 8 | (சங்கிலைச் சாறு) மருந்து | 179 |
| 9 | (நெல்லிக்காய்ச் சாறு) மருந்து | 228 |
| 10 | (கட்டுக்கொடிச்) சாறு மருந்து | 275 |


## 9. உருண்டை வகைகள்


| | | |
|---|---|---|
| 1 | ஏலாதி உருண்டை | 48 |
| 2 | காந்தாதி மருந்து | 55 |
| 3 | ஜாதிலிங்க குளிகை | 56 |
| 4 | திரிகடு உருண்டை | 58 |
| 5 | ஆவாரையாதி உருண்டை | 59 |
| 6 | (கொன்றை )மருந்து | 76 |
| 7 | தாளீசபத்திரி வடகம் | 82 |

| | | பக்கம் |
|---|---|---|
| 8 | (ஆவாராதி) உருண்டை | 100 |
| 9 | (மூதியார் கூந்தல்) மாத்திரை | 109 |
| 10 | (லவங்காதி) வடகம் | 109 |
| 11 | காந்தாதி உருண்டை | 184 |
| 12 | சுகபேதி மருந்து | 187 |
| 13 | (வாழைப்பூ) வடகம் | 273 |


## 10. பச்சிலை மருந்துகள்


| | | |
|---|---|---|
| 1 | விடத்தேரியிலை விழுது | 21 |
| 2 | ஆவாராதி விழுது | 25 |
| 2 a | ,, ,, | 26 |
| 3 | கீழாநெல்லி விழுது | 30 |
| 4 | தேத்தான் வித்து விழுது | 44 |
| 5 | செஞ்சோள விழுது | 53 |
| 6 | ஆவாரங்கொழுந்து மருந்து | 64 |
| 7 | ஆவாரை வேர் விழுது | 64 |
| 8 | விடத்தகரை மருந்து | 68 |
| 9 | பொடுதலை மருந்து | 81 |
| 10 | (கோவையிலை) மருந்து | 87 |
| 11 | (உகாவேர்ப்பட்டை) மருந்து | 87 |
| 12 | (தென்னம்பாளை) விழுது | 99 |
| 13 | (வெங்காய) மருந்து | 103 |
| 14 | (தாழை விழுதுச் சாறு) மருந்து | 103 |
| 15 | (சிவனார் வேம்பு) வெண்ணெய் | 105 |





| | | பக்கம் |
|---|---|---|
| 16 | (தேங்காய்) மருந்து | 106 |
| 17 | (கீழாநெல்லி) வெண்ணெய் | 106 |
| 18 | (புளியம் வேர்) பால் | 107 |
| 19 | (தேத்தான் வித்து) விழுது | 98 |
| 20 | (பச்சரிசி)மருந்து | 108 |
| 21 | பிரமேகத்தைப் போக்கும் ஔடதங்கள் | 112 |
| 22 | (இண்டங்காய்) வெண்ணெய் | 116 |
| 23 | (கரிப்பாலை, பால்) மருந்து | 119 |
| 24 | (ஆடாதோடைப்) பால் மருந்து | 121 |
| 25 | (பீர்க்கம் வேர்) மருந்து | 123 |
| 26 | (இலந்தை) விழுது மருந்து | 123 |
| 27 | (ஊணாங்கொழுந்து) விழுது | 127 |
| 28 | (வெள்ளரிக்காய்) மருந்து | 132 |
| 29 | (கருஞ்சீரக) மருந்து | 138 |
| 30 | (மயிர்மாணிக்க) மருந்து | 140 |
| 31 | (பெருந்துத்தி, பால்) மருந்து | 143 |
| 32 | (தூதுவேளை, பால்) மருந்து | 143 |
| 33 | (சீந்தில், பால்) மருந்து | 143 |
| 34 | (செம்முள்ளி) மருந்து | 145 |
| 35 | (தும்பையிலை) மருந்து | 152 |
| 36 | (ஈரவெங்காய) மருந்து | 153 |
| 37 | (காரையிலை) மருந்து | 157 |
| 38 | நார்த்தம்பழ மருந்து | 159 |
| 39 | (வட்டத்துத்தி) வேர் மருந்து | 159 |
| 40 | சீர்ப்பூலா வேர் மருந்து | 160 |

| | | பக்கம் |
|---|---|---|
| 41 | (முசுமுசுக்கை) மருந்து | 188 |
| 42 | (எருக்கம் பால்) மருந்து | 188 |
| 43 | (நொச்சிக் கொழுந்து) மருந்து | 189 |
| 44 | (கோவையிலை, பால்) மருந்து | 189 |
| 45 | (நொச்சியிலை, பால்) மருந்து | 190 |
| 46 | (முடக்கொத்தான்) மருந்து | 190 |
| 47 | (தேத்தான் கொட்டை ) மருந்து | 191 |
| 48 | (அம்மான் பச்சரிசி) மருந்து | 191 |
| 49 | (கோவைத்தண்டு) மருந்து | 227 |
| 50 | (சங்கம் வேர்) கல்கம் | 231 |
| 51 | (முசுமுசுக்கை) வெண்ணெய் | 234 |
| 52 | (கலைமான் கொம்புக்) கல்கம் | 278 |


## 11. இதர மருந்துகள்


| | | |
|---|---|---|
| 1 | சாணிப்பால் மருந்து | 16 |
| 2 | பனைநுங்கு மருந்து | 18 |
| 3 | பாதிரிப்புட்டு | 20 |
| 4 | ஆவாராதி தயிர் | 28 |
| 5 | ஆவாரைப்பிட்டு | 32 |
| 6 | ஆவாராதி அடை | 51 |
| 7 | ஈரவெங்காயப் பிட்டு | 52 |
| 8 | (பருத்திவிதைப் பால்) மருந்து | 53 |
| 9 | வெள்ளி லோத்திரமா | 54 |
| 10 | தாமரை வளையாதிப் பிட்டு | 59 |
| 11 | பருத்தி விதை மருந்து | 63 |





| | | பக்கம் |
|---|---|---|
| 12 | ஆவாரை தோற்பை மருந்து | 68 |
| 13 | சுக்காதி மருந்து | 69 |
| 14 | வேளை மருந்து | 70 |
| 15 | கோழி முட்டை மருந்து | 75 |
| 16 | (ஏலக்காய்) சுரஸம் | 89 |
| 17 | (தேத்தாங்கொட்டை) மருந்து | 98 |
| 18 | (வாழைக் கிழங்கு) மருந்து | 98 |
| 19 | (தேத்தாங்கொட்டை) மருந்து (வேறு) | 98 |
| 20 | (கற்றாழை) மருந்து | 108 |
| 21 | (விடத்தேரிலைக்) களி | 117 |
| 22 | (புழுக்கொல்லியிலை)ப் பிட்டு | 120 |
| 23 | (பாலொடுவிப்) பொங்கல் | 121 |
| 24 | (செப்பு நெருஞ்சிப்) பிட்டு | 122 |
| 25 | (தைவேளை) அடை | 128 |
| 26 | (அத்திப்பட்டைக்) களி | 137 |
| 27 | (தண்ணீர்விட்டாங் கிழங்கு) களி | 143 |
| 28 | (அமுக்கிராக் கிழங்காதிப்) பிட்டு | 160 |
| 29 | குழித்தைலப் பொரி | 200 |
| 30 | பருத்திப்பால் பொங்கல் | 222 |
| 31 | (வெள்ளைப்பூண்டுப்) பிட்டு | 130 |
| 32 | (தென்னம்பாளைப் பால்) மருந்து | 132 |
| 33 | (மாக்கல் பொடி) மருந்து | 140 |
| 34 | (சிலக்குமிழ்) நீராகாரம் | 144 |
| 35 | (பாங்கிப்பட்டைத் தயிர்) மருந்து | 224 |
| 36 | (பனங்கிழங்குத்) தயிர் | 274 |

| | பக்கம் |
|---|---|
| **12. பூச்சு வகைகள்** | |
| 1 (துரிசாதிப்) பூச்சு | 235 |
| 2 (தேத்தான் வித்துப்) பூச்சு | 258 |
| **13. ஒத்தடம், வேது முதலியன** | |
| 1 (கற்றாழை) ஒத்தடம் | 128 |


---

# சரபேந்திரர் வைத்திய முறைகள்

## நீரிழிவு சிகிச்சை.

### காப்பு.

திருவளருமாதி சதாசிவனார்பாதம்
சென்னியில் வைத்துலகின் மனுவுக்காய் முன்னோர்
மருவளருந் தமிழாற் செய் வைத்தியத்தை
வாய்மைபெறு தஞ்சை துளசேந்திர பூபன்
றருபுதல்வன் சரபோஜிமக ராசேந்திரன்
தமிழதினு லுரைக்க வென்று இச்சித்த
வருளதனு னர்க்கு வரு மேகரோக
மதுக்கவிழ்த முரைக்க தும்பி முகனுங் காப்பாமே.

### நீரிழிவு உண்டாகும் காரணங்களும் அதன் வகைகளும்

மேகமெனு நீரிழிவு வரும் விதத்தை
விளம்புகிறேன் முன்செய்த கன்மத்தன்றாற்
றேகமுடன் மதுரபதார்த்தங்கள் கன்றாய்த்
தான் புசிக்கையாலு சித்தனத்தின் மங்கை
போக மதிகையாலு முட்டணத்தான்
போதமின்சுவை மிகுதியுந்தயிர், மோர், நெய், பால்,
வேகமாய்ப் புசிக்கையாலுங் கொழுத்திறைச்சி
யென்று முண்கையாலுவர் நீருண்கையாலே.

ஆசையுடன் சிறுவழுதலங்காய் தன்னை
யதிகமாயுண்டாலுங் காலந்தப்பிப்
போசனங்கள் செய்தாலு டையலைச்சல்
போதையிருந்தாலுங்கண் விழிக்கையாலுங்
தேசமதிற் பல நீருண்டிடுகையாலே
சிரந்தனிற் சூடதிகங்கொண்டுடனே ரத்தம்
சோஷித்து வேகமதிகமாய்த் தோன்றித்
தொல்லை செய்யும் நீரிழிவுமிருபதாமே. ௩

(இதன்-பொருள்)

மேகம் என்று சொல்லப்படுகின்ற நீரிழிவு வரும் விதத்தைச் சொல்லுகிறேன் : அவையாவன :—

1. தித்திப்புவகைப் பதார்த்தங்களை அதிகமாய்ச் சாப்பிடுதல்.

2. அதிகமான ஸ்திரீபோகம்.

3. உஷ்ணம் அதிகரித்தல்.

4. தயிர், மோர், நெய், பால் முதலியவைகளை அதிகமாகச் சாப்பிடுதல்.

5. இறைச்சி முதலிய கொழுப்புப் பதார்த்தங்களை அதிகமாக உபயோகித்தல்.

6. உவர் நீர் குடித்தல்.

7. கத்தரிக்காயை அதிகமாக உபயோகித்தல்.

8. அகால போஜனம்.

9. அதிகமாக அலைதல்.

10. இரவில் கண்விழித்தல்.

11. நானாவித தேசங்களில் உண்டான பலவகை ஜலங்களைச் சாப்பிடுதல்.



மேற்சொன்ன காரணங்களினால் தலையில் சூடு அதிகமாகி, ரத்தத்தை வறட்சியுறச்செய்து, பலவித இடையூறுகளை விளைவிக்கக்கூடிய நீரிழிவு ரோகத்தை உண்டாக்குகின்றது. இது 20 வகைப்படும்.

இருபதிலே வாதத்தால் வருவநாலு
இசைந்த பித்தத்தால் வருவதாறு சேத்துமம்
வருவதும் பத்தாக இருபதுக்குள்.
வாதமதால் வரும் நாலுக்குப் பேர் சொல்வேன்.
திருகு கறப்பன் றாயன் றாதுபிரமன்
சேர்ந்த மாங்கிஷமுருக்கி யென்றும் நாற்பேர்
உரை கறப்பனென்றுமது மேகத்துக்கு
முற்பனமா செய்யதுவும் நாருக்தானே. ௪

தானதிலே திரிசெய்து தோய்த்துவன்னி
தனிற் கொளுத்திப் பாரெரியுக் தாயனென்று
மானதொரு மேகங்கோ மூத்திரமா
மதுதப்பாதே தாயபிரமமேக
மூனமாங்கிஷங்கழி யுக்தண்ணீர்போலே,
யோடு மாங்கிஷ முருக்கி யென்று மேகம்
தானது நாளுட்டு கினமுருக்கினாற்போல்
தான் நாறி க்கழியுமதைக் காய்ச்சிப்பாரே. ௫

(இ-ள்)

அந்த 20 வகையில்,

| | | |
|---|---|---|
| வாதத்தால் | நான்கு | வகையும் |
| பித்தத்தால் | ஆறு | ,, |
| சேத்தால் | பத்து | ,, |

வாதத்தால் உண்டாகும் 4 வகைக்குப் பெயர்களாவன:-

1. திருகு கறப்பன்
2. தூயன்
3. தூது பிரமன்
4. மாங்கிஷ மூருக்கி.

1. உரைகறப்பான் அல்லது திருகு கறப்பான் எனப் பட்ட நீரிழிவுக்கு,—ஒரு காரை எடுத்து அதன்மேல் நெய் தடவி திரிமாதிரியாகச் செய்து, நோயாளியின் மூத்திரத் தில் தோய்த்து நெருப்பில் கொளுத்த, அத்திரி எரிந்தால் அது 'உரை கறப்பன்' எனப்பட்ட நீரிழிவு என்றறியவும்.

2. தூயன் என்ற நீரிழிவு :—

ரோகியின் மூத்திரம் பசுமாட்டு மூத்திரம்போலவே இருக்கும்.

3. தூயப்பிறமன் :—

மாமிசத்தினின்று வரும் ஊன் தண்ணீர்போன்று இறங்கும்.

4. மாங்கிஷ மூருக்கி :—

ஆட்டின் கொழுப்பை உருக்கினால் வரும் நாற்றத் துடன் வெளிவரும். அதைக் காச்சினால் நன்கு எரியும்.

காச்சி விளக்கேற்றிலது யெரியுங்கண்டாய்,
கருப்பஞ்சார்போலே நிறமிருக்கும் பாரு
வாச்சிடாதிதுக்கு மவிழ்தள்ளாலு
மணி மந்திரத்தாலுமிது தீராது
சூச்சமிகு குரு கடாட்சத்தினாலே
துர்நோயுந்திருமதுவே யல்லாது
பேச்சுவித்தையாலுமிது தீராதென்றும்
பிரமன் விதிப்படி யென்றுமறிந்திடாயே. கூ



(இ-ள்)

மாங்கிஷ மூருக்கி என்னும் நீரிழிவில் நீர் கருப்பஞ் சாறுபோன்ற நிறத்தை அடையும். இதற்குச் சிகிச்சை :-

இது மருந்துகளினாலோ மணிமந்திரத்தினாலோ முற் றிலும் தீர்க்கக்கூடியதில்லை (உபசாந்தியாக வைத்தியம் செய்யலாம்.) ஆனால் குருவருளால் தீரக்கூடும்.

ஆம் பித்தத்தால் வந்த மேக மாறி
லதின் பெயருமப்பியமென்று பசாமியமென்றும்
தேம்பு சாப்பிரம மதுப்பிரம மென்றுந்
தேக அசாத்தியமென்றும் விறுதமென்றும்
சாம்புகனுமாறுகளிலப்பியமேகம்
நான்தோறு மானைமதம் போலேநீறு
பசாமியமெனு மேகங் கற்றூழஞ்சார்
வகையாகநாறுஞ் சாப்பிரமந்தானே. எ

சாப்பிரமேகஞ் சுண்ணம்புமல் போல்நாறித்
தான் கழிந்த விடமெறும்பு மரிக்குங்கண்டாய்
வாய்ப்பு மதுப்பிரமமென்று மேகந்தானு
மாண்பாடு கடுத்து விடுஞ் சாத்திய மேகம்,
தாப்பிரிய மாந்தாளை விழுதகுற்றுந்
தண்ணீர் போலக்கழிந்து மூடல்குளாறு
மாப்பிலமாம் விறுதமென்று மேகந்தானும்
வன்றுவலின் ரெத்தம் போற்கழியும் வானே. அ

(இ-ள்)

பித்தத்தாலுண்டாகும் 6 வித நீரிழிவுக்குப் பெயர்கள் :—

1. அப்பியம்
2. சாமியம்
3. சாப்பிரமம்

4. மதுப்பிரமம்

5. சாத்தியமேகம்

6. விறுதம்

அப்பியமேகத்தின் லக்ஷணம் :—

தினந்தோறும் யானைமதம் போல நீர்றுக்கொண்டே யிருக்கும்.

2. ஆமியமேகத்தின் லக்ஷணம் :—

கற்றாழைச் சாறுபோல் நாற்றம் இருக்கும்.

3. சாப்பிரமமேகத்தின் லக்ஷணம் :—

சுண்ணாம்புத் தண்ணீர் போன்று கெடியை உண்டாக்கும். அந்தரோகி மூத்திரம்விட்ட இடத்திலுள்ள எறும்புகள் இறந்துவிடும்.

4. மதுப்பிரம மேகத்தின் லக்ஷணம் :—

மூத்திரம் விடும்போது கடுப்பு உண்டாக்கும்.

5. சாத்யமேக லக்ஷணம :—

தாழை விழுதுச் சாறுபோன்ற நாற்றத்துடன் நீர் பிரியும்.

6 விறுதன் என்ற மேகத்தின் லக்ஷணம் :—

நீர் முயல் ரத்தம்போல் சிவப்பாக இறங்கும்.

பீர்த்துவும்-பலால வளிம்பு காறு மாறும்
பகர் பித்தத்தால் வந்தஇந்த நோயுங்
கூருடைய நோய் கண்ட போதவிழ்தங்
கொண்டு மீளலது போம் வருவதானே.



தாருசெய்யுஞ் சேற்று மத்தாலுற்ப வித்த
நீர் மேகம் பத்துக்கும் பெயருஞ் சொல்வேன்
நேருடைய வுத்தமனென் றித்தனென்றும்
நிச்சயித்த அக்கியனென்று ஞ்சாரியனென்றே.

சாரியனென்று ஞ்சுக்கு லனென்றும் பிராட்டியனென்றுஞ்
சாற்று பேஹனியென்று ஞ்சண்ம மிலென்றும்
கூறுமிலவண னென்று ந்தமித்திய னென்றும்
கொண்டபெயர் பத்திலு முத்தமனென்மேகஞ்
சீருடைய தெளிந்த நீர்போலக் காணும்
தீயினிற் காச்சிலும் நீரின் குணமு நாற்ற
மாருமித்தத னிளநீர்போலும் நாற்ற
மாகுநீருமிறுகு மக்கிய ந்தானே. ௰

(இ-ள்)

பித்த நீரிழிவுக்கு சிகித்ஸை :

இந்த ஆறுவித நீரிழிவுகளும், தொடங்கினவுடனே யே மருந்துகள் சாப்பிட ஆரம்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் கெடுதி விளைவிக்கும்.

கபத்தினாலுண்டான நீரிழிவின் பெயர்கள் :

1. உத்தமன்
2. இத்தநன்
3. அக்கியன்
4. சாரியன்
5. சுக்குலன்
6. பிராட்டியன்
7. பேஹனி
8. சணமயிலன்
9. லவணன்
10. தமித்தியன்

இந்த 10 வித கபமேக ரோகங்களின் லக்ஷணங்களாவன :—

1. உத்தமன்—மூத்திரம் தெளிவாக இருக்கும். காய்ச்சினால் நாற்றமுண்டாகாது.

2. இந்ததன் - இளநீரைப்போல நீர் இறங்கும். காய்ச்சினால் இறுகும்.

அக்கிய மெனுமேகமீன் கழுவும் நீர்போலது
நாறிய ன்னிற மாகிருந்தானிறு
க்கழியுஞ்சுராரி யென்று மேகந்தானும்
இறுப்பான கள்நாற்றம் நிறமு ங்கள்ளே
சுக்கில மேகம் பனைநோங்கின் சார்போலாக்
கடிமான பிராட்டியெனு மேகந்தானும்
வக்கணமாவரைத்துக் கரைத்தாப்போல
வருமின்னமொன்று பேனுனி தானே. ௰௪

பேனுனியெனு மேகங்கழியுஞ் சுண்ணாம்
பினீர்போல் நாற்றமு மன்னிறம் தானுந்
தானுனல் சணமயில் மேகந்தானுந்
தப்பாமற்றுடை மடக்க வொட்டாமற்று
றுறுமடிக்கடி நீர்கழியு ந்தேற்று
மண்ணீர்போல் மண்டி நிறமாகும் லவணமேகந்
தானுனவுவர் மண்ணும் கரைத்த நீர்போற்
கன நாற்ற மக்நிற மாங்கண்டு பாரே. ௰௫

கண்டு பாருந்தமித்திய மேகந்தானுங்
கண்ணீர் போலமேக மிருபதாச்சு
பண்டு நீரிழிவென்று நோய்கள் மெத்த
மானிடரை வருத்து மென்று மன்னர் மன்னன்



அண்டினரைக் காக்குந்தன சேந்திர னின்று
அன்னால் சரபோஜி மகாராசனுறுதும்
தன்பமிறா லதற்கிழிந் தேடிலோகம்
தனக்கு ரூபகாரஞ் செய் தன்மை கேளே. ௰௬

( இ-ள் )

3. அக்கியன் :

மீன் கழுவின நீர்போல நாறும்; அதே நிறமாகவிருக்கும்; காய்ச்சினால் இறுகும்.

4. சுராரி (சாலியன்):—

இது கள்ளின் நிறமாகவே இருக்கும். நாற்றமும் கள் நாற்றம்போலவே இருக்கும்.

5. சுக்கிலன் :—

பனை நுங்கின் சாறுபோன்று இருக்கும்.

6. பிராட்டியன் :—

நீர், மாவைக் கரைத்தாற் போன்று இருக்கும்.

7. பேனுனி :—

இது சுண்ணாம்பு நீர் வாடை வீசும்போல், இதன் நிறமும் சுண்ணாம்பு நீர்போலவே இருக்கும்.

8. சணமயிலன் :—

இந்த ரோகி துடையை மடக்கமுடியாமல் கஷ்டப்படுவான். அடிக்கடி நீர் பிரியும். கலங்கி இருக்கும்.

9. லவணன் :—

உவர் மண்ணைக்கரைத்த நிறமும் வாடையும் அடிக்கும்.

10. தமித்தமேகம் :—

நிறம் கண்ணீர் போன்று இருக்கும்.

இந்த 20 விதவான நீரிழிவு ரோகங்களுக்கும், சரண மடைந்தவரைக் காப்பாற்றும் துளசேந்திர மன்னன் மகன் சரபோஜி மகாராஜன் சொற்படித் தமிழால் பலவித மருந்துகளை லோகோபகாரமாகக் கீழ்கண்டபடி சொல்லு கிறேன்.

## 1. நீரிழிவுக்கு ஆவாரம் விதைச் சூரணம்

ஆவாரம் விரை யொதியம் பட்டை அத்தி
யதின் விரையும் பனைவிரையு நவதானியங்கள்
நாவாலுமுரை யைந்திற்காற் காற் சேராம்
நற்சாதிபத்திரி சாதிக்காய் இராம்பு
கூவாமல் வகைக்கு மரைப்பல மிதெல்லாங்
கொண்டு இளவறுப்பாக வறுத்துக்கொண்டு
தாவாமற் கல்வத்திற் பொடிகள் பண்ணித்
தப்பாமல் வடிக்கட்டி வைத்திடாயே. ௧௪

வடிக்கட்டி வைத்துக்கொள் புதுப்பாண்டத்தில்
மானிடரை வருத்து நீரிழிவு வந்தால்
கடிப்பிரமாணம் கொள்ளுமுள்ளுக்குத் தான்
காலமே யந்தியுந் தானிரண்டு வேளை
துடியான மொச்சைப் பருப்பு வாழைக்காய்
துருசுடனே கடுகுவெந்திய மூன்று கா
சிடையிட்டு க்கறிபண்ணிக் கொள்ளுநன்றாந்
தீரன் சரபேந்திர னுரை சூரணமாமே. ௧௫

(இ-ள்)

1. ஆவாரவிரை
2. ஒதியம்பட்டைத்தூள்
3. அத்திவிரை
4. பனைவிரை (நுங்கு) அல்லது பனங்கொட்டை



5. நவதானியங்கள்
6. நாவற்கொட்டை

இவைகள் வகைக்கு 2 பலம்

சாதிக்காய், சாதிபத்திரி, கச்சோலம், இராம்பு, இவை கள் வகைக்கு ½ பலம்,

இவைகள் எல்லாவற்றையும் பொன்னிறமாக வறுத் துக்கொண்டு கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திர காளனம் செய்துகொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியில் பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு கடிவீதம் காலை மாலை சாப்பிட்டுக்கொண்டுவர, கஷ் டங்களை உண்டாக்கும் நீரிழிவு தீரும்.

பத்தியம்

மொச்சைக்கொட்டை, வாழைக்காய் இவைகளை கடுகு, வெந்தயம் (ஒரு காசிடை கூட்டவும்) கறிபண்ணிச் சாப்பிடவும்.

## 2. நீரிழிவுக்கு அப்பிரக செந்தூரம்

அப்பிரக செந்தூரம் ரசத்தின் பற்ப
மதிரண்டுஞ்சரியா நெல்லிக்காய்ச் சாற்றில்
மெய்ப்புடனே யேழுபாவனைகள் பண்ணி
மேன்மையுள்ள பெருமரத்து விரைவைத்தானே
தப்பிலாமற் குன்றி மினிடைரெண்டு
தான்கலந்து சிறுநீரைச் சாறும்பெய்யு
மெய்ப்புடனே கூட்டிக்கொள் விபுவுணர்ந்த
முறையிதுவே நீரிழிவுந் திருந்தானே. ௧௬

(இ-ள்)

அப்பிரகசெந்தூரம்

ரஸபற்பம்

இவை இரண்டும் வகைக்கு 1 வராகனிடை எடுத்து செவ்விளநீர்ச் சாற்றில் 7 முறை பாவனைசெய்து உலர்த்தி, பெருமரத்தின் விதையை 7 குன்றியினிடை கலந்து இது மிரைச்சாறும் செய்யும் கூட்டிக்கொண்டு சாப்பிட நீரிழிவு புலவும் தீரும்.

## 3. நீரிழிவுக்குப் பெருமருந்து சூரணம்

அருமருந்து நாக்கு மேகத்தாலே நீரிழி
வதற்குப் பெருமருந்துச் சூரணம் கேள்
பருமரத்து விதையைச் சூரணமதாக்கிப்
பண்பாங்காசிடை யாறுசிறுக்கீரைச்சார்,
வரு சாற்றிற் கலந்து கொள்ளந்தி சந்தி
வருத்தஞ்செய் கெடுநாள் நீரிழிவுதீருந்
திருவிரு கருமணி மார்பன் சரபோசேந்திரன்
றின முணர்ந்ததிம் முறையை நீ செய்துபாரே. ௰௭

(இ-ள்)

நன்றாக முற்றின பெருமருந்தின் விரையை நன்கு பொடிசெய்துகொண்டு அதில் 6 காசிடையைச் சிறுகீரைச் சாற்றில் கலந்து தினம் காலை மாலை சாப்பிட நாட்பட்ட நீரிழிவு தீரும்.

## 4. நீரிழிவுக்குத் தேத்தாங்கொட்டை மருந்து

தேத்தாங்கொட்டையது நாலரைக்கா
சிடையத்திக்காய்ப் பொடியுமிரண்டு காசு
சேர்த்திவை வெண்குன்றி மூலையை வாங்கி
நிர்ணயமாயிரண்டு வகை மூன்றுந்தானே



சாத்தாவின் மோரிலரைத்தே கலக்கித்
தப்பாமற்றேன் குத்தி மண்டலங்கொள்ள
போத்து சிவகிருபையி னீரிழிவுந்தீரும்
போசலகுலத்து விபுவுணர்ந்த தாமே. ௰௮

(இ-ள்)

தேத்தாங்கொட்டை (தோல்சீவினது) 4½ காசிடை, அத்திக்காய்த்தூள் 2 காசிடை, வெள்ளைக் குன்றிமணி மூலைவேர் 2 காசிடை, இவை யாவற்றையும் பசுவின் மோரி லரைத்துக் குழப்பிக்கொண்டு 45 நாள் சாப்பிட, நீரிழிவு தீரும்.

## 5. நீரிழிவுக்கு மருதம்பட்டைக் கஷாயம்

மருதம்பட்டைக் கடாயந்தா னென்று
வருத்துரைக்கக்கேள் மருதம்பட்டைக்குள்
திரிபலைமிலாமிச்சு நாவற்பட்டை
தேற்றாங்கொட்டை கோரைக்கிழங்கினோடு
கருவேலம் பட்டையும் பொன்முசுட்டைவேரும்
கடலிறஞ்சிப்பட்டை சிறுக்கீரை வேரு
மருமிகு சந்தனம் பொன்னாங்கண்ணி வேரு
வகையான சாறு பலந்தா னென்றே. ௰௯

பலமூரவிடித்துக் கடாயந்தானிரண்டு
பண்பாய் விட்டிடு சீர் நாலிலொன்றாய்க் காய்ச்சி
நல்தேனிற் காசிடைதான் குத்திக்கொள்ள
நாக்கு வருந்தாப நீரழிவுந்தீரும்
உலகில் சிவகிருபையது பெற்றுவாணர்க்
குதவிய வற்புதமிகுந்த குவவுதோளான்
பலமிகுந்த தஞ்ச நகராளுந்திரன்
பார்த்தன் சரபேந்திர னுணர்கடாயமாமே. ௨௰

(இ-ள்)

மருதம்பட்டை
கடுக்காய்
நெல்லிக்காய்
தானிக்காய்
விலாமிச்சு, சாவல்பட்டை, தேற்றான்கொட்டை,
கோரைக்கிழங்கு
கருவேலம்பட்டை
பொன்முசுட்டைவேர்
கடலிறஞ்சிப்பட்டை
சிறுகீரை வேர்
சந்தணம்
பொன்னாங்கண்ணிவேர்

இவைகள் வகைக்கு ஒருபலம் எடுத்துக் கல்லுரலி விட்டு ஒன்றிரண்டாக இடித்து 2 படி ஜலம்விட்டு அடுப் பேற்றி காலிலொன்றாக வற்றக் காய்ச்சவும். இதை வடிக்கட்டிக்கொண்டு 1 காசிடை சுயமான தேன்விட்டுக் கலந்துகொள்ளவும். இதைத் தினந்தோறும் சாப்பிட மனிதர்களுக்கு இடையூறு செய்கின்ற பலவித நீரிழிவுகள் தீர்ந்துபோகும்.

## 6. நீரிழிவுக்கு ஏலாதிக்கடாயம்.

ஏலமிலவங்க மரமஞ்சளிலாமிச்சு
பேரீச்சம் பழத்தினூடே
கோலமுந்திரிகை யிலவங்கப் பட்டைக்
கோரையுட கிழங்கு நல்ல சந்தணந்தான
சேர்துவரை தேவதார மெல்லாஞ்
செப்பாக ச்சரி கூட்டிக் கடாய மிட்டுக்
காலையு மாலையுமுண்க மேகதாபங்
கடிக நிற்குமா னுவுணர் கடாயமாமே.



(இ-ள்)

1. ஏலம்
2. கிராம்பு
3. மரமஞ்சள்
4. விளாமிச்சவேர்
5. பேரீச்சம்பழம்
6. இலந்தை வற்றல்
7. முந்திரிப்பழம்
8. லவங்கப்பட்டை
9. கோரைக்கிழங்கு
10. சந்தணம்
11. துவரை
12. தேவதாரம்

இவைகள் சமனிடை எடுத்து 4 பங்கு தண்ணீர் விட்டு காலிலொன்றாகக் காய்ச்சி காலை, மாலை சாப்பிடப் பலவித மேகங்கள் நிற்கும்.

## 7. நீரிழிவுக்கும் மூத்திர கிருச்சிரத்துக்கும் நெல்லியாதிக் கடாயம்

நெல்லிக்கோரைக் கிழங்கு தான்றிக்காயும்
நேரான பொன்முசுட்டை வேருங்கூட
சொல்லிய தேற்றான்கொட்டை யைந்திதுந்தான்
சுகமாக மூன்று காசிடையுங் கூட்டி
நல்ல வுரலிலிடித்துக் கடாயமிட்டு
காலொன்றாய்க் காய்ச்சித் தேன்குத்திக் கொள்ள
வல்ல நீரிழிவு மூத்திரக்கிரிச்சம்
வாராது மானுவுணர் கடாய மாமே. உஉ

(இ-ள்)

நெல்லிக்காய்
கோரைக்கிழங்கு

நான்றிக்காய்
பொன்முசுட்டைவேர்
தேற்றுங்கொட்டை

இவைகள் வகைக்கு 3 காசிடை எடுத்துக் கல்லுரலி விட்டு இடித்து, 4 பங்கு நீர்விட்டு ஒருபங்காகக் காய்ச்சித் தேன் சேர்த்துக்கொண்டு சாப்பிட நீரிழிவு, மூத்திர கிரிச்சிரம், இவைகள் தீரும்.

## 8. நீரிழிவுக்குங் காமாலைக்குஞ் சாணிப்பால் மருந்து

எருமைச்சாணியின் பாலு முழக்கு அந்த
எருமையுட தயிருமுரி யிரண்டுங் கூட்டி
வருசையுடன் மூன்று நாளந்திசந்தி
வகையாகக் கொடு முப்புமில்லாப்பத்தியந்
தருசான நீரிழிவுடன் காமாலை
துரத்தி விடுஞ் சாணிப்பாலவிழ்தந் தஞ்சை
துரைகள் சிகாமணி சரபேந்திர பாலன்
சொல்லுமௌஷதமிதை நீசெய்து பாரே. ௨௩

(இ-ள்)

எருமைச்சாணி பிழிந்த ரசம் 1 உழக்கு
எருமைத்தயிர் 1 படி இவ்விரண்டையும்

தினந்தோறும் காலை மாலை உபயோகித்து, உப்பை நீக்கிப் பத்தியமாக இருந்துவந்தால், நீரிழிவு காமாலை இவைகள் நிச்சயமாகத் தீரும்.

## நீரிழிவுக்குப் பனைநுங்கு மருந்து

பனநுங்கு நிலக்குமிழ் பேரீச்சங்காயும்
பார்வாழைப்பிஞ்சு மதிமதுர மஞ்சும்
இனமாகச் சரிகூட்டிப் பசும்பாலைவிட்டே
யரைத்து அப்பாலிற் கலக்கி நன்றாய்த்



தினமந்தி சந்தியுந்தான் கொண்டாயானாற்
றீருமே நீரிழிவு மண்டதான(?)
மனதானம் விப்பிர கன்னி தானஞ்செய்யு
மண்ணல் சரபேந்திர னுண ரவிழ்தமாமே. ௨௪

(இ-ள்)

1 பனைநுங்கு
2 நிலக்குமிழ்
3 பேரீச்சங்காய்
4 வாழைக்கச்சல்
5 அதிமதுரம்

இவைகள் வகைக்கு சரி இடை எடுத்து, பசும்பால் விட்டு அம்மியில் அரைத்து அப்பாலிலே குழப்பி, தினந்தோறும் காலை மாலை சாப்பிடப் பலவித நீரிழிவுகள் தீரும்.

## 10. நீரிழிவுக்கு முத்தக்காசுக் குழம்பு

முத்தக்காசது நூறுபலங்கொணர்ந்து
மூன்றாக இருதூணி தண்ணீர்விட்டு
வத்த நான்கி லொன்றாகக்காய்ச்சியே நீ
வடித்துக்கொள் கற்கம் விளாலரிசி யேலஞ்
சித்தமல்லிவேர் கடுக்காய் குடசப்பாலை
தேவதாரங் கடுகுமழிஞ்சிற்பட்டை
சுத்தபெருங்காய மருக்காரை நாவல்
சொற்கண்ட சர்க்கரை கூவளைவேர்தானே. ௨௫

தாரணியில் வளருங்கொடிவேலிவேருஞ்
சாற்று செப்புநெருஞ்சி நல்லநெருஞ்சிவேரும்
பாரினிலிலவங்க மதிமதுர முந்திரிப்
பழமு மிருவேலியுடன் கூகை நீறுஞ்
சீருடைய மிளகுமிருபத்தி ரண்டிது
செய்யும் வகைக்குக்கால் சேர்கூட்டியேதா

னோருடனே யலரைத்து விழுதாக்கிக் கொண்டு
நீடியிதைச் செய்விதமதனை யுரைக்கக்கேளே. ௨௬

உரைக்கிறே னிளநீரிற் கருப்பஞ்சாற்றி
லுற்பனமாம் வெள்ளரியிலையின் சாற்றிற்
றரையில் வளரு மருகஞ் சாற்றினை யயுந்
தான் கலந்து கொள்ளிரண்டு சேர்த்தாலும்
உரையிலா நீரிழிவும் வாங்கும் பாரு
வையகத்திற் கீர்த்திபெற்ற மன்னர் மன்னன்
துரைகள் சிகாமணி சரபேந்திர பூபன்
சொல் முத்தக்காசினுட குழம்பதாமே. ௨௭

(இ-ள்)

பச்சைக் கோரைக்கிழங்கு நூறு பலம் கொண்டிடித்து 2 தூணி (அதாவது 8 மரக்கால்) தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி காலில் ஒன்றாகக் காய்ச்சவும். அதை வடிகட்டிக்கொண்டு அதனுடன்

1. விழாலரிசி
2. ஏலக்காய்
3. சிற்றாமல்லி வேர்
4. கடுக்காய்
5. குடசப்பாலை
6. தேவதாரு
7. கடுகு
8. அழிஞ்சில்பட்டை
9. பெருங்காயம்
10. மருக்காரை
11. நாவல்பட்டை
12. கற்கண்டு
13. வில்வவேர்
14. கொடிவேலிவேர்



15. செப்பு நெருஞ்சில் வேர்
16. நல்ல நெருஞ்சில் வேர்
17. கிராம்பு
18. அதிமதுரம்
19. முந்திரிப்பழம் (பச்சை திராக்ஷைப்பழம்)
20. வெட்டிவேர்
21. கூகைநீறு
22. மிளகு

இவைகள் வகை ஒன்றுக்குக் கால்சேர் எடுத்து நன்கு அரைத்து, விழுதாக்கிக்கொள்ளவும். அரைக்கும்போது கீழ்கண்ட சாறுகளைக் கலந்துகொள்ளவும் :—

1. இளநீர், 2. கருப்பஞ்சாறு, 3. வெள்ளரி இலைச் சாறு, 4. மெருகன்கிழங்கின்சாறு. இப்படி அரைத்த விழுதைக் கோரைக்கிழங்குக் கஷாயத்தில் அரைத்து வைத்துக்கொண்டு தினந்தோறும் காலைமாலை சாப்பிட நீரிழிவு ரோகம் தீரும்.

## 11. நீரிழிவுக்கு அப்பிரக செந்தூரம்

அப்பிரகம் நீர்முள்ளிவேரும் நல்ல
வாலம் விழுதும் கொழுக்குஞ் சரியதாகத்
தப்பிலாமற் குகையிலிட்டுக் கொண்டு
சதிராக மண்சீலை செய்து வைத்து
செப்பு மெருழுட்டை தனிற் புடத்தைப்போடு
சீராக முப்பது நாழிகையுஞ் சென்று
ஒப்புடனன்றா யாறிப் பார்த்தா
லுற்பனமாம் அப்பிரகச்செந்தூர மாமே. ௨௮

செந்தூரந்தனை யெடுத்துத் தேனிற் கொள்ளத்
திக மூவாரம் பருப்புச் சூரணித்து
இந்த நல்லதுள் தன்னை வடிகட்டிக்கொண்
டேட்செய்யும் வகைதனை யிதமாய்க்கேளு

பந்தமுடனொரு பணவிடை செந்தூரம்
பாக்களவிப்பொடி யெருமைத்தயிர் தன்னில்
விந்தையுடன் கலந்து கொள்ளிதமதாகி
மேக நீரிழிவு முடன்றீருந்தானே. உக

(இ-ள்)

சுத்தியான அப்பிறகம்
நீர்முள்ளிவேர்
ஆலம் விழுது
ஆலங்கொழுந்து

இவைகளைத் தனித்தனியே சம எடை எடுத்துக் குகையிலிட்டு, அதற்குச் சேலைமண் செய்து, வரட்டியில் புடத்தைப் போடவும். 30 நாழிகைகள் சென்றபின் தானாக ஆறவிடவும். அப்போது துல்யமான செந்தூரம் கிடைக்கும்.

உபயோகப்படுத்தும் விதம் :—

ஒரு அரிசி இடை தேனில் கொள்ளலாம்; அல்லது இதில் ஒரு பணவிடை எடுத்து ஆவாரம பருப்பை நன்றாகச் சூரணம் செய்து வஸ்திரகாளனம் செய்துகொண்டு அதையும் சேர்த்து நல்ல எருமைத்தயிரில் ஒரு பாக்களவு கலந்துகொண்டு இதமாகச் சாப்பிட்டுவர, மேகரோகம், நீரிழிவு இவைகள் தீரும்.

## 12. நீரிழிவுக்குப் பாதிரிப்பிட்டு

பாதிரியி னிலையதனைக் கொண்டுவந்து
பலமான மணக்கத்தை யரிசியோடே
சாதுரியமா யிடித்துப் பிட்டுச்சுட்டுத்
தப்பாமல் மூன்றுநா ளந்தி சந்தி
நீதமுடனே கொள் நீரிழிவுந் தீரும்
நிச்சயமாய்த் தஞ்சை நனசேந்திர னின்ற



காதலனுஞ் சரபோஜி மகாராசேந்திரன்
கருத்தினால் நிச்சயித்த பாதிரி ப்பிட்டாமே. ௧௰·

(இ-ள்)

பாதிரி இலைகளைக் கொண்டுவந்து மணக்கத்தை அரிசியுடன் சேர்த்து ஜாக்கிரதையாகப் பிட்டு சுடவும். இதை தினந்தோறும் காலை மாலை சாப்பிட்டால் 3 நாளில் நீரிழிவு தீரும். நிச்சயமாக குணம் கொடுக்கக்கூடியது.

குறிப்பு:—மணக்கத்தை யரிசி, என்பது 'கருங்குருவை' யரிசியைப்போல் குணமுள்ள ஓர்வகை அரிசி.

## 13. நீரிழிவுக்கு நிலையாவாரைச் சூரணம்

நிலையாவாரைச் சூரணம் பண்ணிக்கொண்டு
நேராக மூன்று விரற்கொண்ட தானே
மலையாமற் கொள்ளு வொருபடியுங் காட்டா
வாரை யுட்கொழுந்ததனை யுடனே கொள்ளு
உலையாமலிச்சா பத்தியங்களாக
வுறுதியாய் நீரிழிவுமூர் விட்டோடும்
கலைக்கி யான முணர்ந்து தஞ்சநகர் தன்னைக்
காக்கும் விபு வுணர்ந்த சூரணமதாமே. ௧௧

(இ-ள்)

நில ஆவாரைச் சூரணம் 3 விரல் பிரமானம் (குத்தளவு) சாப்பிட்டு, உடனே காட்டாவாரைக் கொழுந்து ஒரு படியை அரைத்துச் சாப்பிட, நீரிழிவு உடனே தீரும். இச்சா பத்தியமாக இருக்கவும்.

## 14. நீரிழிவுக்கு விடத்தாரியிலை விழுது

விடத்தாரிலை கொணர்ந்து சிரகமுந்தானு
மெய்யாகவரை வராகன் கற்போக்கி
திடத்துடனே எருமையுட தயிர்தன்னைத்
திறமான துணிதனிலே கட்டித் தூக்கு

மிடத்திலே சட்டிவைத்து விழுந்தநீரில்
மெய்யாக முன்சொல் விரண்டையு மரைத்துச்
சடக்குடனுயரக்கட்டு தயிர்தன்னிற்
றப்பாமலளவு மெலுமிச் சங்காயே ௧௦

எலுமிச்சங் காயளவு தயிரு முன்சொல்
விதமான விழுததனைக் கலந்துகொள்ளு
வலுமிச்சமான நீரிழிவுந் தீரும்
அதற்கு மிச்சா பத்திய மாகக்கொள்ளு
சொலுமிச்சமான புகழ்பெற்ற தஞ்சைச்
சோழவள நாடாளும் துரைகெம்பீரன்
கலமிச்சமான புகழ்பெருவசிர
னரபதி யாஞ்சரபேந்திர னுணர்ந்த தாமே. ௧௧

(இ-ள்)

விடத்தாரி இலை ½ வராகனிடை, ஜீரகம் ¼ வராகனிடை, எடுத்துக்கொண்டு (கல், தூசி இவைகளை நீக்கி), எருமைத்தயிரை ஒரு துணியில் கட்டித் தொங்கவிட்டு அதிலிருந்து வடியும் நீரை இன்னொரு சட்டியை அதன் கீழே வைத்து அதில் சேகரிக்கவும்.

இப்படிச் சேகரிக்கப்பட்ட 'மஸ்து' என்னும் நீரை விட்டு மேல்சொன்ன இருசரக்குகளையும் அரைத்து விழுதாக்கிக்கொள்ளவும். துணியில் தங்கியிருக்கும் தயிரில் ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து இந்த கல்கத்தை சேர்த்துச் சாப்பிடவும். நீரிழிவுக்கு மிகக் குணந்தரும். இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 15. நீரிழிவுக்குக் காரை நீர்.

நாடதன்னிற் பழங்கூரைக்காரை தன்னை
நன்றாகவரைத்துத் தண்ணீரிற் கலக்கி



மூடியே தெளியவைத்து அந்திசந்தி
முக்கியமாஞ் சர்க்கரையும் போட்டுக்கொள்ளு
ஆடிய நீரிழிவு மறுங் காரை நீரா
மூலோகமன்பத்தாறு தேசத்திறைவர் போற்றும்
தேடரிய சிவபூசை செய்து தஞ்சை நீரன்
சரபேந்திர னுணர் நீராமே. ௧௪

(இ-ள்)

பழய காரைக் கட்டடத்தில் உதிர்ந்துள்ள காரைக் கட்டிகளை எடுத்துத் தண்ணீருடன் கலந்து ஓரிடத்தில் தெளியவைக்கவும். அதன் மேல்தெளிவு நீருடன் சர்க்கரை சேர்த்து தினம் காலைமாலை சாப்பிட நாள்பட்ட நீரிழிவு தீரும்.

## 16. நீரிழிவுக்கு மருந்து

நீரதிலே மூனைக்கு முள்ளிவிரை யைத்தானும்
நிச்சயமாய்ப் பலமரை சீரகம் பலங்கால்
சாரமுள்ள சர்க்கரையும் பலமுங் காலாஞ்
சதிராக வரைத்துப் பசுவின் பாலிற்கொள்
கூறிய சொற்படி யந்தி சந்தியுந்தான்
கொள்ள மானிடற்கு நெடுநாளாய் வந்த
நீரிழிவும் போஞ்சிவனைப் பூசனை செய்
திருபன் சரபேந்திர னுணர் மருந்திதாமே. ௧௫

(இ-ள்)

| | |
|---|---|
| நீர்முள்ளிவிரை | ½ பலம் |
| சீரகம் | ¼ பலம் |
| சர்க்கரை | 1¼ பலம் |

இவைமூன்றையும் பசுவின்பாலில் அரைத்துக் காலை மாலை உபயோகிக்க நாள்பட்ட நீரிழிவு தீரும்.

## 17. நீரிழிவுடன் தாகத்துக்கு வில்வாதி கஷாயம்.

நீரிழிவுடன் றாகம் வந்துற்றாலே
நேராக வில்வாதிக் கடாய மொன்று
பாரினில் வாழைச்சருகு மிலாமிச்சம்வேர்
பண்பாஞ் சந்தணஞ்சிறாய் வில்வத்தின்வேர்
நேருள வாலஞ்சருகு பொரி யோராறும்
சிறுத்து சமன் வருத்து கடாயந்தானிட்ட
நீரதைக் கொள்ளுடனே தாகங்கள் தீரும்
கிருபன் சரபேந்திர னுணர் கடாய மாமே. ௧௬

(இ-ள்)

1. வாழைச்சருகு
2. விளாமிச்சவேர்
3. சந்தணச்சிறாய்
4. வில்வவேர்
5. ஆலஞ்சருகு
6. பொரி

இவை ஆறு சரக்குகளையும் தனித்தனியே சம எடையெடுத்துப் பொன்வறுவலாக வறுத்து 4 பங்கு ஜலம்விட்டு காலிலொன்றாகக் காய்ச்சி அக்கஷாயத்தைச் சாப்பிட்டு வர நீரிழிவிலுண்டான தாகங்கள் தீரும்.

## 18. மற்றொரு வில்வக் கடாயம்

கூவளைவேர் நெய்சட்டிவேரு க்தேற்றான்
கொட்டை சீரகமும் வெந்தயம் விழல்வேர்
தாது கொத்த மல்லி கடலிறஞ்சிப் பட்டை
சொல்லு மெட்டுஞ் சரியாக க்கடாய மிட்டு
ஆவலுடன் கூவளையின் கடாயந்தன்னை
அருந்திட நீரிழிவு நிற்கு மது தப்பாது
காவலன் றஞ்ச நகர்க்கு மதிபனானன்
கருத்துணர்ந்த கடாய மிது செய்து பாரே. ௧௭



(இ-ள்)

1. வில்வவேர்
2. நெய்ச்சட்டிவேர்
3. தேற்றான்கொட்டை
4. சீரகம்
5. வெந்தயம்
6. விழல்வேர்
7. கொத்தமல்லி விதை
8. கடலிறஞ்சிப்பட்டை

இவை எட்டையும் சம எடை எடுத்துக் கடாயமிட்டுச் சாப்பிட நீரிழிவு நீங்கிவிடும்.

## 19. வலுத்த நீரிழிவுக்கு ஆவாராதி விழுது

ஆவாராதி நீரிழிவுக்கா வாரைக்
கொழுந்து நறுவளிக்கொழுந்து
காவாலுமுறை விடத்தேரின் கொழுந்து
நற்கட்டுக் கொடியினிலை தேத்தான் வித்து
மேவாதநீர் சுண்டியிலை யோராறும்
விழுதாக்கிச் சிறு எலுமிச்சங் காய்மாத்திரம்
வாவென்றெருமைத் தயிரினிலே கொள்ள
வலுத்த நீரிழிவு மறுமது தப்பாதே. ௧௮

(இ-ள்)

1 ஆவாரங்கொழுந்து
2 நறுவளிக்கொழுந்து
3 விடத்தேரிக்கொழுந்து
4 கட்டுக்கொடியின் இலை
5 தேத்தான் கொட்டை
6 நீர் சுண்டி (ஆற்று நெட்டி) இலை

இவைகளைத் தனித்தனி சம எடை எடுத்துச் சிறிது தண்ணீர் சேர்த்து விழுதாக்கி ஒரு எலுமிச்சங்காயளவு

எடுத்து எருமைத்தயிரில் கலந்துசாப்பிட நீடித்த நீரிழிவு தீரும்.

## 20. நீரிழிவுக்கு ஆவாராதி விழுது (வேறு)

பூவுலகில் நார்க்கு நீரிழிவு வந்தால்
புகலக்கேளாவரையின் மருந்தொன்று
ஆவரையின் கொழுந்துடன் கல்மதங்கொன்றைவேர்
அதை யரைத்து மோரிலே கலந்து கொள்வாய்
நீவருந்தாமலந்தி சந்தியுந்தா னீரிழிவுங்
கடிந்தோடுந் தஞ்சையாளுங்
காவலனுஞ் சரபேந்திர னிர்ணயித்த
கருணையிது ஆவரையினவிழ்தமாமே.

(இ-ள்)

1 ஆவாரங்கொழுந்து
2 கல் மதம்
3 கொன்றை வேர்

இவைகளை மோரிலரைத்து அதிலேயே கலந்து காலை மாலை சாப்பிட நீரிழிவு தீர்ந்துவிடும்.

## 21. நீரிழிவுக்கு அத்தியாதிக் கடாயம்

இத்தரணி தனி னீரிழிவதற்கு
விதமாக வத்தியாதிக் கடாயமொன்று
அத்திமரப் பட்டை கடலிறஞ்சிப் பட்டை
அக்காகப் பட்டையுடன தனிரட்டி
சுத்தமுள்ள வாவாரக்தோற் கொன்றைத்தோல்,
சொல்லு மைந்துஞ் சரியாக எடுத்துக்கொண்டு
இத்தனையுமிடித்துத் தண்ணீரையூத்தி
விதமாக இராவடுப்பில் வைத்திடாயே. சய
வைத்துதயந்தனி லெடுத்து நம்பி நீதான்
வகையாகக்கொள்பத்து நாளுந்தானும்



சுத்தமாய் நீரிழிவு நீங்கும் கண்டாய்
சொல்லொன்றும் பொய்யாது செய்துபாரு
அத்தியின்மேற் பவனிவரும் மன்னர் மன்னன்
அவனியன்பத்தாறு தேசமெங்கும் போற்ற
இத்தரணித் தஞ்சை யையாள் சரபபூப
விதமாக வுணர்ந்ததிந்த முறையிதாமே. சக

(இ-ள்)

1. அத்திப்பட்டை
2. கடலிறஞ்சிப்பட்டை
3. நாவற்பட்டை
4. கொன்றைத்தோல்
5. ஆவாரம்பட்டை

இவை ஐந்தையும் சம எடை எடுத்துக்கொண்டு கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து 4 மடங்கு தண்ணீர் ஊற்றி ராத்திரிவேளையில் அடுப்பின்மேல் வைக்கவும். விடியற்காலத்தில் இக்கஷாயத்தைச் சாப்பிடவும். இவ்வாறு 10 நாட்கள் சாப்பிட நிச்சயமாக நீரிழிவு தீரும்.

## 22. நீரிழிவுக்கு மருந்து.

நல்ல வெல்லம் பழந்தண்ணீர் நாழி நீர்
வில்லை பாதிரிப்பட்டை மகிழந்துளிர்
தொல்லைவாரி சுவரிடு நீரிழி
வில்லைமில்லை விராமன் கைபாணமே. சக

(இ-ள்)

நல்ல வெல்லம்
தண்ணீர்—ஒரு நாழி இவற்றை எடுத்துக்கொண்டு
பாதிரிப்பட்டை }
மகிழந்துளிர் }
இவ்விரண்டையும் இடித்து வெல்லத் தண்ணீரில் நன்றாக ஊறும்படி செய்து அதைச் சாப்பிட நீரிழிவு தீரும்.

## 23. நீரிழிவுக்கு மருந்து.

ஆவாரை கொன்றை நாவ லலைகடலமுதங்கோட்ட
மேவிய மருதந்தோலும் விரைந்து பின்னெக்கக்கொண்டு
பூவரி குழலினளே பொருந்த நீர்தன்னை யுண்ணக்
காவிரி நீரும் வற்றிக் கடல்களும் வற்றுந்தானே. சச

(இ-ள்)

ஆவாரம்பட்டை
கொன்றைப்பட்டை
நாவற்பட்டை
கடல் நுரை
கோஷ்டம்
மருதம்பட்டை

இவைகளை ஒன்றிரண்டாயிடித்துக் குடி நீராகக் காய்ச்சவும். இக்கஷாயத்தைச் சாப்பிட்டால் நீரிழிவு நிச்சயமாகத் தீரும்.

## 24. நீரிழிவுக்கு ஆவாராதி (வேறு)

திருந்திய விளவாவாரை
செப்பிய வரட்பூலா வோ
டிருந்திர விலந்தை காட்டு
மல்லிகை யிவையுங்கூட்டிப்
பொருந்தியமேதி மோரில்
போதவே வேக வைத்து
அருந்திடத் தயிரி லிப்போ
வகன்றிடுஞ் சலங்கள் தானே. சரு

(இ-ள்)

இள ஆவாரைக் கொழுந்து
வரட்பூலா இலை
இலந்தை இலை
காட்டு மல்லிகை இலை



இவைகள் சம எடை எடுத்து எருமை மோரில் வேக வைத்து எருமைத் தயிரில் அரைத்துச் சாப்பிட மேக நீரிழிவுகள் தீரும்.

## 25. நீரிழிவுக்கு—வெண்பா

தேற்றான் விரை கடுக்காய் செப்பரிய வாவாரை
மேற்றோல் விளாம்பிசினு மித்தனையும்—கோற்றொடியாம்
பங்கொண்டுகாலப் பசுவின்மோ ரிற் பருகப்
பொங்கிவரும் நீரிழிவும் போம். சசு

(இ-ள்)

தேற்றாங்கொட்டை
கடுக்காய்
ஆவாரம்பட்டை
விளாம்பிசின்

இவைகளையெல்லாம் சமமாக எடுத்து ஒன்றிரண்டாக இடித்து எருமை மோரில் அரைத்துப் பருகப் பல வகை நீரிழிவுகளும் போகும்.

## 26. மேகத்துக்கு நிலக்குமிழ்க் கடாயம்.

வல்ல சுரம்போ மாந்தமொடு தோஷம்போஞ்
சொல்லிவ்வேரு மேகந்தோஷம் போம் — நல்லாய்கேள்
தால் வெல்லஞ் சுக்குடனே சந்தே நிலக்குமிழுங்
காலமே காச்சியுண்ணக் காண். சஎ

(இ-ள்)

வெல்லம்
சுக்கு
நிலக்குமிழ்

இவற்றை இடித்துக் கஷாயமாக்கிக் காலையில் சாப்பிட்டுவர

மேக ரோகம் ( நீரிழிவு )
சுரம்
மாந்த தோஷம்
இவைகள் தீரும்.

## 27. நீரிழிவுக்குக் கீழாநெல்லி விழுது

கீழாநெல்லி வேர் கழஞ்சு
இளர்பொற் கடுக்கா யிருகழஞ்சு
காளார் மிளகு முக்கழஞ்சு
கடுகப்புளித்த மோருடனே
தாழா துண்ணு மணக்கழலுங்
தழைத்த வயிறுந் தளவாரு
மாழ்வாருண்ட மருந்திதுவே
அரனாருளிச் செய்தாரே. ௨அ

( இ-ள் )

| | | |
|---|---|---|
| கீழாநெல்லி வேர் | 1 | கழஞ்சு |
| கடுக்காய் | 2 | ,, |
| மிளகு | 3 | ,, |

இவைகளை நன்றாகப் புளித்த மோருடன் அரைத்துச் சாப்பிட நீரிழிவு தீரும்.

## 28. நீரிழிவுக்கு வெள்வங்க பற்பம்.

நண்ணிய-பருத்தி வித்துதனையும் நைய
நறுக்கியொற்றைக் கோணிகைப் பட்டினிலேதானே
ஒண்ணரைச்சாணகல மட்டினிற் பரப்பி
யுருகும் வெள்ளியமிருபது கழஞ்சு
பண்ணு தகடாய்த் தட்டியதின் மேல் வைத்துப்
பருத்திக்கொட்டைத் தானே மேற் பரப்பி
யொன்றுபடச் சுருட்டித் திரியாக்கித்தானே
யுருட்டியே தலைப்பிரண்டைக் கட்டிடாயே. ௨௯



கட்டிவிருபுறத்திலுந் நீகொளுத்தி மேலே
கனல் மூட்டமிடு விறட்டி தன்னிலார
விட்டு எடுத்தே சேரப்பொடிகள் செய்து
மேதினியிலிவ்வங்க பற்பந்தன்னை
இட்டமுளதேனி லந்தி சந்தி மூன்று
தினமருந்த நீரிழிவு தீரும்பாரு
அட்ட திக்கும் புகழ் தஞ்சைநகரையாளு
மரசன் சரபேந்திரனுணர் பற்பமாமே. ௩௰

( இ-ள் )

பருத்திக்கொட்டையை நன்றாக இடித்து ஒரு நீள
மான பட்டுக்குட்டையில் 1½ சாண் அகலமளவு பரப்பவும்.
அதன்மேல் 20 கழஞ்சு சுத்தமாக்கிய வெள்ளீயத்தை
உருக்கித் தகடாகத் தட்டிக்கொள்ளவும். அத்தகட்டை
மேல் சொல்லிய பருத்திக்கொட்டைமேல் வைத்து, அத்
தகடு மூழ்கும்வரை பருத்திக்கொட்டைத் தூளை மறு
படியும் போடவும். இந்தப்பட்டுக் குட்டையை ஒன்று
படச்சுருட்டித் திரியாகச் செய்துகொள்ளவும். இரு தலைப்
புகளையும் சரக்குகள் வெளிவராமல் கட்டிவிடவும். அவ்
விருதலப்பையும் கொளுத்திவிட்டு 4, 5 வரட்டியால்
மேலே மூட்டமிட்டுக் கொளுத்திவிடவும். புடம் ஆறிய
பின் பற்பமான வங்கத்தை எடுத்துப் பொடித்துக்கொள்
ளவும். இந்த பற்பத்தைத் தேனில் ( அரிசி எடை
எடுத்து ) காலை மாலை 3 நாள் சாப்பிடவும். நீரிழிவு தீரும்.

## 29. நீரிழிவுக்கு விழுது

ஆவாரையின் பூவரிசி காயப்போட்டு
அதுவு மிருபலமுஞ் சூரணித்துக்
காவிலுரை நெல்விமுள்ளிப் பலமு மஞ்சு
காம்பு சாதிக்காயுங்காற் பலந்தான்

ீ வயணமாய் மூன்றையும் பொடித்து
  நேரான வெருமை மோரி றகலக்கி
ஆவலுடன் கொள் நீரிழிவுந்தீரும்
  அன்பான தஞ்சைவிபு வுணர்ந்ததாமே. ௫௧

(இ-ள்.)

ஆவாரையின் பூவை நன்கு உலர்த்திச்

| | | |
|---|---|---|
| சூரணித்த தூள் | 2 | பலம் |
| நெல்லிமுள்ளி | 5 | ,, |
| கிராம்பு | $\frac{1}{4}$ | ,, |
| சாதிக்காய் | $\frac{1}{4}$ | ,, |

இவைகளைச் சூரணம்செய்து வஸ்திரகாளனம்செய்து எருமை மோரில் கொடுக்க நீரிழிவு நிற்கும்.

## 30. நீரிழிவுக்கு ஆவாரைப்பிட்டு.

ஆவாரையின் பிட்டு வொன்று சொல்வே னீரின்
  அழிவதற்குக் கார்பாண்டமதில் மோரைவிட்டு
ஆவரையி லுடன் பூவின் கொழுந்து மொன்று
  யரைத்து வப்பாண்டமதில் வேடுகட்டி
நீவையிந்தத்தூளையு மேற் புட்டதாக
  நேரான மோர்முறிந்து திரண்டகற்கன்
காவில் புன்னைக்காயளவு கூடவைத்துக்
  கல்லம்மி தனிலரைத்திரண்டதாக்கே. ௫௨

இரண்டிலொருவுண்டைதனை நாகசெந்தூ
  ரமுமொரு பணவிடை வைத்தே நன்றாக
விரண்டு வேளையும் கொடுக்க மூன்றுநாளி
  விடர்செய்யும் நீரிழிவுந்தீரும் நீயு
மூரண்டு செய்யாம லிச்சாபத்தியஞ்செய்
  முன்னாளிற் பகீரதன்றன் குலத்தைக்காத்த
திரண்ட புகழிலு மதிககீர்த்தி பெற்ற
  தீரன் சரபேந்திர னுணர் பிட்டதாமே. ௫௩



(இ-ள்)

ஒரு புதுச்சட்டியில் மோரைவிட்டு அச்சட்டியின் வாய்க்கு வேடுகட்டி ஆவாரம் பூவையும் கொழுந்தையும் நன்கு அரைத்து அதன்மேல் வைக்கவும். பின்பு இச்சட்டியை அடுப்பின்மீது ஏற்றி எரிக்கவும். மேலே வைத்த சரக்குகள் வெந்தபின்பு சட்டியைக் கீழே இறக்கி வேட்டை எடுத்துவிட்டு அடியிலுள்ள முறிந்தமோரிலிருந்து ஒரு புன்னைக்காயளவு கற்கம் எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் அம்மியில்வைத்து அரைத்துக்கொள்ளவும். அரைத்த விழுதை இரு பாகங்களாக்கி உருட்டி நாகசெந்தூரமும் 1 பணவிடைவைத்து, காலை மாலை இருவேளைகளிலும் கொடுக்கவும். இவ்வாறு 3 நாள் கொடுத்தால் அன்பம் தருகின்ற நீரிழிவு தீரும்.

பத்தியம் :—

கடுமையான இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 31. நீரிழிவுக்கு ஆவாரைவிரைச் சூரணம்

ஆவாரையின் விரைச் சூரணமொன்று கேளு
  ஆவாரையின் விரைபடி யொன்றரைகொணர்ந்து
காவிலுரை பாலையிலே ச்சாறுவிட்டு
  கடிகைமுப்பது மதையுமூறவைத்து
மேவி யெடுத்தே காயப்போட்டு மன்னு
  மினநீரில் முப்பது நாழிகைமுன்போல்,
பாவமுடன் காயவைத்துப்பின் னுலர்த்திப்
  பத்திரமாய்க் கருக்காமல் வறுத்திடாயே. ௫௪

வறுத்துத் திருகையிலிட்டு மாவதாக்கி
  வடிகட்டிக்கொண்டு நிலப்பனைக்கிழங்கு
மருத்த செய்தற் கிழங்குடனே மினகுசெல்வி
  பருப்பு தாமரைக்கிழங்குமதனின்றுது

திருத்தும் நன்னாரியின் வேர்நெருஞ்சிக்காயுந்
 திப்பிலி தானிக்காயுங் கடுக்காயோடே
தருக்குளுறு தேற்றாம்வித்துடன் கிராம்பு
 சாதிக்காய் கடலிறஞ்சிப் பட்டைதானே. ௫௫

பட்டைக்கு ப்பதினாறு வகையொன்றுக்குப்
 பலமொன்று நாற்பலஞ்சர்க்கரையதாகுஞ்
சட்ட குங்குமப்பூ பச்சைகற்பூரஞ்
 சதிராங் கோரோசனை யிம்மூன்றி லுந்தான
இட்டிடொரு வராகனிடை சூரணித்து
 இதமாகக்கலந்து நீ வைத்துக்கொண்டு
திட்டமாயெருமையின் றயிரிலுண்ணு
 சிக்காட்டால் வெக்கீரிலுண்டுபோரே. ௫௬

வெக்கீரிலுண்டுபோர் பொன்னாங் கண்ணி
 மெய்ச்சாற்றிற்கொள்ளத்தி சத்தியுந்தான்
சொன்னேன்கால் மண்டலந்தானிச்சாபத்தியங்
 துடியான நீரிழிவுந்தீர்ந்தே யோடும்
பொன்னிவளஞ்சூழ் சோழநாட்டையாளும்
 புண்ணியனிரணிய கர்ப்ப தானஞ்செய்யு
மன்னருக்கு மன்னன் சரபோசிராசன்
 மானுவுணராவரையின் சூரணமாமே. ௫௭

(இ-ள்)

ஆவாரை விரை படி 1½யை எடுத்து, பாலிலிலைச் சாறுவிட்டு 30 நாழிகை ஊறவைத்துப் பின்பு அதைக் காயப்போடவும். அதில் இளநீரைவிட்டு மறுபடியும் 30 நாழிகை ஊறியபின் காயப்போடவும். அதைப் பொன் வறுவலாக வறுத்துக்கொண்டு திருவையிட்டு மாவாக அரைத்துக்கொள்ளவும். அதை வஸ்திரகாளனம் செய்து கொண்டு,



நிலப்பனங்கிழங்கு
நெய்தற்கிழங்கு
மிளகு
நெல்லிக்காய் (பருப்பு)
தாமரைக்கிழங்கு
தாமரை தாது
நன்னாரிவேர்
நெருஞ்சில்காய்
திப்பிலி
தான்றிக்காய்
கடுக்காய்
தேற்றாங்கொட்டை
சுக்கு
கிராம்பு
ஜாதிக்காய்
கடலிறஞ்சிப்பட்டை
சுக்கு

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| சர்க்கரை | 4 பலம் |
| குங்குமப்பூ | 1 வராகனிடை |
| பச்சைக்கற்பூரம் | 1 ,, |
| கோரோசனை | 1 ,, |

இவை யாவற்றையும் நன்கு சூரணித்து வைத்துக் கொண்டு எருமைத் தயிரில் தினந்தோறும் காலை மாலை சாப்பிடவும். கிடைக்காவிட்டால் வெக்கீரிலோ பொன்னாங் காணிச் சாற்றிலோ கால்மண்டலம் (11. நாள்) சாப்பிட்டு இச்சாபத்தியமாக இருந்துவர, பலம்பொருந்திய நீரழிவும் தீரும்.

## 32. நீரிழிவுக்குப் பஞ்ச சர்க்கரை

சாந்தமிகு பஞ்சசர்க்கரை தானென்று
தாரணியில் மானிடர் நீரிழிவுக்குந்தான்
சீந்திற்றண்ட தினுடனே மேலின்றோலைச்
சீவியே தள்ளியதைத்துவைத்துக்கொண்டு
பாந்தமுள்ள தண்ணீர்விட்டே கரைத்துப்
பண்பான மற்றுமொரு பானைதன்னி
லேந்திப்பிழிந்தே வடியுங்கட்டிக் கொண்டு
இதைத் தெளியவைத்து மண்டியெடுத்துக்கொள்ளே
எடுத்துக் கொள்ளிப் படிக்கி யேதானீர்வள்
ளிக்கிழங்கையும் நிலைப்பனைக் கிழங்கை
வடிப்பமுடனன்றாக வுலர்த்திக்கொண்டு
வஸ்திரகாயம் பண்ணிவைத்துக்கொண்டு
இடத்துடனே நிலக்குமிழ் வேர்குருணிதன்னை
செம்மையாயரைத்துத் தண்ணீரிற் கலக்கி
வடித்துவந்த நீரில் பிழிசதாபலத்தை
வகுத்து அரைப்பழத்தை யதைத்தெளியவையே ருக
வைத்திடுமண்டியை யெடுத்துக்கொண்டு நற்கோ
வைத்தண்டை யிப்படியே செய்துகொண்டு,
உரைத்திடைந்தையும் வெவ்வேறாகக்காய்ச்சி
நளினமாஞ்சர்க்கரையை வைத்துக்கொண்டு
பத்திரமாய் வகை சரியாய்நிறுத்துக்கொண்டு
பண்பாஞ்சர்க்கரை யைந்தையுங்கலந்து
சுத்தமுள்ள மேகநாதந்தானில்
சொற்காந்த பற்பமாகிலுந்தானவையே கயி
காந்தபற்பமாகில் வங்கபற்பமாகில்
கருத்துடனே பணவிடையுமரையுங்கட்டிச்
சாந்தமுடன் முன்கலந்திருந்த பஞ்ச
சர்க்கரையில் வெருகடியு மதிற்கலந்து



வாய்ந்த நற்றேன் வெண்ணெய் மோரிலேகொள்ள
வலுந்த நீரிழிவோடும் வாணருக்கு
மீந்து மறையவர்க்குதவி மனுவைக்காக்கு
மெழில் சரபோசேந்திரனுரையிது தப்பாதே. கூக

(இ-ள்)

சீந்திற்கொடியின் மேல் தோலைச் சீவி எறிந்துவிட்டு ஒரு பானையில் தண்ணீர் வைத்து அதில் சீவிய சீந்திற் றண்டுகளை நன்றாகக் கசக்கவும். பின்பு அச்சக்கைகளை நன்கு பிழிந்துகொண்டு பானையிலுள்ள தண்ணீரை வடிக் கட்டிக்கொண்டு, தெளியவைத்து மேல் நீரை நீக்கி மண் டியை எடுத்துக்கொள்ளவும். நீர்வள்ளிக்கிழங்கையும் மேல்கண்டவாறே செய்து மண்டியை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

நிலக்குமிழ் வேர் ஒரு குருணியரைத்து வடிக்கட்டின தண்ணீரில் 'யெலுமிச்சம்பழச்சாறு ஒரு மூடி பிழிந்து தெளியவைத்து மண்டியைக் காய்ச்சிக்கொள்ளவும். கோ வைத்தண்டை இப்படியே தண்ணீரில் கலக்கித் தெளிய வைத்து மண்டியை இறுத்துக்கொள்ளவும். இவ்வாறு இந்த 5 வித சர்க்கரையையும் சமனிடை எடுத்துச் சேர்த் துக்கொண்டு, மேக நாதத்திலாவது காந்தபற்பத்திலாவது வங்கபற்பத்திலாவது $\frac{1}{2}$ பணவிடை வைத்து, அதனுடன் ஒரு வெருகடி இந்த பஞ்ச சர்க்கரையும் வைத்துத் தேனி லோ, வெண்ணெயிலோ, மோரிலோ கலந்து சாப்பிட நீரி ழிவு தீரும். (1 பணவிடை = $\frac{1}{10}$ விராகனிடை = 3 குன்றி மணியிடை)

## 33. அரோசகத்துக்கும் நீரிழிவுக்கும் கடாயம்

கடலிறஞ்சிபட்டை யாவரைவேர்ப்பட்டை
கருதுமிரண்டில் வகைக்குப்பல மூப்பத்தாம்
அடவிநெல்லிமுள்ளிவிரை தானிக்காயும்
பறங்கிப்பட்டை மூன்றும் பலமொன்றுமே

திடமான தேற்றான் வித்தரைப்பலந்தா
  னிதமாக யிடித்தொரு பானையிலேபோட்டு
அடவுடனஞ்சு மரக்காற்றண்ணீர்விட்டு
  அதையுமுச்சிதமாகக்காய்ச்சிடாயே. ௬௨.

காய்ச்சியந்தக் கடாயமதை நினைத்தபோது
  கவனமாய்க்கொள்ள வரோசகமுந்தீரும்
பாய்ச்சல்மிகு நீர் நிற்குமிதற்குமிச்சாப்
  பத்தியமாஞ்சிர கிரியிற்செட்டிப்பெண்ணுக்
காச்சியார் வகைக்குதவுஞ்சிவன்றன் பாதம்
  அர்ச்சித்து அருள்பெற்ற வண்பனிந்தி
ராச்சியமெல்லாம் புகழுஞ் சரபோசேந்தி
  ரனலமாக வுலகினுக்குரைத்த தாமே. ௬௩

(இ-ன்)

| | |
|---|---|
| கடலிறஞ்சிப்பட்டை | 10 பலம் |
| ஆவாரை வேர்ப் பட்டை | 10 பலம் |
| நெல்லி முள்ளி | 1 பலம் |
| தான்றிக்காய் | 1 பலம் |
| பறங்கிப்பட்டை | 1 பலம் |
| தேற்றாங்கொட்டை | ½ பலம் |

இவைகளை நன்கு இடித்து ஒரு பானையில் போட்டு 5 மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி 1 மரக்காலாக வற்றக் காய்ச்சவும்.

இக்கஷாயத்தை வேண்டும்போதெல்லாம் உபயோகித்துவர அரோசகம் நீரிழிவு முதலியவை தீரும்.

## 34. நீரிழிவுக்கு வெல்லாதிக் கடாயம்

நல்ல வெல்லம் பாதிரியின் பட்டைத் தண்ணீர்
  நாழி விட்டுக் காய்ச்சியதை யுண்டு பாரு
சல்லய ஞ்செய் நீரிழி வுமுடனே தீருந்
  தப்பாமற் பத்து நாளந்தி சந்தி



வல்லபமாய்க்கொள்ளிந்த வையகத்தோர்
  வருத்த மிலாதிருக்க மனதெண்ணி யிந்த
நல்லிய மாங்குடி நீரைக்கொள்ளு தஞ்சை
  துரைமானு நிர்ணயித்த முறையதாமே. ௬௪

(இ-ன்)

நல்லவெல்லம்
பாதிரிப்பட்டை

இவைகளை நசுக்கி தண்ணீர் 1 நாழிவிட்டு ¼ பாகமாகக் காய்ச்சி அக்கஷாயத்தை 10 நாளைக்குக் காலை மாலை சாப்பிட நீரிழிவு நீங்கும்.

## 35. நீரிழிவுக்கு மூழ்கத் தைலம்

பருத்திவிரை யிடித்து நாற்பது பலந்தான்
  பதினாறுபடி தண்ணீர் விட்டொன்றாக
யிருத்துக்கொள்ளாகம் வேரது தான்கேளு
  இருபது பலம் பத்துப்படி தண்ணீர்விட்
டெரித்து மதையு மெட்டொன்றாகக் காய்ச்சி
  யிதையும் வடித்தே யமுக்கிறுக்கிழங்கு
திருத்தி மெருகன் கிழங்கு வெட்டி வேருஞ்
  சித்தமுட்டிவேர் நெல்லிப்பருப்புங் கூட்டே. ௬௫

கூட்டிச் சிற்றாமணக்கம் வேர் நிலக்குமிழ்வேர்
  குணமான தண்ணீர் மிட்டான் கிழங்குங் கூட
வாட்டினிற் பாதிரிவேருமத்திப்பட்டை
  நல்ல தீர்ப்பூலாவின் பட்டை கூட
வாட்ட மில்லாவாவாரைப் பட்டையொக்க
  வகையான பன்னிரண்டிற் றினிசொன்னதற்கு
மூட்டுவாய் பலமஞ்சு பிடித்திரண்டு
  மூடாவினிலே போட்டதிற்றண்ணீருற்றே. ௬௬

ளைத்து யிருபது மரக்கால் தண்ணீர் விட்டு
ஒன்ருகக் காய்ச்சி யிந்தக்கடா யந்தன்னிற்
சேர்த்திடு நீ நல்லெண்ணெய் படியு நாலுக்
கிறமாகக் கலந்து நல்ல வடுப்பிலே தான்
ஏற்றி நன்ருயெரி கலந்துவரச்சே தானும்
இளநீரும் நாலுபடி விட்டுக் காய்ச்சு
வார்த்திருந்தாவின் பால் படியும் நாலு
பதமாக விட்டிதற்குக் கற்கங்கேளே சுஎ

கற்கங்கேள் தெவுரா சீரக மஞ்சிஷ்டி
கரு வேலம்பட்டை திரிகடுகங் கல்கார்
நற்கோலமதி மதுரஞ்சாதிபத்திரி
சாதிக்காயும்-பஞ்சதிரவியத்தோ
டொக்கு மதிமதுரமுடன் லவங்க பத்திரி
யுக்தகாம் நாகணமுஞ் சிறுநாகப்பூ
சொக்கு மத்திமூஙிரு ந்தாளீச பத்திரி
சொற்புன் சாந்துப்பட்டைக் கூகை நீறே. சுஅ

நீரிலுரை தாமரையின் வளையம் நல்ல
கொடிய புளியங்கொட்டைத் தோலுங் கூட
பாரில் சடாமாஞ்சிலுடனே சமுத்திராப்
பச்சை தாமரை வளைய ந்தாமரை கீர்
கூருமாவரை விரையினரிசி நல்ல
கொற்ற மல்லிசெங்கழுநீர் கிழங்குடன்மினி
ஞாரம்பட்டையுங் கடலினிறஞ்சிப் பட்டை
யுற்ற விளாம்பிசினும் வில்வப்பிசின தாமே. சுகூ

ஆருமுப்பத்தி ரண்டில் வகையொன்றுக்கு
மகலாமல் வராளிடை ரெண்டுங்கூட்டி
வாகுள தென்னம் பாளைச் சாற்றை விட்டு
மரைத்த தனிற் போட்டு பதம்பார்த் திறக்கிப்



பாகமுடன் புனுகுசட்டம் பலமுங்காளம்
பச்சைக் கற்பூர மிடையலாவராகன்
நாகமுடனுரைத்து அதிற் போட்டுத்தானே
தப்பாமல் வாலை பதம் போற்றி மூழ்கே. எ௰

போத்தியே மூன்றுநாட் கொருக்கால் மூழ்கு
பொல்லாத வாதபித்த சேட்டுமத்தா
லாத்துசலரோக மாங்கிஷத் தெடுத்த
வுற்பன நீரோகமது யிருபதுந்தான்
நேத்திர ரோகம் வயற்றினெரிவு தாகம்
ரெத்த மூலஞ்சீயின் மூலங்கிறுணி
சாத்திய காமாலை பாண்டுடனே சோகை
சுயம் விரணஞ்சுர மெல்லாந் தீருந்தானே. எக

தீரும்பார்சலரோக மெல்லா மெண்ணெயீ
தேய்த்தன்று மிச்சாபத்தியஞ்செய் கீயும்
கூறுமொரு மண்டலம் நீமூழ்கு நல்ல,
கோலதையுடனே மருவலா காதிந்த
தாரணியி லிரணிய கர்ப்பதானம் வெள்ளி
தந்தி தானம் விப்பிரகன்னி தானம்
பூரணமாயி ன்னம்வேறு தானஞ்செய்து
புகழ்பெருகு சரபேந்திர னருளிதாமே. எஉ

(இ-ள்)

பருத்திக்கொட்டை 40 பலம் எடுத்து ஒன்றிரண்டாக இடித்து எடுத்துக்கொண்டு 16 படி தண்ணீர்விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டில் ஒன்ருகச் சுண்டக் காய்ச்சவும். அருகம்வேர் 20 பலத்தை எடுத்து 10 படி தண்ணீர் விட்டு அதையும் எட்டில் ஒன்ருகக் காய்ச்சிக்கொள்ளவும்

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | 5 பலம் |
| மெருகன் கிழங்கு | ,, |

| | |
|---|---|
| வெட்டிவேர் | 5 பலம் |
| சித்தாமுட்டிவேர் | ,, |
| செல்லிப்பருப்பு | ,, |
| சிற்றாமணக்குவேர் | ,, |
| நிலக்குமிழ்வேர் | ,, |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | ,, |
| பாதிரிவேர் | ,, |
| நீர்ப்பூலாப்பட்டை | ,, |
| ஆவாரம்பட்டை | ,, |

இவைகளை நன்றாக நசுக்கி இரண்டு மடாவில்போட்டு 20 மரக்கால் தண்ணீர் வார்க்கவும். இதையும் எட்டிலொன்றாகக் காய்ச்சி இறுத்துக்கொண்டு எல்லாவிதக் கஷாயங்களையும் ஒன்றுசேர்த்துக்கொள்ளவும்.

நல்லெண்ணெய் நாலு படியும் சேர்த்து அடுப்பின் மீது வைத்துக் கொதிக்கவைக்கவும். இவையாவும் ஒன்றுபட்டுக் கலந்து வரும்போது, இளநீர் 4 படியும் பசுவின் பால் 4 படியும் சேர்த்துக்கொண்டு, கீழே கண்ட சரக்குகளின் கல்கத்தையும் எண்ணெயோடு சேர்த்துக் கலந்து கொள்ளவும் :

1. கருவேலம் பிசின்
2. சீரகம்
3. மஞ்சிஷ்டி
4. கருவேல்பட்டை
5. சுக்கு
6. திப்பிலி
7. மிளகு
8. கல்நார்
9. தக்கோலம்
10. அதிமதுரம்



11. சாதிபத்திரி
12. சாதிக்காய்
13. லவங்கப்பத்திரி
14. கிரந்தி தகரம்
15. நாகணம்
16. சிறுநாகப்பூ
17. தாளீசப்பத்திரி
18. பூஞ்சாந்திப்பட்டை
19. கடைகீறு
20. தாமரைவளையம்
21. புளியங்கொட்டைத் தோல்
22. சடாமாஞ்சில்
23. சமுத்திராபச்சை
24. அத்திமொட்டு
25. செங்கழுநீர்க் கிழங்கு
26. தாமரை நீர் (சமூலம் இடித்த சாறு)
27. ஆவாரை விரை
28. கொத்தமல்லிவிரை
29. இருப்பூரம்பட்டை
30. கடலிரஞ்சிப்பட்டை
31. விளாம்பிசின்
32. வில்வப்பிசின்

இந்த 32 சரக்குகளையும் வகைக்கு 2 வராகனெடை யெடுத்து, தென்னம்பூச்சாற்றினால் நன்கு அரைத்து, அடுப்பின்மேலிருக்கிற தைலத்திற் குழப்பிக்கொண்டு, தைலத்தைத் தகுந்த பதத்தில் இறக்கவும். தைலம் ஆறிய பின் புனுகு சட்டம் ¼ பலம், பச்சைக்கற்பூரம் ½ வராகனிடையும் சேர்த்துக்கொள்ளவும்.

3 நாளைக்கு ஒருதடவை தலை முழுகிவரவும் :

இதனுல் தீரும் வியாதிகள் :—

1 வாதமேகம்
2 பித்தமேகம்
3 கபமேகம், மாம்ஸமேகம் முதலிய 20 வித மான மேகங்கள்
4 நேத்திரரோகம்
5 வயிற்றின் எரிவு
6 தாகம்
7 ரத்தமூலம்
8 சீழ்மூலம்
9 கிருணி (கிரஹணி)
10 காமாலை
11 பாண்டு
12 சோகை
13 விரணம்
14 சுரம் இவைகள் தீரும்

பத்தியம்:—எண்ணை தேய்த்துக் கொண்ட தினத் தன்று இச்சாபத்தியமாக இருக்கவும். ஸ்திரீ சங்கம் இல்லாமல் ஒரு மண்டலம் தலை முழுகிவர மேற்சொன்ன ரோகங்கள் தீரும்.

குறிப்பு:—73 முதல் 79 வரையில் பாடல்கள் உள்ள ஏடு கள் சுவடியில் காணப்படவில்லை.

## 36. நீரிழிவுக்கு

ஆற்தாத நீரிழிவு நரர்க்கு வந்தால்
அதற்கொன்றுகேள் காணிவுரை கின்ற
தேத்தான் வித்ததனைக் களஞ்சரைத்து மேகா
திக்குளிகை யொன்றுவைத்துக் கொள்ளுகாலை
யேத்தானே யந்திக்கி க்கடாயக் தாவிட்
டேகொள்ளு நீரிழிவு திருமென்னு



மாந்தரை வென்ற துளசேந்திர பூபன்
மைந்தன் சரபேந்திர னுரைவிழ்தமாமே. எஉ

தேத்தான் வித்தை ஒரு கழஞ்சு எடுத்து நன்கு அரைத்து அவ்விழுதுடன் தண்ணீர் கலந்து கஷாயமாக்கி அதில் மேகாதிகுளிகை[1]யொன்று சேர்த்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிடத் தீராத நீரிழிவுகள் தீரும்.

## 37. நீரிழிவுக்கு

ஆரைதட்சி யிரும்பிலி நீர்ப் பூலாவேருங்,
துய்ய பொன்முசுட்டை யாவரையின்வேரும்
கூறுமைந்து வேருங்கடலிறஞ்சிப்பட்டை,
கோரையுடகிழங்கு குன்றில்தேற்றும்வித்து
தாரணியின் மூங்கிலிலை திரிபலையெல்லாஞ்
சமனுகச் சேர்த்திடித்துப் புதுப்பாண்டத்தில்
சேருடனே வண்டு கட்டி வைத்துக்கொண்டு
செய்யும் வகையது சொல்வேன் எருமையோடே.

ஒருகலச மாதலொரு சட்டியாதலு நிலையுட
னிரண்டுபடி தண்ணீர்விட்டு
மருந்ததி லோர் பிடியுந்தானெடுத்துப் போட்டு
வண்டு கட்டி முற்சாமம் ரவியில் வைத்து
அருசாக வடிப்பேத்தி யுழக்காய்க் காய்ச்சித்
தூய தேனொரு காசினிடையுங் குத்தி
வரிசையுடன் காலமேகொள்ளு நன்று
மந்தி க்குச்செய்யும் வகையதனைக்கேளே. எரு

---

1. 'மேகாதிகுளிகை' இன்னதென்று விளங்கவில்லை. சரபோஜிராஜனுல் தொகுக்கப்பட்ட 'வைத்தியராஜ சிந்தாமணி' என்னும் நூலில் 'மேகத்திற்கு குளிகை ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அந் நூல் அச்சிடப்பட்டிருக்கிறது.

அதுகேளு திரிபலை பொன்முசுட்டை வேரு
மற்பு நமாமூங்கிலிலை கோரைமூலம்
இது காலும் வகைக்கிரண்டு காசிடை
தானி டித்திரண்டு படி தண்ணீர் விட்டுழக்காய்
இதமாகக்காய்ச்சி த்தேன் தன்னி லுண்ணு
இடரான நீரிழிவுமேகும் பாரு
மூதன்மைபெறு தஞ்சைநகர் தன்னையாண்டு
முசிதமிகு சரபேந்திர னுணர்ந்த தாமே. ௭௬

(இ-ள்)

கூரையின் வேர்
இரும்பிலி வேர்
நீர்ப்பூலா வேர்
பொன்முசுட்டை வேர்
ஆவாரை வேர்
கடலிறஞ்சிப்பட்டை
கோரைக்கிழங்கு
தேற்றான்கொட்டை
மூங்கில் இலை
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
தொட்டால் சுருங்கிவேர்

இவைகளை வகையொன்றுக்கு 1 பலம் எடுத்து நன்றாக இடித்து ஒரு புதுப்பாண்டத்திலிட்டு வேடுகட்டி வைத்துக்கொண்டு ஒரு கலசத்தில் 2 படி எருமை மூத்திரம் விட்டு மேற்படி மருந்தில் ஒருபிடி எடுத்துப்போடவும். அந்த மூத்திரத்தோடு கூடிய சட்டியை காலை வெய்யிலில் 1 ஜாமம் வைத்து அடுப்பின் மேலேற்றி நன்கு ஒரு உழக்களவாய்ச் காய்ச்சவும். இதைக் காலைநேரத்தில் ஒருகாசிடை தேன் கூட்டிச் சாப்பிடவும்.



சாயுங்காலத்தில்,
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
பொன்முசுட்டை வேர்
மூங்கிலிலை
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு 2 காசிடை எடுத்து நன்றாக இடித்து 2 படி தண்ணீர்விட்டு ஒரு உழக்காகக் காய்ச்சி, தேன்விட்டு சாயங்காலத்தில் சாப்பிடவும். தீராத நீரிழிவுகள் பலவுந்தீரும்.

## 38. நீரிழிவுக்குக் கொன்றைச் சூரணம்

செழுமலர்க் கொன்றையி னிலையை யுலர்த்திச்
சூரணஞ்செய்து வடிகட்டி வஸ்திரகாயம்பண்ணி
வழுவாம லந்தி சந்தி வெருகடிப் பிர
மாணங்கொள் சலக்கழிச்ச லுடனே நீரி
னழிவும்போஞ்சிவகிருபை தன்னாலிந்த
அவனியை யான மன்னருக்கு மன்னனெங்கோன்
வழியில் மிருந்த போசலகுலத்து மாறு
மியல்பாக வுணர்ந்த சூரணம தாமே. ௭௭

(இ-ள்)

கொன்றையின் இலையை உலர்த்திச்சூரணம் செய்து சலித்துப் பின்பு அதை வஸ்திரகாளனம் செய்து வைத்துக்கொள்ளவும். தவறாமல் காலையும் மாலையும் ஒரு வெருகடிப் பிரமாணம் உட்கொள்ளக் கழிச்சல், நீரிழிவு இவைகள் தீரும்.

## 39. நீரிழிவுக்கு ஏலாதி உண்டை

ஏலவிரு தொன்று சொல்வேன் கேளுமே
  லிவங்கம மிர்தவல்லிக் கிழங்கி னூடே
கோல த்தாமரை வளையங்கிராம்பா வாரை
  கொள் தண்ணீர் மிட்டா னற்கிழங்குத்தாளும்
சில பஞ்சாங்கத்தோ டெட்டினத்தான்
  சேர்சமமாய் மோரிலரை த்துண்டைசெய்து
மேலு மதையாவின் பால்தனி லுண்ணும் பிற
  மேகமெலாந்தீரும் விபுவுணர்ந்த தாமே. எஅ

ஏலம்
லவங்கப்பத்திரி
கிராம்பு
ஆவாரைப் பஞ்சாங்கம் (வேர், பட்டை, இலை, பூ, காய்)
அமிருதவல்லிக்கிழங்கு (சீந்திற்கிழங்கு)
தண்ணீர்விட்டான் கிழங்கு
தாமரை வளையம்

இவைகளை மோரிலரைத்து உண்டை செய்யவும்.

அனுபானம் :—

பாலில் உட்கொள்ளவும். மேக முதலானவை தீரும்.

## 40. நீரிழிவுக்கு ஆவாராதிப்பட்டைச் சூரணம்

ஆவாரதிப்பட்டைச் சூரண மொன்று
  ஆவாரம்பட்டை த்தூள் நாழியாகும்
பூவினிற் கொட்டிக்கிழங்கு த்தூளும் நாழி
  பொற்புள வரகரிசி சிறியது நாழி கூட்டி
தாவிவளர் தினையரிசியுரியும் நல்ல
  சம்பாப் பச்சரிசியுழக்குப் புழுங்கல்
மேவுமரிசியு முழக்கு இவைகளெல்லா
  மிரவி தனில் பர் வற்றக்காய வையே. எகூ



காயவைத்து இடித்துத் தூளாக்கி யோடு
  சேய்த்த பின்பு மணம்வரவும் வறுத்துக்கொண்டு
பாயமுடன் குடுக்கை தனிலடைத்துக் கொண்டு
  பண்பாகத் தினம் வெருகடிப் பிரமாண
மாயதை நீ பத்து நாட் கொண்டோரு
  வலுத்த நீரிழிவு மறு மவனி யோர்க்குத்
தாயக மாஞ்சரபோசி ராசபூபன்
  றூனுணர்ந்த ஆவாரதிச் சூரணமதாமே. அம

(இ-ள்)

| | |
|---|---|
| ஆவாரம்பட்டைச் சூரணம் | 1 நாழி |
| கொட்டிக்கிழங்குத் தூள் | 1 நாழி |
| வரகரிசி | 1 நாழி |
| தினையரிசி | ½ படி |
| சம்பாப்பச்சரிசி | 1 உழக்கு |
| சம்பாப் புழுங்கலரிசி | 1 உழக்கு |

இவைகளை நன்றாக நீர் சுண்டும் வரை வெயிலில் உலர்த்தி நன்கு தூளாக்கி, அதைப் பொன்வறுவலாக வறுத்துக்கொண்டு ஒரு குடுக்கையில் அடைத்துவைக்கவும். இதில் தினந்தோறும் ஒருவெருகடிப்பிரமாணம் 10 நாள் சாப்பிட வலுத்த நீரிழிவு தீரும்.

## 41. நீரிழிவுக்கு வெள்வங்க பற்பம்.

பூலாவினிலையும் புண்ணாக்கிரண்டும்
  பொடியாக வரைத்து வடையாய்த்தட்டி
மேலான வெள்ளீயம் பலமொன்று
  மிரதமது பலமொன்று மிரண்டுங் கூட்டி
மேலான தகடதாக்கி யதனிற் கீழுமேலு
  முன்சொல்ல டைகொண்டு மூடியேதான்
மாலநகப் புடமிட்டுப் பற்பமாக்கி,
  வைத்துக்கொண்டதைச் செய்யும் வகைதான் கேளே

வகைகேளு விடத்தரிலைப் பொடியதாக்கி
வருத்த பொடியொரு காசினிடையும் பற்பக்
துகையுடனோர் பணவிடையு மெடுத்தாவாரைத்
தூய கொழுந்தரைத் தெருமை மோரிலேதான்
றகைவான பிட்டிட்டுப் பிழிந்து அந்தச்
சாறில் மருந்தைக் கரைத்து அன்பினோடே
சகமீதிற் கடவுளரைத் தியானம் பண்ணிச்
சதிராக நீயுமதைக் கொடுத்திடாயே. ௮௰

கொடுத்தி டந்திசந்தி ரண்டு வேளையுந்தான்
கொள் பத்துநாளிச்சா பத்தியமாகத்
திடத்துட ஜீயுண்ணு இந்த அவுஷதசாரந்
தெரியுமிருபது நீரினிழி வுந்திரும்
படித்தவர்கள் கவிபாடும் புலவர் செய்யுள்,
பண்பறியுந் தஞ்சை சரபோசி ராசன்
அடுத்தவரை யீடேற்றும் விபுவுணர்ந்த
வன்பாக வெள்வங்க பற்பமாமே. ௮௧

(இ-ள்)

பூலாவின் இலை
பிண்ணாக்கு (எள்)

இவ்விரண்டையும் பொடியாக அரைத்து, கொஞ்சம் தண்ணீர் சேர்த்து வடையாகத் தட்டிக்கொள்ளவும்.

சுத்திசெய்த வெள்ளீயம், சுத்திசெய்த பாதரஸம்—

இதனை வகைக்கு ஒருபலம் எடுத்து, இரண்டையும் மத்தித்துக்கொண்டு தகடாக அடித்துக்கொள்ளவும். இத் தகட்டுக்கு மேலும் கீழும் மேலே சொன்ன அடையை வைத்துவிடவும். இதற்குச் சீலைமண் செய்து புடம் போடவும். புடம் ஆறியபின் வெளுத்த பற்பத்தை எடுத்துக் கொள்ளவும்.



விடத்தேரி இலை சட்டியிலிட்டுக் கருக வறுத்துக்கொண்டு அத்தூள் காசிடைக்கு வெடி பற்பம் 1 பணவிடையும் எடுத்து ஆவாரங்கொழுந்தை எருமைத்தயிரில் கூட்டிப் பிட்டாக வேகவைத்துப் பிழிந்த சாற்றினுடன், பற்பத்தையும் தூளையும் போட்டுக் குழப்பிக்கொண்டு காலைமாலை கொடுக்கவும். 10 நாள் சாப்பிட்டு இச்சா பத்தியமாக இருந்துவர 20 வகை நீரிழிவுகள் தீரும்.

(மேலே கண்ட மருந்துகளின் மூலச் செய்யுள்கள் காணப்படவில்லை. உரைநடைக் குறிப்புச் சுவடியிலிருந்து எடுத்தெழுதப்படுகின்றன: (1) நாயெலும்பைப் பொடி செய்து தேங்காயில் அடைத்துவைத்து தேனிற் குழைத்து பத்து நாட்கள் சாப்பிடவும்.

| | |
|---|---|
| (2) அபின் | விசை 2 |
| சாதிலிங்கம் | ,, |
| காசுக்கட்டி | ,, |

எண்ணெய் வார்த்தரைத்து பருத்திக்கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணிக் காலைமாலை ஒரு உருண்டை விதம் உட்கொள்ளவும்.

(3) ஆவாரை இலை ஒரு கொட்டைப்பாக்களவு ஆவின் பாலில் குடிக்கவும்.

## 42. நீரிழிவுக்கு ஆவாராதி அடை

ஆவாராதி யடை யொன்றதைக் கேளு
ஆவாரை யிலையுமொரு பிடிகொணர்ந்து
தாவிவளர் குருவையரிசியு முழக்குத்
தானரைத்து வுப்பில்லா வடையாய்ச் சுட்டு
ஆவலுடன் நல்லெண்ணெய் தேய்த்துச் சந்தி
யந்தியு முண்ணெட்டு நாளிரண்டு வேளை
தாவிய நீரிழிவு மறும் தப்பாமற்றான்
தஞ்சையில்வாழ் விபுவுணர்ந்த வடையதாமே ௮௨

(இ-ள்)

ஆவாரை இலை ஒரு பிடி
குருவையரிசி ஒரு உழக்கு

இவ்விரண்டையும் உப்புச் சேர்க்காமல் அரைத்து வடை தட்டி நல்லெண்ணெயில் தோய்த்து எட்டு நாட்கள் விடாமல் காலைமாலை சாப்பிட நீரிழிவு தீரும்.

## 43. நீரிழிவுக்கு ஈரவெங்காயப் பிட்டு

ஈரவெங்காயங் குறுணி கொண்டுவந்து
இதின் மேற்றோல் போக்கிச் சிறுகவு மரிந்து
சாரஎள்ளின் பிண்ணாக்கோர் படிபிடித்துத்
தப்பாமற் சேலை வடிகட்டிக் கொண்டு
கூறுமெருமையின் மோரோர் படியதன்னைக்
குன்று நற்சட்டியி லிட்டு வேடுகட்டி
ஈரவெங்காயமும் பிண்ணாக்கின் றூளு
மிரண்டுஞ்சேர்த்தே பிட்டாய் வைத்திடாயே அரு
வைத்துச்சட்டி மூடியெரித்தே பிட்டாக்கி
வளமாக வெடுத்தந்தி சந்தியுந்தான்
நந்திரமா நல்லெண்ணெய் வார்த்து பு
நல்லசனஞ்செய் நீரிழிவுந்தீரு
மித்தரணிதனிற் பரமசிவனார் பத
மென்னேரந்தியானித்தார்ச் சனைகள் செய்யுஞ்
சத்ய அரிச்சந்திர நிகர் வாய்மை தப்பா
ஈரமேசி மகராசனருளி தாமே. அசு

(இ-ள்)

ஈரவெங்காயம் ஒரு குறுணி எடுத்து மேல் தோலை நீக்கிச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.

எள்ளுப்பிண்ணாக்கு—1 படி எடுத்து நன்றாக வஸ்திரகாளனம் செய்துகொள்ளவும்.



ஒரு புதுச்சட்டியில் ஒருபடி எருமைமோரை விட்டு அச்சட்டியின் வாய்க்கு ஒரு வஸ்திரத்தினால் வேடுகட்டி வெங்காயத்தையும் பிண்ணாக்குத் தூளையும் அவ்வேட்டின் மீது வைத்து அடுப்பிலேற்றிப் புட்டவியலாக அவித்து விடவும். பின்பு இத்தூளைப் பக்குவமானபின் எடுத்துக் காலையும் மாலையும் சாப்பாட்டில் போட்டு நல்லெண்ணெய் கூட்டிக்கொண்டு சாப்பிட்டுவர நீரிழிவு தீரும்.

## 44. நீரிழிவுக்கு மருந்து.

வருத்த மிகு நீரிழிவு வந்துற்றாலே
வண்மையுடனோர் விழ்தஞ் சொல்லக்கேளு
பருத்தி விரை தண்ணீரில் நனைய வைத்துப்
பண்பாக விடி வேறு துவைத்தாவின் பா
லுருக்கமுடன் விட்டதையும் பிசைந்துகொண்டு
வுபாயமுடன் வடிக்கட்டி வெண்ணெயும் விட்
டருந்திடு நீ பனவட்டுங் கூட்டிக்கொண்டு
அதிகால மேயுண்ணீரிழிவும் போமே. அஎ

(இ-ள்)

பருத்தி விரையைத் தண்ணீரில் ஊறவைத்து இடித்துப் பசுவின்பாலில் பிசைந்து வடிக்கட்டிக்கொண்டு நல்லெண்ணெய் சேர்த்துக்கொண்டு, வாய்க்குப் பனைவட்டுங் கூட்டிக்கொண்டு அதிகாலையில் சாப்பிடவும்.

பனைவட்டு=பனைவெல்லம்

## 45. நீரிழிவுக்குச் செஞ்சோள விழுது

செக்கவுஞ் சிவந்த சோளமாவதும் குறுணியா
மொக்கவும் பிண்ணாக்குத் தூளதுவே குறுணியாக்
நக்கவுஞ் சிவந்த கத்தரிக்காயன்பது மதி
யுக்குன்னே விரையெடுத்துக்கொட்டி டித்திடே அஅ

இடித்தொரு விளாங்கனியளவு முருண்டையாக்கியே
திடத்துட னல்லெண்ணெய் தனிலூற வைத்துக்கொ
வடிப்பமாயிரண்டு வேளையுண் ணுநீரிழிவது [ண்டுமே
மடக்கு மேகரோகமும் பறக்குமே யிதுண்மையே. ௮௯

(இ-ள்)

| | |
|---|---|
| சிவப்பு நிறமுள்ள சோளமாவு | 1 குறுணி |
| எள்ளுப்புண்ணாக்குத் தூள் | 1 குறுணி |
| விரை நீக்கிய சிவப்புக் கத்தரிக்காய் | 50 |

இவை மூன்றையும் கல்லுரலிலிட்டு நன்கு மைய இடித்து விளாங்கனியளவு உருண்டைகளாக உருட்டிவைத்து நல்லெண்ணெயில் ஊரவைத்துக்கொள்ளவும். இதைத் தினந்தோறும் இருவேளை காலையும் மாலையும் சாப்பிட நீரிழிவு தீரும்.

## 46. நீரிழிவுக்கு வெள்ளிலோத்திர மா

வடித்தவெள்ளி லோத்திரத்தை
மாவதாய்ப் பொடிசெய்து
தடித்த வெள்ளரிப் பிஞ்சிற்
களஞ்சது கறுக்கியே
எடுத்து ராத்தரித்து விடி
வேறெடுத்து மே பினைக்
திடுக்கடுத்த நீரிழிவு மேகு
மூர்ச்சித்தி டிலே ௯௰

மூர்ச்சையாகினி லும்நற்ற
யிருஞ்சோறு முண்டிடு
வாச்சு தென்று மேகரோக
மாறுமென்ப துண்மையாம்
பாச்சல் மாவிலேறியே
பவனிகொள் ளிபுவுணர்



சூச்சமான வெள்ளி லோத்திர
மாப்பொடி யிதாகுமே. ௯௧

(இ-ள்)
வெள்ளி லோத்திரப்பட்டையை மாவாகும்வரை நன்கு இடித்து வெள்ளரிப்பிஞ்சினுள் கழஞ்சளவால் ஒரு இரவு முழுதும் வைத்துக் காலையில் சாப்பிடவும். கடுப்புடன் கூடிய நீரிழிவு தீரும். மூர்ச்சையுண்டானால் தயிர்சாதம் சாப்பிடவும். மேகரோகம் மாறும்.

## 47. நீரிழிவுக்குக் காந்தாதி மருந்து

காந்தமுடன் களிப்பாக்கு கெல்லி மூன்றுங்
கருத்துடனே வகைக்கு மொருபலமுங் கூட்டி
வாய்ந்தவாவரை விரையும் பொடியதாக்கி
வத்திரகாயம் பண்ணி யெள்ளெண்ணெய்விட்
டேத்திப் பிசைந்தே யுருட்டிச் சேலை தன்னி
லிதமாய்ச் சோளாந்திரங்களாகக் கட்டி
சூத்திறமாயேர் பாண்டந்தன்னி லேதா
லுச்சிதமாய்க் கட்டிச்செய்வகையைக்கேளே. ௯௨

கட்டியிருநாழி நீர்விட்டு முன்னே,
கருது பொட்டணத்தையுமே யதனிற்போட்டு
இட்டெரிக்கி கனலையுமே யிறக்கிப்பின்பு
எடுத்துவொரு பாக்களவு பழச்சாறு தன்னில்
விட்டுண்ணு நீரிழிவுந் தீருமந்த
விமலர் பதமர்ச்சித்து நலமேபெற்ற
கட்டழகன் சரபோசி மகராசேந்திரன்
கருத்துணர்ந்த காந்தாதி மருந்தி தாமே. ௯௩

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த காந்தம் | 1 பலம் |
| களிப்பாக்கு | ,, |
| நெல்லி வற்றல் | ,, |

வஸ்திரகாளனம் செய்த ஆவாரைச் சூரணம் 1 பலம்

இவை யாவற்றையும் நல்லெண்ணெய்விட்டுப் பிசைந்துகொண்டு ஒரு சேலைதனில் வைத்து நன்றாகச் சுற்றி ஒரு சட்டியில் டோலாயந்திரமாக (தொங்கவிட்டுக்) கட்டி, 2 படி தண்ணீர்விட்டு எரிக்கவும். நன்கு பக்குவமானபின் அடுப்பிலுள்ள அனலை எடுத்துவிட்டுப் பொட்டணத்தைப் பிரித்து அதில் ஒரு பாக்களவு எடுத்து எலுமிச்சம்பழச் சாறுகூட்டித் தினந்தோறும் சாப்பிட நீரிழிவு தீரும்.

## 48. நீரிழிவுக்கு ஜாதிலிங்கக் குளிகை

சாதிலிங்கம் பலமிரண்டு உண்டைக் காந்தந்
தானிரண்டு பலம் வசுவாசி பலமொன்
றோது வெள்ளிபல மொன்றும் அரப்பொடிதா
னொக்க நாற்பல மத்தங்காய்த் தண்டுலஞ்
சாத்தவாவரை விரையுந் தேற்றாங் கொட்டை
சதகுப்பை யிந்நாலும் வகைக்குழக்கு
நீதவட்டத்துத்தி காரியம்ரெண்டும்
நேராக நாற்பலமுங் கூட்டிக் கொள்ளே. ௬௪

கூட்டிக்கொள் நன்றாகவு மாவாரைக்
கொழுந்துமொரு பிடியெல்லாம் பொட்டணங்கள்
ளாட்டமுடன் கட்டிக் குறுணி நெல்லுக்கு
நன்னீரும் பதக்கு வார்த்ததிலே தான்
போட்டுவிட்ட நீர்சுவற வேகவைத்துப்
புதிய எருமைத்தயிர் வார்த்தரைத்து நன்றாய்
வாட்டமிலாத் தேற்றான் கொட்டைப் பிரமாணம்
வகையாக வுண்டை பண்ணி வைத்துக்கொள்ளே.

வைத்துக்கொள் மானிடர்க்கு நீரிழிவும்
வந்துற்றா லாவரையின் பொடியதன்னில்
சத்துவமாய் வெருகடிப்பிர மாணமுண்டை
தானென்று தேன்கூட்டிக் கொடுத்துப்பாரு
இந்திராணி தனிலதிகக் கீர்த்திபெற்ற
ஈசர் பதம் பூசை செய்து தவங்கள்பெற்ற
பெத்த சரபேந்திர னுரைப்படிக்கு இந்தப்
பிரியமுள்ள சாதிலிங்கக் குளிகையாமே. ௬௫

| | |
|---|---|
| சுத்திசெய்த சாதிலிங்கம் | 2 பலம் |
| ,, காந்தம் | 2 ,, |
| சுத்திசெய்த ஜாதிபத்திரி | 1 ,, |
| ,, வெள்ளி | 1 ,, |
| ,, அரப்பொடி | 4 பலம் |
| மத்தங்காய்ப் புல்லரிசி | 2 உழக்கு |
| ஆவாரை விரை | ,, |
| தேற்றான்கொட்டை | ,, |
| சதகுப்பை | ,, |
| வட்டத்துத்திவேர் | 4 பலம் |
| சுத்திசெய்த காரியம் | ,, |
| ஆவாரங்கொழுந்து | ஒரு பிடி |

இவைகளை ஒரு பொட்டணமாகக் கட்டி ஒரு சட்டியில் ஒரு மரக்கால் நெல்போட்டு அதற்கு 2 மரக்கால் தண்ணீர் விட்டு அதில் இந்த பொட்டணத்தை டோலா யந்திரமாக (அதாவது, தொங்கவிட்டுக்) கட்டி நீர் சுண்டும்வரை எரிக்கவும்.

பின்பு அதை எடுத்து, எருமைத் தயிர்விட்டு நன்கு அரைத்துத் தேத்தான்கொட்டை யளவு உருண்டைகள் செய்துகொள்ளவும். நீரிழிவு ரோகிக்கு, ஆவாரைச் சூரணம் ஒரு வெருகடியளவெடுத்து, அதனுடன் ஒரு உண்டையுஞ் சேர்த்துத் தேன்விட்டுக் குழப்பிக் கொடுக்கவும். நீரிழிவு தீரும். இம்மருந்தின் பெயர் 'சாதிலிங்கக் குளிகை' யாகும்.

## 49. நீரிழிவுக்கு திரிகடு உருண்டை

திரிகடுகு திரிபலை தேங்காயின் றிருகல்
  வெல்லங் கடுகு கற்பூரமுந்
துரிசு இக்துப்பெலு மிச்சையின் பழந்
  தோலுமுள்ளுங் கருகின தொன்பதுஞ்
சரி நிறையாகக் கூட்டியே யம்மியிற்
  றுனரைத்துத்தேன் கூட்டியே மைகள்போல்
துரிதமாய்ச்சிறு கொட்டைப் பாக்கத்தனை
  தோன்ற வுருண்டை செய்தே யுலர்த்திட்டிடே.
இட்டுவைத்துத் திரிகடு குண்டைநீ
  ரினிழிவு வந்துற்றிடி லோருண்டை
சட்டமாகத்தாள் செய்து நற்றேனிலே,
  தானே கொண்டிடு வந்தியு ஞ்சந்தியுங்
கட்டஞ் செய்கின்ற நீரிழிவானது
  கதிரவன் முன் பனிப்போலவும் போகுமே,
இட்டமா ந்தஞ்சை மாநகர் தன்னில் வாழ்
  நீரனுஞ் சரபேந்திர னருளிதே. ௪௮

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றிக்காய்த்தோல் |
| தேங்காய்த் திருகல் | வெல்லம் |
| கடுகு | கர்ப்பூரம் |
| சுத்தி செய்த துருசு | பொரித்த இந்துப்பு |
| எலுமிச்சம்பழத்தோல் (கருக்கியது) | எலுமிச்சை முள்ளு (கருக்கியது) |

இவைகளைச் சரி எடையெடுத்து, அம்மியின் மேல் வைத்தரைத்துத் தேன்கூட்டி மறுபடியும் மைபோலரைத்து ஒரு சிறு கொட்டைப்பாக்களவாக உருண்டைகள்



செய்யவும். இதை நிழலிலுலர்த்திக்கொண்டு நீரிழிவு ரோகிக்கு ஒரு உருண்டையைத் தூள் செய்து சுத்தமான தேனில் தினமும் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். நீரிழிவு சூரியனைக்கண்ட பனிபோல் அகலும்.

## 50. நீரிழிவுக்கு ஆவரையாதி யுண்டை

ஆவரைவேர்ப் பொடியது பாதியு மாவரை
  கெட்டி நீர்முள்ளி செய்தலும் .
காவினின் முசுட்டை யுடனேக்கிலை,
  கணக்கதாய் முன்னே சொற்படி பாதியு
மாவலாக வரைத்துண்டையுஞ்செய்து
  அதை யுலர்த்தியே யந்தியுஞ் சந்தியுங்
கூவு மாவாரையாதி யாமுண்டையைக்
  கொடுத்திட நீரிழிவதுந் தீருமே. ௪௯

(இ-ள்)

| | |
|---|---|
| ஆவாரை வேர் | ஆவாரை இலை |
| கெட்டியிலை | நீர்முள்ளியிலை |
| செய்தல் (கருமை) இலை | முசுட்டை இலை |

பின் சொல்லப்பட்ட 5 வகை இலைகளையும் சமனாக சேர்த்து அம்மியிலிட்டு, ஆவாரைவேர்ச் சூரணம் 5 கட்டு போட்டு, இவைகளை யொன்றாக அரைக்கவும். இதை உருண்டைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக்கொண்டு வேண்டும்போது காலையிலும் மாலையிலுமாக ஒவ்வொரு உருண்டை வீதம் சாப்பிடவும். நீரிழிவு தீரும்.

## 51. நீரிழிவுக்குத் தாமரைவளையாதிப் பிட்டு

வெற்றிலையுள்ள தாமரை தன்னுடைவளையம்,
  நல்லதுடைரியிலைக்கொழுந்
தாவடைவிலைமூன்று ஞ்சரியதா
  யாகவே யுலர்த்திப்பொடி செய்ததை

ஆவரை வேர் பாண்டத்தில் மோரைவிட்
டந்தப் பாண்டத்தை வேடுகட்டியே,
அவுமுன் பொடியில் மோரை விட்டுமுன்
சொல்லும் வேடின்மேல் பிட்டதாய்வையே

பிட்டதாய்ச் சுட்டு அந்தியுஞ் சந்தியும்
பிரியமாகத் தண்ணீரிழி வானது
விட்டுமே திரிபுவன மெரிசெய்த
விமலிசாம்பவி யம்பிகை பார்வதிக்
கிட்டமாய் மகிழாதிசதாசிவ
னிருபதுமறவாமற் றுதிசெய்யு
மட்டதிக்கும் புகழ் சரபேந்திர
னருளுந்தாமரை வளையாதிப் பிட்டிதே.

(இ-ள்)

| | |
|---|---|
| தாமரையிலைச்சருள் | நடரிக்கொழுந்து |
| ஆவாரை விரை. | |

இம்மூன்று சரக்குகளையும் வகைக்குச் சரி யெடை யெடுத்து நிழலிலுலர்த்திச் சூரணம் செய்துகொள்ளவும் ஒரு வாயகன்ற சட்டியில் மோரைவிட்டு அதன் வாய்க்குத் தக்க வேடுகட்டவும். மேலே சொல்லப்பட்ட சூரணத்தி லும் மோர்விட்டுப் பிசரி, அதை அவ்வேட்டின் மேல் வைத்து, மேலே ஒரு சட்டிகொண்டு மூடி, அடுப்பின்மே லேற்றிக் கொதிக்கவைத்துப் பிட்டாய்ச் சுட்டு இறக்கிக் கொண்டு காலையிலும் மாலையிலும் சாப்பிட நீரிழிவு தீரும்.

## 52. நீரிழிவுக்கு கடலுருஞ்சியாதிப்பட்டை சூரணம்

கடலுருஞ்சி வேராவரையின் வேருங்
கானகத்தின் வாட்பூலாவேரு மூன்று
முடனிடித்தே யரைச்சேருக்குள்
சேரிலவங்க மேலஞ்சாதிக்காயு



மடவிச்செவ்வேளை வேர்சுக்குக் கோட்டமு
மற்புதச் செங்கழுநீர்க்கிராம்புடன்
அடவுள் கடுக்காய் மிளகிரைந்து
மவ்வகைக்கி வராகனிடை ரெண்டே. ௪௨

வகைக்கிரண்டு வராகனிடை யது
வண்மையாக விடித்தே வடிகட்டித்
துகைபெற முன்னுஞ் சொல்லிய தூளுடன்
தொக்கச் சேர்த்துக் கொண்டு பொட்டணங்கட்டி
தருமதாமத்தஞ் சாற்றினிலூற வைத்
ததை யெடுத்து வெருகடித்தூளதிற்
பகருங்காரிய செந்தூர மூமொரு
பணவிடை கல்ல தேனிற் குழைத்திடே. ௪௩

தேனிலே குழைத்தந்தியுஞ் சந்தியுந்
தின்னு வாய்வு பதார்த்தத்தை விட்டிடு,
மானிடர்க்கு வருமென்ற நீரிழி
வறுமே கால்மண்டலந் தன்னில் நற்
றேனினங்க ளிசைப் பயிற்றஞ்சையின்
தீரனுஞ்சரபேந்திர பூபதி
தானுரைக்குஞ்சொல்லிய நற்கடலுருஞ்சியுட
தன் வேர்ப்பட்டை யாதிச்சூரணமிதே. ௪௪

(இ-ள்)

| | |
|---|---|
| கடலழிஞ்சில் வேர் | ஆவரை வேர் |
| காட்டுவாட்பூலாவேர் | |

இவைகளைச் சமமெடுத்திடித்த சூரணம் — ½ சேர்

| | |
|---|---|
| இலவங்கப்பத்திரி | ஏலக்காய் |
| சாதிக்காய் | காட்டுச் செவ்வியவேளைவேர் |
| சுக்கு | கோஷ்டம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | சொம்பு |
| கடுக்காய் | மிளகு |

இப்பத்துவகைச் சரக்குகளும் வகைக்கு-2 வராகனெடை

இவை யெல்லாவற்றையும் கல்லுரலிலிட் டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, முன்கூறிய தூளுடன் சேர்த்து ஒரு துணியில் முடிந்து, ஊமத்தையிலைச் சாற்றில் ஊறவைக்கவும். பின்பு இதை யெடுத்து உலர்த்திக் கொள்ளவும். இதில் ஒரு வெருகடித் தூளெடுத்து அதனுடன், காரீயச் செந்தூரம், ஒரு பணவெடையும் கூடச் சேர்த்துத் தேனில் குழைத்துத் தினம் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். பணவிடை=3 குன்றிமணியிடை.

பத்தியம்:—வாயு பதார்த்தங்களை (வாழைக்காய், சேம்பு, முதலிய கிழங்குவகை) நீக்கவும்.

ஒரு மண்டலத்தில் நீரிழிவு தீரும்.

## 53. நீரிழிவுக்கு வேப்பம் பிசின் சூரணம்

வெய்யில் தன்னில் வெகு சருகாகிய
வேப்பம்பிசின் கொண்டு வந்துலர்த்தியே,
துய்யசாரணை யரிசி பொரித்த மாத்
தூளதாக்கி யிரண்டுஞ் சரியதாய்க்
கையில் முசித் தொன்றிடு சூரணம்
காலமே யந்தி சந்தியு முண்டிடு பார்
வெய்ய நீரிழி வென்பது தீருமே
விசையுறுஞ் சரபேந்திர னருளிதே. ௫௩

(இ-ள்)

சருகான வேப்பம் பிசினைக் கொண்டுவந்து வெயிலில் உலர்த்தி சூரணித்துக் கொள்ளவும். இதற்குச் சரியெடை சாரணையரிசியை வறுத்து இடித்த மாவு சேர்த்து, மூன்று விரல் கொள்ளுமளவு, எடுத்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். நீரிழிவு தீரும்.



## 54. நீரிழிவுக்கு வேலம்பூவாதிச் சூரணம்

வேலம்பூ வுருத்தா வாரம் பூவுடன்,
வெய்யகாலைக் குன்றிமி னறன்னிலே
சால சூரண ஞ்செய்து பேயன் பழஞ்
சர்க்கரை பசு வெண்ணெயி னுங்கூட்டிக்
காலமே யந்தியு முண்டிடு பார் மறுக்
கனத்த நீரிழிவா றுமே தஞ்சைபூ
பாலன் சரபேந்திர னுரைத்திடு
பண்பாம் வேலம்பூவாதித் தூளாகுமே. ௫௪

(இ-ள்)

வேலம்பூ ஆவாரம்பூ
காட்டுக்குன்றிமணி வகைக்கு

இவைகளை வெயிலிலுலர்த்திச் சூரணஞ்செய்து ஒரு வெருகடியளவுச் சூரணத்துடன் பேயன்பழம், சர்க்கரை, பசுவெண்ணெய் இவைகளையுங்கூட்டி, தினம் காலையிலும் மாலையிலும் உட்கொண்டால் நீரிழிவு தீரும். கைகண்டது.

## 55. நீரிழிவுக்குப் பருத்திவிதை மருந்து

பருத்தியின்விதையும் பொன்னாவிரையாம்
பண்கொழுந்து மரைத்துப்பழ மோரிற்
கரைத்துமே கொள்ளு காலமே மாலமே,
கருதியபடி யெட்டுநாளு மருந்து
கொடுக்க வழுவியாத நோய் நீரிழி
வுடனே மாறும் பருத்தி விரைமருந்
திருக்கள் கீர்த்த மிக்கஞ்சை மாநக
ரானுஞ் சரபேந்திர னருளிதே. ௫௫

(இ-ள்)

பருத்திக்கொட்டை, பொன்னாவரைக் கொழுந்து, இவ்விரண்டையும் சமவெடையாய் அரைத்துப் பழயமோரில்

குழப்பித் தினமும் காலையில் மாத்திரம், 8 தினங்களுக்குச் சாப்பிடவும். தீராத நீரிழிவு தீரும்.

## 56. நீரிழிவுக்கு ஆவரைக்கொழுந்து மருந்து

ஆவரங்கொழுந்தை யொன்றும் பேசாம
லப்பவே பறித்து வந்தெருமை மோ
ராவதை யிருநாழி விட்டேயுப் பிட்
டவிய லாவவித்தேயக்கொழுந்தையுஞ்
சாவதானமுடனே பிசைந்தம்மோர்
தனிற்கரைத்துக் குடித்திடு நீரிழி
வாவதோடும்விபுவுணர் ஆவரை
யதின் கொழுந்து மருந்திது வாகுமே. கஅ

(இ-ள்)

ஆவரங்கொழுந்தை வாய் பேசாமல் பறித்துவந்து, ஒரு வாயகன்ற சட்டியில் 2 படி எருமை மோர்விட்டு வேடு கட்டி, அதன்மேல் ஆவாரங்கொழுந்தை (2 பிடி) வைத்து சட்டிகொண்டு மூடி, அடுப்பின்மேலேற்றிப் புட்டவியலாக எரிக்கவும். பின்பு இக்கொழுந்தை யம்மிதனிலிட்டரைத்து, அம்மோருடனேயே குழப்பிக் குடிக்க நீரிழிவு தீரும்.

## 57. நீரிழிவுக்கு ஆவரை வேர் விழுது

கானகத்தி லினிலாவரை சுற்றிலும்
கையினாலோர் முழத்துக்கு வைக்கல்போட்
டனல் செடிமூடியே தீயை விட்டெரித்திடு,
செடிவெந்த பின்னவ்வேரை
யூனமில்லா வாணிவேரைத் தோண்டியே
யுடனே கண்டங்கண்டமாய் நறுக்கியே
தானரைத்தோர் கொட்டைப்பாக்கின் மாத்திரந்
தான் கொடு யெருமைத் தயிர்தன்னிலே. கக



தயிரிலே யவ்விழுதைக் குழம்பியே
கொடு அதி காலமே யாறு நாள்
பயமில்லை நீரிழிவது தீருமே
பத்தியப்படி கொண்டி டவிழ்தந்தை
யயமிகு மாவரை விழுதாமிது
நலமிகரஞ்சித குணசீலனுந்
தயவுடனுணர்ந்தா ராய்ந்ததிது நன்மை
சாப்பூபதி சொல் சித்திரமுனியே. காய

(இ-ள்)

காட்டு நில ஆவரைச்செடியைச் சுற்றிலும், ஒரு முழ உயரத்திற்கு வைக்கோல் போட்டுக் கொளுத்திவிடவும். செடி நன்றாக வெந்தபின், அதன் ஆணிவேரை, அறும லெடுத்துத் துண்டம் துண்டமாக நறுக்கிக்கொள்ளவும். வேண்டும்போது இத்துண்டுகளை, அம்மியிலிட்டுச் சிறிது எருமைத் தயிர்விட்டு, ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்து, விழுதாக்கி எருமைத் தயிரிலேயே குழப்பி அதி காலைவேளையில் சாப்பிடவும். இவ்வாறு 6 நாள் சாப்பிட நீரிழிவு தீரும்.

பத்தியமாக இருக்கவும்.

## 58. நீரிழிவுக்குச் செங்கலாதி மருந்து

பொங்கு நீரிழிவு தானதற் கொன்றுகேள்
புதுமையாஞ் செங்கலாதி மருந்திது,
செங்கலோடொரு செங்கலை வைத்துமே,
தேய்த்திட விழுமின்ற பொடியதை
அங்கையாலோர் சிரங்கைப் பொடியெடுத்
தவையுமோர் புதுச்சட்டியிற் போட்டிடு
செங்கலின் பொடியு மவையத் தண்ணீர்
திடமுடன் விட்டவிம்பினில் வைத்திடே. காயக

வைத்திடா யிராமுப்பது நாழியு
மனலைமூட்டி வெச்செனவும் நீரதை,
வைத்துமே யதி காலமே யந்நீரை
வடித்துக்கொள் கம்பளி சுட்ட சாம்பலைப்
பத்தியாயோர் வெருகடி மாத்திரம்
பண்பதாமயிர்ச் சாம்பலைப் போட்டுமே
நித்திய நித்திய மனுக்குக் குறுணி நீ,
ரிறங்கிடிற் கொடுக்கக் குணமாகுமே. ௫௰௭

ஆகுமிப்படி மூன்று நாடன்னிலே
ஆறுமே நீரிழி வானது பாதியும்
போகு மிக்குணங் கண்டபின் மூன்றுநாள்
புதுமையாக முன்சொன்னபடி யீந்திடு
வேக நீரிழிவானது மிந்த வூர்
விட்டிடும் பத்தியங்களுடன் கொளு
நாகபூஷணர் பூசித மாந்தஞ்சை
நரபதி சரபேந்திர னருளிதே. ௫௰௮

(இ-ள்)

செங்கல்லுடனே மற்றொரு செங்கல்லை உராய்ந்து அதினின்று விழும்பொடியில், ஒரு சிரங்கை யளவெடுத்து ஒரு புதுச்சட்டியில் போடவும். அது நன்றாக முழுகு மளவு சுத்த ஜலம் விடவும். அதை யடுப்பின் மேலேற்றி ஒரு இரவு முழுவதும் எரிக்கவும். மறுநாள் காலை அக் கஷாயத்தை வடிக்கட்டிக்கொண்டு, அதனுடன் கம்பளி சுட்ட சாம்பலை ஒரு வெருகடியளவெடுத்துக் கலந்து, தினம் ஒரு குறுணி நீரிறங்கும் மனிதனுக்கு 3 நாளைக்குக் கொடுத்துவரப் பாதி குணம் காணும். மறுபடியும் 3 நாளைக்குக் கொடுக்க முன்சொன்ன நீரிழிவு நிச்சயமாக நிற்கும். பத்தியமாக இருக்கவும்.



## 59. நீரிழிவுக்கு கோவையிலைச் சூரணம்

கோவையின் கொடியதன்னை யறுத்துமே,
கொண்டுவந்து கருங்குருவை நெல்லி
லாவலாக இட்டே புழுக்கு நன்
றுயர்ந்தத் தண்டை யுலர்த்தி யிடித்துமே,
மாவுபோல் தூளாக்கி நற்றேனிலே
யதைக் குழைத்தொரு பாக்களவுந் தின்னு,
நீ வருத்திய நீரிழிவானது
நிற்குங் கோவையிலைச் சூரணமாகுமே. ௫௰௯

(இ-ள்)

கோவைக்கொடியைக் கொண்டுவந்து, அதனுடன் கருங்குருவை நெல்லிட்டு, தண்ணீரிலூறவைத்துப் புழுக் கவும். பின்பு, இதன் தண்டை யெடுத்துலர்த்திச் சூரணஞ் செய்யவும். இதைத் தேனிலே குழைத்து, ஒரு பாக்களவு கொடுக்கவும். நீரிழிவு குணப்படும்.

## 60. நீரிழிவுக்கு ஆவரை விரைத்தூள்

அடவியாவரை வித்துமொருபடி
யதைப்புராதன மோரினையவைத்
திடமுடனரைத்தே யுரி மோரிற்கொள்
செப்புமெட்டு நாடன்னிலே நீரிழி
வுடனறுமந்தி சந்தியுங் கொண்டிடு
வுண்மை யாவரையின் மருந்தாகுமே,
கடமிருங்களிறு மேற்பவனி வருங்
காவலன் சரபேந்திர னருளிதே. ௬௰

(இ-ள்)

ஆவரை விரையை யொருபடி யெடுத்துப் பழய (புளித்த) மோரிலே கலந்து, ஊறியபின் அதையரைத்து ½ படி அம்மோரிலே கலந்து சாப்பிடவும். 8 நாளைக்குத்

தினம் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். நீரிழிவு குணப்படும்.

## 61. நீரிழிவுக்கு ஆவாரந்தோற்பை மருந்து

காவிலாவாரந் தோற்பை யெலுமிச்சங்
  காயளவு மரைத்தெருமை மோரி
லாவலாய்க்கொளு நீரிழிவானது
  மாற்றிடும் பத்து காலையிற்று லுமே
பூவின் மாணிடர் தங்களுக்காயிந்தப்
  புதுமையாவரந்தோற்பை மருந்ததை
வாவிசூழ் தஞ்ச மாநகரான்ஙின்ற
  மன்னர்கோன் சரபேந்திரனருளிதே. சயின

(இ-ள்)

ஆவாரையின் தோல்பையை (ஆவாரங்காயின் மேலுள்ள தோல்) எலுமிச்சங்காயள வெடுத்து அம்மியின்மீது வைத்து அரைத்து எருமை மோரில் கலக்கிக் காலையில் குடிக்கவும். 10 காலைக்குள் நீரிழிவு தீரும்.

## 62. நீரிழிவுக்கு விடத்தரை மருந்து

விடத்தரை விழுதியிலை ரெண்டையு
  மேன்மை யெள்ளின் புண்ணாக்குடனே கலந்
திடந்துடனவித்தே யந்தி சந்தியுந்
  தின்று நீரிழிவானதுமிந்தப்
படிக்குரைச்சிதப்போர்ப் பரியேறியே
  பவனி வந்திடு ககுலன் பராக்கிரம
துடிப்பெரும்புய னந்தஞ்சை மாநகர்
  அரைசிகாமணி பகருமுறையிதே. சயின

(இ-ள்.)

விடத்தரை இலை விழுதியிலை



இவ்விரண்டு இலைகளுக்குச் சமனாக எள்ளுப்புண்ணாக்கும் கூட்டி இடித்து ஒரு பாத்திரத்தில் வேடுகட்டி அதில் வைத்துப் புட்டவியலாக அவித்துத் தினமும் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு வரவும். நீரிழிவு தீரும்.

## 63. நீரிழிவுக்குப் புளியங்கொட்டைத்தோல் சூர்ணம்

புளியம்பட்டை யதினுட கொட்டைத்தோல்
  புகழுகின்ற வரகரிசியிது மூன்றும்
வளமுடன் சரியாக இடித்துமே
  வைத்துக் கொண்டந்தி சந்தி யுண்ணு பூ
வளருகின்ற வரகின் சோறு பிண்ணாக்கும்
  வழுத்துக்கான முசுட்டை யிலையாகுமே,
உள மகிழ்ந்துற வேசர் சொல் முறையதை
  யுணர்ந்த தஞ்சை விபுவுணர் பாகமே. சயின

(இ-ள்)

புளியம்பட்டை புளியங்கொட்டைத்தோல்
வரகரிசி

இம்மூன்றையுஞ் சமமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு தினமும் காலையிலும் மாலையிலுமாக வெருகடியளவு எடுத்து உண்ணவும்.

இதற்குப் பத்தியம்:—
வரகரிசிச் சோற்றுடனே பிண்ணாக்கையும் முசுட்டையிலையையும் சேர்த்துச் சாப்பிடவும்.

## 64. சுக்கிலப் பிரமேகத்துக்கு சுக்காதி மருந்து

சுக்குலப் பிரமியத்துக்கு மோர் மருந்
  தோதுவேன் சுக்கினுதி மருந்தொன்று
சுக்குமேவனஞ்சங்கம் வேர் மூன்றுமே,
  சொல்லிம்படி வெவ்வேர் பலங்கட்டி

பக்குவப்படுத்திக் கொட்டையும் ரெண்டு
படி யிடித்து வுள்ளூரு முக்கால்படி
யொக்கவும் போட்டரைத் தெருமைப்பாலு
முசிதமாகவும் நாழியதாகுமே. ௱௰௯

ஆகும்பாலது நாழியிலே கரைத்
ததிற் பனவட்டு வெல்லமு மொன்றுபோட்
டேகமழுமெள்ளெண்ணெ யுழக்குவிட்
டெல்லாமொன்ருகவே கலக்தேயதை
வரகுடன் குடிக்காலமே காலமே,
வந்த சுக்குலப்பிரமியம் வெள்ளைபோம்
காகரீகமிகு தஞ்ச மாநகர்
காபதி சரபேந்திர னருளிதே. ௱௨௰

(இ-ள்)

சுக்கு மேவனம்(?) சங்கம் வேர்

இம்மூன்றும் வகைக்கு ஒரு பலம்.

பருத்திக்கொட்டை 2 படி
உள்ளூப்புப்பொடி $\frac{3}{4}$ படி.

இவைகளை யொன்ருகலந்து இடித்து எருமைப்பால் 1 நாழியிலே குழப்பி 1 வட்டு பனைவெல்லமும் கூட்டி, நல்லெண்ணெய் ஒரு உழக்கும் கூடவிட்டு, எல்லாவற்றையும் குலுக்கித் தினமும் காலைவேளை மாத்திரம் வரகுக்கஞ்சியுடன் குடித்துவர, சுக்லப்பிரமேகம், வெள்ளை இவைகள் போம்.

குறிப்பு :—'சுக்குமேவனஞ் சங்கம்வேர்' என்ற 3 சரக்குகள் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாவது சரக்கு இன்னதென்று புலப்படவில்லை.

## 65. வெதுநாட்சென்ற சீழ்ப்பிரமியத்துக்கு வேளை மருந்து

மெத்தநாட்சென்ற சீழ்ப்பிரமியத்துக்கு
விளம்புவேன் நல்ல வேளை மருந்தொன்று



முத்துந்தேங்காயதன் பாலாயுழக்கதில்
மொழியும் வேளைவேரு முத்தலானதாய்
சத்துமே மிளகுஞ் சீரகங்கூட்டித்
தானரை யிளவெந்நீரு தன்னிலே
சுத்தமாய்ப் பகருங்கொட்டைப் பாக்கத்தனை
சொல்லுகின்ற தேங்காய்ப் பாலுண்டிடே. ௱௨௧

உண்டிடத்தியுஞ் சந்தியு ந்தானிதுக்
குரைக்கிறேன் வெந்நீருஞ் சோறும் பத்தியங்
கண்டபோர் மூன்று நாளது வானபின்
கடலினுப்பை வருத்துமே கூட்டுப்பின்,
வெண்டியாம் பசும்பால் நெய்மோர் கூட்டிக்கொள்
வெகுநாள் சீழ்ப்பிரமியமது தீருமே.
அண்டினோர் தமைக் காத்தருள் தஞ்சையி
னண்ணலாஞ் சரபேந்திர னருளிதே. ௱௨௨

(இ-ள்)

வெகுநாட்சென்ற சீழ்ப்பிரமேகந் தீர மருந்தாவது :

நன்ருக முற்றிய

தேங்காய்ப் பால் ஒரு உழக்கு
நல்ல வேளைவேர் ஒரு கொட்டைபாக்களவு
மிளகு இரண்டு (எண்ணிக்கையில்)
சீரகம் நான்கு ,,

இவைகளை இளஞ்சூடான வெந்நீர் விட்டரைத்துத், தேங்காய்ப்பாலிலே குழப்பிக் குடிக்கவும். தினம் இரு வேளை காலையிலும் மாலையிலும் சாப்பிடவும்.

பத்தியம் :—வெந்நீர் சாதம் சாப்பிடவும். மூன்று நாள் கழித்து உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்ளவும். பின்பு வேண்டுமளவு பசுவின்பால், நெய், மோர், இவை கூட்டிக்கொள்ளவும். குணமாகும், கைகண்டது.

## 66. பிரமிய முதலான ரோகத்துக்குக் காரிய செந்தூரம்

வட்டத்துத்தி மூத்தல்வேரை வெட்டியே
 வந்து துண்டு துண்டாய் நறுக்கியதைச்
சட்டமாகவுங் காயவைத்தே ரெண்டு
 சரிமரக்காலும் வைத்துக்கொண்டே புதுச்
சட்டியொன்றை யடுப்பிற் காயவைத்
 தந்த சட்டியிற் காரீயந்தானது
மட்ட மாயிரண்டு பலம் போட்டதில்
 வண்மையாயுருகு மூகத்தன்னிலே. ௩

உருகிய மூகத்தன்னிலே முன்சொல்வே
 ரோரொன்றாய் மூன்று சாமங்கொடுத்திடத்
திருகுகல் மஷமெல்லாம் பறந்துபோய்
 செப்பிய வட்டத்துத்தி யின்பூ நிற
மருமை காரீய செந்தூர மாமிதை
 அம்மியில் வைத்துரைத்துக் குடுக்கையி
லொருமையாகவே வைத்து கோயாளியி
 னுடல்வலுவதிந்தே யிடச்சொல்வனே. ௪

சொல்லு வேன்றேனிலே கால் பணவிடை
 தோத்திடிற் சரிபாதிப் பணவிடை
யல்லது மூன்று காலின் பணவிடை
 யருந்த வுங்கொடு கொன்றைப்பூ தன்னிலே,
நல்ல நத்தியுட வேர்ப்பொடியிலு
 நாடியே கொய த்திட்டிடலா மதை
வல்லத்தான பிரமியங்களுடன்
 மற்றும் நீரிழிவதும் போமுண்மையே. ௫

போளுமே நீர்ப் பிரமிய மிரத்தத்தின்,
 பிரமியஞ் சீழ்ப்பிரமிய மின்னமு

மேகமென்னும் வெப்பநோய்ப்பிணி
 விளம்பிமேம்படி வாய்வு பதார்த்தங்கள்
வாருளப்புளியும் புகையிலை
 வண்மையாச் சந்ததமு மாவிட்டுவிலக்கவே
காசினி சராபேசுதிரபூமி
 காளமேபோத முணர்ந்த முறை யிதே. ௬

(இ-ள்)

வட்டத்துத்தியின் மூத்தவேரைக் கொண்டுவந்து துண்டு துண்டாக வெட்டிக் காயப்போடவும். இம்மாதிரி 2 மரக்காலளவு இவ்வேரைச் சேகரஞ்செய்து கொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியை யடுப்பின்மேல் வைத்து, அதில் வெள்ளைக்காரீயம் 2 பலம் போட்டு உருக்கவும். அவ்வாறு உருகும்போது முன்னே சொன்ன வேர்த்துண்டுகளில் ஒவ்வொன்றாய்ப் போடவும். இவ்வாறு 3 ஜாமம் செய்யவும். காரீயத்தின் களிம்புகள் மாறி, வட்டத் துத்தியின் பூ நிறமாகப் பற்பம் கிடைக்கும். பிறகு இதையெடுத்து அம்மியில் [illegible] ஒரு குப்பியிலடைத்துப் பத்திரப்படுத்தவும்.

கோயாளியின் தேகபலத்திற்கு ¼ பணவெடைபோ, அல்லது ½ பணவெடைபோ, ¾ பணவெடையோ தேனிலே கொடுக்கவும். பணவெடை=2 குன்றிமணியெடை

கொன்றைப்பூச் சூரணம், நத்தியுடைச் சூரணம் இவற்றிலும் செந்தூரத்தைக் கொடுக்கலாம்.

நீர்ப்பிரமியம், இரத்தப்பிரமியம், மேகவியாதிகள், சீழ்ப்பிரமியம் இவைகளுக்கு மருந்து கொடுக்கத் தீரும்.

பத்தியம்:—வாயு பதார்த்தங்கள், புளிப்பு, புகையிலை நீக்கவும்.

## 67. பிரமியத்துக்கு

அம்புவியிற் பிரமிய ரோகினு
 லவதி மெத்தப்படுகின்ற வேதனை
யும்பர்கோன் சரபேந்திர பூபதி
 யுள்ளத்தி னிற்றயை யுணர்ந்து
கொம்பரக்கைத் தண்ணீர் தனிற் காய்ச்சி நீர்
 குறுகவு மிறுத்திச் சம்பாளை ரசத்
திம்பது மிருவேளையு மெட்டுநாளுடனே
 திருமி துண்மை யாங்கொண்டியே. ௪௨௭

(இ-ள்)

நீரிழிவுரோகினுல் அதிகமாக அவதியேற்பட்டால்:- கொம்பரக்கைத் தண்ணீரில் போட்டு, நன்றாகக் கொதிக்க வைத்திறுத்துக் கொண்டு, ஈச்சம் பாளையை யிடித்துப் பிழிந்த சாறும் சமம் சேர்த்துத் தினம் காலையிலும் மாலையிலுமாக 8 நாளைக்குச் சாப்பிடவும். பிரமேகம் நிச்சயமாகத் தீரும்.

## 68. பிரமியத்துக்கு நல்லெண்ணெய் மருந்து

நல்ல எண்ணெய் பலமு மொன்று
 நற்கை யான்றகரைச் சார்
சொல்லியபடி யிரண்டுஞ்
 சொருசுடன் கலக்கியே,
வல்லமையுடனே கொள்,
 மனமுவந்து மூன்று நாள்
சல்லியஞ்செய் பிரமியமுந்
 தான்று மிது வுண்மையே. ௪௨௮

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 1 பலம் |
| கையாந்தகரைச்சாறு | 1 பலம் |



இவ்விரண்டையு மொன்றுகலந்து, நன்றாகக் குலுக்கிச் சாப்பிடவும். இம்மாதிரி 3 நாளைக்குச் சாப்பிடவும். பிரமியம் தீரும்.

குறிப்பு :—94 செ. சுவடியில் இதற்கு உப்பு, புளிப்புத் தவிர்க்கவும் எனக் கண்டிருக்கிறது.

## 69. பிரமியத்துக்குக் கோழிமுட்டை மருந்து

இன்னமொன்று கோழிமுட்டை
 யினிலே மூன்று வெண்கருப்
பின்னையு நல்லெண்ணெயும்
 பிசகிடாம லோர் பலம்
வன்னெலுமி ச்சம்பழ
 மதுவு மூன்று மூவகை
தன்னையு மத்தித் துணுப்பு
 தன்னுடன் புளிப்பறே. ௪௨௯

புளிப்புடன் புகையிலையும்
 போக்கிமூன்று நாளுங்கொள்,
களித்திடும் பிரமியங்கள்,
 கண்ணினிற் காணுதரே
தளிர்த்திடாம்பல் தாமரைத்
 தடாகஞ்சூழ்ந்து தஞ்சாபுரி
வளப்பமாய்ச் செங்கோல் செலுத்து
 மன்னர் கோனருளிதே. ௪௩௰

(இ-ள்)

கோழிமுட்டை மூன்றின் வெள்ளைக்கரு
நல்லெண்ணெய் 1 பலம்
மூன்று எலுமிச்சம்பழங்களின் சாறு

இவை மூன்று வகைகளையு மொன்று சேர்த்துக் குடிக்கவும். பிரமியம் தீரும்.

பத்தியம் :—

உப்பு, புளிப்பு நீக்கவும். புகையிலையையும் தள்ளவும். இம்மருந்தை 3 நாளைக்குப் பருகவும். பிரமியமெல்லாந் தீரும். கைகண்டது.

## 70. பிரமியத்துக்குக் கொன்றை மருந்து

கனிமண்ணினாலோர் செப்பு செய்து
மதையும் காயவைத்திடே,
கொன்னையின் கொழுந்தவரைக்
கொழுந்திரண்டு மூன் செய்து
மண்ணின் செப்புக்குள்ளிதை யே
வைத்து மேலு மூடியே
வண்ணமான சேலையாலே
மண்ணின் சேலை செய்திடே. ௭௯௧

சேலைசெய் துலர்த்திக் கிருஞ்
செப்பு மேலும் வறளியைச்
சாலவே யடுக்கிச் சற்றனலை
விட்டு வெந்த பின்
செம்மா மருந்ததைத்
திருப்பியே கொடுத்தது
உல காலம் வந்த தென்று
உடறன்னெண்ணெய் கொஞ்சமே. ௭௯௨

கொஞ்ச மெண்ணெயு [illegible]
குமரைப்பல மதா
மஞ்சுபலமா ந்தேற்றான் வித்து
மத்துடன் சுக்காரயொன்று
சஞ்சலமில்லாத வெள்ளி
தன்பருப்பு மொன்று தான்
வஞ்சனையில்லா மலம்மி
வைத்தரைத் துண்ட செலே. ௭௯௩



உண்டையு ங்கழற்சிபோ
லும் பணித்தேன் றன்னிலே,
யுண்டு பாரிரண்டு வேளை
யுந்தா னெட்டு நாளுமே,
பண்டு செய்த வினையினால்
பலத்திடும் பிரமியம்
கண்டனிற் காணுமலே
கலங்கியோடு ங்காதமே. ௭௯௪

(இ-ள்)

கனிமண்ணினால் ஒரு சிறு செப்புச் செய்து காய வைத்து, அதற்குள் கொன்றைக்கொழுந்து, ஆவாரைக் கொழுந்து இவ்விரண்டையும் செப்புக் கொள்ளும்வரை திணித்து மேலே சில்லுப்போட்டு மூடிச் சீலைமண் செய்து, இதை வெயிலில் உலரவைத்தபின் இரும்பு மேலும் வறட்டியை யடுக்கிப் புடம்போட்டு, வெந்தபின்பு, புடத்தைப் பிரித்து மருந்தை எடுத்துக்கொண்டு, மிளகு ¼ பலம் போட்டு, நல்லெண்ணெய் சிறிதுவிட்டு,

| | |
|---|---|
| தேற்றான் வித்து | 5 பலம் |
| கடுக்காய் | 1 பலம் |
| வெள்ளிக்கொட்டைக்குள்ளிருக்கும் பருப்பு | 1 ,, |

இவைகளையும் அம்மியிலிட்டரைத்து, கழற்சிக்காய் அளவுருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும். இதைத் தேனில் குழைத்துத் தின மிருவேளை, 8 நாளைக்குச் சாப்பிடவும். பற்பல பிரமியமும் தீரும்.

## 71. பிரமிய முதலான மேகவியாதிக்கு சம்பிராணியெண்ணெய்

சம்பிரப்பழ த்திரேடே
சாறு சாறி யவ்விரை

யும் பாரென்னெண்ணெய் காழி
யுரிமையான சீரகம்
கொம்பு சந்தனமும் வெள்ளைக்
குங்கிலிய த்திப்பிலி
வம்பில்லா ததி மதுரம்
வாய்த்த சாத்திர வேதியே. ௩௰௫

வேதி கொல்லிமுள்ளி விரச
மிருத்திடு கற்பூரமுஞ்
சாதகச்சிலா சித்துஞ்
சார்செருஞ்சிக் காயுட
னேதமுத சர்க்கரை
யுடனே யிவ்வகையெ லாம்
நீதமாக வோர்வகைக்கு
நிறுத்திடோர் பலமதே. ௩௰௬

பலமதை வெண்காரமும்
பதினென் வகையுமிதைச்
சலமது விட்டே யரைத்து
சஞ்சல மில்லாமலே
நலமதா மென்னெண்ணெய் விட்டு
நாடியடு ப்பேற்றியே
பலமதாகவே மெழுகின்
பதமதில் வடித்திடே. ௩௰௭

வடித்திடோர் கலசமீதில்
வைத்து நோய்களுற்றவர்
கொடுத்திடோர் காண்டிதாமும்
கொண்டிடிக்கால் மண்டலந்
திடத்துடனுண்ட பேர்க்குத்
தீரும் வியாதி பிரமியக்



கடித்தெரும்பு ருக்கியுந்,
துர்மாங்கிஷமும் போகுமே. ௩௰௮

போகு மேகக்கட்டுடன்
பொல்லாத நீரின் கட்டுமே,
யேகிடும் பெரும்பாடு
மிதல்லால் வெகு நோய்களும்
வாகுள சம்பீர எண்ணெய்
மன்னர்கோன் தஞ்சாபுரி
ஏகரிக சரபபூபன்
ஈடொரு முணர்ந்ததே. ௩௰௯

(இ-ள்)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | | 1 காழி |
| எள்ளெண்ணெய் | | 1 காழி, இவற்றுடன் |
| சீரகம் | | சந்தனம் |
| வெள்ளைக் குங்கிலியம் | | திப்பிலி |
| அதிமதுரம் | | சகஸ்ரவேதி |
| கொல்லிமுள்ளி | | கற்பூரம் |
| சிலாஜது | | செருஞ்சிக்காய் |
| சீந்தில் சர்க்கரை | | எலுமிச்சம் விதை |
| இவைகள் வகைக்கு | 1 பலம் | |
| எண்ணெய் வெண்காரம் | ½ பலம் | |

இச்சரக்குகளை ஜலம் விட்டு நன்றாக அரைத்து சாறு கூட்டிய எண்ணெயுடனே குழப்பி அடுப்பின்மேலேற்றி மெழுகு பதத்தில் வடிக்கவும். இதை ஒரு பாண்டத்தி லெடுத்து தினம் ஒரு காண்டி வீதம் ¼ மண்டலத்திற்கும் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :—பிரமியம், எலும்புருக்கி, துர் மாம்லம், மேகக்கட்டுகள், நீர்க்கட்டு, பெரும்பாடு முதலிய பலவித நோய்களுந்தீரும்.

குறிப்பு :—செய்யுளில் 18 சரக்குகள் என்று காணப்படினும் 15 சரக்குகள்தான் உள்ளன. 94 செ. கவடியில் இலவங்கம் 1 பலமும் காணப்படுகிறது.

## 72. பிரமியத்துக்கு நீராதார மருந்து

சோத்தினீரு தன்னிலே
  துடியி லுப்பை யின்னிலே
வார்த்திடித் துழக்குச் சாறும்
  வன்கூரெள்ளி னெண்ணெயுஞ்
சேர்த்திதைக் கலக்கியே கொள்,
  தினமுங்கால காலமே,
ஆத்தமுடியா ப்பிரமி
  யக்கண் டீரும் பத்தியமே. ஈசுயி

பத்தியங்கள் வாய்வுள
  பதார்த்தமுப்பு த்தள்ளிடு
வொத்திடு மி லுப்பை யாதி
  யுண்மருந்தி தற்கு மே,
சித்தர் சொன்னதைத் தினந்
  தினமுணர்ந்து தஞ்சையின்
சத்திர பதியா மெங்கள்
  சரபபூப னருளிதே. ஈசுகு

பழய நீராதாரத்தில் இலுப்பையிலையை வைரவைத்து அதையிடித்துப் பிழிந்த சாறு ஒரு உழக்கு
சுத்தமான எள்ளெண்ணெய் ,,

இவ்விரண்டையும் ஒன்று கலந்து நன்றாகக் குலுக்கித் தினம் அதிகாலையில் மாத்திரமே கொடுத்துக்கொண்டு வரத் தீராத பிரமேகங்களும் தீரும்.

இதற்குப் பத்தியம் :— வாயு பதார்த்தங்களைத் தள்ளவும். உப்பை நீக்கிவிடவும்.



## 73. பிரமியத்துக்குக் கரிசாலங்கண்ணி மருந்து

தன்னிகரிலாத கரிசாலங் கண்ணி தன்னையே
  உன்னித முடனரைத்துடன்கருஞ்சீரகமும்
கன்னயப்பொடி யுஞ்சர்க்கரை யதிற் கலந்துமே,
  இன்ன கரிசாலங் கண்ணியின் மருந்திதாகுமே ஈசுூ
இம்மருந்ததை மூன்றுநாளுமே யுண்ணுப்பிரமியந்
  தம்மிலேகுமே புளிப்புத்தள்ளு நெய்யுஞ் சோறுண்ணுக்
கம்மையும் பழித்த செங்கான சரபபூபனுஞ்
  செம்மையா யுரைத்திடு ஞ்செயலறிந்து பாருமே.

(இ-ள்)

கரிசாலாங்கண்ணி கருஞ்சீரகம்

இவ்விரண்டையும் சம எடை எடுத்து நன்றாக கிழவி லுர்த்தி அதற்குச் சரியெடை சர்க்கரை கூட்டி, நன்றாகக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு வெருகடியளவெடுத்துத் தினமும் சாப்பிட்டு வரவும். இவ்வாறு 3 நாளைக்குச் சாப்பிட்டால் சகலவித பிரமியங்களுந் தீரும்.

பத்தியம் :—புளியை நீக்கி, நெய் வார்த்துச் சாதம் சாப்பிடவும்.

## 74. பிரமியத்துக்குப் பொடுதலை மருந்து

எருமை மோருதன்னிலே யியம்பிடும் பொடுதலை
  அருமையாகவே யிடித்ததனில் சாறு காற்படி
யொருமையாக மூன்றுநாளு முண்ணிரண்டு நேரமும்
  பருகுமுப்புடன் புளிப்பும் பாரிதைத் தள்ளிவிடே.
விட்டெருமை யின்றயிர்மோர் விட்டு சோறுமுண்டிடு
  மட்டிலாம் பிரமிய மறும் பொடுதலை மருந்
தஷ்டதிக்குடனே ஐம்பத்தாறு தேசமும் புகழ்
  சட்டமான தஞ்சையாளுஞ்சரபபூ பனருளிதே ஈசுடு

(இ-ள்)

பொடுதலையைக் கொண்டுவந்து எருமை மோரின் வறவைத்து இடித்துப் பிழிந்த சாறு—$\frac{1}{4}$ படி. இதைத் தினம் காலையிலும் மாலையிலுமாக, மூன்று நாளைக்குக் குடிக்கவும்.

பத்தியம்:—உப்பு, புளிப்பு இவ்விரண்டையும் நீக்கி, எருமைத்தயிர், மோர் இவைகளைக் கூட்டவும்.

## 75. பிரமிய முதலான சகல ரோகத்துக்கும் தாளிச பத்திரி வடகம்

பத்தியாகத் தாளிசத்தின் பத்திரி வடகமொன்
றுத்திடும் பிரமேகத்துக் கோதுவேனுசிதமாய்
சத்துவமுள்ள னத்தின் சீந்திச்சர்க்கரை ரெண்டுபல
மொத்தசீனிச் சர்க்கரையு மூன்றுபலமாகுமே. ஈசு

ஆகும் செல்லிமுள்ளி தான்றி யக்கடுக்காய் மூன்றுமே,
பாகமாகவுமரை ப்பலந்தாளிச பத்திரி
வேகமாக வோர் பலஞ்செவ்வியமும் வால்மிளகுடன்
தாகத்திர க்ராம்புடன் சன்னல வங்கக்கூட்டியே.

கூட்டிடு நிகைத்து மிள குமதிமதுரமும்
கோட்டமுந் திப்பிலி மூலங் குணமதேலத்திப்பிலி
வாட்டமிலா மிந்த - வகைக்குக் காற்பலமதாக்
தாட்டிக மிகுந்த நல்ல சாதிக்கா யோர்பலமதே. ஈசு அ

பலமிகுந்த வகைகளான பதினாறு வகைகளும்,
லமிகுந்த வம்மியிலரைத்துச் சூர்ணஞ் செய்தே
பலமிகுந்த நற்பசுவின் பால்குறுணி விட்டுமே
கலந்த நெய்பிலேத்தியே கனலைவிட்டெரித்திடே. ஈசு௯

எரிகுழம்பானவாறு மேற்றசர்க்கரையதை
பரிவுடனிலிடும்பின் பகரு சூரணத்தையும்



வரிசையாக யிட்டிரும்புவன் கரண்டி தன்னிலுல்
துரிதமாகவுமதை துளாவிக்கொண்டிருந்திடே. ரு௰

இருந்துபத மறிந்திறக்கி யாறவைத்துமே,
வருத்துமோர் நெல்லிக்காயளவான வுண்டையன்னி
அருந்திடோருண்டை தாலுமந்தி சந்திதானுமே, [யே,
திருந்து மிச்சா பத்தியந்தீரும் வியாதி கேளுமே.

நீருங்கல்லடைப்புடன் சீவிழுந்தூர் மாங்கிஷ
மாகு ராபிமின் புண்ணீரடைப்புடன் பிரமேகமுஞ்
சேர்சலக் கழிச்சலுஞ்சி லந்து நீரிறங்குதல்
பாரு செங்கதிர் முன்னே பனியெனப் பறக்குமே.

பனியெனப் பறக்கு மிருபத்தொரு மேகங்களும்
முனிவர்களுரைத்த இந்த முறையதைத் தயையுள,
மனமுவந்தஞ்சாபுரி மன்னர் சரபேந்திரன்
றினமுணர்ந்த இம்முறையுஞ் செய்துபார் தெரியுமே.

(இ-ள்)

| | |
|---|---|
| சீந்தில் சர்க்கரை | 2 பலம் |
| சீனி | 3 ,, |
| செல்லிமுள்ளி | 1/4 ,, |
| தான்றிக்காய்த் தோல் | 1/4 ,, |
| கடுக்காய்த்தோல் | 1/4 ,, |
| தாளிசபத்திரி | 1 ,, |
| சவ்வியம் | 1/4 ,, |
| வால்மிளகு | 1/4 பலம் |
| கிராம்பு | ,, |
| சன்ன லவங்கப்பட்டை | ,, |
| மிளகு | ,, |
| அதிமதுரம் | ,, |
| கோஷ்டம் | ,, |
| திப்பிலி மூலம் | ,, |

| | |
|---|---|
| ஜாதிக்காய் | 1 பலம் |
| ஏலக்காய் | ¼ பலம் |
| திப்பிலி | ,, |

இச்சரக்குகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணம் செய்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

பசுவின்பால் ஒரு மரக்காலை அடுப்பின்மேலேற்றி கீர் சுண்டியபின் மேலேசொன்ன 3 பலம் சர்க்கரையை யதிலிட்டு, பிறகு சூரணத்தையும் போட்டு, ஓயாமல் ஒரு இருப்புக் கரண்டியினால் துழாவிக்கொண்டு வரவும். பின்பு, தக்க பதங்கண்டு அடுப்பின்மேலிருந்திறக்கி ஆற வைக்கவும். இதில் நெல்லிக்காயளவெடுத்துத் தினம் இரு வேளை காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு வரவும்.

தீரும் வியாதிகள் :—

கல்லடைப்பு, சீழ்விழுதல், துர்மாமிசம், வயிற்றுப் புண்கள், நீரடைப்பு, பிரமேகம், சலக்கழிச்சல், சிவந்த நீர் இறங்குதல் போன்ற பல வியாதிகள் தீரும்.

## 76. சீழ்ப்பிரமேகத்துக்கு எண்ணெய்

அவனிவாழ் விளக்கெண்ணெய் படியொன்று
 மருமை வெங்காயச்சாறு படியொன்றுங்
குவளம் பட்டையின் சாறுபடி யொன்றுங்
 கூட்டி மூன்றுங் கலந்தே யெரியிட்டுமே,
கவனமுற்று மெழுகு பதத்தினிற்
 கண்டிறக்கி யிறுத்து வைத்துக்கொண்டு
செவையுடன் சாதிக்காயும ரைப்பலஞ்
 சீக்கிரம் பொடி செய்ததிற் போட்டிடே ௨௫௪

போட்டுமே வேடுகட்டி வைத்துக்கொண்டு
 புகலுகின்ற வியாதி மனிதன்சொற்



கேட்டுக்கொண்டு முதலுளெண்ணெய் முழு
 தென்று சொல்லி மறுகாலுதயத்திற்
கூட்டுசற்றே வெதுப்பிக் கொண்டெண்ணெ
 யைக்கொடு வீசம்படி மூன்றுநாட் காலமே.
காட்டுபத்திய மூன்று நாளெண்ணெயுண்
 ணுமலே பத்திய மூன்று நாளாறுமே. ௨௫௫

ஆறுநாளைக்குக் கைப்புப் புளிப்பைவிட்
 டடுத்திடுமேழா நாளிலே குண
வாறுகண்டெண்ணெய் தேய்த்து மூழ்கியே
 மறுபுளி கூட்டிப் பத்தியஞ் செய்வதில்
வீறு காங்கை யதிகமானாற் பசு
 வின்நெய் பால்மோர் மிகக்கொண்டு கூட்டிடு
தேறுகின்ற மனிதர்களுக்குத் தான்
 தீருகின்ற வியாதியைச் செப்பிடே. ௨௫௬

செப்புவாய் கொடுமை மேகவாயவுஞ்
 சிந்தை நொந்திடு மேகப்பிடிப்புடன்
வெப்பு உட்டின வாய்வுஞ் சீழ்ப்பிரமேக
 மென்றிதெல்லா மகுணமே தருந்
தப்பிதங்களிலை யிது வுண்மையே,
 சரசசற்குண விற்பனருழி சூழ்
வைப்பின் முத்தமிழ் சித்தம் வளர்த்திடு
 மன்னவன் சரபேந்திரன் முறையிதே. ௨௫௭

(இ-ள்)

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | 1 படி |
| வெங்காயச்சாறு | 1 படி |
| குவளம்பட்டைச்சாறு (வில்வப்பட்டை) | 1 படி |

இம்மூன்றையு மொன்றுகலந்து, அடுப்பின்மேல் வைத்து மெழுகுபதமாக வடித்து:இறக்கவும். பின்பு,

| | |
|---|---|
| சாதிக்காய் | ½ பலம் |

பொடி செய்து எண்ணெயுடன் குழப்பி வேடுகட்டிக் கொள்ளவும். ரோகியை முதல்நாள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யச்சொல்லி மறுநாள் காலையில் வீசம்படி எண்ணெயெடுத்து, அனலில் வெதுப்பி 3 நாளைக்குக் கொடுக்கவும்.

பத்தியம் : --

6 நாளைக்குப் புளிப்பு, கைப்பு நீக்கவும், 7-வது நாள ன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும். மறுநாள் புளி சேர்க்கவும்.

கால்கை யதிகமானால் பசுவின் நெய், பால், மோர் இவைகளைக் கூட்டவும்.

தீரும் நோய்கள் :

மேகவாயு, மேகப்பிடிப்பு, உஷ்ணவாயு, சீழ்ப்பிரமேகம்.

## 77. இரத்தப்பிரமியத்துக்குஞ் சீழ்ப்பிரமியத்துக்கும்

மூடக்கொத்தானு முருங்கை விரையையு
மொக்கத்தேனி லரைத்து விழுங்கிடத்
தொடக்கை கூசிய சீயின் பிறமியத்
துடனிரத்தப் பிரமியந்திருந்
தடக்குவலயத்திற் சொல்லு கைகண்ட
தாக விங்கிதக்காந்தி மணி மூத்து
வடக்கு வலயத்திருமாது வளர்த்திடு
மன்னவன் சரபேந்திரன் முறையிதே. ச௫அ

(இ-ள்)

மூடக்கொத்தான், முருங்கைவிரை இவ்விரண்டை யும் சமனெடுத்துத் தூள்செய்து தேன்கூட்டி யரைத்து விழுங்கவும்.

சீழ்ப்பிரமேகமும், இரத்தப்பிரமேகமுந் தீரும்.



மூலச்சுவடியில் அடுத்த ஒலை காணப்படவில்லை. அதில் கண்ட முறை (உரை நடைச்சுவடியிலுள்ளபடி) பின்வருமாறு:—

## 78. எட்டுவகை பிரமியத்துக்கு மருந்து

கோவையிலை அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு
ஓமம் அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு
புளியிலைச் சாறு ½ படி
இவைகளைக் கலக்கிக் குடிக்கவும்.

## 79. பிரமியத்துக்கு

உகா வேர்ப்பட்டை வராகனிடை யொன்று
மொண்கிரு வராகனிடையொன்றும்
அனாதகாரக்கொடிவேலிவேர்ப் பட்
டையது வராகனிடை யொன்றுங் கூட்டியே
முகாரவிந்த விழியாலறிந்திந்த
முச்சர்க்கரை யரைத்தெடுத்துக் கொண்டு
சகாயஞ்செய் கருப்புட்டியைமுன் கொடு
சாப்பிட்டவுடனிம் மருந்தைக்கொடே. சருக

கொடுத்துத் தின்னவு மிப்படி மூன்றுநாள்
குணமிருக்கிடும் பத்தியமோ விலை,
விடுத்து மெத்தப் பிரமியந்திரு
மேதினிக்கிது கைகண்டதன்மையே
அடுக்கு மென்பதடுக்காதுணர்ந்து நல்
லறி விருலே யறிந்த ன்னவந்திரன்
கொடுக்கு மிங்கித சங்கித சாமித்திய
குணம் வளர் சரபேந்திரன் முறையிதே. சசு

(இ-ள்)

| | |
|---|---|
| உகாவேர்ப்பட்டை | வராகனெடை |
| கிரு | ,, |
| கொடிவேலி வேர்ப்பட்டை | ,, |

இம்மூன்றையும் ஒன்று சேர்த்து நன்றாக அரைத்துக்கொண்டு கருப்புட்டியை (பனைவெல்லம்) முதலில் கொடுத்து விழுங்கச் செய்து பின்பு, இம்மருந்தைச் சாப்பிடக் கொடுக்கவும் (விழுங்கவும்). இப்படி 3 வேளைக்குக் கொடுக்கவும். இம்மருந்திற்குப் பத்தியம் கிடையாது.

## 80. பிரமியத்துக்கு மருந்து

வெள்ளைக்குன்றிமணிவேரவரைவேர்
மேன்மை சேர்ந்து வளர் தேத்தான்கொட்டையும்
கள்ளமில்லாதவப்பிரகமும் நல்ல
காந்தம் ஈயமுந்துத்த மெருவு முடன்
கொள்ளும் நெல்லி முள்ளி வளரும் புளிக்
கொட்டைத்தோலும் கடுக்காயுந்தானிக்காயும்
விள்ளுகின்ற இரும்பு புருப்பிச்சு
விளாம்பிசினு மிலவம்பிசினுமே ௱௬௧

பிசினோடெல்லாம் வகை சமன் சேர்த்துமே
பெருகுங்காடிவிட்டே யரைத்துக்கொண்டு
உசிதமான மிளகுகள் போலவே
உண்டை பண்ணியே மோரில் கொடுக்கவும்
பிசிபோலெந்தப் பிரமியந் தீரும்
பேசு கைப்புப் புளிப்பை விடவுமால்
சசியையுஞ்சடைமீதிலணி சிவன்
தாடொழுஞ் சரபேந்திரன் முறையிதே. ௱௬௨.

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைக்குன்றிமணி வேர் | புளியங்கொட்டைத்தோல் |
| அவரைவேர் | கடுக்காய்த்தோல் |
| தேத்தான்கொட்டை | தான்றிக்காய்த்தோல் |
| அப்பிரகம் (சுத்தியானது) | இரும்பு (சுத்திசெய்தது) |
| | புருவின் பித்தம்(?) |
| சுத்திசெய்த காந்தம் | நெல்லிமுள்ளி |
| ,, வெள்ளீயம் | விளாம்பிசின் |
| ,, துத்தம் | இலவம் பிசின் |
| ,, ஏஃகு | |



இச்சரக்குகளனைத்தையும் சரியெடை யெடுத்து, காடிவிட்டு நன்றாக வரைத்து, மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்துகொண்டு நிழலிலுலர்த்தி, பசுவின்மோரில் கொடுக்கவும். பிரமியந் தீரும்.

இதற்குப் பத்தியம் :—

கைப்பு, புளிப்பை நீக்கவும்.

குறிப்பு :—'இரும்பு புருப்பிச்சு' என்று மூலச்சுவடியில் இருந்தபோதிலும், உரை நடைச்சுவடியில், 'இருப்பிரும்புச்சி' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச் சரக்கு இன்னதென்று நிச்சயமாகச் சொல்ல இயலவில்லை. மூலச்சுவடியைப் பின்பற்றிப் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 81. பிரமியத்துக்குச் சூரசம்

ஏலமுமாவிரை சீரகங் கிராம்புமிது
நான்கும் வகைக்கு வராகனிடை ஐந்தும்,
ஆலம்விழுதொரு வராகனிடை கூட்டி
ஐந்துவகையதைத் தயிர் விட்டரைத்தெடுத்து
சாலவிரண்டிருகை யுள்ளங்கைப் பிரமாணந்
தயிரிலிந்த மருந்தை வைத்துக் கலந்துமே தான்
சீலமுடனருந்தவுமே பிரமேகங்கள்
தீரு நிசம் பத்தியந்தானதற்குக் கூறே. ௱௬௩

கூறவரைப்பிஞ்சு முளைக்கீரை த்தண்டு
குளுமை பச்சைப்பயறு பயறிரசமிந்த
வாறுடனே பத்தியமுஞ் சுரசமுண்ண
வழுத்து வாயிது முறைநகைகண்ட துன்மை.

வீறுமறுவர் களுனெதிர்த்து நின்று
வெற்றிபெற்று மட்டதிசை மேதினிக்குள்
ஆறுமெதிரில்லாச் சூராதி சூர
ளுன சரபேந்திரன் சொல் முறையிதாமே. ஈகூச

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | ஆவாரை விரை |
| சீரகம் | கிராம்பு |
| இச்சரக்குகள் வகைக்கு | 5 விராகனெடை |
| ஆலம் விழுது | 1 ,, |

இவைகளை யொன்றுகூட்டி அம்மியில் வைத்துத் தயிர் விட்டரைத்துப் பின்பு 2 உள்ளங்கைகள் கொள்ளு மளவு தயிரில் இம்மருந்துகளைக் கலந்துவைத்துக்கொண்டு சாப்பிடப் பிரமேகங்கள் பலவுந் தீரும்.

பத்தியம்:—

அவரைப்பிஞ்சு, முளைக்கீரைத்தண்டு, பச்சைப்பயறு, பாசிப்பயறு, இரசம் இவைகளைக் கூட்டவும்.

## 82. பிரமியத்துக்கு

சந்தமிகு நல்லெண்ணெய் சிரங்கை கையாந்தரைச்
சாறுஞ்சிரங்கை யிரண்டுஞ் சேர்த்து
விந்தையுள்ள சர்க்கரையைக் கலந்தருந்த
மேகமதிற் பிரமேகம் நிச்சயமாய்த் தீருந்
தொந்த மருவலரை முன்னெதிர்த்து நின்று
துரத்தி வெட்டி செயித்து வெற்றித்
துதியேகொண்டு
வந்த துளசேந்திரன் செய்தவத் துதித்த
மன்மத வேள் சரபேந்திரன்முறையிதாமே. ஈகூரு

(இ-ள்)

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | ஒரு சிரங்கை |
| கையாந்தகரைச்சாறு | ஒரு சிரங்கை |



இவ்விரண்டையு மொன்று சேர்த்துச் சர்க்கரை கலந்து சாப்பிடவும். பிரமேகந் தீரும்.

## 83. பிரமேகத்துக்கு

எழில் முடக்கொத்தான் சாறு சேரதைக்கா
லெண்ணெய் சேரரைக்கால் சேர்த்தினிய வாழைப்
பழமதிற் போட்டேல ஞ்சீரகமோவ்வொன்று
பலம் வறுத்துப்பொடி பண்ணிக்கொண்டதோடே
அழகுடன் சர்க்கரையு மொருபலங் கலந்து
மதை மூன்று பங்கு வீதங்கள் செய்து
செழிக்கு மெண்ணெயுடன் வாழைப்பழமுஞ் சாறுஞ்
சேர்த்ததிப்பி லிப்பொடியை ஒருபங்கு போடே.

போட்டிடுவாயெண்ணெய் பழச்சாறு மீதிற்
புகல் கோழிமுட்டை வெள்ளைக்கருவை விட்டுக்
கூட்டி யெண்ணெய் குடித்துப் பழமொன்று தின்று
கொண்டிக்தப்படி மூன்று நாளருந்த
வாட்டுகின்ற பிரமேகமெல்லாந் தீரு
மகிழ்ந்துகண்டதிது புகழே வளருந் தஞ்சை
நாட்டுக் கென்னுரு மதிபதி யுல்லாச
நாகரிகன் சரபேந்திரன் முறையிதாமே. ஈகூஎ

(இ-ள்)

| | |
|---|---|
| முடக்கத்தான் சாறு | $\frac{1}{8}$ சேர் |
| நல்லெண்ணெய் | $\frac{1}{8}$ சேர் |

இவ்விரண்டையு மொன்று கலந்து, ஒரு வாழைப் பழத்தையும் நறுக்கிப்போட்டு,

| | |
|---|---|
| ஏலக்காய் | சீரகம் |

இவ்விரண்டையும் வகைக்கு ஒருபலம் வீதம் வறுத் தச் சூரணித்துப்போட்டு, சர்க்கரை 1 பலமும் போடவும்.

இதை மூன்று பங்குகளாக்கி, ஒருபாகம் சாறுகலந்த எண்ணெயுடனே திப்பிலிச்சூரணம், கோழிமுட்டையின் வெள்ளைக்கரு, இவற்றைச் சேர்த்துப் பருகவும். பின்பு வாழைப் பழம் ஒன்று சாப்பிடவும். இப்படி 3 நாட்கள் சாப்பிடவும் பிரமேகங்கள் தீரும்.

## 84. பிரமேகத்துக்கு

நல்லெண்ணெ யொருபடி நெல்லிக்காய்ச்சாறு
நான்குபடி பசுவின்பால் படிதானென்றும்,
பல்லவஞ்சேர் பிரமியிலைச்சாறு நான்கு
படியுடனே பசுவின் நெய்படி தானென்றும்
செல்ல இவை சேர்த்துமே பக்குவமாய்க் காய்ச்சிச்
சீனியது இரண்டு பங்குஞ் சீந்திச்சீனி
சொல்லவொரு பங்குமதில் போட்டருந்தச்
சுருக்கிலே பிரமேக மோடிப்போமே. ௩௬௮

(இ-ள்)

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 4 படி |
| பசுவின்பால் | 1 படி |
| பிரமியிலைச்சாறு | 4 படி |
| பசுவின் நெய் | 1 படி |

இவைகளை யொன்றுகலந்து அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும். பின்பு, சர்க்கரை 2 பங்கும் சீந்தில் சர்க்கரை ஒரு பங்கும் அதில் போட்டுக் குழப்பிக்கொள்ளவும். இதைத் தினமும் ½ தோலா வீதம் சாப்பிட்டுவர நீர்ழிவு தீரும்.

## 85. பிரமேகத்துக்கு

பருத்த நெல்லிக்காய்ச் சாறு படியிரண்டும்
பண்பான நல்லெண்ணெய் படிதானென்றும்



விரும்பு கரும்பஞ்சாறும் படிதானென்றும்
வெள்ளாட்டுப்பாலுமே படிதானென்றும்,
நெருஞ்சிவேர்ச்சாறு படியொன்றுமாவின்
நெய் படிதானென்றும் கிலக்குமிழஞ்சாறும்
ஒருபடி சதாவேரிக்கிழங்குச் சாறு
ஒருபடி யிலுப்பைப்பூப் பலமுமெட்டே. ௩௬௯

எட்டுடனே அதிமதுரம் பலமிரண்டு
மிவைகளெல்லாம் பக்குவமாய்ச் சேர்த்துக்காய்ச்சித்
தொட்டிறக்கி வடிகட்டிச் சூடுமாறித்
துலங்குமெண்ணெய் தனிலொருபடி தேன்விட்டுக்
கொட்டு நல்ல சர்க்கரையும் பலமிரண்டு
கொடிமுந்திரிகைப்பழமும் பலந்தானெட்டு
வெட்டுசுக்குப் பலமொன்று மிளகு பலமொன்று
விளங்கு திப்பிலி பலந்தானென்று சேரே ௩௭௦

சேர்த்திவையெல்லாம் பொடியே பண்ணிப்போட்டுத்
திவ்வியமா யெண்ணெயிலே கலக்கிக்கொண்டு
வார்த்திரு வராகனிடை யருந்தச்சொல்லு
மார்புவலி பிரமேகம் நீங்கி யோடும்
ஏர்த்துமே விரணத்தா லுடம்பிளைத்த
விருமல் சயந்தரு மிளைப்பும் வலிப்புன்மாதம்
பார்த்து வயோபலமுங் காலபலமுங் கண்டு
பாண்டு காமாலை திமிர் வாதந்தானே. ௩௭௧

திமிர்வாதமோடு தாதுவிருத்தி யில்லா
இளைப்புமதிசாரமொடு வாந்தி தீரும்
உமிழ்சாடராக்கினிம ர பலமறிந்து
உற்று கிதானித்துமெண்ணெய் கொடு சந்தானம்
அமிர்தமின்றுட்குண்டாகுஞ்சரீரந்தங்க
மாகுந் தீர்க்காயுளது வுண்டாங் கூறு

தமிழருமை யறிந்த விந்தைமிகுந்த சோழன்
றனக்கு நிகர் சரபேந்திரன் முறைமிதாமே ௭௨.

(இ-ள்)

| | |
|---|---|
| முற்றிய நெல்லிக்காய்ச்சாறு | 2 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |
| கரும்பஞ்சாறு | 1 படி |
| வெள்ளாட்டுப்பால் | 1 படி |
| நெருஞ்சிவேர்ச்சாறு | 1 படி |
| பசுவின் நெய் | 1 படி |
| நிலக்குமிழ்ச்சாறு | 1 படி |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |

இவற்றை யொன்று கலந்து,

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | 8 பலம் |
| அதிமதுரம் | 2 பலம் |

இவ்விரண்டு சரக்குகளையுமிடித்துப்போட்டு, அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாகக் காய்ச்சியிறக்கவும். பின்பு இதை வடிகட்டிக்கொண்டு, சூடு தணிந்தபின் தேன் 1 படியும் நல்ல சர்க்கரை 2 பலமும் போட்டு,

| | |
|---|---|
| கொடிமுந்திரிப்பழம் (திராக்ஷை) | 8 பலம் |
| சுக்கு | 1 பலம் |
| மிளகு | 1 பலம் |
| திப்பிலி | 1 பலம் |

இவைகளைப் பொடிசெய்து வஸ்திரகாயஞ் செய்து அதனுடன் குழப்பிக்கொள்ளவும். இதைத்தினம் 2 வராகனெடை வீதம் சாப்பிட்டுவர,

| | |
|---|---|
| மார்புவலி | பிரமேகம் |
| விரணத்தினாலேற்பட்ட உடம்பு இளைத்தல் | இருமல் |
| ஈளை | வலிப்பு |
| உன்மாதம் (பைத்தியம்) | |



முதலியவை தீரும். வயோபலமும் (வயது) காலபலமும் (சீத, உஷ்ணம்) அறிந்து சாப்பிடவும்.

| | |
|---|---|
| பாண்டு | காமாலை |
| திமிர்வாதம் | தாதுவிருத்தியின்மை |
| அதிசாரம் | வாந்தி |

முதலிய பற்பல ரோகங்களும் தீரும்.

சாடராக்னியின் பலமறிந்து கொடுக்க ஸ்திரீகளுக்கு சந்தானமுண்டாகும். அவர் சரீரமுந் தங்க நிறமாகும். தீர்க்காயுளுமுண்டாகும்.

## 86. பிரமேகத்துக்குச் சந்தனாதிச் சூரணம்

அதிமதுரஞ்சந்தன மிலாமிச்சம் வே
ரான நெல்லி முள்ளியுடன் சிறுநாகப்பூ
ஆதி கோரைக்கிழங்குடன் பேரீச்சங்காயுந்
துலங்குகொடி முந்திரிகைப்பழமுங்கோட்டம்
புதிய விலுப்பைப்பூ திப்பிலியுங் கூட்டிப்
போட்டிவைகள் சமமது சேர்த்திடித்தெடுத்து
மதித்திடு சூரணமும் நின்ற நிறைக்கொப்பாக,
மதுரமுள்ள சீனியுஞ் சேர்த்தாவினெய்யே. ௭௩

ஆவினெய்யுடன் கலந்து அந்தியுண்க
அருணோதயந்தனிற் குளிர்ந்த சலத்திலுண்க,
மேவியங்கதாகமுடனீர்த்துவார
மெரிவுபிரமேகமுடன் றலை மயக்கந்
தாவிய காமாலை பித்தசுரமுந் தீருந்
தாரணியிற் கைகண்டதிது சொன்னச்சாயல்
தாவியன்ன நடைமயில் மின்னார்களாசைத்
துலாமதவேள் சரபேந்திரன் முறைமிதாமே.

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | சந்தனம் |
| இலாமிச்சம் வேர் | நெல்லிமுள்ளி |

| | |
|---|---|
| சிறுநாகப்பூ | கோரைக்கிழங்கு |
| பேரீச்சங்காய் | கொடிமுந்திரிப்பழம் (திராக்ஷை) |
| கோஷ்டம் | இலுப்பைப்பூ |
| திப்பிலி | |

இச்சரக்குகளைச் சமமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து, இதற்குச் சரியெடை சீனி சேர்த்துக்கொள்ளவும். தினம் இச்சூரணத்தில் ஒருவெருகடியளவு (மூவிரல் கொண்ட அளவு) எடுத்துக் காலையில் குளிர்ந்த ஜலத்திலும் சாயங்காலத்தில் நெய்யுடனும் சாப்பிடவும்.

தாகம், நீர்த்துவார எரிச்சல், பிரமேகம், தலைமயக்கம் காமாலை, பித்தசுரம், முதலியவை தீரும். கைகண்டது.

## 87. பிரமேகத்துக்கு மேகவெட்டைக்கு

திடமிகுந்த பசுவினெய்யின் படிதானொன்றில்
 செறுப்பூளை வேர் கீழாநெல்லிவேரும்
கடலிமுஞ்சி மிளகரணை முசுமுசுக்கை
 காட்டினு விரை வேரும் பலமொவ் வொன்றும்
அடவுடன் சேர்த்திவை யிடித்துப் போட்டு கத்தி
 யா வட்டைசாறு காற்படியும் விட்டு
படருமதிமதுரஞ் சாதிக்காய் சாதி
 பத்திரி சீரகங் கிராம்பு கோட்டமாமே. ௭௭௫
கோட்டமுடன் வகையரனெவ் வொன்றுக்கொன்று
 கூறுவராகனிடையது ஆறுக்கொண்டு
மாட்ட வெள்ளைக் குங்கிலிய மரைப்பலஞ்சேர்,
 வாருடன் விளாம்பிசினு மரைப்பலஞ் சேர்
காட்டமுடனிச் சரக்கையிடித்து முன்சொன்
 னற்பசுவின் னெய்யிற் போட்டுவைத்துக்கொண்டு
வாட்டமுள்ள கோயின்றரு அக்கிசந்தி
 வளரு நெய்யுங் கடுகுமாவருந்தச் சொல்லே. ௭௭௬



அருந்தவே சகல பிரமியந்தீரும்
 அணுகாது மேகவெட்டை மேகவாயு
வருந்தவே பத்தியந் தானிதற்கில்லை பார்
 வையகத்தி லிம்முறை கைகண்டதாகும்
திருந்தவே கமலமீதுறைந்த விந்தைச்
 சீரான அட்டமிலக்குமி யுங்கூடிப்
பொருந்து சரஸ்வதி மனோரஞ்சனி கீர்த்தி
 புண்ணிய வாணிமுறையைப் புகன்றாளே.

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்தமான பசுவின் நெய் | 1 படியில் |
| சிறுபூளைவேர் | கீழாநெல்லிவேர் |
| கடலழிஞ்சில் | மிளகரணை |
| முசுமுசுக்கை | ஆவாரைவேர் |

இவைகளை வகைக்கு 1 பலமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும்.

| | |
|---|---|
| அதிமதுரம் | சாதிக்காய் |
| சாதிபத்திரி | சீரகம் |
| கிராம்பு | கோஷ்டம். |

இவ்வகைகளை வகைக்கு ⅙ வராகனெடை யெடுத்து (94-வது செய்யுளில் 1 வராகனெடை என்று காணப் படுகிறது)

கத்திரவட்டைச்சாறு ¼ படி விட்டரைத்து நெய்யுடன் கலந்து அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும்.

| | | |
|---|---|---|
| பின்பு, | வெள்ளைக்குங்கிலியம் | ½ பலம் |
| | விளாம்பிசின் | ½ பலம் |

இவ்விரண்டையும் தூள் செய்து வடித்த நெய்யுடனே (சூடாக இருக்கும்போது) சேர்த்துக் குழப்பி வைத்துக்

கொள்ளவும். தினமும் 2 வேளை காலையிலும் மாலையிலும் இச்செய்யைக் கடுகுடனே ½ ஸ்பூன் விதம் (பாலில்) கொள்ளவும்.

சகல பிரமேகமுந் தீரும். மேகவெட்டை, மேகவாயு முதலியவை தீரும். பத்தியமில்லை. கைகண்டது.

## 88. பிரமியத்துக்கு

கூறுவாய் சீந்திற் சர்க்கரை யுந்தேத்தாங்
கொட்டையிதனை யரைத்துத் தயிரிற் கலந்து
வீறுதிகழ் வெல்லமது போட்டருந்த
மேவு வெள்ளைப் பிரமியங்களெல்லாந் தீரும்
ஊறுமு வாழைக்கிழங்கு தண்ணீரிற் பின்
னற்தேத்தாங் கொட்டைதனை யரைத்துப்போட்டு
மாறுதவிழ் வெல்லமது கலந்துகொள்ள
வாடிவெள்ளைப் பிரமியங்களோடிப் போமே.௯௭அ

(இ-ள்)

1. சீந்தில் சர்க்கரை சீவிய தேத்தான்கொட்டை இவ்விரண்டையும் சமனெடையெடுத்துத் தயிருடன் கலந்தரைத்து, வெல்லம் ஒரு கட்டியும் போட்டுச் சாப்பிட, வெள்ளைப்பிரமியங்கள் அனைத்தும் தீரும்.

2. வாழைக்கிழங்கைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டிடித்துச் சாறுபிழிந்து, அதில் சீவிய தேத்தாங்கொட்டையை யரைத்து வெல்லக்கட்டியும் ஒன்றுபோட்டுச் சாப்பிடவும். வெள்ளைப் பிரமியங்கள் தீரும்.

## 89. வெள்ளைப் பிரமியத்துக்கு

வென்னலமே மிகுந்த விந்தைத் தேத்தாங்கொட்டை
வேருதனை மோருவிட்டரைத் தருந்த
முன்னம் வெள்ளைப்பிரமியங் கரைந்துபோகு
முளையுடனே யுலகினிற் கைகண்டதாகும்



அன்னதானமு முதலாயநேக தானம்
ஆரணம் பார்த்ததிலுரைத்தபடிக்கி வாரிச்
சொன்னமறை வேதியர்க்கும் பொழிந்து தர்ம
துரையான சரபேந்திரன் முறையிதாமே. ௯௭௯

(இ-ள்)

தேத்தாங்கொட்டையின் வேரை எடுத்துக்கொண்டு, நன்றாகத் தண்ணீரில் கழுவி, மோர் (பசுவின்) விட்டரைத்துச் சாப்பிட்டால் வெள்ளைப்பிரமியம் அடியோடு தீரும்.

## 90. பிரமியத்துக்கு மருந்து

சுந்தரஞ்சேர் தென்னம்பாளையைத் துவைத்துத்
தோய்ந்த தயிர்விட்டரைத் துப்பிழிந்ததிற்கேன்
தொந்த இலவம்பிசினும் புளியங்கொட்டைத்
தோலும் பொன்மெழுகுடனே யேலஞ்சேர்த்து
மிந்த நால்வகை யரைத்துச் சாற்றினிற்போட்
டினிதெருமைத் தயிரைவிட்டுக் குடித்து மேலும்
விந்தை நற்கிழாயமத்திப் பட்டையாலம்
விழுதறுகம்வேர் நாவற்பட்டையாமே. ௯அ௰

ஆமென நால்வகையையும் பின்னறுக்கிக்கொண்டு
அனிவலபக்கல்லுப்பொடி யதனிற்போட்டு
ஓமெனக் கடாயம் வைத்துச் சுண்டக்காய்ச்சி
உட்கொள்ளப் பிரமியங்க ளோடிப்போகும்,
வாமமிகுந் தெளிபிடப்பாக ரான
மகேசுவரன் பூசையினில் மனமகிழ்ந்து வித்தம்
சேமகிஷ்டை மறவாத கருணையிலும்
நிறைந்துவளர் சரபேந்திரன் முறையிதாமே.௯அக

(இ-ள்)

தென்னம்பாளையைக் கொண்டுவந்து அதை நசுக்கி, நன்றாகத் தோய்ந்த எருமைத் தயிர்விட்டு நன்றாக அம்மியி

விட்டரைத்து ஒரு வெள்ளைத் துணியிலிட்டுப் பிழியவும். அதனுடன் இலவம்பிசின், புளியங்கொட்டைத் தோல், பொன் மெழுகு, ஏலக்காய், இச்சரக்குகளை அம்மி தனி விட்டரைத்து தனியான எருமைத்தயிர் விட்டு எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து சாப்பிடவும்.

மருந்தைக் குடித்தபின்,

| | |
|---|---|
| அத்திப்பட்டை | ஆலம்விழுது |
| அருகம்வேர் | கைப்பட்டை |

இச்சரக்குகளைச் சமனெடை எடுத்து நறுக்கிக்கொண்டு கல்லுப்பொடிபோட்டு (8 மடங்கு) ஜலம்விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக்கொண்டு கஷாயத்தை வடிக்கட்டிச் சாப்பிடவும்.

சகல பிரமியங்களும் தீரும்.

## 91. பிரமேகமெல்லாந்தீர

ஆவிரையின் பூவினொடு வேம்பிருக்கும்
அரிசியுமெள்ளுருஞ்ச மருமேசாழுமைத் தெளித்து
ஒலியாய்வேல் கண்டைக்காயளவு செய்து
உண்டைதின மூன்றருந்த மூன்றுநாட்கு
ளேவுபிரமேக மெல்லாந்திரு மென்று
விளம்பு சிசங் கமலமுத்தைச் சொரிந்த சோலை
வாவிகள் சூழ் தஞ்சை நகராளுகின்ற
மகராசன் சரபேந்திரன் மூறைமிதாமே. ௯அ

(இ-ள்)

ஆவாரம்பூவின் நடுவிலுள்ள அரிசி
எள்ளு

இவ்விரண்டையும் சமனெடுத்து அம்மியிலிட்டரைத்துக் கண்டைக்காயளவு மாத்திரைகளாகச் செய்துகொண்டு, தினம் 3 உருண்டைகள் வீதம் உட்கொள்ள 3 நாட்களுள் பிரமேகங்களைத்தும் தீரும்.



## 92. பிரமியத்துக்கு மருந்து

பாங்கான வெள்ளைக் குங்கிலியம் நல்ல [ணெய்,
பளிங்கிரண்டு பலம்பொடி செய்ததில் நல்லெண்
நீங்காமல் வார்த்தரைத்துப் பின்னும் நற்றண்
ணீரினலரைத் தவ்வித மழுக்கை நீக்கிப்
பாங்காகச் சுத்த வெள்ளையாகக் கண்ட
வாறதனை யெடுத்து மிருபது நாளைக்கு
ஆங்காலும் பாக்களவு மிரண்டு நேரம்
அருந்த வெக்தப் பிரமியமுந் தீர்ந்துபோமே. ௯௨

(இ-ள்)

சுத்திசெய்த வெள்ளைக் குங்கிலியம் 2 பலமெடுத்து நல்லெண்ணெய் விட்டரைத்து, நல்ல தண்ணீரில் திரும்பத் திரும்ப அழுக்கு நீங்கும்வரை கழுவவும். அது சுத்தமான வெள்ளை நிறமாகும். அப்போது, இதை ஒரு பாக்களவெடுத்துக் காலையிலும் மாலையிலுமாக 20 நாளைக்குச் சாப்பிட எல்லாவிதப் பிரமியங்களும் தீரும்.

## 93. பிரமேகத்துக்கு

வங்கபற்பம் வெள்ளிபற்பம் சீசபற்பம்
வளர் சுவர்ண பற்பமிந்த வகை நான்குக்கும்
இங்கிதஞ்சேர் வகைக்கிரண்டு பலமும் காந்த
மிரசபற்பம் வகையிரண்டும் பலமோவ்வொன்
றங்குமுள்ள பவழபற்ப முத்துப்பற்பஞ் [றும்
சொல்லிரண்டு பலம் நான்கும் நான்கதாகப்
பங்கோமிதெல்லா மகல்வத்திட்டுப்
பண்புடன் மர்த்தனை செய்யவும் பசுவின்பாலே.
பாலோடும் கஸ்தூரித் தண்ணீ[illegible]
[illegible]
[illegible] வெட்டிவேர்ச் [illegible] தோலைச்
[illegible]

101719
LB:416
NBT

சிலமுடன் தனித்தனி விட்டரைத்து வில்லை
 செய்து நிழலுலர்த்தி மூங்கிற்குழாய்க்குள்
கோலவுமே பதனமது பண்ணிரெண்டு
 குன்றிமணிபோ லவிழ்த மெடுத்திடாயே. ஈஅரு
எடுத்துச் சர்க்கரையினிற் தேனதிற் கொடுக்க
 இசைந்த இருபதுவகை மேகங்கடரும்
கொடுத்திடனுபான விசேஷங்கள் கண்டு
 கொங்சருவரோகமும் போமிது மெய்யுண்மை,
அடுத்த பந்துசன முதலெல்லோரைக் காக்கு
 மற்புதச் சத்திரிய குலதிலக னென்றைத்
தொடுத்திடில் முன்றொடுத்தபடி நடத்தும்வெற்றித்
 துரைச்சிங்கஞ் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

| | |
|---|---|
| வங்கம் (வெள்ளீய) பற்பம் | வெள்ளிபற்பம் |
| ஸீஸ (காரீய) பற்பம் | தங்கபற்பம் |
| இந்தவகை பற்பங்கள் வகைக்கு | 2 பலம் |
| காந்த பற்பம் | 1 ,, |
| ரஸ பற்பம் | 1 ,, |
| பவழ பற்பம் | 4 ,, |
| முத்து பற்பம் | 4 ,, |

இவைகள் எல்லாவற்றையும் ஒரு பழகிய கல்வத்தி விட்டுப் பசுவின்பால் விட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். கஸ்தூரித் தண்ணீரிலும், சந்தனக் கஷாயத்திலும், கரும்பஞ்சாற்றிலும், வெட்டிவேர்ச் சாற்றிலும், ஆடாதோடைச் சாற்றிலும், தனித்தனியே ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருசாறு தமிட்டரைத்துச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டி, நிழலில் காயவைக்கவும்.

இதை ஒரு மூங்கில் குழாயில் வைத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு, இரு குன்றிமணி நிறை மருந்தை எடுத்துச் சர்க்கரையிலோ அல்லது தேனிலோ கொடுக்கவும்.



20 வகைப் பிரமேகங்களும் தீரும். தக்க அனுபானங்களில் இம்மருந்தைக் கொடுத்துவர சகல ரோகங்களும் தீரும்.

## 94. பிரமியங் கல்லடைப்புக்கு

நாட்டீரவெங்காயம் பிடிதானொன்றும்
 நாயுருவியிலையுமொரு பிடிதானொன்றும்
கூட்டி யிரண்டையு மரிந்து வேகவைத்துக்
 கொண்டெடுத்துத் திரும்பவந்தச் சட்டிமீதிற்
போட்டுழக்குப் பசுவினெய் விட்டதை வறுத்துப்
 புகலுவாய் நாளருந்தவே தான்
வாட்டுகின்ற பிரமியங் கல்லடைப்புந் தீரு
 மகிழ்ச்சிதருஞ் சரபேந்திரன் முறையிதாமே.

| | |
|---|---|
| ஈரவெங்காயம் | 1 பிடி |
| நாயுருவி இலை | 1 பிடி |

இவைகளை நறுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு, சிறிது ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி வேகவைத்து எடுத்துக்கொண்டு, மறுபடியும் பசுவின் நெய்விட்டு வறுத்து அதைச் சாப்பிடப்

பிரமியம், கல்லடைப்பு முதலிய ரோகங்கள் தீரும்.

## 95. சுக்கிலப்பிரமிய, இரத்தப்பிரமியம், சீழ்ப்பிரமியம், சதை நீரடைப்புக்கு

இடித்துமே தாளவிழுதனை யுசிச்சா
 றிணைவடிகொண் டுபசுவின் பாலைவிட்டும்
எடுத்துத் தேந்தாம் விரை ஐந்தரைத்துப் போட்டு
 எலுமிச்சங் காயளவு போலே யின்பங்
கொடுத்திடு சர்க்கரை கூட்டிக் கலக்கிக்கொண்டு
 கொடுமூன்று நாட்காலமே யருந்தில்

விடுத்தி ரத்தப்பிரமியஞ் சீழ்ப்பிரமியம் போம்
விளம்பு சதைவளர்ந்து நீரடைப்பும் போமே.

போமது சுக்கிலப் பிரமியமுமே தீரும்
புகலு வாய்புளிப்பு கைப்புத்தவிர்க்கவே தான்
ஆமவர்க்குச் சகல சுகமகிழ்ச்சி கண்ணால்
வசியமிப்பு வியினிற் கைகண்டதாகும்
காமமேருவும் புவியைத் தாங்கினாற்போல்
காசினி வாழுயிர்களைக் காப்பாற்றுகின்ற
சேமமிகு செங்கண் மாலுருவெடுத்து
நிசம் வந்த சரபேந்திரன் மூறையிதாமே. ஈஅ

(இ-ள்)

தாழை விழுதைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டிடித்துச் சாறுபிழிந்து, அச்சாற்றில் ½ படி எடுத்து அதற்குச் சமம் பசுவின்பால் விட்டுக் கலந்து, சிவிய தேத்தாங் கொட்டை 5 (எண்ணிக்கையில்) எடுத்துப் பால்விட்டரைத்து, எலுமிச்சங்காயளவு சர்க்கரையும் சேர்த்து, எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, 3 நாட்களுக்குக் காலையில் அருந்தவும்.

இரத்தப் பிரமியம், சீழ்ப் பிரமியம், சதையினாலேற்பட்ட நீரடைப்பு இவைதீரும். சுக்கிலப்பிரமியமும் தீரும். பத்தியம்:—புளிப்பு, கைப்புப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்

## 96. பிரமியத்துக்கு

எள்ளெண்ணெய் யாழாக்கிற் பருத்திப்பிஞ்சை
எலுமிச்சங்காயளவதரைத் துப்போட்டு
உள்ளபடி கலந்தாழக்கெண்ணெய் வீதம்
உண்டிடவே மூன்று நாட்காலமே தான்
கள்ளமிகும் பிரமேகந் திருமப்புக்
கசப்புப் புளிப்புத் தவிர்ப்பதிதுமெய் யுண்மை



கொள்ளு கலிகாலமதில் கண்ணால் கண்ட
குபேரனென்னுஞ் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

சுத்தமான எள்ளெண்ணெய் 1 ஆழாக்கு பருத்திப் பிஞ்சு அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு எடுத்து, ஒன்றுகலந்து தினம் காலைவேளையில் 3 நாளைக்குக் கொடுக்கவும். பிரமேகம் தீரும். கைகண்டது.

பத்தியம்:—
கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புச்சுவையையும் தள்ளவும்.

## 97. பிரமிய முதல் தீருமருந்து

மருச்சிவனார் வேம்புவேர்ப் பட்டைகொண்டு
வந்தரைத்துப் பசுவின் வெண்ணெயினிலுண்டா [லும்
கருங்குருவை யரிசியுடன் முள்ளெருஞ்சிக்
காயுஞ் சேர்த்திடித்தி ததைச் சுட்டுப்பிட்டு
அருந்திடிலும் கடுக்காய் கற்றாழஞ்சோறு
மதையிரண்டுஞ் சேர்த்தரைத்த தருந்தினாலுந்
திருந்து மிந்தமுறை மூன்று மருந்துவோர்க்குத்
தீராத பிரமேகந் தீர்ந்துபோமே. ஈகூக

(இ-ள்)

சிவனார் வேம்புவேரின் பட்டையைக் கொண்டுவந்து அம்மிமேல் வைத்து நன்றாக அரைத்து, பசுவின் வெண்ணெயுடன் குழைத்துச் சாப்பிட்டாலோ, அல்லது கருங்குருவை அரிசியுடன், நெரிஞ்சிக்காய் (சரியளவு) சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்துப் புட்டாகச் செய்து சாப்பிட்டாலோ அல்லது கற்றாழைச் சோற்றையெடுத்து நன்றாக அலம்பிவிட்டுக் கடுக்காயுடன் கூட்டி உண்டாலும், தீராத பிரமேகங்கள் தீரும்.

## 98. பிரமேகத்துக்கு

எலுமிச்சங்காயளவு போலே தேங்கா
யிணை யரைத்து மிளவெந்நீரி லருந்த
மெலிந்து பிரமேகமென்ற தெல்லாந்தீரு
மேதினியிற் சோதனை கைகண்டதாகும்
கலிந்துவிடும் மருவலர்கள் துடர்ந்து கிட்ட
காடாமல் அரத்திவெற்றி மிகுஞ்சிங்காரம்
பொலிந்த சரபோசி மகாராச னின்பப்
புண்ணியவாணிம் முறையைப் புகன்றதாமே. ஈகூஉ

(இ-ள்)

முற்றிய தேங்காயை எடுத்து எலுமிச்சங்காயளவு அரைத்து விழுதாக்கி இளஞ்சூடான வெந்நீரில் கலந்து சாப்பிடவும்

பிரமேகம் தீரும். கைகண்டது.

## 99. பிரமேகமெல்லாம் தீர மருந்து

வனக்கீழா நெல்லியைச் சமூலங்கொண்டு
வந்தரைத்து எலுமிச்சங்காயி னேராய்,
தினமும் வெண்ணெயதுவு மதுபோல் நிதானஞ்,
சேர்த்திரண்டையுங் கலந்து அருந்துவோர்க்கு
மனம்படி பத்திய மூன்றுநாட் பின்னேழு
வாரமட்டுமமுது மாத்திரமே கொள்ள
இனவழிசேர் பிரமேகமென்ற தெல்லாம்
ஏகிடுமிது நிசங்கை கண்டதாமே. ஈகூகூ

(இ-ள்)

கீழாநெல்லியைச் சமூலமாகப் பிடுங்கிக்கொண்டுவந்து, அம்மிதனிலிட்டு நன்றாக அரைத்து அதனுடன் எலுமிச்சங்காயளவு பசுவின் வெண்ணெய் கூட்டிச் சாப்பிடப்

பிரமேகம் அனைத்துந் தீரும்.



பத்தியம்:—மருந்தை 3 நாளைக்குச் சாப்பிட்டு, ஏழு நாள் வரை சாப்பாடு மாத்திரமே உட்கொள்ளவும்.

## 100. பிரமேகத்துக்கு மருந்து

ஆவின் பாலதிற் புளியன் வேரின் பட்டை
அம்மன் பச்சரிசியுடன் கீழாநெல்லி
மூவகையிற் பாலூற்றி வைத்திறுத்து
மோகமுள்ள சர்க்கரை கூட்டிக்குடிக்க
மேவு பிரமேகமெல்லாந் தீருமிந்த
மேதினியிற் கைகண்டதுண்மை யாக்குந்
தாவுமயில் சோலை தஞ்சை நகரையாளுஞ்
சரபோசி மகாராசன் முறையிதாமே. ஈகூச

(இ-ள்)

புளியமரத்தின் வேர்ப்பட்டை, அம்மான் பச்சரிசி, கீழாநெல்லி இவைகளைச் சமமெடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி, பசுவின்பாலில் ஊறவைத்து இறுத்து அப்பாலைச் சர்க்கரை கூட்டி அருந்திவரப்

பிரமேகங்கள் தீரும்.

## 101. பிரமேகந்தீர மருந்து

குத்தும் வெள்ளைப் பச்சரிசி நீரிற் றேத்தாங்
கொட்டையு நெல்லிப்பருப்பு மூறப்போட்டு
வைத்தநாட்போக மறுநாளரைத்து
வாகாகக் கலந்ததிற் சர்க்கரையைக் கூட்டிச்
சித்தமகிழ்ந்ததை யருந்துவோர்களுக்குத்
தீராத பிரமியமுந் தீருமின்பம்
சித்தமுண்டா மூலகினிற் கைகண்டதாகும்
நீதியுள்ள சரபேந்திரன் முறையிதாமே. ஈகூரு

(இ-ள்)

குத்திய பச்சரிசியைக் கழுவியெடுத்த கழுநீரில், தேவிய

தேற்றுங்கொட்டையும், நெல்லிக்கொட்டைக் குள்ளிருக்கும் பருப்பும் ஊறப்போட்டு ஒருநாள் முழுதுமூறவைத்து மறுநாள் அவைகளை அரைத்து அக்கழுநீரிலேயே குழப்பிச் சர்க்கரை கூட்டிச் சாப்பிடத்

தீராத பிரமேகங்கள் தீரும்.

## 102. பிரமியத்துக்கு மருந்து

ஒப்புகழுநீரிற் பச்சரிசி தன்னை
யுவந்தரைத்துக் கரைத்தருந்தப் பிரமேகம்போம்,
அப்பிரகசெந்தூரம் பசுவின் வெண்ணெய்
அதில் நான்குநாளருந்தப் பிரமேகம்போம்,
வைப்புவிக்கற்றாழை மணிபலவையாக
வாங்கி நீர்ப்புலாவேர்ப் பட்டையு மரைத்து
செப்புமிவை யிரண்டையுஞ் சேர்த்தின வெந்நீரில்
தித்திப்புச் சர்க்கரையைக் கூட்டுவாயே. ாகூா

கூட்டியே மூன்றுநாளருந்தச் சொல்லு
கூறு கெட்ட பிரமேகமெல்லாந் தீரும்
காட்டியின்னமொரு முறைகேள் மூதியார் கூந்தல்
நல்ல கொடிவேலியுடன் முருங்கைவேரும்
நாட்டிகக் கழல்பருப்பூமத்தைச் சாறு
தனிலரைத்துண்டிடக் கொடலின் பிரமியம்போம்
மேட்டிமை சேருலகினிற் கைகண்டதாரும்
விதானிகள் சரபேந்திரன் முறையிதாமே. எகூஎ

(இ-ள்)

1. கழுநீரில் பச்சரிசியை ஊறவைத்து அரைத்துக் குடிக்கப் பிரமேகம் போம்.

2. அப்பிரகச் செந்தூரத்தைப் பசுவின் வெண்ணெயுடன் குழைத்து நான்கு நாட்களருந்தப் பிரமேகம் தீரும்.

3. கற்றாழைச்சோறு, நீர்ப்பூலா வேர்ப்பட்டை யிவ்



விரண்டையும் அரைத்து வெந்நீரில் கலந்து சர்க்கரை கூட்டிச் சாப்பிடவும். 3 நாளில் பிரமேகங்கள் தீரும்.

4. மூதியார் கூந்தல், கொடிவேலிவேர், முருங்கைவேர், கழற்கொடிப்பருப்பு, இவைகளைச் சமபாகமெடுத்து ஊமத்தைச்சாறு விட்டரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டி (தினம் 2 வேளை) உண்டுவரப் பிரமேகம் தீரும்.

## 103. பிரமியத்துக்கும், காபாத தாகத்துக்கும்

இலவங்கம் பலமொன்றுங் கூகைநீறு
மெட்டுபலம் ஏலமது பலமிரண்டும்
கலந்திகழ் திப்பிலிப் பலமு நான்குமிந்த
நால்வகையைச் சேர்த்துடன் சூரணமே செய்து
கலந்துமதில் சர்க்கரையு மதுவீராறு
காசிடை தேனிரண்டு பங்கும் பசுவினெய்யும்,
இவவொரு பங்குவிட்டுக் கடுகுயண்ணி
இன்பமுடன் தினமூன்று பலமும் உண்ணே.

உண்ணவே மூன்றுபல விதமாக
உடலெரிவு பழங்காய்ச்சல் காபாத தாகம்
வண்ணமுட னிரத்தம் விழுகிறதும் பிரமை
வயிற்றெரிவு பிரமேகஞ்சி லேட்டுமம்போம்
கண்ணவனி தனிலிவை கடருமின்ப
நலமுடன் கைகண்டது வற்புத வாரிசக்
கண்ணனெழில் துளசி மகாராசனின்ற
காதலனாம் சரபேந்திரன் முறையிதாமே. எகூகூ

(இ-ள்)

| | |
|---|---|
| கிராம்பு | 1 பலம் |
| கூகைநீறு | 8 பலம் |
| ஏலக்காய் | 2 பலம் |
| திப்பிலி | 4 பலம் |

இச்சரக்குகளைச் சுத்தமாக எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். அதனுடன் சர்க்கரை 12 வராகனெடையும், சுத்தமான தேன் 2 பங்கும், பசுவின் நெய் 1 பங்கும்விட்டுக் கல்லுரலிலிட்டு, நன்றாக இடித்து 1 பலம் நிறையுள்ள வடகங்களாகச் செய்து கொள்ளவும்.

இதனைத் தினமும் 3 பலம்வீதம் சாப்பிட உடலெரிவு, ஜீர்ணஜ்வரம், கைகால்களின் எரிச்சல், இரத்தம் விழல், மயக்கம், வயிற்றுவலி கபம், பிரமேகம் முதலிய ரோகங்கள் தீரும்.

## 104. பிரமியத்துக்கு

ஏலமிலாமிச்சிரு வேலியுடன் சீந்தி
 லிலவங்கப் பத்திரி வேப்பிலையும் கொச்சி
ஆலவிழுதிலவங் தாமரைப்பூ
 அதிமதுரஞ் சந்தனங் கற்பூரங் கோட்டம்
சிலமுள்ள தேட்கடை கன்னாரி நாயன்
 சிலந்தியந் திப்பிலிமூலம் பாகல் வேரும்'
கோலமத்திப்பழம் பருத்தி மணித்தக்காளி
 குக்கிலும் வெள்ளறுகுடனே அகத்திதானே உ_ள

அகத்திப் புளியிலை கரிப்பான் குதிரைவாலி
 அமுக்குரு தாளிசபத்திரி கரந்தை
தருக்துளசி பெருங்கு மிள்மஞ்சிட்டிநெல்லி
 தான்றி முந்திரிகைப்பழமும் வலம்புரிக்காய்
புகம் பேரீச்சம்பழமுஞ் சோதி நீலம்
 புழுகும் வெருகங்கிழங்கும் வில்வப் பிஞ்சும்
பகுந்திவைகள் சேர்த்துடன் சூரணமே செய்தும்,
 பகர்ந்திடுஞ் சர்க்கரை யதுக்குச்சரியாய்க் கூட்டே.

கூட்டியந்தச் சூரணஞ் சர்க்கரையுஞ் சேர்த்துக்
 கொண்டு செய்யிற்றேனிரண்டி லொன்றிதுண்ணு



வாட்டிரத்த பித்தமும் வாந்தியு மிரண்டு
 மாதம் விடாச்சுரந் தாபசுரம் பிரமேகம்
நீட்டிய கைகாலெரிவு இவைகடரு
 நிசமிது கைகண்டதுண்மை மிசைச் சங்கீதப்
பாட்டு ரசக்கிய மறிவுல்லாச வாசப்
 பரிமளஞ்சேர் சரபேந்திரன் முறையிதாமே.உ_ளo

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | இலாமிச்சம்வேர் |
| வெட்டிவேர் | சீந்தில் தண்டு |
| இலவங்கப்பத்திரி | வேப்பிலை |
| கொச்சி | ஆலவிழுது |
| கிராம்பு | தாமரைப்பூ |
| அதிமதுரம் | சந்தனம் |
| கர்ப்பூரம் | கோஷ்டம் |
| தேன் கொடுக்கு பூண்டு | கன்னாரிவேர் |
| * சிலந்தி நாயன் | கண்டத்திப்பிலி |
| பாகல் வேர் | அத்திப்பழம் |
| பருத்திக்கொட்டை | மணித்தக்காளி |
| சுத்திசெய்த குக்கில் | வெள்ளறுகு |
| அகத்தியிலை | புளி இலை |
| கையாந்தகரை | முதியார் கூந்தல் |
| அமுக்கிராக்கிழங்கு | தாளீசபத்திரி |
| சிவகரந்தை | துளசி |
| பெருங்குமிழ் வேர் | மஞ்சிட்டிக்கிழங்கு |
| நெல்லிமுள்ளி | தான்றிக்காய்த்தோல் |
| திராக்ஷைப்பழம் | வலம்புரிக்காய் |
| பேரீச்சம்பழம் | சோதிநீலம் |
| புனுகு | வெருகங்கிழங்கு |
| வில்வப்பிஞ்சு | |

குறிப்பு:—சிலந்தி நாயன்=சீந்திற் கொடி

இச்சரக்குகளை நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டி டித்து வஸ்திரகாயஞ்செய்துகொண்டு சரி எடை சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

இச்சூரணத்தைத் தேனிலோ அல்லது நெய்யிலோ சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :—

இரத்தபித்தம், வாந்தி, இருமாதங்களாக விடாத சுரங்கள், தாபஜ்வரம், பிரமேகம், கைகால்களின் எரிவு முதலியவை.

## 105. பிரமேகத்தைப் போக்கும் அவுடதம்

ஆவாரை கடலிறஞ்சிப்பட்டை மஞ்சள்
ஆவாரை விரையும் நிலப்பனைக் கிழங்கும்
ஆவாரம்பிசின் பிலாப்பிசினும் வங்கம்
அப்பிரகமு ந்துத்தமுஞ் சித்திரமூலந்தான்
பூவார விளாம்பிசினு லோகங் காந்தம்
புகல் கடுக்காய் தான்றிக்காய் நெல்லிமுள்ளி
காவாரு முருங்கைப்பூ முருக்கம்பட்டை
கருவேம்பின்பிசின் பருத்தி விரைப்பருப்பே. ௨௱௪

பருப்பு பருத்திப்பூ வாழைப்பூ தென்னம்
பாளை வாழைப்பழஞ் சர்க்கரை தேன்காரை
விருப்புத் அத்திவிரை முசுட்டை நீர்முள்ளி
விரை கிளுவைப்பட்டைக் கருங்காலிப்பட்டை
திருவேப்பம்பிசினும் வட்டத்திருப்பி வேருஞ்
செம்பருத்தி மரமஞ்சள் தேத்தாங்கொட்டை
இரும்புமனோசிலை சீந்தில்தண்டு மூங்கில்
இலை கருங்காலிப் பிசினல்லெண்ணெய் கொண்டே.

கொண்டிடுவாய் நந்தியாவட்டை வெள்ளைக்
குன்றிமணி குக்குலுங்கோவைக் கிழங்கும்



விண்டிடுவாய் வெள்வேலாம் பிசினுங்கட்டம்
விடத்தேரைப் பிசினுடனிவ்வகைகளெல்லாம்,
கண்டிடுவாய் பிரமியத்தைப் போக்கப்பட்ட
கருணையுள்ள அமுதமிந்தவிழ்தஞ் செய்து
உண்டிடுவார் பிரமேகமென்ற தெல்லா
மோடிப்போமற்கு மின்பமுயருந்தானே. ௨௱௫

(இ-ள்)

| | |
|---|---|
| ஆவாரை வேர் | கடலழிஞ்சில்பட்டை |
| மஞ்சள் | ஆவாரைவிதை |
| ஆவாரம்பிசின் | பிலாப்பிசின் |
| வங்கபற்பம் | அப்பிரகபற்பம் |
| சுத்திசெய்த துத்தம் | சித்திரமூலவேர் |
| விளாம்பிசின் | லோகபற்பம் |
| காந்தபற்பம் | கடுக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | நெல்லிமுள்ளி |
| முருங்கைப்பூ | முருக்கம்பட்டை(முள்முருங்கை) |
| கருவேலம்பிசின் | பருத்திவிதைப்பருப்பு |
| பருத்திப்பூ | வாழைப்பூ |
| தென்னம்பாளை | வாழைப்பழம் |
| சர்க்கரை | காரைவேர் |
| அத்திவிதை | முசுட்டைவேர் |
| நீர்முள்ளிவிதை | கிளுவைப்பட்டை |
| கருங்காலிப்பட்டை | வேப்பம்பிசின் |
| வட்டத்திருப்பிவேர் | செம்பருத்தி |
| மரமஞ்சள் | தேத்தான்கொட்டை |
| சுத்திசெய்த மனோசிலை | சீந்தில் தண்டு |
| மூங்கில் இலை | கருங்காலிப்பிசின்(காசுக்கட்டி) |
| நல்லெண்ணெய் | நந்தியாவட்டைவேர் |
| வெள்ளைக்குன்றிமணிவேர் | சுத்திசெய்த குக்கில் |

கோவைக்கிழங்கு    வெள்வேலம்பிசின்
சுத்திசெய்த கிட்டம்    விடத்தேரைப்பிசின்

இந்த வகைகள் எல்லாம் பிரமியத்தைப் போக்கும் ஔஷதங்களாம். இவைகளால் பிரமேகம் தீரும்.

## 106. பிரமேகத்துக்கு, வயிற்றில் புண்ணுக்கு

பறங்கிப்பட்டையின் சூர்ணமுமே ஐந்து
பலமதற்கு ஒருபலஞ் சீரகமும் போட்டு
நிறுத்தெடுத்துச் சர்க்கரையும் பலமு மூன்று
நிசக்கோரோசனையும் வராகனிடை மூன்றும்
சிறந்ததிற் போட்டாவின் நெய்யும் நாழிவிட்டுச்
சேர்த்திவை லேகிய பாகஞ் செய்தருந்தில்
மறு நீங்கித் தீருகின்ற வியாதிகளைச் சொல்
வயிற்றிற்புண் கிரந்தி முதலின்னந்தானே   ௨௱௬

இன்னமென்ற பிரமேகஞ் சூலவாயு
இவைதீரு மெலித்துப் பத்தியந்தான்
நன்னயஞ் சேர்துவரை யிளங்கீரையாகும்
நன்மையுடனிது நிசங்கை கண்டதற்குந்
தன்னிகரிலாத பிரதாப சூர
சத்திரியகுலந் தழைத்துக் கலிகாலத்தில்
முன்னம் வரும்படி நடத்துத்தம சிங்கார
முனைவிசையன் சரபேந்திரன் முறையிதாமே.

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த பரங்கிப்பட்டைச் சூரணம் | 5 பலம் |
| சீரகம் | 1 பலம் |
| சீனி | 3 பலம் |
| கோரோசனை | 3 வராகனெடை |

இவைகளை யொன்றுகலந்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து
பசுவின் நெய் 1 படியும்
விட்டு, அடுப்பின்மேலேற்றி லேகியமாகச் செய்து, சாப்பிட



வயிற்றில் புண், கிரந்திகள், பிரமேகம், சூலை, வாயு முதலியவைகள் தீரும்.

பத்தியம்:— துவரை, இளங்கீரை, முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

## 107. பிரமேகத்துக்குத் தைலம்

தலைக் கஞ்சா இலை நெருஞ்சி இலையுங்கையாந்
தகரை செருப்படியிலை வேலிப்பருத்தி
யிலை குப்பைமேனியிலை மயக்கூமத்தை
யிலை யெட்டு மருந்து வகைச்சாறுங் கொண்டு
கலையிலொரு பாலைச்சீலையினி லூட்டிக்
காண நிழலுலர்ந்ததாக வுலர்த்தி
நிலைமை கஞ்சாவிதை கமலப்பூ சாதிக்காய்
நெல்லிக்காய் கெந்தகமு மரைத்திடாயே   ௨௱௮

அரைத்து வெள்ளைப் பசுவின் பாலதிற் புன்னைக்காய்
அளவு நான்கு வகையரைத்தெடுத்து
இரைத்த தெட்டுச் சாறூட்டும் பாரிச்சீலை
ஒருபுறத்தில் தேங்காய்ப்பூ வன்றாய்ப்பூசி
திரித்து விளக்கிற் கொளுத்தித் தலைகீழாகச்
சென்று கலத்தினிற் பிடிக்கத் தைலம் வீழும்,
வருந்தைலமதுக் களவா யிரதம் விட்டு
மத்தித்துத் தைலமது மருந்துவாயே.   ௨௱௯

அருந்து பணவிடை யிரண்டுவீதமாக
அடங்காத பிரமேக மடங்கித் தீரும்
வருந்துகின்ற பத்தியமு மிதுக்கில்லைபார்
வையகத்திற் சோதனைக் கைகண்டதாகுந்
திருந்திய சாமுத்திரிகா சாஸ்திரம்
செப்பியதோர் புருடலெட்சணங்க ளெல்லாம்
பொருந்து சரபோசி மகாராசனின்பப்
புண்ணிய வாளின்முறையைப் புகன்றதாமே. ௨௱௰

(இ-ள்)

கஞ்சா இலை　　　　நெருஞ்சி இலை
கையாந்தகரை　　　　செருப்படி இலை
வேலிப்பருத்தி இலை　　　　குப்பமேனி இலை
ஊமத்தை இலை

இந்த *எட்டுவகை இலைகளின் சாறுகளையும் ஒரு சீலையில் தனித்தனியே ஊட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இதில்

கஞ்சாவிதை　　　　தாமரைப்பூ
சாதிக்காய்　　　　சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்

இவைகளை புன்னைக்காயள வெடுத்துப் பசுவின்பால் விட்டு நன்றாகவரைத்து மேலே தயாராக வைக்கப்பட்டிருக்கும் சீலையில் தடவிக் காயவைத்துக்கொண்டு, அதில் உலர்ந்த கொப்பரைத் திருவலை ஒரே சீராக திரவி சிறு சிறு துண்டுகளாகச் செய்து, திரியாகத் திரித்துக்கொள்ளவும். இத்திரிகளைக் கொளுத்தித் தலைகீழாகஒரு பாத்திரத்தில் பிடித்தால் அதிலிருந்து தைலம் விழும். இத்தைலத்திற்குச் சரி எடை சுத்திசெய்த பாதரஸம் விட்டுக் குழைத்துச் சாப்பிடவும்.

வேளைக்கு $6\frac{1}{3}$ குன்றி நிறை இம்மருந்தை உட்கொள்ளவும். தீராத பிரமேகங்களும் தீரும்.

இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை. சோதனைக்குக் கைகண்டது.

* செய்யுளில் எட்டு என்று கூறப்பட்டிருப்பினும் ஏழு வகைகளே உள்ளன.

## 108. பிரமேகத்துக்கு மருந்து

உப்பிலிக்காயுட னெலுமிச்சங் காயெங்கும்
ஓதுகரும் கம்பளி சுட்டெடுத்து நீறு



அப்பிலகு ந்தேங்காயு மிவை தோல் பாக்கி
　னளவரைத்து எருமை வெண்ணெயிலொவ்வொ
செப்பிடுவாய் வைத்தருந்தப் பிரமேகங்கள்　　[ன்று
　தீரும் நிசமெங்குங் கைகண்டதாகும்
எப்பொழுதும் நன்னெறி தப்பாமல் வாழு
　மின்ப சரபேந்திரன் செய்முறை யிதாமே　　௨௰௧

(இ-ள்)

இண்டங்காய்　　　　எலுமிச்சங்காய்
கருப்புக்கம்பளி சுட்டசாம்பல்　　தேங்காய்

இவைகள் வகைக்கு ஒரு பாக்களவெடுத்து அம்மியின்மேல் வைத்து நன்றாகவரைத்து எருமை வெண்ணெயுடன் குழப்பிச் சாப்பிடப் பிரமேகங்கள் தீரும். கைகண்டது.

## 109. பிரமியத்துக்கு

கனவிடத்தேரிலை நாழிக்குருவை யரிசியு
　மிடித்துக் களியாகக் கிண்டி
வனமிகுஞ் சந்தனமு முசுமுசுக்கை கொட்டைப்
　பாக்களவாய் வகைக்கரைத்து
மனமகிழுங் களியுடனே நெய்யினிற்றோய்த்
　தருந்த வெழில் மணமிருந்தால்
தினங்களியைக் கூட நெய்யிற்றோய்த்
　தருந்தப் பிரமேகந் திருந்தானே.　　௨௰௨

தீரு நிசம்பத்தியங்கேள் திருக்கை சுறுக்
　கருவாடு சேர்த்துமே தான்
பாருலுகிலிப்படிச் செய்து கொண்டவர்கள்
　வெகு சுகம் பரவுவார்கள்
ஏருழவர் சங்கை யெடுத்தெறிந்திடச்
　சூலுதிர்ந்த முத்தின்தேன் கண்டாம்பில்

சீருடனே மலர்ந்த தஞ்சை வளர்ந்த சர
பேந்திரன் செய் முறைமிதாமே. ௨௰௩

(இ-ள்)

விடத்தேரிலை । பிடி குறுவையரிசி । படி
இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துக் களியாகக்கிண்டி
சந்தனம் முசுமுசுக்கை

இவைகளை தனித்தனி ஒரு கொட்டைப்பாக்களவரைத்துக்கொண்டு. களியுடன் கூட்டி, நெய்யுடன் தோய்த்துச் சாப்பிடவும்.

இதற்குப் பத்தியம்:—

இருக்கை மீன், சுருக்கருவாடு இவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

## 110. கோபிக்கும் பிரமேகம், வாதப்பிரமேகம், முதலிய பிரமேகத்துக்கு மருந்து

அல்லியத்தி கருங்காலி தாமரை ஆ
வாரையுடனிவ்வைந்தின் பூவை
சொல்லிவெவ்வேறு யுலர்த்திப் பொடித்ததனை,
யெடுத்த தெல்லாஞ் சுயம்புத் தேனைச்
செல்லவிட்டு குழைத்தருந்த
கோபிக்கும் பிரமேக மின்னம்
நெல்லிக்காயின் சாற்றிற் குடிக்கப்
பித்தப்பிரமேகம் நீங்கிப் போமே. ௨௰௪

நீங்கவு மோருடன் குடிக்க வாதப்பிர
மேகமெல்லாம் நிசமாய்த் தீரும்
தேன்றுநின்ற பத்தியமு மிதுக்கில்லை
கைகண்ட தென்று மோன்று
மங்குசமுதாடு கத்தி கேடயம்,
வல்லைய மிடைப்பில் பண்பாய்க் கட்டி



நன்று தஞ்சைப்பதியில் நிதம் பவனி வருஞ்
சரபேந்திர னுரைத்த தாமே. ௨௰௫

(இ-ள்)

அல்லிப்பூ *அத்திப்பூ
கருங்காலிப்பூ தாமரைப்பூ
ஆவாரம்பூ

இவைகளைத் தனித்தனியாக எடுத்து, வெவ்வேறாக உலர்த்திப் பொடிசெய்து கொள்ளவும்.

வேண்டும்போது எல்லாச் சூரணங்களையு மொன்று கலந்து தேன்விட்டுக் குழைத்துச் சாப்பிடவும். அதிகமான பிரமேகம் தீரும்.

நெல்லிக்காய்ச் சாற்றில் குடிக்கப் பித்தப் பிரமேகம் தீரும்.

மோருடனே உபயோகித்தால் வாதப்பிரமேகம் தீரும்

இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை. கைகண்டது.

*சிறு சிறு பிஞ்சுகளாக இருக்கும்போதுள்ள கொத்தைப் பறித்துக்கொள்ளவும்.

## 111. சுக்கிலப்பிரமேகத்துக்கு

கரிப்பாலை வேர்தனைப் பிடுங்கிவந்து
எலுமிச்சங்காய்க்கு நேரா
விருப்பாவின் பாலிலதை யரைத்து
வெல்லங் கூட்டியுண்ணமிகவு நன்று
விருப்பாரில் வளர் புருடர் சுக்கிலப்
பிரமேக மென்ற தெல்லாந் தீரும்
பொறுப்பான குயமாளை மருந்துண்ணும்
போதனையாமற் புகல்வ தாமே. ௨௰௬

(இ-ள்)

கரிப்பாலை வேரைப் பிடுங்கிவந்து பசுவின்பால் விட்டு

எலுமிச்சம்பழமளவு விட்டு வெல்லம் கூட்டிச் சாப்பிடவும் சுக்கிலப்பிரமேகம் தீரும். மருந்துண்ணும்போது ஸ்திரீ ஸங்கம் கூடாது.

## 112. பிரமேகத்திக்கு

புழுக்கொல்லி யிலையு மொருகூறரிசி
  யிரு கூறும் போட்டிடித்து
அழகுமிகும் பிட்டெனச் சுட்டதை யெடுத்து
  நல்லெண்ணெய் வார்த்தருந்துவோர்க்குப்
பழகு பிரமேகமெல்லாம் விலகி நிற்கா
  தோடு மிந்தப்பாரின்மீது
எழிலுடன் கைகண்டதிது பத்தியமில்
  லா முறை யென்றிதைச் சொல்வாயே. ௨௰௭

(இ-ள்)

| | |
|---|---|
| புழுக்கொல்லி இலை | 1 பிடியும் |
| அரிசி | 2 பிடியுமெடுத்து |

இடித்துப் பிட்டாகச் சுட்டு அதை எடுத்துச் சுத்தமான நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிடப் பிரமேகங்கள் தீரும்.

## 113. பிரமேகத்துக்கு

நிசங்கரு ங்குங்கிலிய மதிலிரண்டு பலம்
  பொடித்துறைய நெய்யைவிட்டுப்
பிசைந்து சர்க்கரை கூட்டி வெருகடியாண்
  பிள்ளைகளு ணப்பெண்டு கட்குப்
பசைமிகும் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்
  தருந்தப் பிரமேகம் பறக்கும்பாரு
விசையலையாடைப்புவி மீதிது முறைகை
  கண்டதென விளம்பலாமே. ௨௰௮

(இ-ள்.)

கருங்குங்கிலியம் 2 பலமெடுத்துப் பொடிசெய்து ஒரு பாத்திரத்திலிட்டு அது முழுகும்வரைப் பசுநெய்யை



விட்டுப் பிசைந்து சர்க்கரையும் கூட்டி, மூவிரல் கொண்ட அளவெடுத்துச் சாப்பிடவும். ஆண்களுக்கு உண்டாகும் பிரமேகம் தீரும்.

பெண்களுக்கான பிரமேகமானால் நெய்க்கு பதில் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உபயோகிக்கவும். கைகண்டது.

## 114. பிரமேகத்துக்கு

பாலொடுவி வேருமதினிலையு மரிசி
  யினிலிட்டுப் பகர் வெள்ளாட்டுப்
பாலைவிட்டுப் பொங்கி யுண்ணப் பிரமேகந்
  தீருமிந்தப் பாரிற் பாரு
சாலவுமேயிது நிசங்கை கண்டதஞ்ஞா
  னத்துறையில் சாரா நீதிச்
சீலமுள்ள சரபோசி மகாராசன்
  முறையிதென்று செப்புவாயே. ௨௰௯

(இ-ன்)

| | |
|---|---|
| பாலொடுவி வேர் | பாலொடுவி இலை |
| அரிசி | |

இவைகளைச் சமமெடுத்து வெள்ளாட்டுப்பால் விட்டு, அடுப்பின்மேலேற்றிப் பொங்கவைத்துச் சாப்பிடவும். பிரமேகம் தீரும்.

## 115. பிரமேகத்துக்கு

பொருந்திடு மாடாதொடை வேரை வெள்
  ளாட்டுப்பாலிற் போட்டுக் காய்ச்சி
அருந்தவுமே உதயமதிற் பிரமேக
  மென்றதெல்லாமகலுகா தோடும்
வருந்துமின்ற பத்தியமு மிதுக்கில்லை
  கைகண்ட மகிழ்ச்சி மேன்மேல்

திருத்து சரபோசி மகாராச றூட
முறை யிதெனச் செப்புவாயே. ௧௰

(இ-ள்)

ஆடாதொடைவேரை வெள்ளாட்டுப்பாலில் போட்டு, அம்மிப்பின்மேலேற்றிக் காய்ச்சவும். காலைவேளைகளில் அப்பாலைப் பருகவும். பிரமேகங்கள் பலவுந் தீரும். இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை.

## 116. பிரமேகத்துக்கு

செப்பு நெரிஞ்சியின் வேரு மதினிலையும்
வகைக்குப்பிடி சேர்த்துக்கொண்டு
ஒப்புகின்ற நிறங்கறுப்பு நெல்லரிசியு
டனிடித்து உவக்கெடுத்துக்
கப்புகின்ற பிட்டெனச் சுட்டதனை
நெய்யி லெண்ணெயினிற் கலந்தொன்றுக்குள்
கப்புவெல்லங் கூட்டியொரு மூன்று
நாளுண்டிடப் பின்னலமுங் கூறே. ௧௧௫

கூறு பிரமேகமெல்லாந் தீர்த்திடுங்
கைகண்டதிது குணம் பாரின்னம்,
வேறுமுறை யொன்றதுகேள் தாழை
விழுத்தின் சாறுமே பிழிந்து
தேறியதை வடித்துடன் சர்க்கரை
போட்டு வளர்மூன்று தினமே யுண்டால்
ஊறுகின்ற பிரமேகந் தீருமென்றே
யிது சிவங்கொண்டோது வாயே. ௧௧௬

(இ-ள்)

1. செப்பு நெருஞ்சிவேர் 1 பிடி
2. ,, இலை 1 பிடி

இவ்விரண்டையும் ஒன்றுகலந்து கருங்குறுவை அரி-



சியுடன் கூட்டி இடித்துப் பிட்டுசுட்டு நெய்யும் நல்லெண்ணெயும் கலந்து, வெல்லமும் கூட்டி 3 நாளைக்குச் சாப்பிடவும்.

2. தாழைவிழுதுச் சாற்றைப் பிழிந்து ஒரு மெல்லிய வஸ்திரத்தில் வடிக்கட்டிச் சர்க்கரை கூட்டி 3 நாளைக்குச் சாப்பிடவும்.

## 117. பிரமேகத்துக்கு

வளர் பிரக்கம் வேருமதின் விரையுமொரு,
பிடியெடுத்து வைத்துக்கொண்டு
இளவெந்நீரி லரைத்துண்டிடவுமே,
. பிரமேகமெல்லாந் தீருந்
தளிரிலந்தை யிலையை யெருமைத்
தயிரி லரைத்த தனிற்றான் கரைத்து
உளமகிழ்ந்து ண்டிடவும் விசம்
பிரமேகமென்ற தெல்லாமோடிப்போமே. ௧௧௭

(இ-ள்)

1. பிரக்கம் வேர் 2. பிரக்கம் விதை

இவ்விரண்டையும் வகைக்கு ஒரு பிடி எடுத்து வெது வெதுப்பான வெந்நீரில் அரைத்துச் சாப்பிடப் பிரமேக மனைத்தும் தீரும்.

2. இலந்தைக் கொழுந்தை எருமைத் தயிர்விட்டு நன்றாக அரைத்து, அதிலேயே குழப்பிச் சாப்பிட்டாலும், பிரமேகங்கள் தீரும்.

## 118. பிரமேகங்களுக்குப் பஞ்சகவிய கிருதம்

ஆவினுட தயிர் நெய்பால் கோமியஞ்
சாணமித்த ஐந்துங் கூட்டி
மேவியதைக் கரைத்த தண்ணீருடனி னகீ
ரதுந்தாழை விழுதுமே தான்

காவிது றைந்திருந்த பொன்னும் காணியும் நீர்
வளிக்கிழங்கும் கருப்பஞ் சாறும்
தாவிய இவ்வகை வகைக்குச் சாறுபடி
மூக்காலுக் தானெடுத்தே. ௨௦௪

எடுத்தித்துடன் அதிமதுரஞ் செங்கழு நீ
ரிலவங்க மேலங் கோட்டம்
கொடுத்திடு சாத்திரவேதி தான்றிக்காய்
நெல்லி முள்ளி துதி சேர்வாசம்
கொடுத்திடு சந்தனங் கடுக்காயில் வகை
யெல்லாஞ் சேர்த்துக் கொண்டிடித்து
அரித்திடு கடாயமுந்தான் சிறு
கொதியாய் மூன்றுநாளாக வைத்தே. ௨௦௫

வைத்துமே கடுகு திரளக் காய்ச்சிகா
லாகான் வடித்ததற்குள்
சித்தமகிழ் சீனியைப் போட்டதிற்
பேயன் பழமூன்று தினமுமூன்று
நித்தமத்தி போட்டுதய மெடுத்துப்
பழமூன்று விதம் நிசமே யுண்டால்
தொத்துகின்ற வியாதியெல்லாமித்து
விழுந்தோடும் வகை சொல்லுவாயே. ௨௦௬

சொல்லு பித்தப்பிரமியமும் நீரெரிப்பும்
நின்றவிடஞ் சொல்லாதோடும்
மல்லுகின்ற ஐந்துவகைப் பிரமியமுந்
திரு கிசமகிழ்ந்து பாரு
வல்லமையினுற் பகலை யல் லெனச்செய்
திடுத்து லவமாலை மார்பின்
மெல்லி வளர்த்திடு முருகன் சரபேந்திர முறை
யிதென விளம்புவாயே. ௨௦௭



(இ-ள்)

பசுவின் தயிர்
பசுவின் பால்
பசுவின் நெய்
பசுவின் மூத்திரம்
பசுவின் சாணம்

இவைகளனைத்தையும் சரி அளவெடுத்து

| | |
|---|---|
| ஒன்றுகலந்து எடுத்த கலப்பு | 1 படி |
| இளநீர் | 1 படி |
| தாமரைவிழுதுச் சாறு | 1 படி |
| பொன்னாங்காணிச்சாறு | 1 படி |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |
| கருப்பஞ்சாறு | 1 படி |

இவைகளை ஒன்றுகலந்து,

| | |
|---|---|
| அதிமதுரம் | செங்கழுநீர்க் கிழங்கு |
| கிராம்பு | ஏலக்காய் |
| கோஷ்டம் | * சாத்திரவேதி |
| தான்றிக்காய்த் தோல் | நெல்லிமுள்ளி |
| சந்தனத்தூள் | கடுக்காய்த்தோல் |

இவைகளை வகைக்கு (1 பலமெடுத்து) 8 படி ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிய கஷாயம் 1 படியான பின் சாறுகலந்த நெய் வகைகளையும் கலந்து 3 நாளைக்கு எரித்து நான்காவது நாளன்று கடுகுதிரளக் காய்ச்சி வடிக்கவும். இதனுடன் சீனி சேர்த்துப் பேயன் வாழைப் பழம் மூன்றை மாலையில் அதில் போட்டு மறுதினம் மூன்று பழங்களையும் காலையில் உட்கொள்ளவும். இவ் விதம் செய்துவர,

---

* சாத்திரவேதி என்ற சரக்குக்குப் பதில் கொறுக் காப்புளியை உபயோகிக்கின்றனர்.

தீரும் வியாதிகள் :—

பித்தப்பிரமேகம், நீர் எரிச்சல், 5 வகைப் பிரமிய ரோகங்கள் முதலியவை.

## 119. இரத்தப் பிரமியத்துக்கு

வெண்கருணைக் கிழங்கும் நெய் நாழிக்
 கிருநாழிச்சாறு விதமாகத்
தண்பருத்தி விதைச்சாறும் வாழைப்
 பூவின் சாறுஞ் சரியாய்ச் சேர்த்துப்
பின்பு அதிமதுரமது பதின் கழஞ்சு
 தனைச்சாறு பகர்ந்த தெல்லாம்
ஒன்பு மிருந்தநுநாழிச் சாறை
 யிருநாழியென வைத்து காய்ச்சே. ௨௨௮

காய்ச்சியந்தச் சாறுதனை வார்த்து
 மதிமதுரமதைக் கலந்தரைத்து
தாச்சியி ல்லாவச்சாறு தனிற்போட்டு
 நெய்யுங் கூட்டித்தான் கலக்கி
வாச்சுகின்ற வறுபது நாழிகையூறும்
 படிக்கி வைத்து மற்று நாளில்
ஆச்சரியமிருந்த பதத்தி னில்வடித்
 தக்கொண்டு கித மருந்துவாயே. ௨௨௯

அருந்துவா யருந்திய சீரதிலி
 ரத்தப் பிரமியமு மணுகிடாது
வருந்துவாய் புளிப்பு கைப்புத் தவிர்த்
 திடப்பின்னல மிருந்த மகிழ்ச்சியுண்டாம்
திருந்து சகமீதிலுள்ள சாத்திரமெல்
 லாமுணர்ந்து தேர்ந்தெடுத்துப்
பொருந்துவதாய்ச் சரபோசி
 மகாராசனவி ன்றமுறை புகன்றவாறே. ௨௩௰



(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைக் கருணைக்கிழங்குச் சாறு | 2 படி |
| பசுவின் நெய் | 1 படி |
| பருத்திவிதைச்சாறு | 2 படி |
| வாழைப்பூச்சாறு | 2 படி |
| அதிமதுரம் | 10 கழஞ்சு |

இவைகளில் சாறுகளை மட்டும் ஒன்றுகலந்து, அடுப் பின்மேல் வைத்து 2 படியாகுமட்டும் வற்றக்காய்ச்சி அதில் அதிமதுரத்தையும் சாறுவிட்டு அரைத்துக் கலந்து, அச்சாறு வகைகளிலே பசுவின் நெய் சேர்த்து, 2 நாளைக்கு ஊறவைத்து மூன்றாவது நாளன்று அடுப் பின்மேலேற்றித் தகுந்த பதத்தில் வடித்து இறக்கவும். இதில் ஒரு கழற்சிக்காயளவெடுத்துத் தினந்தோறும் சாப்பிட இரத்தப்பிரமியம் தீரும்.

இதற்குப் பத்தியம்: புளிப்புப் பதார்த்தங்களையும் கசப்புப் பதார்த்தங்களையும் தவிர்க்கவும்.

## 120. இரத்தப்பிரமியத்துக்கு

வதுவூனன் கொழுந்தி ண்டைக்கொழுந்து
 மாவிரைக்கொழுந்தும் வகை மூன்றுஞ்சேர்த்
தெலுமிச்சங்காயின் சாற்றிலதை யரைத்து
 யெலுமிச்சங்கா யெனவெடுத்தும்
சொலு நல்லெண்ணெயினிற் கலந்துண்டிட
 விரத்தப் பிரமியமுஞ் சுருக்கித் தீரும்
நல மிகுமிப்புளியினிற் கைகண்டமுறை
 யென்றிதனை விளம்புவாயே. ௨௩௧

(இ-ள்)

| | |
|---|---|
| வதூன் கொழுந்து | இண்டைக்கொழுந்து |
| ஆவாரங்கொழுந்து | |

இம்மூன்றையும் ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணமே

பெத்து எலுமிச்சங்காய்ச் சாறுவிட்டு நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் (½ சேரில்) குழப்பிச் சாப்பிடவும். சகல வித இரத்தப்பிரமியமுந் தீரும்.

## 121. பிரமியம், பிரமியவாதம், பிரமியக்கட்டுக்கு மருந்து எண்ணெய்

ஒருபிடி தைவேளையிலையுடன் புழுங்க
லரிசியது மொரு சிரங்கை
இருவகையுஞ் சேர்த்து வாய்பேசாம
லரைத்தடை சுட்டெடுத் தருந்தப்
பிரமியச் சூலையுந் தீருமதுக் கெண்ணெய்,
பண்ணுமுறை பேசக்கேளு
தாமுள்ள நல்லெண்ணெய் யொன்றே காற்படி
வெள்வெங்காயந் தன்னையுரித்தே. ௨௩௨

உரித்ததுவு மொன்றே காற்படிப் பருப்பை
நறுக்கி யெண்ணெயுடனே போட்டுத்
தரித்திடச் சூரியப்புடம் வைத்தெடுத்துழக்கு
எண்ணெய் கிதந்தாலுண்டும் பின்
அரித்த எண்ணெய்க் கடுகுமொரு
வெலுமிச்சங்கா யருந்தவ் வெண்ணெய்
புரிந்து கைகா லுடம்பு எங்குமிட்டு
மதைப்பிடித்திடவே புகலுவாயே. ௨௩௩

புகலுவா யெண்ணெய் யெட்டு காளிரண்டு
நேரமனம் பிடித்த ருந்த
இகல் செய் பிரமியவாதக் கடுப்புக்
கட்டுந் தீருமதுக் கிசைந்த தின்னம்,
தருமொத்து மருந்து வரிக்கத்தாழை
யைத்துவைத்துத் தானெடுத்து
மிருந்ததனை வருத்து முச்சந்தலை
பிடரியென்று மொத்து மிகவும் போடே. ௨௩௪



போட்டுடன் பத்திய முப்புப்புளிப்பு மா
காதுண்டிடப் பொருந்தக் கேளு
நீட்டமுள்ள கொடியுன தூதனை வத்தல்
சிறுகீரை நிசமாய்ச் சேரு
வாட்டமுற்றுப் பிரமியமும் பிரமியக்
கட்டுக்கடுப்பு மாறித்தீரும்,
நாட்டுமிந்தப் புவியினிற் கைகண்ட
முறை யென்றிதனை நவிலுவாயே. ௨௩௫

(இ-ள்)

| | |
|---|---|
| தைவேளையிலை | 1 பிடி |
| புழுங்கலரிசி | 1 சிரங்கை |

இவ்விரண்டையும் வாய் பேசாமல் கொண்டுவந்து, தண்ணீரிலூற வைத்துக் கல்லுரலிலிட்டு அரைத்து, அடை சுட்டுத் தின்னவும்.

இதைப் பிரமியம், சூலை, இவைகளுக்கு வழங்கலாம்.

| | |
|---|---|
| 2. நல்லெண்ணெய் | 1¼ படி |
| வெள்வெங்காயப்பருப்பு | 1¼ படி |

வெள்வெங்காயத்தை நறுக்கிக்கொண்டு, நல்லெண்ணெயிலிட்டுச் சூரிய புடத்தில் வைக்கவும். இதில் ஒரு உழக்கு எண்ணெய் உட்கொண்டு, அதன் கடுகு ஒரு எலுமிச்சங்காயளவு சாப்பிடவும். இவ்வெண்ணெயைக்கைகள், கால்கள், உடம்பு இவ்விடங்களில் நன்றாகத் தேய்த்துக்கொள்ளவும். இவ்விதம் 8 நாளைக்குக் காலையிலும் மாலையிலும் தேய்த்துப் பிடித்துவிட்டுக் கொள்ளவும்.

பிரமியம், கடுப்புத் தீரும்.

3. ஒத்து மருந்து.

வரிக்கற்றாழையைக் கொண்டுவந்து, நசுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின்மேலேற்றி வருத்து, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஒத்தடமிடவும், அன்று

உப்பு, புளிப்பு நீக்கி, தூதுவளங்காய் வற்றல், சிறுகீரை இவைகளைக் கூட்டவும்.

பிரமியமும் பிரமியக்கடுப்புந் தீரும்.

## 122. பிரமியத்துக்கு மருந்து

வெள்ளிண்டங் கொழுந்ததனைப் பிட்டாகச்
சுட்டு நல்ல வெல்லத்தோடே
எள்ளெண்ணெயது கூட்டிப் பிசைந்ததொரு
பாத்திர மதினிலெடுத்து வைத்துட்
கொள்ளவு மெப்பிரமியமு நதீர்ந்திடும்
கைகண்டதிது குவலயத்திற்
றெள்ளிய சீர்மிகுந்த சரபேந்திரன்
செய்முறை யிதெனச் செப்புவாயே. ௨௩௬

(இ-ள்)

வெள்ளை இண்டங் கொழுந்தை, வேட்டில் வைத்துப் பிட்டாகச் சுட்டு, நல்ல வெல்லத்துடனே கலந்து சுத்த மான எள்ளெண்ணெய் விட்டுப் பிசைந்து ஒரு பாத்திரத் தில் வைத்துக்கொண்டு சாப்பிட்டுவரச் சகலப் பிரமேக மும் தீரும். கைகண்டது.

## 123. பிரமியத்துக்கு, எலும்புருக்கிக்கு

ஆவிரையினிலை யதனைக் கொண்டுவந்து
குளிர்ந்த தண்ணீர்தி றதெளித்து
மேவும் நன்றாயிடித்திச் சாறுசத்து மரைப்
படிபிழிந்தவ் வீதமாகத்
தாவுகின்ற உதைய மந்தியிரு போதாய்
மூன்றுநாள் தான்குடிக்கத்
தீவிரமாய்ப் பிரமேகம் எலும்புருக்கி
மேகமிவை தீருந்தானே. ௨௩௭



(இ-ள்)

ஆவாரையிலையைக் கொண்டுவந்து குளிர்ந்த ஜலம் தெளித்து நன்றாக இடித்துச் சாறு பிழிந்து அதில் ¼ படி யெடுத்துத் தினமும் காலைவேளையிலும் மாலைவேளையிலும் சாப்பிட்டு வரவும். பிரமேகமும், எலும்புருக்கியுந்தீரும்.

## 124. பிரமியவாதங் கூன் கட்டுக்கடுப்புக்குத் தைலம்

ஒருபடி நல்லெண்ணெய் யினிலொருபடி வெள்
ளுள்ளி தனையுரித்து வாங்கி
அரைத்தந்த வெண்ணெய தனிற்கலந்து
சூரியபுடம் வைத்ததை யாழாக்காய்
இரு போதுட்கொண் டெண்ணெய்சரு வாங்கம்
தலை முதலிட்டுப் பிடித்தே
அருமையுடன் எட்டுநாளிப்படிச் செய்
திடச் சிராமதுக்குக் கட்டே. ௨௩௮

கட்டு கூன் கட்டுகட்குக்கத் தாழையை
வெதுப்பிக் கட்டச் சிரசம்
கொப்புமுப்புக் கூட்டியே திருக்கை சுறுக்
கருவாடு சுகமாய்ச் சேர்ப்பாய்
திட்டமுடன் தீர்ந்து விடுமிதுக்கு கந்த
தைலமது செப்பக்கேளு
இட்டமுடனின்ற வெகுநாள் வேப்பம்
பட்டை சுமையினிலிரண்டே. ௨௩௯

இரண்டிலைமை கொண்டுவந்து நறுக்கியே
பெரிய முடாவினிலே போட்டுத்
தாமுடன் பூப்புடம் வைத்த தைத்தைல,
ருன்டாய்த்த் தான் வைத்துக்கொண்
டொரு துட்டிடைத்தைலம் நெற்பொரி
மாவிற் புரட்டி யுதய மந்தி

இரு போதாயெட்டு நாளருந்தத் தீர்ந்
திடும் வியாதி யியம்பக்கேளே. ௨௩௬

முடங்க லிதுவல்லா மல்
தியங்குமுடல் கூன்கட்டுக் கடுப்பு
முதலியவைக ளெல்லாந் தீர்ந்துபோகும்
வயங்கு லாவுந்தரணி தனிலிது
கைகண்டமுறை வளர்ச்சிங்காரச்
சுயம்புமிகு ஞ்சத்திரியகு லத்திலகன்
சரபேந்திரன் சொன்னதாமே. ௨௩௭

குறிப்பு :—செய்யுள் 236-ம் 237-ல் முதல் 3 அடிகளும் முந்திய முறையின் பாடபேதங்கள். 4-வது அடி முதல் பொருள் கொடுக்கப்படுகிறது :—

திருக்கைக் கருவாடு சுறாக்கருவாடு சாப்பிடவும். உப்பு கூட்டவும்.

வெகுநாள் சென்ற வேப்பமரத்தின்பட்டை இரண்டு சுமை கொண்டுவந்து நசுக்கிக்கொண்டு ஒரு பெரிய பானையில் போடவும். பானையில் போட்டு வாய்க்குப் பொருத்தமுள்ள ஒரு அகலினால் மூடிச் சீலைமண் செய்யவும். இதைக் குழியில் வைத்து மேலே பக்கத்தில் வரளியையடுக்கிப் புடம்போட்டுக் குழித்தைலமிறக்கவும். இதில் ஒரு துட்டெடையெடுத்து நெற் பொரிமாவில் புரட்டிக் காலையிலும் மாலையிலும் 8 நாளைக்குச் சாப்பிடவும். இதனால் முடங்கல், கூன்கட்டு, கடுப்பு முதலியவை தீரும். கைகண்டது.

## 125. பிரமியத்துக்கு, இரத்தப்பிரமியத்துக்கு மருந்து

வெள்ளரிக்காயைப் பிளந்து சுண்ணாம்பு
தடவியதை வெய்யிலில் வைத்துத்



தள்ளாம லெடுத்தருந்த வுடனி
ரத்தப் பிரமியமுந் தவிர்ந்து போகும்
விள்ளமுகில் விரியாத தென்னம்
பாளையைத்துவைத்தாவின் பால்விட்டுக்
கொள்ளவுஞ் சர்க்கரை போட்டுப்
பிரமியம் போம் புளிப்புகைப்புக் கூட்டொணாதே.

(இ-ள்)

1. வெள்ளரிக்காயைப் பிளந்து சுண்ணாம்பைத் தடவி வெயிலில் வைத்துச் சாப்பிட இரத்தப்பிரமேகந் தீரும்.

2. முகிள் விரியாத (மலராத) தென்னம்பாளையைக் கல்லுரலிலிட்டிடித்துப் பசுவின்பால் விட்டுப் பிழிந்து கொண்டு சர்க்கரைபோட்டு உள்ளுக்குச் சாப்பிடவும்.

பத்தியம் :—புளிப்பு, கைப்புத் தள்ளவும். பிரமேகந் தீரும்.

## 126. பிரமியம்—பிரமியவாதத்துக்கு, புண்சூலைக்கு

தூக்கிநூற்றிருபது வராகனிடைப்
பறங்கிப் பட்டைத் தோலை மேலில்
நீக்கி யெடுத்ததைப் பாக்குப் பொடியது
போலே நேராய்க் கொண்டு
தேக்கி யிரவியி லுலர்த்தி யெடுத்து
வடிகட்டியே யிருந்துந் தூளைத்
தூக்கி யொருபடி பசுவின்நெய் காய
வைத்ததிற் சேரச் சார்த்தடுத்தே. ௨௩௮

அடுத்து நனைத்திருபது வராகனிடைச்
சீரகத்தை அரைத்து நெய்யில்
எடுத்துப் போட்டதனை நன்றாய்க் கிண்டியே
முன்னமுஞ் செய்திருந்த தூளைக்
கொடுத்த தனிற்றூவி முழுக்கவு
மதிலே பதம் வரவுஞ் சுருக்கிலே பார்த்

தெடுத்திறக்கி வைத்துக் கொண்டிரு
  போதும் கொண்டிடு நாளீரைந்தும்மே. ௨௱௪

ஐந்திரண்டுகொள் தனக்கே மருந்
  தருந்திப் பத்தியஞ் செய்தப்படிக்கே
தொந்த மறுபத்திய முப்புப்புளிப்பை
  விட்டுவிடு துலங்கு கின்ற
சந்த விடைக் கோழிக்குஞ்சதனி
  லுப்பைச் சேர்க்காமற் றுனவித்துச்
சிந்தை மகிழ்ந்திட்ட நல்ல கரி
  செய்து கொண்டதனைத் தின்னுவாயே. ௨௱௫

தின்னு துவரம்பருப்பு மடைசுட்டும்
  வெந்நீருஞ் சேர்த்துக் கொண்டு,
இன்னவித மருந்தருந்திப் பத்தியமுஞ்
  செய்திடத் தீர்ந்திடும் வியாதி
மன்னு பிரமியனாதம் புண்சூலை
  க்கட்டுமுதல் மாறித்திரும்
நன்னயமாய்ச் சொன்ன முறையிது
  நிசங்கை கண்டதென நவிலலாமே. ௨௱௬

ஆவின் பால்விட்டு மூவின் விரியாத
  தென்னம் பாளையைத் துவைத்துத்
திவிரமா யெடுத்தனைப் பிழிந்து
  நல்சர்க்கரையுஞ் சேர்த்து வைத்தே
ஆவல்கொண் டுண்டவர்க்குப்
  பிரமியங்களென்றதெல்லா மனுகாதோடு
மேவிய கைப்புளிப்பைப் தவிர்ப்
  பதுவே பத்தியமாய் விளம்பலாமே. ௨௱௭

(இ-ள்)

பரங்கிப்பட்டை—120 வராகனெடை யெடுத்து மேல்
தோலை நீக்கி, பாக்குச்சீவல்போல் சீவி இடித்து வெயிலில்



காயவைக்கவும். இதை வஸ்திரகாயஞ் செய்து, ஒருபடி
பசுவின் நெய்யில் குழப்பிக் கொதிக்கவைக்கவும். பின்பு
20 வராகனெடை சீரகத்தை யெடுத்தரைத்து அந்த நெய்
யில் குழப்பிக் கிண்டிவைத்துப் பக்குவம் பார்த்து இறக்க
வும். தினம் 2 வேளை வீதம் 10 நாளைக்குக் கொள்ளவும். 2
நாளைக்கொருதடவை பத்தியமாக இருக்கவும். மறுபத்தி
யம் உப்பு, புளி நீக்கவும். கோழிக்குஞ்சை உப்பைச் சேர்க்
காமல் அவித்துக் கரி செய்துகொண்டு சாப்பிடவும். துவ
ரம்பருப்படை செய்துகொண்டு வெந்நீரில் உட்கொள்ளவும்

தீரும் வியாதிகள் :—
பிரமேகம், புண், சூலைக்கட்டு, முதலியவை.

## 127. பிரமிய உட்டிணத்துக்கு

மதுரமிலவங்க ஞ்சீரக மேலம்,
  வெண்காரம் வகையொன்றுக்கு
விதித்திரு காசிடையரைத்து நான்கு
  பலச் சர்க்கரையுமே தான்போட்டு
மதித்த வெங்காயச் சாற்றி லலது
  வெண்ணெயி னிலொன்றில் வைத்தருந்தக்
கதித்து நின்ற பிரமிய வுட்டினங்களெல்லாந்
  தீர்த்திடுமிதை கண்டதாமே. ௨௱௮

(இ-ள்)

அதிமதுரம் கிராம்பு
சீரகம் ஏலக்காய்
வெங்காரம்

இவைகளை வகைக்கு 2 காசெடையெடுத்து அரைத்
து நான்குபலம் சர்க்கரைபோட்டு, வெங்காயச் சாற்றிலோ
அல்லது பசு வெண்ணெயிலே சாப்பிட,
பிரமேகம், உஷ்ணம், தீரும்,

## 128. பிரமேகத்துக்கு, நீரடைப்புக்கு, உட்டினத்துக்கு

மிளகு சுக்கொடு வேலிவேர் வெண்
  காரப்பொரி மாவிலிங்கப்பட்டை
வளமிகுஞ்சாத்திர வேதி பூளை வேர்
  நெருஞ்சிவேர் வளரு ங்கல்நார்
உள மகிழ்சீரக மேலம் வெடியுப்பு
  திப்பிலி கல்லுப்பும் நேரா
யளவாகச் சூரணித்து வெள்ளரி
  வித்துப்பொடி நேரதனிற் சேரே. ௨௪௯

சேர்ந்த இரண்டு சூரண நிறைக்குச்
  சர்க்கரையைச் சேர்த்துக்கொண்டு
சீரிலங்கும் வங்க பற்பம் பண
  விடை யிரண்டுடனே சேர்ந்ததோடும்
நேருபண விடையிரண்டு அப்பிரக
  சிந்தூரம் நிதமிவ்வீதம்
பார் சூர்ணமதனிற் கலந்தனுபானங்
  கள்கண்டு பருகென்றோதே. ௨௫௰

ஓது வெறுகடிவீதம் வெண்ணெயில்
  வைத்தே யருந்த வுட்டினம்போஞ்
சாதகச் சுண்ணும்பு நீர்த் தெளிவி
  லுண்ண நீரடைப்பு ந்தவிர்ந்து ஓடும்
ஏதமில்சந்தனம் பூளைவேர் மோரை
  விட்டரைத்த தெடுத்திரண்டு
கோதில் கொட்டைப் பாக்களவில்
  வைத்துண்ணப் பிரமேகங்குணமாம் பாரே. ௨௫௧

(இ-ள்)

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| கொடிவேலிவேர் | வெங்காரம் (பொரித்தது) |



| | |
|---|---|
| மாவலிங்கப்பட்டை | சாத்திரவேதி |
| சிறுபூளைவேர் | நெருஞ்சிவேர் |
| கல்நார் | சீரகம் |
| ஏலக்காய் | வெடியுப்பு |
| திப்பிலி | கல்லுப்பு |

இவைகள் சமன் கூட்டிச் சூரணித்து, எல்லாவற்றிற்கும் சம எடை வெள்ளரி வித்துப்பொடி சேர்த்துக்கொள்ளவும். இவ்விரண்டிற்கு சரி எடை சர்க்கரை கலந்து வங்கபற்பம் 2 பணவெடையும், அப்பிரகச் செந்தூரம் 2 பணவெடையும் ஒரு வெருகடியளவு ஷை சூரணமுங் கூட்டிக் கலந்துகொள்ளவும். தினம் வெண்ணெயில் குழைத்துச் சாப்பிட உஷ்ணந் தீரும். சுண்ணும்பு நீர்த் தெளிவிலுண்ண நீரடைப்புத் தீரும். சிறுபீளை வேர், சந்தனம், இவ்விரண்டையும் 2 கொட்டைப்பாக்களவெடுத்து மோரில் அரைத்து அதனுடன் சூரணத்தைச் சேர்த்துச் சாப்பிடப் பிரமேகந் தீரும்.

## 129. இரத்தப்பிரமியத்துக்குஞ் சுக்கிலப்பிரமியத்துக்கும்

அத்திப்பட்டையு ங்குருவை யரிசியுஞ்
  சேர்த்துக் களியதாக் கிண்டி
வைத்துண்ணிலும் பகரிதனை கார்த்தங்
  காய் நேராப் வகுத்தரைத்து
சுத்த நல்லெண்ணெயிற் கலந்து குடித்
  திடினும் வெகுநாளாய்த் தொடர்ந்து நின்ற
நத்திரத்தப் பிரமிய ஞ்சுக்கிலப்
  பிரமியமுந் தீர்ந்து நலமுண்டாமே. ௨௫௨

(இ-ள்)
1. அத்திப்பட்டை குருவையரிசியுஞ்
சமமெடுத்துத் தண்ணீர் சிறிதுவிட்டு அடுப்பின்மேல்

வைத்துக் களியாகக் கிண்டிச் சாப்பிடவும்.

2. இக்களியில் நாரத்தங்காயளவெடுத்து சுத்தமான நல்லெண்ணெயில் குழப்பிப் பருகிவரவும். வெகு நாட்பட்ட இரத்தப்பிரமேகமும், சுக்கிலப்பிரமேகமுந் தீரும்.

## 130. இரத்தப்பிரமியத்துக்கும் சுக்கிலப்பிரமியத்துக்கும்

கருஞ்சீரகமு ங்கருந் தக்காளியிலை
  யிரண்டு மொன்றாய்க் கலந்தரைத்துப்
பொருந்துகின்ற வெள்ளாட்டுப்பாலி
  னிற் போட்டுக் குடிக்கும்போ தெப்போதும்
வருத்தி ரத்தப்பிரமியமுஞ் சுக்கிலப்
  பிரமியமுந் தீரு மனமகிழ்ச்சி
தருந்தரணிதனி லிது கைகண்ட
  முறையென்று நிசஞ் சாற்றலாமே. ௨௫௩

(இ-ள்)

கருஞ்சீரகம் கருந்தக்காளியிலை

இவ்விரண்டையுஞ் சமமெடுத்து அரைத்து வெள்ளாட்டுப் பாலில் குழப்பிப் பருகிவர இரத்தப்பிரமியந் தீரும். சுக்கிலப்பிரமியமுந் தீரும்.

## 131. பிரமியத்துக்கு வங்கபற்பம்

காய்ந்திடு சட்டியின மீது வெள்
  ளீயந்தானும் பத்துக்கழஞ்சு விட்டுத்
தோய்த்ததனிலே புளியம்பட்டைச்
  சாம்பலைப் போட்டுத்தொடு வறுக்க
வாய்த்த பற்பமாகு மெடுத்திரும்புப்
  பாத்திரமதற்குள் வைத்ததோடும்
பாய்ந்த ரசமிரு கழஞ்சு கெந்தகமு
  மிருகழஞ்சு பண்பாய்க் கூட்டே. ௨௫௪



கூட்டியே பொடிபண்ணி யரைத்துண்டை
  செய்ததனைக் கூர்மை வெய்யிற்
காட்டியே வைத்து பத்துநாழிகைக்கு
  மேலெடுத்துக் கல்வ மீதிற்
போட்டதனைப் பொடித்து கல்சிமிளி
  லடைத்தழிஞ்சில் விரைப்பொடியுஞ் செய்து
ஈட்டிரண்டுவகை வகைக்குப் பண
  விடையு மரை வீதமெடுத்துக் கொள்ளே. ௨௫௫

கொள்ளு மநுபானம் நல்ல பசுவின்
  வெண்ணெய் மீதுவைத்துக் கொண்டதற்கு
உள்ளபடி பாரு இருபது பிரமியமுந்
  தீருமுடனே இன்பம்
விள்ளவுன்னை கண்டறிந்து தஞ்சைநகர்
  வளர்ந்த பெருவிடை மீசர்க்கு
வெள்ளிவிடை செய்துவைத்த சரபேந்
  திரன்முறை யிதென விளம்புவாயே. ௨௫௬

(இ-ள்)

ஒரு புதுச்சட்டியை யடுப்பின்மேல் வைத்துக் காய்ந்தவுடன் சுத்திசெய்த வெள்ளீயம் 10 கழஞ்சுவிட்டு, உருகியவுடன் புளியம்பட்டைச் சாம்பலைச் சிறுகச்சிறுகப் போட்டு வறுத்துவர பற்பமாகும். இப்பற்பத்தை ஒரு இரும்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

| | |
|---|---|
| சுத்தி செய்த இரசம் | 2 கழஞ்சு |
| ,, கெந்தகம் | 2 கழஞ்சு |

இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு நன்றாக வரைக்கக் கருமையான பொடியாகும். அதனுடன் 2 பணவெடை ஷை பற்பங்கூட்டி நன்றாக அரைத்து வெயிலில் 10 நாழிகை வைத்துப் பின் கல்வத்திலிட்டுப் பொடி செய்து வைத்துக்கொண்டு ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது, அழிஞ்சில் விதைச் சூரணம் ½ பண வெடையும்–இந்த பற்பம் ½ பணவெடையும் கூட்டி வெண்ணெயுடன் கலந்து சாப்பிடவும். 20 பிரமேகமுந் தீரும். கைகண்டது.

## 132. சுக்கிலப்பிரமியத்துக்கும் இரத்தப்பிரமியத்துக்கும்

தாழை விழுதின் சாற்றிற் சர்க்
 கரையைப் போட்டுணினுந்தரணிமீதில்
வாழுமாக்கல் பொடித்துக் கா
 சிடை நிறுத்து வைத்த தோடுஞ்
சூழு மிருநாழித் தயிரினிற் கலந்து
 குடித்திடினுஞ் சுருக்கிலே தான்
தாழிரத்தப் பிரமியமுஞ் சுக்கிலப்
 பிரமியமு முடனே தவிர்ந்து போமே. ௨ருஎ

(இ-ள்.)

தாழை விழுதின் சாற்றில் சர்க்கரை போட்டுச் சாப்பிட்டாலும், அல்லது மாக்கல் பொடி *ஒரு காசிடைக்கு 2 நாழித் தயிர் விட்டுச் சாப்பிட்டாலும், அதிசீக்கிரத்தில் இரத்தப் பிரமேகமும் சுக்கிலப்பிரமேகமுந் தீரும்.

* 94 செ. சுவடியில் 3 காசிடையெனக் காணப்படுகிறது.

## 133. இரத்தப் பிரமியத்துக்குஞ் சுக்கிலப்பிரமியத்துக்கும்

மயிர்மாணிக்கப்பூண்டி னிலையை
 யொருபிடி பறித்து வந்தரைத்து
மயந்தரு மாவின் பாலிற் கரைத்துச்
 சர்க்கரை கூட்டி நாள்மூன் றுக்கு
வெயில் வந்தன் றுதைய மதிலிப்
 படிக்கே யருந்திவர வெருவன் வேதை



செயு மிரத்தப்பிரமிய முஞ்சுக்கிலப் பிர
 மியமும் நிசத்தில் தீருந்தானே. ௨ருஅ

மயிர்மாணிக்கம் இலை — 1 பிடி யெடுத்து நன்றாக அரைத்துப் பசுவின்பாலில் குழப்பிச் சர்க்கரை சேர்த்துத் தினமொரு வேளை வீதம் அதிகாலையில் குடிக்கவும். 3 நாளைக்குக் குடிக்கவும் வெகு நாட்பட்ட இரத்தப் பிரமேகமும் சுக்கிலப்பிரமேகமுந் தீரும்.

## 134. சேற்றுமதாகம் பிரமியதாகம்

வட்டத் துத்திவேர்த் தோலை யுரித்துலர்த்தி
 யிடித்தெடுத்து வடி கட்டிக்கொண்
டிட்ட வெல்லங் கூகை நீறிரண்டுமே
 வகைக்கொரு கழஞ்சு இனிப்பாவின் பால்
விட்டதனிற் போட்டு வெருகடி சூர்
 ணமுங் கலந்தவ்வித முண்டால்
துட்டப் பிரமியதாகஞ் சேற்றும
 தாகமுந் தீருஞ் சுருக்கிற்றானே. ௨ருகூ

(இ-ள்)

வட்டத்துத்தியின் வேரின் மேல் தோலையுரித்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதன் தூள் ஒரு வெருகடிக்கு வெல்லம் ஒருகழஞ்சும் கூகைநீறு ஒரு கழஞ்சும் சேர்த்துப் பசுவின் பாலில் சாப்பிடவும்.

பிரமேகமும், கபத்தினாலேற்பட்ட வறட்சியுந் தீரும்.

## 135. நான்குவகைப் பிரமியத்துக்கு வாயுவினாலெடுத்தத்துக்கு

பொடித்து மஞ்சளதைச் சேலைவடி
 கொண்டு செல்லிமுள்ளி போட்டரைத்

யெடுத்த தண்ணீரிலது செல்லிக்காயை
 த்துவைத்திடு சாற்றிலிரண்டி லொன்றிற்
றெடுத்திடு மூன்றாள் கலந்து கா
 சிடை தேன்விட்டு கன்றாய்த் தொட்டருந்த
மிடுக்கான நான்கு வகைப்பிர
 மியம் வாயுவுந்தீரும் விளம்புவாயே. ம சூ௰

(இ-ள்)

மஞ்சளை (வரளி) இடித்துத் தூள் செய்து வஸ்திர காயஞ் செய்துகொண்டு, அதற்குத் தக்கபடி நெல்லிமுள்ளியை யூரவைத்த ஜலத்திலாவது அல்லது நெல்லிக்காய்ச் சாற்றிலாவது கலந்துகொண்டு, தேன் 1 காசெடையும் விட்டுச் சாப்பிட்டுவரப் பிரமேகந் தீரும்.

## 136. பிரமியத்துக்குப் பார்ங்கியாதிக் கடாயம்

சிறுதேக்கு திப்பிலியுங் காஞ்சொறி
 கோரைக்கிழங்கு சீந்திற்றண்டும்
உறுவனஞ்சூழ் செம்பருத்தம்பூ பற்
 பாடகம் நிலவேம்போடுங் கோட்டம்
மறுவிலாக்கத்தரி காயக மிவைக
 ளரைப்பலமாய் வகைக்கெடுத்து
நிறுத்துப் பாண்டத்தினிற் போட்
 டொருபடி நீர்விட்டடுப்பில் நேராய் வைத்தே.

வைத்தெடுத் தெட்டொன்றாய்க் காய்ச்சித் தேனை
 விட்டு யுக்தியினில் மகிழ்ந்தருந்த
னொத்துப் பிரமியச்சுரங்கமரு மின்ன
 மொரு முறையைச்சொலு நல்லெண்ணெய்
யோத்தரைக் காற்படியிலரை ப்பல
 மிளகு மரைத்ததிற் போட்டொவ் வுங்கோழி
வைத்த முட்டையொன்று விட்டுக்கலந்
 தருந்தப் பிரமேத மாறுந்தானே. உசூஉ



(இ-ள்)

| | |
|---|---|
| 1. சிறுதேக்கு | திப்பிலி |
| காஞ்சோறிவேர் | கோரைக்கிழங்கு |
| சீந்தல் தண்டு | செம்பரத்தம்பூ |
| பற்பாடகம் | நிலவேம்பு |
| கோஷ்டம் | கத்தரிகாயகம் |

இவைகள் வகையொன்றுக்கு 1½ பலம் வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 1 படி தண்ணீர்விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சிக்கொண்டு தினம் சாயங்காலம் சாப்பிட்டு வரப் பிரமேகமும் சுரமும் தீரும்.

2. நல்லெண்ணெய் ⅛ படியில் மிளகு ½ பலத்தை நன்றாகவரைத்து, கோழிமுட்டையின் வெள்ளைக்கரு, இவைகளை யொன்றுகலந்து சாப்பிடவும். பிரமேகம் மாறும்.

## 137. நீர்மோராய்க் கழிகிற கழிச்சலுக்கு

சார்ந்தி டித்துக்குருவை யரிசியை நீர்
 வள்ளிக்கிழங்குச் சாற்றில் போட்டும்
சேர்ந்து களிக்கிண்டி நல்லெண்ணெயில்
 மூன்று நாட்கள தனைத் தின்றிட்டாலும்
ஆர்ந்த பெருந்துத்தி வேரரைத்துப்
 பசுவின் பாலிலருந்தினாலும்
ஓர்ந்து தூதுவளை வேரரைத்
 தாவின் பால்தனிலுண்ணினும் பாரே. ௦ சூ௬

பாரிதுக்கு நீர் மோராய்க் கழிவது
 நிற்கும் வேறு பகர்வதொன்று
நேரான சீந்திற்றண்டையும் நறுக்கி
 மேற்றோலை நீக்கிப் போட்டு

பீராவின் பாலைவிட்டு வேகவைத்துப்
பிசை நன்றாய்ப் பிழிந்துகொண்டு
சீரான கருப்புக் கட்டி போட்டுணச்
சிப்பிரமியங் கடைருந்தானே. ௨௬௪

(இ-ள்)

1. குருவை யரிசிமாவைத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றில் ஊரவைத்து, அடுப்பின்மேல் வைத்து, களியாகக் கிண்டவும். இதை 3 நாட்கள் நல்லெண்ணெயில் தோய்த்துத் தின்னவும்.

2. பெருந்துத்திவேரைப் பசுவின் பாலிலரைத்துக் குடிக்கவும்.

3. தாதுவேளை வேரைப் பசுவின்பாலில் அரைத்துக் குடிக்கவும்.

நீர்மோர் போலக் கழிவது நிற்கும்.

4. சீந்தில் தண்டின் மேல்தோலை நீக்கிப் பசுவின்பால் விட்டு, அடுப்பின்மேலேற்றி வேகவைத்துக்கொண்டு பிசைந்து பிழிந்துகொண்டு பனைவெல்லங் கூட்டிச் சாப்பிடச் சிழ்ப்பிரமேகம் தீரும்.

## 138. சுக்கிலப்பிரமியத்துக்கும் நீர்க்கடுப்புக்கும்

குறித்திரவிதனை வணங்கி கிலக்குமி
யினிலை யிருகை கொள்ளு மட்டும்
பறித்திடக்கையிலை யெறிவலக்
கையிலை சோறாறும் பழந்தண்ணீரில்
ஊறப்போட்டுப் பிசைந்து பிழிக்
அழக்காவி னெய்யுடனுள் ஒருமூன்றுண்ணத்
தெறித்திடு சுக்கிலப் பிரமியங்களுட
னீர்க்கடுப்புந் தீருந்தானே. ௨௬௫



(இ-ள்)

சூரியனைத் தியானித்து கிலக்குமியின் இலைகளை இருகை கொள்ளுமட்டும் பறித்துவந்து, இடதுகையிலிலையை யெறிந்துவிட்டு, வலதுகையிலிலையைப் பழைய நீராகாரத்தில் போட்டுத் துவைத்து, பிழிந்து, பசுவின் நெய் ஒரு உழக்கும் கூடவிட்டு 3 நாளைக்குச் சாப்பிடவும். சுக்கில பிரமேகம் உடனே தீரும்.

## 139. சுக்கிலப் பிரமியத்துக்கு, நீர்க்கடுப்புக்கு

செம்முள்ளியிலை பறித்து வேகவைத்து
வெந்ததற்பின் திரும்பச் சட்டி
விம்மமுலிற் காயவைத்து நெய்தெறித்து
வறுத்தரைத் தாவின் நெய்யிற்குள்
செம்மையாய்க் கலந்தெலுமிச்சங்
காய் நோய் மூன்று தினம் விழுங்க
வெம்மையுள்ள நீர்க்கடுப்புஞ் சுக்கி
லத்தின் பிரமேகம் விட்டுப்போமே. ௨௬௬

(இ-ள்)

செம்முள்ளியிலையைப் பறித்துவந்து அப்படியே வேகவைத்து, அதை மறுபடியும் நெய்தெளித்த சட்டியில் வேகவைத்து, எலுமிச்சங்காயளவெடுத்து நெய் விட்டு வறுத்து ஒரு எலுமிச்சங்காயளவெடுத்து நெயிலே குழைத்துச் சாப்பிடவும்.

3 நாளைக்குச் சாப்பிடவும்.

நீர்க்கடுப்பும் சுக்கிலப்பிரமேகமும் தீரும்.

## 140. சுக்கிலப்பிரமியத்துக்கு, நீர்க்கடுப்புக்கு.

குணஞ்செய் மூசுமூசுக்கை சமூலமுந்
துவைத்துத்தனிச் சாறுகக்கொண்டுழக்கக்
கணக்கலையிற்றேய்த்துப் பின்பா
மணக்கெண்ணெயை மூன்றுநாள் கருதித்தேய்த்து

இளைப்பு பித்தப்படி யிருந்து காலா
லெழுந்து நூழுவேலெனி இலே தான
தணிந்துவிடுங் கக்கலத்தின் பிரமே
கம் தீர்க்கப்புகத்தகர்ந்து தானே. ௨௬

(இ-ள்)

முசுமுசுக்கையைச் சமூலமாகக் கொண்டுவந்து ஜலம் சேர்க்காமல் இடித்துச் சாறுபிழிந்து அதில் ஒரு உழக்குச் சாறெடுத்துத் தலையில் தேய்த்துக்கொண்டு, ஆமணக் கெண்ணெயை 3 நாளைக்குத் தலையில் தேய்த்துவருவதானால் தலை முழுகவும்.

கக்கலப் பிரமேகம் தீரும்.

## 141. கிருதம்

பூசினிப்பழத்தை யிரண்டதாய் மூடியும்
பொட்டியுமாக்கி வெட்டித்
தேசுள வுலக்கையால் இடிக்கா யிற்
றிறமுடன் துவைத்த சாறது
மாசையாம் கரும்பு சீரமுட்டான்
கிழங்கு மதினுடன் வெள்ளரிக்காய்ச்சா
றேசியாக வகைக்கு நாழி
யினிய சாறெடுத்திடு வாயே. ௨௬

எடுத்தொரு சட்டி தன்னிலே யவ்வி
லேத்திமே காய்ச்சி யேனை பொடிகேள்
கடத்துள முற்றாகா சதிமதுரம்
கற்கட சிங்கிகச்சோலக்
கடத்துத் தாமரையின் விளையுமுசிதுவ
நீர்ச்சிப்பிலியுடனரத்தை
முடக்கிலா செஞ்சந்தன மிருவேலி
முருங்கி லாமிச்சம் வேரே. ௨௬



வெட்டிவேர் வேலி காசி கன்னாரி
வேர் மாமஞ்சள் பச்சிலையும்
சேருடன் வகைக்கு மொரு கழஞ்சதுவும்
சிறந்த வார்த்தே பொடியாக்கிச்
சீருடன் நாழி யாழி நெய்க்கிதுவும்
செப்பிடு மெரித்ததை யிறக்கிச்
சார் உத்மாண்ட கிருத மென்றிதின் பெயர்,
சாற்றியே கடவுளைப் பணியே. ௨அ

கடவுளைப் பணிந்து மண்டலம் கொள்ளக்
கனத்திடும் பித்தபாண்டதுவு
மிடக்குள சோகை சூட்டோடே பிர
மியமுள காமாலையுந் தீரும்
திடமிகும் புவியில் மாணிடர்களுக்கெய்
செப்பிய வைத்திய நூலை
வடவுட னாராய்ந்து ணர்ந்து வைத்ததுவ
மன்புள நந்தனின் றிபுலே. ௨௯

(இ-ள்)

பூசினிப்பழத்தை யிரண்டு பாகங்களாகப் பிளந்து உலக்கையால் இடித்துப் பிழிந்து சாறு 4 படி எடுத்துக்கொண்டு, இதனுடனே

| | |
|---|---|
| கரும்புச்சாறு | 4 படி |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | 4 படி |
| வெள்ளரிக்காய்ச் சாறு | 4 படி |

யும் கலந்து அடுப்பின்மேலேற்றிக் கொண்டு,

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | அதிமதுரம் |
| கற்கடசிங்கி | சிறுசோளம் |
| தாமரைவளையம் (இதழ்களும்) | கோஷ்டம் |
| திப்பிலி | சிற்றரத்தை |
| செஞ்சந்தனம் | வெட்டிவேர் |

இலாமிச்சம் வேர் — * காவி
கன்னாரிவேர் — மரமஞ்சள்
பச்சிலை

இவைகளை வகைக்கு 1 கழஞ்சுவீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து, கஷாயத்துடன் கலந்து, பசுவின் நெய் 1 நாழியும் கூட்டிப் பக்குவமாக எரித்து இறக்கவும். இந்நெய்யின் பெயர் "கூஷ்மாண்ட கிருதம்". இதையொரு மண்டலஞ் சாப்பிட்டுவரப் பித்தபாண்டு, சோகை, பிரமேகம், காமாலை முதலியவை தீரும்.

## 142. பிரமியத்துக்கு சீந்தில் நெய்

சீந்தியின்கொடி பேய்ச்சுண்டையின்
பழமுஞ்சேர் சங்கம்பழம் வசம்பு
பார்தமாங்கம்பிப்பிசின் கருஞ்சீரகம்
பண்பு தூதளையின் வேர்ப்பட்டை
வாய்ந்திடு ஞ்சுக்குப்பனை வெல்ல முள்ளி
வகைபத்தில் வகைக்கு முக்கழஞ்சு
சேர்த்ததை யரைத்து நாழி நெய்கூட்டித்
தீயை யிட்டெரித்தி டுவாயே. ௨௭௨

எரித்ததை வடித்து அம்பிகை தன்னை
யேதியானி த்துக்கொள்ளிற் தற்கு
வருந்திடு மேகப்பிரமியமுஞ் சூடும்
வாங்கிடும் கதிரவனின் பனிபோல்
திருத்திய மதிளுங்கூட கோபுரமும்
செழுமுஞ்சூழ் தஞ்சை நகரின்
உரத்திடு மிரதகச பரிசேனை க்கும்பர்
கோன்விபுவணர் முறையே. ௨௭௩

94 செ. சுவடியில் காவிக்குப்பதில் வாலுளுவையரிசி காணப்படுகிறது.



(இ-ள்)
சீந்தில் கொடி — பேய்ச்சுண்டைப்பழம்
சங்கம்பழம் — வசம்பு
கம்பிப்பிசின் — கருஞ்சீரகம்
தூதுவளை வேர்ப்பட்டை — சுக்கு
பனைவெல்லம் — உள்ளிப்பூண்டு

இவைகளைச் சமமாக மூன்று கழஞ்சுவீதமெடுத்து அம்மியிலிட்டு நன்றாகவரைத்து நெய் (பசுவின்) ஒரு நாழியுடனே கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இதனால் மேகங்களும் சூடும் தீரும்.

## 143. அபத்தமார்கம் (அபஸ்மாரம்?), விப்புருதி, விடபாகம் பிரமேகமிருபதுக்கும் நிலப்பனைக் கிழங்கு நெய்

நிலப்பனைக் கிழங்குங் கோரையின் மூலம்
நெருஞ்சி நன்னாரி பேய்த்தும்மட்டி
சலமுட்டான் கிழங்கு சிறுவழு தலைசேர்த்
தம்மட்டி சித்தாமல்லி பாதிரிவேர்
தலத்துச் சாறனையும் வில்வ வேர்ப்பட்டை
தாமரை வளையமுந் திராயும்
கலக்கமிலாத வழுக்கிரு வேருங்
கனல்மிகுங் கொடிவேலி வேரே. ௨௭௪

வேலி வேருடனே பதினாறு வகையும்
வெட்டியே வகைக்கொரு பலக்குச்
சலமாய் மூன்று மரைப்பலங் கூட்டிச்
சேர்த்திடித்தே நன்றாய்த் தானே
கோவசேர்த் தாணி விட்டதைக் காய்ச்சிக்
குறுணியா யிறக்கியே வடித்துப்
பாலும் நாலுழி நெய்யிருநாழி
பண்புள பூசினிக்காயே.

பூசினிக்காய் முள்ளிலவின் பட்டை
  பொன்னாங் காணி தாமரைவளைய
மாசை யாங்கரும்பு செல்விக்கா
  மிலுப்பை யதினிலை வெள்ளரிக்காயும்
சேசமாவெட்டு வகையுட சாறும்
  [illegible]வே ழியும் விட்டு
வாசமுஞ் சந்தனம் செய்தல் தாமரை
  விளையமு மதி மதுரமுமே. ௨௭௬

மதுரமு மாடாதோடை வேர்
  சிற்றமல்லி வேர முக்கிரு வேரு
[illegible] நன்னாரிவேர் [illegible]
  [illegible] [illegible] [illegible] மாஞ்சில்
இதமுள பேரிச்ச மஞ்சளிலுப்
  பையின்பூ வெட்டி வேரும்
பதமுள சாறணை வேரு மஞ்சிட்டி
  வெட்பாலை யினரிசியுந்தானே. ௨௭௭

அரிசியுஞ் [illegible] [illegible]
  [illegible]யின் கிழங்கு
முரியதோர் சரள தேவதாரமுமே
  முந்திரிகைப் பழஞ் [illegible]
சரி யிருபத்தஞ்சு வகையிவ் வகைக்கி
  த்தாலொரு [illegible] கட்டி
அரை பொடியாக வடியது கட்டி
  [illegible] [illegible],  ௨௭௮

[illegible] பொருசேர் செய்யது விட்டுத்
  [illegible]டனெரித்ததை வடித்து
ஆவலாயுன் [illegible] மிருபது சாறும்
  அபத்தமார்கம் விப்புறுதி



மேவியவிடத்தில் பாகமு மறும்
  பிரமேக மிருபதுந் தீருந்
தாவிய வாலைமுழுவதைக் கொல்லும்
  தஞ்சை [illegible] விபுவுரையே. ௨௭௯

(இ-ள்)

| | |
|---|---|
| நிலப்பனைக்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| நெருஞ்சி லமூலம் | நன்னாரிவேர் |
| பேய்த்தும்மட்டி | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| சிறுவழுதலை (சிறுகத்தரி) | சிற்றுமுட்டி |
| சிற்றுமல்லி | பாதிரிவேர் |
| சாரணை வேர் | வில்வவேர்பட்டை |
| தாமரைமிலைச்சருள் | திராய் |
| அமுக்கிராக்கிழங்கு | கொடிவேலிவேர் |

இச்சரக்குகளை வகைக்கு 3¼ பலம் [illegible] கல்லுரலிலிட்டிடித்து 4 மரக்கால் ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாக வற்றக்காய்ச்சி வடிகட்டிக் கொண்டு

| | |
|---|---|
| பசுவின்பால் | 4 நாழி |
| பசுவின் நெய் | 2 நாழி |
| பூசினிக்காய் | [illegible] |
| பொன்னாங்காணி | தாமரை [illegible] |
| கரும்பு | [illegible] |
| இலுப்பையிலை | [illegible] |

இவ்வகைகளின் சாறு தனித்தனியே ஒரு நாழி

இவைகளை பொன் [illegible]

| | |
|---|---|
| சந்தனம் | செய்தல் கிழங்கு |
| தாமரைமிலைச்சருள் | அதிமதுரம் |
| ஆடாதோடை வேர் | சிற்றுமல்லி வேர் |
| அமுக்கிராவேர் | அதிவிடயம் |

| | |
|---|---|
| கன்னுரிவேர் | கோஷ்டம் |
| ஷீரகாகோலி | சடாமாஞ்சி |
| பேரீச்சம்பழம் | மஞ்சள் |
| இலுப்பைப்பூ | வெட்டிவேர் |
| சாறணை வேர் | மஞ்சிட்டை |
| வெட்பாலை யரிசி | கடுகரோகிணி |
| காகோலி | காட்டு மாகாளிக்கிழங்கு |
| சரள தேவதாரம் | முந்திரிப்பழம் |
| சவ்வியம் | |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு சாறுகூட்டிய நெய்யுடனே கலந்து, அடுப்பின்மேலேற்றிக் கொதிக்கவைத்துப் பக்குவமாக இறக்கவும்.

இந்நெய்யைத் தினம் ¼ தோலா வீதம் 20 நாட்களுக்குச் சாப்பிட அபஸ்மாரம் (காக்கை வலிப்பு) விப்புருதி, விஷங்கள், 20 வகை பிரமேகங்கள் தீரும்.

## 144. சுக்கிலப் பிரமேகத்துக்கு மருந்து

சுக்கிலப் பிரமேகத்துக்கு மருந்தொன்
றோதுவே னுண்மையதாகப்
பக்குவமான தும்பையினிலையைப்
பறித்தொரு புன்னைக்காயளவு
நக்கியே யரைத்து மையது போல்
எருமை மோரினிலதைக் கலக்கி
யொக்கவே பத்து நாளது கொள்ள
வோடிடுஞ் சுக்கில மேகமுமே. ௨௮௰

(இ-ள்)

தும்பையிலையை ஒரு புன்னைக்காயளவு எடுத்து அம்மியிலிட்டுத் தண்ணீர் விடாமல் மைபோலரைத்து எருமை மோரில் கரைத்து 10 நாட்களுக்கு உட்கொள்ளவும். சுக்கிலப்பிரமேகந் தீரும்.



## 145. இரத்தப்பிரமேகத்துக்குக் கல்யாண கிருதம்

இரத்தப் பிரமேக மென்பதுக் கவிழ்த
மியம்புவே னுறுதியாய்க் கேளு
உரந்திடு மீரவெங்காயத்தின் சாற்றி
லொப்பில் வெண்காரஞ் சர்க்கரை
யரைத்து மத்தித்து மூன்று நாளாறு
மந்தியு ங்காலையு ங்கொள்ள
வருத்த மாமிரத்தம் விழுகிற மேக
மற்றிடு முத்தமர்களுக்கே. ௨௮௧

நெல்லிக்காயதன் சாறதுவும் நாலுபடி
திகழ்ந்திய சர்க்கரை நாலும்
நல்லதாய்ப்பல மிருபத்தஞ்சு போட்டு
நலமுள பதமதாய்க் காய்ச்சி
வல்ல வெட்பாலை யரிசியுமோம
மஞ்சிஷ்டி திப்பிலி கொத்த
மல்லி திரிபலை பொற்கொன்றை வேரும்
வன்கொடி வேலிப் பட்டையுமே. ௨௮௨

பட்டையுங் காட்டுத் திப்பிலி மிளகு
பண்புள சீரகத்தோடே
திட்டிடு விளாவினரி சியுங்கூட
மிசைந்த பன்னிரண்டின் வகையும்
இட்டமாய் வகைக்கோர் பலமது நிறுத்துச்
சேரு மெண்பலந்திரி கோப
மட்டமாய்க் கூட்டிப் பொடியது பண்ணி
யடியது கொண்டிடு வாயே. ௨௮௩

வடியது கொண்டு பதமாய்க் காய்ந்து
வருகையிற் பொடியதைத் தூவித்
திட்டெனக் கிண்டி யிறக்கியோர் கலசத்
தினிலே வை, புதனுடாகத்
துடி மிகுங்கலியாணக் கிருதமென்றே
சொல்லியே சிலைதனைப் போற்றி
யடவுடன் கொள்ளு காலையிற்றனே
யன்புட னிருபது காளே. உ-அசு

இருவது வகைப் பிரமேக மூலமு
மூத்திரக் கிரிச்சங்களும் பாண்டு
முரு மிருங்குட்டம் நரை திரையெலும்பு
முறிந்தது சந்தொடிந்ததுவும்
மரு மலடிக்கும் புத்திர னுண்டாம்
வன்ப லனுகு மிதற்குத்
தரணியில் மனுக்கா யுணர்ந்திடத் தன்றுந்
தஞ்சை மாநகர் கிபுவுரை யே. உஅரு

(இ-ள்)

1. ஈரவெங்காயத்தை யுரித்துச் சாறுபிழிந்து அதனுடன் பொரித்த வெங்காரம், சர்க்கரை இவைகளைச் சேர்த்து அரைத்து 3 நாளைக்குக் காலையிலும் மாலையிலும் உட்கொடுக்கவும். இரத்தப்பிரமேகம் தீரும்.

2. நெல்லிக்காய்ச்சாறு 4 படி எடுத்து, அதனுடன் சர்க்கரை 25 பலம் போட்டு அடுப்பின்மேலேற்றிப் பதமாய்க் காய்ச்சி

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | ஓமம் |
| மஞ்சிஷ்டி | திப்பிலி |
| கொத்தமல்லி | கடுக்காய்த் தோல் |
| நெல்லிவற்றல் | தான்றிக்காய்த்தோல் |
| பொற்கொன்றைவேர் | கொடிவேலிவேர்பட்டை |
| காட்டுத்திப்பிலி | மிளகு |
| சீரகம் | விளாலரிசி |



இவை வகைக்கு ஒருபலம் எடுத்து அதனோடு 8 பலம் திரிகோபம் (?) சேர்த்து எல்லாவற்றையும் நன்றாகத் தூளாக்கி வஸ்திரகாயம் செய்து நெல்லிச்சாறும் சர்க்கரைப்பாகும் பதமாகக் காய்ந்து வரும்போது இந்தப்பொடியைத்தூவிக் கிண்டி இறக்கவும். இதற்குக் கல்யாண கிருதம் என்று பெயர், இதைக் காலையும் மாலையும் இருபது நாள், வேளை ஒன்றுக்குக் கழற்சிக்காய் ப்ரமாணம் உட்கொள்ள, தீரும் வியாதிகளாவன :

1. 20 வகை ப்ரமேகங்கள்
2. மூத்திரக் கிரிச்சங்கள்
3. பாண்டு
4. குஷ்டம்
5. எலும்பு முறிவு
6. இடுப்புச் சந்து ஒடிதல் முதலியன.

இவை குணமாகும். மேலும் புத்திரனில்லாத ஸ்திரீகளுக்கு மலடு நீங்கிப் புத்திர சந்தானம் உண்டாகும்.

குறிப்பு :—‘திரிகோபம்’ என்ற சரக்கு இன்னதென்று விளங்கவில்லை. இந்திரகோபப் பூச்சியாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

## 146. இரத்தப்பிரமியம் முதலான இருபது பிரமேகத்துக்கும்

காட்டினில் வளர்சொறி கருணையின் கிழங்கை
கணக்கதாய்ப் பலம் பதினாறு
நாட்டிகம் லிக்காய் செங்கொடிவேலி நான்
ரெண்டும் வகை பலமஞ்சு

காட்டினி லழிஞ்சில் பலமது நிறையும்
காலு செவ்வியமு மூன்று பலம்,
வாட்ட மில்மிளகு திப்பிலி சீரம்
வகைக்கொரு பலமது சேரே. ௨அ௬

சேரிவை யெல்லாங் கூட்டிய நிறைக்குச்
சீனியுங் கூட்டியே குழம்பாய்ச்
சீருடன் பாகமதுடன லையுஞ்
செய்தொரு மண்டலங் கொள்ள,
வாரிடு மூத்திரக்கிரிச்சமுங் குட்ட
முன்மூலக் கிராணியுங் குன்மஞ்
சீரியப் பிரமேகமு மிருபதுவுந்
தீர்த்திடும் பாண்டு வுந்தானே. ௨அ௭

(இ-ள்.)

| | |
|---|---|
| காட்டுக் கருணைக்கிழங்கு | 16 பலம் |
| கடுக்காய் | 5 பலம் |
| செங்கொடி வேலிவேர் | 5 பலம் |
| அழிஞ்சில் வேர் | 4 பலம் |
| சவ்வியம் | 3 பலம் |
| மிளகு | 1 பலம் |
| சீரகம் | 1 பலம் |
| திப்பிலி | 1 பலம் |

இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து சூர்ணங்கள் சேர்ந்த நிறைக்கு சமமாகச் சீனி சேர்த்துத் தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றிப் பாகு காய்ந்து குழம்பாய் வரும்போது இறக்கிக்கொள்ளவும். இதை ஒரு மண்டலம் காலையும் மாலையும் கழஞ்சளவு உட்கொள்ளத் தீரும் வியாதிகளாவன :—

1. மூத்திரக்கிருச்சிரம் 2. குஷ்டங்கள் 3. மூலக் கிராணி (கிரஹணி) 4. குன்மம் 5. இருபது பிரமேகம் 6. பாண்டு.



## 147. இரத்தப்பிரமேகம் முதலிய இருபது மேகத்துக்கு

அத்தியின் பிஞ்சைத் துவைத்து வெந்நீர் வார்த்
தலைப் பிசைந்தே வடிகொண்டு
பத்து நாட்காலை யந்தியுமுரி நீர்
ப்பரிவுடன் கொள்ளு மிதற்கு
ரத்தப்பிரமேகம் பெண் பெரும்பாடு
நீரழி வறு முண்மையான
கந்தனைப் பூசித்தருள் பெருந்தஞ்சைக்
காவலனுரை த்திடு முறையே. ௨அஅ

(இ-ள்)
அத்தியின் பிஞ்சைத்துவைத்து வெந்நீர்விட்டுப் பிசைந்து வடிக்கட்டி, 10 நாள் காலையும் மாலையும் சாப்பிட்டு, மேலே அரைப்படி சுத்த ஜலம் சாப்பிடவும். இதனால் இரத்தப்பிரமேகம் முதலிய நீரிழிவுகள், ஸ்திரீகள் பெரும்பாடு என்னும் மாதவிடாய்ப்பெருக்கு, இவைதீரும்.

## 148. நீரழிவு, பெரும்பாடு பிரமேகத்துக்கு

கோரமா மிரத்தப் பிரமிய மதுக்கும்,
கூறுவேனோர் மருந்துகேள்
காரையினிலையை யரைத்தெரு மையின்
மோர் கலந்துமே காலையு மந்தி
சோமிரண்டுங் கொண்டிடத் தானே
நீரழிவுடன் பெரும்பாடும்
கூறிய இரத்த மேகமு மறுமே
குடமுனியுரை விபுவுரையே. ௨அ௯

(இ-ள்)
காரையிலையை அரைத்து எருமைமோரைக் கலந்து காலையும் மாலையும் கொள்ள ரத்தப்பிரமேகம் முதலிய 20 வகைப் பிரமேகங்களும், ஸ்திரீகள் பெரும்பாடும் தீரும்.

## 149. இரத்தப்பிரமேகம், நீரிழிவுக்கு மஞ்சிக்கிழங்குச் சூர்ணம்

மஞ்சிக் கிழங்கைச் சிறுகவரிந்து
அலரிமுன் காயலவத் திடித்து
மிஞ்சி டாமலுமே வடியது கொண்டு
வெருகடி மூன்றதி லெடுத்து
விஞ்சையாக் தேனிற் பத்து நாட்கொள்ள,
விடுமிர த்தப்பிரமேக
மஞ்சியே யோடும் நீரழி வென்ப
தறுமுனி யோருரை யாமே. ௨௯

(இ-ள்)

மஞ்சிக்கிழங்கை சிறு துண்டுகளாக வெட்டி வெய்யி லில் காயவைத்திடித்து வஸ்திரகாயம் செய்து அதில் மூன்று வெருகடி வீதம் தேனில் கலந்து 10 நாள் சாப் பிட ரத்தப்பிரமேகம் முதலிய பிரமேகங்கள் தீரும்.

## 150. வயிற்றுபேதி, இரத்தம் விழுகிறதற்கு, பீராய்த்தூள் மருந்து

முதிர்ந்த பிராமினிலே யதை யலரிமுன்
உலர்த்தியு மதை யுரலி
லதிரவே யிடித்து வெருகடி துணை
யாவினின் பாலிலே கலக்கி
விதமந்திகாலை பத்து நாட்கொள்ளு
கெடும் வயிற்பேதிய தானல்
பதமதா மோருஞ்சாத முங்கொள்ளப்
பலமிரு மிரத்தமு மறுமே. ௨௧௧

(இ-ள்)

முற்றின பிராய் இலையை வெய்யிலில் காயவைத்து அதை நன்றாகத் தூளாகும்படி உரலில் இடித்து ஒரு



வெருகடித்தூளைப் பசுவின்பாலில் கலக்கி தினம் காலை மாலை இருவேளையும் 10 நாள் சாப்பிட நாள்பட்ட வயிற் றுப்பேதியும் ரத்தம் விழுவதும் நின்றுவிடும்.

## 151. பிரமியத்துக்கு நார்த்தம்பழ மருந்து

வனத்தினார்த்தம் பழமது மூன்று
வளமுடன பிழிந்திடு ரசத்தில்
மினமதாயூசிக்காந்த மோர்பணவி
ளிடையதிற் போட்டு மத்தித்துத்
தினமது மூன்று நாளது பொழுது
சீருடன் கொண்டிடுக்கைப்பில்
மனமும் வையாதே புளிப்பதுந் தள்ளு
வன்பிரமிய மதுவும் போமே. ௨௯௨

வட்டத்துத்தியின் வேர் சிறுகீரை வேரும்
வன்பொன்னாங் கண்ணி யின்வேருச்
சிட்டமாம் நெருஞ்சில் வேரிது நாலுஞ்
சேர்த்தரைத் திரண்டு பாக்களவு
மிட்டு நற்பசுவின் பாலினிற் குழப்பி
யே கொளு காலைக்கு நாளு நீ
துட்டமாம் மேகப்பிரமியந் தீருஞ்
சுகமிகுந் தஞ்சைமா நுரையே. ௨௯௩

(இ-ள்)

1. மூன்று நல்ல நார்த்தம்பழங்களைச் சாறு பிழிந்து, ஒரு பணவிடை ஊசிக்காந்தத்தை அதிற்போட்டு மத் தித்து மூன்று நாள் காலையும் மாலையும் சாப்பிடப் பிர மேகம் தீரும்.

இதற்குப் பத்தியம்:—கைப்பும், புளிப்பும் தள்ளவும்.

2. வட்டத்துத்தி வேர் — சிறுகீரை வேர்
பொன்னாங்காணிவேர் — நெருஞ்சில்வேர்

இவை நான்கையும் சேர்த்து அரைத்து இரண்டு பாக்களவு விழுது எடுத்துப் பசுவின்பாலிற் குழப்பி காலைந்துநாள் சாப்பிட, மேகப்ரமேகம் தீரும்.

1. 94 செ. உரைநடைச் சுவடியில் 'கார்ப்பும் புளிப்புந் தவிரவும்' என்று கண்டிருக்கிறது.

## 152. சிழ்ப்பிரமியத்துக்கு நீர்ப் பூலாவேர் மருந்து

காணிநீர்ப்பூலர் வேரதனை யரைத்துக்
  கற்றாழைச் சோற்றினிற் போட்டுத்
தானதை நன்றாய்ப் பிசைந்திடி லதுவுந்
  தண்ணீரா மிதிலே சர்க்கரையும்
நேயமாகக் கூட்டியே குழப்பி
  நினைவுடனே கொள்ளு காலையிலே
ஊனமாஞ் சிழ்ப்பிரமியமு மிக்க
  வூரையும் விட்டு மோடிடுமே. ௨௯௪

(இ-ள்)

நீர்ப்பூலா வேரை அரைத்துக் கற்றாழைச் சோற்றில் போட்டு நன்றாய்ப் பிசைந்திட அது நீர்த்துவிடும். அதில் சர்க்கரை சேர்த்துக் குழப்பித் தினம் காலையில் சாப்பிடவும். இதனால் சிழ்ப்பிரமியம் தீரும்.

## 153. மேகவாயுவுக்கு அமுக்கிருக்கிழங்காதிப்பிட்டு

அமுக்கிருக் கிழங்காப் பாலிலே சேரு
  மரையதிற் சுத்தியும் பண்ணிச்
சமத்தன பரங்கிப்பட்டை சேரொன்று
  தன்னையு முசுமுசுக்கைச்சா
றமுக்கியே யூறவைத்ததையுலர்த்தி
  யளவுடன் சரிநிறை பொடித்துச்
சமைந்திடும் நல்ல இரத கற்பூரஞ்
  சாதி லிங்க மதுவுங் கூட்டே. ௨௯௫



கூட்டிடு மிருதார் சிங்கு இம்மூன்றும்
  குறைமிலாநிறை வராகனிடை
நாட்டினிற் சித்திர மூலமுமோர் பல
  முங்கணக்குடனால் வகைச் சரக்கும்
வாட்டமில்லாத முசுமுசுக்கைச் சாறு
  வார்த்தரைத்தே முன் சொற்படியி
னூட்டமாய்ப் பிசைந்து மறுபடி தானே
  நலமுடன் செய்வகை கேளே. ௨௯௬

வகையது கேள் சட்டியினிலே தானை
  வைத்து மற்றொரு சட்டி தன்னில்
அகமகிழ்ச் சந்தனத்துடன் சாம்பி
  ராணி குங்குலியமு மோமம்
நகருஞ்சீரகம் வகையது மோர்
  வகைக்குமோர் பலமதாய்ப் போட்டுச்
சுகமதாய் வேகட்டியே முன்னே
  சொன்னதூள் தன்னை வைப்பாயே. ௨௯௭

வைத்ததின் மேலோர் சட்டியால் மூடி
  மண்ணுட் சேலையுஞ் செய்து
சித்தரை யன்பாய் நினைந்து கைகூப்பித்
  தியானித்து அடுப்பினி லேற்றி
யுத்திடு தீயைச் சிறுகவு மெரித்து
  ஒரு முகூர்த்தமதனி லிறக்கிச்
சுத்த மான்காசிடை தின்று மண்டலமுஞ்
  சூடுடன் மேக வாய் வறுமே. ௨௯௮

(இ-ள்)

அமுக்கிராக்கிழங்கைப் பசுவின்பாலில் சுத்திசெய்து நிழலிலுலர்த்தி அதில் அரைச்சேரும், பரங்கிப்பட்டை ஒருசேர் எடுத்து அதை முசுமுசுக்கைச் சாற்றில் அமுக்கி ஊறவைத்து அதையும் உலர்த்தி இரண்டையும் பொடி

செய்து சரி நிறை எடுத்துக்கொண்டு அதனுடன் ரசகற்பூரம், மிருதார்சிங்கு, சாதிலிங்கம் இவை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக்கொண்டு, கொடிவேலி வேர்ப்பட்டை ஒருபலம் சேர்த்து இச்சரக்குகளையெல்லாம் முசுமுசுக்கைச் சாறுவிட்டு அரைத்து, எடுத்து வைத்துக் கொள்ளவும். சந்தனம், சாம்பிராணி, குங்கிலியம், ஓமம், கருஞ்சீரகம் இவை வகைக்கு ஒருபலம் எடுத்து ஒருசட்டியிற் போட்டு அதற்கு வேடுகட்டி அதன்மேல் மேலே சொன்ன தூள் சரக்கு வகையராவை வைத்து மேலே ஒரு சட்டியால் மூடி, சீலமண் செய்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக ஒரு முகூர்த்தம் எரித்து இறக்கவும். வேட்டியுள்ள மருந்தை எடுத்து தினம் கரசிடை வீதம் ஒரு மண்டலம் சாப்பிட, சூடும், மேகவாயுவும் குணமாகும்.

## 154. மேகவாயு, சூலைக்கு வங்கபற்பம்

வங்க பற்பஞ்செய் விதமதைக் கேளு
　வங்கமு மோர் பலமுருக்கிப்
பங்கிடாய் மூன்றுதரம் பசு மோரிற்
　பாவனையுடனதைச் சாய்த்துப்
பொங்கமாம் கல்லெண்ணெயிலே மூன்றுதரம்
　பொருந்தவே யுருக்கியுஞ் சாய்த்துத்
தங்கு சட்டியிலே வைத்துமே யுத்தம
　தாளியின் சாறது தானே. ௨௯

சாறது நாழி விட்டடுப் பேற்றித்
　தானெரி மெத்தெனத் தானே
சாறதுசுண்டிப் பற்பமா முதையுந்
　தானெடுத்தே சிமிழ் வைத்துச்
சீறுள தேக வலுவு மந்நோயின்
　திறமது கண்டனுபான



சாரமதறிந்து கொடு பணவிடையுந்
　தப்பினாற் பணவிடை யிரண்டே. ௩௰

இரண்டின் மேலதிகம் கொடாதே நீ யத்திய
　மே சுடுநீரமு துண்ணு
பரவை யிதுப்பு மாத்திர க்துவரம்
　பருப்பிளங் கீரையுங் கூட்டு
சரிவிதுக்கேழு பத்து நாடன்னிற்
　றுனறு மேகவாய்வு சூலை
அருகட றேடுங் கைகண்ட முறையாஞ்
　சுருக்குடன் செய்து கொண்டிடுவே ௩௧

(இ-ள்.)

சுத்திசெய்த வங்கம் ஒருபலம் எடுத்து உருக்கி அதை மூன்று தடவை பசுவின்மோரில் உருக்கிச் சாய்த்து கல்லெண்ணெயில் மூன்றுதடவை உருக்கிச் சாய்த்து அதை எடுத்து ஒரு சட்டியில் வைத்து உத்தமதாளியின் சாறு ஒருபடிவிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரிக்கவும். சாறு சுண்டிப் பற்பமாகும். அதை எடுத்துச் சிமிழியில் வைத்து நோயாளியின் தேகவலிவும், நோயின் வலிவும் கண்டு தகுந்த அனுபானத்துடன் ஒரு பணவிடை முதல் இரண்டு பணவிடை வரை கொடுக்கவும். இரண்டு பணவிடைக்கு மேல் கொடுக்கக்கூடாது.

இதற்குப் பத்தியம்:—வெந்நீரும் சாதமுமாகச் சாப்பிட வேண்டும். உப்பு, துவரம்பருப்பு, இளங்கீரை இவை சேர்த்துக்கொள்ளலாம்.

இதைத் தினம் 7 அல்லது 10 நாள் சாப்பிட மேகவாயு, சூலை இவை குணமாகும்.

## 155. மேகரோகம்,மேகவாயுவு,மேகசூலைக்கு இரத செந்தூரம்

செங்கலோர் புறத்திலொரு விரலாழக்
  கிறமுடன் தோண்டியே யதனிற்
பொங்க மாமிளகும் வெத்திலைக் காம்பும்
  பொருந்தவே கூட்டி நன்றான
செங்கை யாவரைத்தோர் கொட்டையின் பாக்க
  தினளவிடு மிலே போட்டுப்
பங்க மிலிரதம் விட்டதின் மேல்முன்
  பரைத்திடு மருந்ததால் மூடே. ௩௪௨

மூடதின் மேலோர் செங்க லாற்றானே,
  மூட்டியே சீலைமண் செய்து
வாடிடாமலுமே நேருடன் வைத்து
  மதைக் கசப்புடமதாய்ப் போட்டுத்
தேடிடா நற்செந்தூர மதாஞ்சிமிழிலே
  யெடுத்ததை வைத்துச்
சாடியின் றேனி லொரு பணவிடையுந்
  தான் கொடுவாய்வது போமே. ௩௪௩

கொடுமிகு மேக வியாதி கடனக்கும்
  கொடு பசுவெண்ணை யிற்றானே.
அடிமிகுஞ்சூலை மேக வாய்வென்ப
  தோட்டிடு மேக மதெல்லாப்
படியதையாளும் விபு சரபேந்திரன்
  பாரினின் மனுவதற்காக
அடவுடனு ணர்ந்தும் நிச்சயஞ் செய்து மருள்
  ரச செந்தூரமாமே. ௩௪௪

(இ-ள்)

ஒரு செங்கல்லில் ஒருபுறத்தில் ஒரு விரலாழம்தோண்டி



மிளகு வெற்றிலைக்காம்பு

இவைகளைச் சேர்த்து நன்றாக அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு அந்தக் குழியில் போட்டு அதின்மேல் சுத்திசெய்த பாதரசம் (6 கழஞ்சு) விட்டு அதன்மேல் முன்பு அரைத்த மருந்தாலேயே மூடி அதை மற்றோர் செங்கலால் மூடி சீலைமண்செய்து சாயாமல் நேரேவைத்து கஜபுடத்தில் வைத்து புடம்போடவும். அப்போது அது சிந்தூரமாகும். அதையெடுத்து சிமிழில் வைத்து ஒரு பணவிடைவீதம் தேனில் கொடுக்க மேகரோகம், மேகவாயு, மேகசூலை இவைபோகும்.

1. பாதரசம் '6 கழஞ்சு' என்பது 94 கெ. சுவடியில் காணப்படுகிறது.

குறிப்பு :- கஜபுடம் = நூறு எருமுட்டையில் போடும் புடம் (பதினென் சித்தர் வைத்திய மூலிகை அகராதி)

## 156. இருபத்தோரு மேகத்துக்கு ஆவரையாதிக் கிருதம்

ஆவரை பொன்னான் கண்ணியினுடன் வல்
  லாரையு முசுமுசுக்கை யிலை
காவினிற் கீழாநெல்லி யிணிலையுங்
  கற்பூர வல்லி யிணிலையுந்
தாவிய மாதளையிலை பொடுதலையுந்
  தாமரை வளைய மதுடனே,
மேவிய சிறுக்கீரையும் பருத்தியிலை
  மேலுந்தூது வளையுந்தானே. ௩௪௫

தூதுவளைய மாத்திர ங்கடாய மற்
  றுளபதினொன் றுமே சாறு
மீதுடன் பன்னிரண்டு மோர்வகைக்
  குமித முடனொற்படி சாறு

மோதிய காவல் நிலக்கு மிழத்தி
யொதியு முள்ளிலவினிற் பட்டை
மாதளை யாவாரை யாயிற் பட்டை
மாதளம் பிஞ்சு மொன்பதுமே. ௨௭௬

மாதளம் பிஞ்சோ டொன்பது வகையும்
வகைக்கொரு தூக்குமே யிடித்துச்
சீர்தகத் தண்ணீர் மிதக்கவும் விட்டுத்
திரன்னதை வற்றிடக் காய்ச்சி
சதுமிரண்டு படியான வற்றே
யிறக்கி முன் சாற்றினி லூற்றி த்தி
மீதி மிர்மனைக்கி னெண்ணெய் படிமுக்கால்
மேலும் நல்லெண்ணெ யோர் படியே. ௨௭௭

படியது அரையும் நல்லெலுமிச்சம்
பழத்தினிற் சாறது மூன்றும்
அடவுடன் விட்டுக் காய்ச்சி மூன்றுபடி
யாகிய போதி னிற்றுவே
திடமுட கற்கமஞ் சொல்வேனேலக்
திணை யிளகுடனே சுக்கதுவுங்
கடிமிகு சன்ன லவங்கத்தின் பட்டை
சுக் கருவாப்பட்டை யதுவே, ௨௭௮

பட்டையோ டைந்துவகை யிலோர் வகைக்குப்
பலமரை சாதிக்காய்த்தானே,
மட்டமா யிரண்டு வராகனி னிடையு
மருமிகுஞ் சாதிபத்திரியுங்
கிட்டமாம் கிராம்புவகை யிரண்ட தனித்
சேரொரு வராகனி னிடையு
மட்டில்லாமத் தூளது செய்து
மதை வத்திரகாயமும் பண்ணே. ௨௭௯



வத்திரகாயம் பண்ணி யதனை
வளமுடன் மேன்பொடி தூவி
அத்தலைப் பேரற்றி யிறக்கியே வடித்து
முத்தியுங் காலையுந்தானே
சுத்தமாயோர் அட்டிடையது கொண்டு
தொல்லை செய் யிருபது மேக
மத்திடும் கோயின் வலுத்திறங் கண்டு
வளமுள பத்தியஞ் சொல்லே. ௨௮௰

(இ-ள்)

| | |
|---|---|
| ஆவாரை இலை | பொன்னாங்காணி இலை |
| வல்லாரை இலை | முசுமுசுக்கை இலை |
| கீழாநெல்லி இலை | கற்பூரவல்லி இலை |
| முடக்கற்றான் இலை | பொடுதலை |
| தாழுதாழையும் (இலைச்சுருள்) | சிறுகீரை |
| பருத்தியிலை | தூதுவளை |

இவைகளில் தூதுவளையை கஷாயம் போட்டுக்கொண்டு மற்ற இலையிலும் சாறு எடுத்து வகைக்கு காலுபடி சாறு எடுத்துச் சேர்த்து,

| | |
|---|---|
| காவல்பட்டை | நிலக்குமிழ்ப்பட்டை |
| ஒதியம்பட்டை | அத்திப்பட்டை |
| முள்ளிலவம்பட்டை | மாதுளை மரப்பட்டை |
| ஆவாரம்பட்டை | ஆயில்பட்டை |
| மாதுளம்பிஞ்சு | |

இவை வகைக்கு ஒரு தூக்கு (6¼ சேர்) எடுத்து இடித்துப் பானையில் போட்டு இவை மிதக்கும்படியான தண்ணீர்விட்டு இரண்டு படியாக வற்றும்படி காய்ச்சி இறக்கி இறுத்து முன்சொன்ன சாற்றில் ஊற்றி

ஆமணக்கெண்ணெய். ¾ படி நல்லெண்ணெய் 1 படி
எலுமிச்சம்பழச்சாறு 3 படி

இவைகளையும் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டி வரும் போது

ஏலம் ½ பலம் மிளகு ½ பலம்
சுக்கு ½ பலம் சன்னலவங்கப்பட்டை ½பலம்
கருவாப்பட்டை ½பலம் ஜாதிக்காய் 2 விராகனிடை
ஜாதிபத்திரி 1 விராகனிடை கிராம்பு 1 ,,

இவைகளைத் தூள்செய்து வஸ்திரகாயம் பண்ணித் தூளை மேம்பொடியாகத் தூவிக்கிளறி இறக்கிவைத்துக் கொள்ளவும். காலை மாலை இருவேளையும் இதில் ஓர் துட்டிடை கொள்ள 20 வகை மேகமும் குணமாகும். நோயாளியின் வலுவுக்குத் தகுந்தபடி பத்தியம் சொல்லவும்.

### 157. மேகமிருபது, சூலை, காமாலை, பாண்டு, எலும்புருக்கி, நெஞ்சுவலி, கெற்ப அழிவு, மேல்மூச்சிருமல் சகலத்துக்கும், நிலப்பனைக்கிழங்கு நெய்

நிலப்பனைக் கிழங்கு கருங்காலிப்பட்டை
நேருள வத்தியின் பட்டை
பலமிது மிரண்டும் வகைக்குமே போட்டு
பதக்குநீர் விட்டதைக் காய்ச்சி
கலத்துடன் சுண்டிவரும் பொழு தண்ணீர்
நாழியாம் போததை யிறக்கித்
தலத்தினிற் புளியாரை யினிலையாரை
தன்னிலை வறட் சுண்டியிலையே. ௫௧௧

இலை தன்னி லிட்டான் கிழங்குடன் கொட்டி
யின் கிழங்குடன் முற்றக் காசு
இலவினிற் பிசினுக் தின்றிடும் விளாம்பிசு
சினிய மாதளம் பிஞ்சுடனே



கலமிரும் வில்வம்பிஞ்சு மாதிப்பூ
காட்டினிற்றாமரைத் தாதும்
நிலப்பெரு மருந்து கற்பங்கம் பாளை
நீன்றிடுஞ் சிந்தியின் வேரே. ௫௧௨

சிந்தில்வேர் தேத்தான் வேரமுக்கிருவேர்
சித்திரமூல வேருடனே
பாந்தமாஞ்சிறு காஞ்சொறியின் வேர்
நல்லபண்பு பொன்னூன் காணிவேரும்
வாய்ந்த தூதுவளை வேருடன் மூவேழ்
வகைக்கு காற்கழஞ்சதுகட்டி
யேந்திய வம்மி தன்னிலே யரைத்து
மின்பமாய்க் கலக்கிடு வாயே. ௫௧௩

கலக்கியே யாவினெய்யது குறுணி
கதிக்க விட்டேய திற்கற்கம்
இலவங்கம் நெல்லிப்பருப்பதிவிடைய
மிலா மிச்சம்வேர் சடா மாஞ்சி
நலமுள்ள சாதிக்கா யதிமதுரம்
காட்டினிற் கசு திப்பிலியும்
வலுவுள மிலாக்காய் சந்தனமேலை
மற்புதக் கற்கடசிங்கே. ௫௧௪

செம்பு வெட்பாலை யரிசியு முன்னி
ரோகம் கஸ்தூரி மஞ்சள்
பங்கமில் கோரோசனையுடன் வகைகள்
பதினேழு வகைக்கு காற்கழஞ்சு
மிங்கிதமாக வரைத்துத் தூளாக்கியே
வடிகொண்டு மேற்தூவி
யுங்கவனத் தோடே சிறுதீயா
யும் விடுமூன்று நாட்டானே. ௫௧௫

தானதை மூன்று நாளதி லாதி
சத்தியைப் பூசனை செய்து
நானுனை நம்பினே னெனத்துதித்து
நற்கலசத்திலே வடித்து
ஆனதொரு நிலப்பனைக் கிழங்கு நெய்யதனை
அன்புடன் கொண்டிடும் போது
நேயமான சருக்கரை தேனும் நிதான
மாய்க் கலந்து கொள்வாயே. ௩௧௬

கொண்டிடு மரைமண்டல மரையது தானும்
குணமெனச் சொல்லுவேன் கேளு
மண்டியருலை யிருபது மேகவகையுடன்
சுக்கில மேகம்
கண்டிடு சீயின் மேகமு மிரத்தம்
காண்பது மோரது போலே
மூண்டியே யொழுகு மேகங்காமாலை
முன்புள பாண்டு ரோகமுமே. ௩௧௭

பாண்டெலும் புருக்கி நெஞ்சினில் வலிகேற்
பழிவு மேல்மூச்சு டனிருமல்
பூண்டிடு யோனி ருலை நெஞ்செரிவு
பொல்லாதபெருங்கழிச்ச லுமே
தாண்டிடு புலியைக் கண்டு மான்போல்,
தத்தளித்தே பறந்தோடும்
கீண்டிடு முருங்கைக் காயிலை திருக்கை
நெத்திலி சுறுவது மாமே. ௩௧௮

ஆமிடுந்து வரைப் பருப்புடனே தா
னரைக்கீரை வாழையின் கச்சல்
வேகமாந் தூதுவளையினிற் காயும்
வெள்ளைமி ளுட்டுப்புக் கண்டம்



ஆகுமே முசலினதி லுப்புக்கண்ட
மாம் பொன்னாங் கண்ணியின் கீரை
வாகுள கத்திரிப்பிஞ்சும நன்றும்
வாரிமி லுப்பது நகட்டே. ௩௧௯

கூட்டிடும் புளியு மரையதாய்த் தானே
கொள் முன்சொன்ன நோய்கள் போகும்
நாட்டினில் மனிதற்காகவே தஞ்சை
நகரையாள் சரபேந்திரன்
வாட்டமில் முனிவர் சித்தர்களுரைத்த
வைத்திய நூறதனை யுணர்ந்து
நாட்டிகமான முறையிதென்றறிந்து
சாற்றின ரன்புடன்றானே. ௩௨௰

(இ-ன்)

நிலப்பனங்கிழங்கு 2 பலம் கருங்காலிப்பட்டை 2 பலம்
அத்திப்பட்டை 2 பலம்

இவைகளை இரண்டு மரக்கால் நீர்விட்டுக் காய்ச்சி ஒருபடியாக வரும்பொழுது இறக்கி, இறுத்துக்கொண்டு,

| | |
|---|---|
| புளியாரை இலை | ஆரை இலை |
| வரட் சுண்டி இலை | தண்ணீர்விட்டான் கிழங்கு |
| கொட்டிக்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| இலவம் பிசின் | விளாம்பிஞ்சு |
| மாதுளம் பிஞ்சு | வில்வம் பிஞ்சு |
| அகத்திப்பூ | தாமரைப்பூவின் தாது |
| பெருமருந்து | பங்கம்பாளை |
| சிந்தில் வேர் | தேத்தான் வேர் |
| அமுக்கிரா வேர் | கொடிவேலிவேர் |
| சிறுகாஞ்சொறி வேர் | பொன்னாங்காணி வேர் |
| தூதுவளை வேர் | |

இவை வகைக்கு 4 கழஞ்சு சேர்த்து அம்மியில் அரை

த்து, கஷாயத்தில் சேர்த்து, பசுவின் நெய் ஒரு மரக்கால் சேர்த்துக் கொதிக்கவிட்டு நீர் சுண்டி வரும்போது,

| | |
|---|---|
| லவங்கப்பட்டை | நெல்லிப்பருப்பு |
| அதிவிடையம் | விளாமிச்சம் வேர் |
| சடாமஞ்சி | சாதிக்காய் |
| அதிமதுரம் | சுக்கு |
| திப்பிலி | மலக்கா சந்தனம் |
| கற்கடசிங்கி | வெட்பாலையரிசி |
| வெள்ளைப்பூண்டு | சீரகம் |
| கஸ்தூரி மஞ்சள் | கோரோசனை |

இவை வகைக்கு 4 கழஞ்சு எடுத்துத் தூளாக்கி வஸ்திர காயம் செய்து அதை மேம்பொடியாகத் தூவி, சூட்டடுப்பில் மூன்றுநாள் வைக்கவும். மூன்றாம்நாள் அதையே இறுத்து வைத்தில் வடித்துக்கொள்ளவும். இதற்கு சிலப் பனங்கிழங்கு நெய் என்று பெயர். இதில் சிறு கசண்டி யையு சர்க்கரையும் தேனும் சேர்த்து அரைமண்டலம் கொள்ளவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—

சூலை
20 வகை மேகங்கள்
கல்மேகம்
சீழ் மேகம்
இரத்தம் விழுவது
மோர்போல் ஒழுகும் மேகம்
காமாலை
பாண்டுரோகம்
எலும்புருக்கி
நெஞ்சில் வலி
எரிவு அறிவு



மேல் மூச்சு
இருமல்
யோனி சூலை
நெஞ்செரிவு
பெருங்கழிச்சல்

இவை தீரும்.

இதற்குப் பத்தியம் :—முருங்கக்காய், முருங்கையிலை, நெத்திலி, சுறா, துவரம்பருப்பு, அரைக்கீரை, வாழைக் கச்சல், தூதுவிளங்காய், வெள்ளாட்டு உப்புக்கண்டம், முசலினதுப்புக்கண்டம், பொன்னாங்கண்ணிக்கீரை: கத்தரிப்பிஞ்சு, இவை சேர்த்துக்கொள்ளலாம். உப்பும் சேர்த்துக்கொள்ளலாம். அரைப்புளி மட்டும் சேர்க்கவும்.

## 158. மேகவியாதிக்குத் காரிய பற்பம்

காரிய மதனைச் சுத்தியும் பண்ணிக்
  கான்பு ளியிலைக்கது மையுமே
சிருன தகடு தட்டிப் பிண்ணாக்குள்
  செப்புப் பச்சரிசி யின்றவி ரிஞ்
சாரமாங்கரத்தை மூன்றையு மைபோற்
  றுனரைத்தே தகடதனில்
சேருடனொரு விரற்கடைக்கது மந்தா
  னிறையவே யிருபுறம் பூசே. கூஉக

பூசியே ரவியில் வைத்ததை யுலர்த்திப்
  புதியதோ ரோட்டினுள் மூடிப்
பாசமோடிரண்டு புடமது போட்டுப்
  புரர்த்தெடுத்தே யொருசட்டி
நேசமாய் வைத்து மெரித்ததிற் காணி
  ளிர்ப்பூலாவிலை யதைச்சாமன்
கூவிடாததனிற் போட்டுமே வறுக்கக்
  குன்றுமா பற்பமதாமே. கூஉஉ

ஆனதோர் பற்பமதை யெடுத்தேன
மதில் வைத்துப் பதனமதாக
ஆனமாகமேக வியாதி கடனக்கு
மூவரிக் கடுக்காய் நெல்லி முள்ளி
கானிலாவாரை விரை சரிபொடித்துக்
கணக்குடனொரு வராகனிடை
ஈனமில் பற்பந்தனி லொரு பணவி
னிடையுமே தேன்றனிற் பருகே. ௩௨௩

பருகிட மேகமிருபதுந் தீரும்
பாண்டு வுக்கெரு மையின்றயிரி
லொரு பணவிடையுங் கொடுத்திடு
மப்பாலுற்றச சாணகச் சாறதிலே
அருமையாய்ப் பணவிடையொன்று கொள்க
வகன்றிடுங் கண்ணின் காமாலை
உரமிகு ஞ்சிந்தி ற்றண்டு கடாயத்
துட்கொடு பற்பமு ந்தானே. ௩௨௪

பற்பமோர் பணவினிடையதுகொடுக்கப்
பாணி காலெரிவதுங்கு ணமா
மற்புதப் பற்பமதை மற்ற வியாதி
யதுக்கனுபான விதத்தோ
டொப்புடனறிந்து கொடுத்திடு மிதையு
மூற்பன விற்பன மிகுந்த
மெய்ப்புள தஞ்சை கர்த்தனை யாளும்
விபு சரபேந்திர னருளே. ௩௨௫

(இ-ள்)

காரீயத்தைச் சுத்திசெய்து அதை புளியிலைக் கது மன் இருக்கும்படி தகடாகத் தட்டி,

பின்னுக்கு, சிவப்புப் பச்சரிசியின் தவிடு, செவகரந்தை இவை மூன்றையும் மைபோல் அரைத்துக் காரீயத்தகட்



டின் இருபுறமும் ஒருவிரல் கனக்கதுமனுக்குப் பூசி, வெயிலில் உலர்த்தி ஓர் சட்டி ஓட்டில் வைத்து, மற்றொரு சட்டியினால் மூடிச் சீலமண் செய்து, முதலில் ஒரு புடம் போட்டு, மறுபடியும் தகட்டின்மேல் முன் சொன்னபடி பூச்சுப்பூசி, இரண்டாவது புடமும் போடவும். பிறகு அதையெடுத்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பில்வைத்து ஒரு ஜாமநேரம் (3 மணி) நீர்ப்பூலா இலையைப் போட்டு வறுக்கவும் அப்பொழுது அது பஸ்பமாகும். அதை பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

மேக வியாதிக்குக் கடுக்காய், நெல்லிமுள்ளி, ஆவாரைவிதை இவைகளை சமன் எடுத்துப் பொடிசெய்து அந்தப்பொடியில் ஒரு வராகனெடையும் பஸ்பம் ஒரு பணவிடையும் தேனில் கொடுக்க 20 வகை மேகமும் குணமாகும்.

பாண்டுவுக்கு பஸ்பத்தில் ஒரு பணவெடை எடுத்து எருமைத்தயிரில் கொடுக்கக் குணமாகும்.

காமாலைக்கு பசுவின் சாணத்தின் சாற்றில் ஒரு பணவிடை கொடுக்க குணமாகும்.

கைகால் எரிச்சலுக்கு சிந்தில் தண்டு கஷாயத்தில் ஒரு பணவிடை கொடுக்க சொஸ்தமாகும்.

தகுந்த அனுபானங்களில் கொடுக்க பல வியாதிகளும் தீரும்.

## 159. மேக வெட்டைச்சூட்டுக்கு கோவையாதி கிருதம்

கோவையினிலைச்சார் பொடுதலைச்சா
றம்குணமுள தேங்கா ஒற்பாலு
மாவினின் பால் நல்லெண்ணெ யுந்தானே,
லைந்திலோர், வகைக்கொரு படியும்

பாவனையுடனே, வடுப்பினில் வைத்துப்
 பதமதாய்ச் சுண்டியே வரும்போ
தாகிய பனைவெல்லமும் பலமது பத்
 தையுந் தட்டிப் போட்டிடு வாயே. ௫௨௬

போட்டுமே சத்து மெரித்ததைத் தானே
 பூமியிற் சாணியைக் குழித்து
நாட்டமாய்ச் சலமும் விட்டதி லிறக்கி
 யமுடன் வைத்திறைவரையு
மாடிய பாதத்தருள் தாவென்று
 அன்புடன் போற்றியே தைல
மூட்டு துட்டிடையு ங்காலையு மந்தியுங்,
 கொடு துட்டிடை தானே. ௫௨௭

துட்டிடை கொள்ளு பத்தியம் புளிப்புத்
 தூற் புகையிலையையுந்தள்ளு,
சுட்டிடு கீரைக்கூட்டிடு மல்லித்திச்
 சூடாறுந்திடுதலால் மேக
வெட்டைகள் தீரும் கண்ணதுங்குளிரும்
 விற்பனவிபு சரபேந்திரன்
மட்டிலா நூல்களுணர்ந் தறிந்துரைத்த
 வனத்தின் கோவைத் தைலமதே ௫௨௮

(இ-ள்)

கோவையிலைச்சாறு படி ।  பொடுதலைச்சாறு படி ।
தேங்காய்ப்பால் படி ।  பசுவின்பால் படி ।
நல்லெண்ணெய் படி ।

இவைகளைக் கலந்து அடுப்பில் வைத்து எரித்து இவை பதமாய்ச் சுண்டி வரும்போது,

பனைவெல்லம் 10 பலம்

அதில்போட்டு எரித்து, பதமானவுடன் பூமியில் சாணத்



தைக் குழித்து அதில் ஜலத்தைவிட்டு அதில் இறக்கிவைக்கவும். குளிர்ந்த தைலத்தை எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

இத்தைலத்தில் வேளைக்கு ஒரு துட்டிடை விதம் சாப்பிட்டு, புளிப்பு, புகையிலை தள்ளி வெங்கீரை அருந்தி, பத்தியமான ஆகாரத்தை உட்கொண்டால் அல்திரும் மேகவெட்டையும் தீரும். கண்ணுக்குக் குளிர்ச்சி உண்டாகும்.

## 160. மேகத்துக்கு மருந்து

புளியினிலை தனிலே நீரை விட்டிடித்துப்
 பெட்புறு தெங்கனிற் பாலும்
வளமுடன் சரியாய்க் கலந்துமே காலை
 யன்புடன் கொண்டு நீபாரு
அளவிலா மேகம் நின்றிடுஞ் சூடு
 மறுங்கரங் கண்டிடு முறையாம்
அளிமிசை பாடும் காவனஞ்சூழ் தென்
 னைகையின் மாதுரை யிதுவே. ௫௨௯

(இ-ள்)

புளியிலையில் தண்ணீர்விட்டு இடித்துச் சாறுபிழிந்து தேங்காய்ப்பால் சமன் சேர்த்துக் காலையில் சாப்பிட அதிகமான பிரமேகமும் சூடும் நிற்கும். இது கைகண்டமுறை.

## 161. மேகத்துக்கு பறங்கிப்பட்டை லேகியம்

சினக்கற்கண்டு பறங்கியின் பட்டை
 செப்பிய இரண்டு மூன்று பல
மூனமில் வெள்ளைக் குங்குலியத்தோ
 டேற்றிடுஞ் சீரகஞ் சோம்புந்
தானே யிம்மூன்றும் வகைக் கொருபலமுஞ்
 சம்பீரப் பழத்தினுட சாறுங்

தான் என்னெண்ணெயுள்ளியின் பூண்டின்
சாறுமே சரியதாய்க் கலக்கே. ௩௩௰

கலந்து முன் மருந்தைப் பொடி செய்து நன்றாய்
கையினால் மத்தித்தே வைத்து
நல்லதி மதுரத் தூளையும் போட்டு
நாட்பத்து மந்தியுங் காலை
பலந்தரக் கொட்டைப்பாக்களவருந்து
பத்தியங் கசப்புடன் புளிப்பும்
விலக்கிடு மிதுக்கு மேகமுந்தானே
விரிச்சிகன் முன் பனியாமே. ௩௩௧

(இ-ள்)

சீனக்கற்கண்டு 3 பலம் பரங்கிப்பட்டை 3 பலம்
வெள்ளைக் குங்கிலியம் 1 பலம் சீரகம் 1 பலம்
சோம்பு 1 பலம்

இவைகளைத் தூள்செய்து எலுமிச்சம்பழச் சாறு, நல்லெண்ணெய் இவ்விரண்டையும் சமனாய்ச் சேர்த்து மருந்துத்தூளை அதிற் போட்டுக் கையால் நன்றாய் மத்தித்து, மேலும் அதிமதுரத்தைத் தூள்செய்து போட்டு நன்றாகக் கலந்து காலையும் மாலையும் கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர, பலவகைப் பிரமேகம் தீரும்.

இதற்குப் பத்தியம் :—கைப்பும், புளிப்பும் நீக்கவும்.

## 162. மேகத்துக்குத் தழுதாழை மருந்து

காட்டினிற் றழுதாழையினுட சாறுங்
கருது நல்லெண்ணெயுஞ் சரியாகக்
கூட்டியே யந்தி காலையுந்தானே
கொடுத்திடு முப்புடன் புளிப்பு
மோட்டிடு மகலு மேகமுந்தானே
ஒழுகிடில் விழுமித்த முறையை



ஏட்டினிற் புகழே பெரு சரபேந்திர
னட்புடனருளிய முறையே. ௩௩௨

(இ-ள்)

தழுதாழைச்சாறும் நல்லெண்ணெயும் சமனாகச் சேர்த்துக் காலையும் மாலையும் சாப்பிட்டுவரப் பிரமேகங்கள் குணமாகும். உப்பும், புளிப்பும் தவிர்க்கவும்.

## 163. மேகத்தினால் கைகால் பிடிப்புக்கு மருந்து

சங்கினிற் சாறு மாவினிற் பாலுஞ்
சரியதாய்க் கூட்டியே கலந்து
வங்கணமாகக் காலையு மந்தி
வளமுடன் கொண்டிடு நீதான்
அங்கடலுப்பும் புளிப்புமே தள்ளு
மஞ்சனு நாடனிற்றுனே
சங்கடஞ்செய் மேகத்தினாற் கைகால்
தான் பிடிப்பது மகன்றிடுமே. ௩௩௩

(இ-ள்)

சங்கிலைச்சாறும் பசுவின்பாலும் சமமாகச் சேர்த்துக் காலையும் மாலையும் சாப்பிட்டுவர மேகத்தினால் ஏற்படும் கைகால் பிடிப்பு நீங்கும்.

இதற்குப் பத்தியம் :—உப்பும் புளிப்பும் தள்ளுபடி.

## 164. மேகவாயு, மேகசூலைக்கு வல்லாதி

இரதம் வராகனிடையது காலு
மேனுருசாவி யோமமுமே,
யொருபலஞ் செங்கொட்டையும் பலம் காலு
முரைபனை முட்டியின் வெல்ல
மிரண்டது பலந்தண்ணீர் முட்டான் கிழங்கு
மேயொரு பலமுமையருந்தை

யூரமுடனன்று யிடித்துமே லேகிய
முஞ்செய்து வைத்திடு வாயே. ௩௩௪

வைத்திடு சின்னக் கழற்சி யினளவு
மந்தியு ங்காலையுங் கொள்ளு,
சுத்தமாய்ப் புளியும் புகையிலையு ந்தள்ளு
சூலையுமேகமு ந்தீரு
மத்தரை பூசித்தருள் பெறுந்த ஞ்சை
யாண்டருள் விபு சரபேந்திரன்
புத்தியினு லந்நூ லுணர்ந்து ரைத்த
புனித வல்லாதியு மாமே. ௩௩௫

(இ-ள்.)

சுத்திசெய்த பாதரசம் 4 வராகனெடை
குரோசாணி ஓமம் 1 பலம்
சுத்திசெய்த சேங்கொட்டை 4 பலம்
பனைவெல்லம் 2 பலம்
தண்ணீர்விட்டான் கிழங்கு 1 பலம்

இவற்றைச் சேர்த்து இடித்து லேகியம் செய்து கொண்டு சிறிய கழற்சிக்காயளவு காலையும் மாலையும் கொள்ள மேகவாயு, மேகச்சூலை இவை தீரும்.

இதற்குப் பத்தியம்:–புளியும், புகையிலையும் தள்ளுபடி.

## 165. மேகவாயு மேகவியாதிக்குச் சேங்கொட்டை நெய்

சாணியைப் பிழிந்த சாற்றிற் சேங்
கொட்டை தன்னையுஞ் சுத்தியும் பண்ணி
பூணவே நறுக்கிப் பசுவின் நெய்யி னுட
னதைப் போட்டுமே காய்ச்சிப்
பாணியா லெடுத்துத் துட்டிடை கொள்ளு
பறந்திடு மேக வியாதி



வாணியின் கேள்வன் முனிவர்கட் குரைத்த
வண்மை சேங்கொட்டை நெய்யிதுவே. ௩௩௬

(இ-ள்)

பசுவின் சாணத்தைப் பிழிந்து அந்தச் சாற்றில் சேங்கொட்டையைச் சுத்திசெய்து அதை நறுக்கிப் பசுவின் நெய்யில் போட்டுக் காய்ச்சி நெய்யை இறுத்துக்கொண்டு அந்தநெய்யில் வேளை ஒன்றுக்கு ஒரு துட்டிடை (4 தம்பிடி எடை) சாப்பிட்டுவர மேகவாயு முதலிய பல மேக வியாதிகள் தீரும். இதற்குச் 'சேங்கொட்டை நெய்' என்று பெயர்.

## 166. விந்துப்பிரமேகம், சுக்கிலப்பிரமேகம், இரத்தப்பிரமேகம், எரிப்பிரமேக முதலான மேகவியாதிக்குக் காரிய பற்பம்

காரியமதனைச் சிறுக்கொழுப் போலே
கையினால் நறுக்கியே வைத்துச்
சீருள கோணியப் பட்டதைக் கொணர்ந்து
செப்பமாய் முழுச்சவுக்க மதாய்
சேருடன் கிழித்து வைத்துமே புளியி
னிற்பட்டை விழுதா யரைத்துச்
சாரமாய் முன்சொல் கோணியப் பட்டிற்
றானதை த்தப்பிடு வாயே. ௩௩௭

தப்பியே யதனைக் குழிகுழியாகத்
தான்செய்து அக்குழி யதனி
லொப்புள சயம் வைத்து நன்றாய் மற்
றோர் நல்கோணிய தன்னால்
மெய்ப்புடன் மூடிவனைய மதாக
வே குழிவெட்டியே வறனி
யப்பவே யக்கினி யோடு வைத்ததின்மே
லடவுள கோணியை வையே. ௩௩௮

வைத்தொரு வோடுகொண்டு மேல் மூடி
வறளியை யிட்டதின் மேலே
சித்திரபானுவை யிட்டெரி சாமந்
திற முடனிரண்டது தானே
சுத்தமா யாறவிட் டெடுத்துப் பார்
சோளத்தின் பொரியது போலா
மத்தனைப் போற்றி யெடுத்தொரு சிமிழி
லடவுடன் வைத்திடு வாயே. [illegible]

அளவுட பற்பமொரு பணவிடைய
மன்புடனெடுத்து நீதானே,
விடமுள எருமை வெண்ணெயிற் கொடுக்கத்
தீருமெலிந்துப் பிரமேக
மடவியினொ தியம்பட்டையின் ரசத்தி
ல் பற்பந்தானொரு பணவி
விடையது கொடு சுக்கிலப் பிரமேக
மேகிடு மின்னமுங் கேளே. ௩௪௰

இன்னமுங்கேள் செம்பரத்தம் பூவரைத்து
மிதிற்கொடு மொருபண விடையுஞ்
சொன்ன சொற்படிக்கி யிரத்தப் பிரமேகந்
துலக்கிடும் பருத்திக்காய்ச் சாற்றி
லுன்னித பற்பமொரு பணவிடைய
முட்கொடு தந்தி மேகமும் போம்
வன்னிபோ லெரிபிர மேகத்துக்கு
வள பொன்னுன் கணி ரசமதுவே. ௩௪௧

ரசமதி லாவதிர வெங்காய
ரசமதிலொரு பணவிடைய
மிசையுடன் கொடுமிக் காரியப் பற்ப
மின்பமாங் கடுக்கையுந் துய்மை



புச்சியணிப் பரமசிவன் திருவையிறுற்
றஞ்சைநகர மான நீதி
மிசைவுடனுனும் விபுசரபேந்திராணி
ன்பமாயுணர்ந்த திம் முறையே. ௩௪௨

(இ-ள்)
காரீயத்தைச் சிறு மெல்லிய தகடாகத் தட்டிக்கொண்டு சிறு சிறு கொழுப்போன்ற துண்டுகளாக ஒடித்து வைத்துக்கொள்ளவும். அழுத்தமான பட்டுத்துணியைச் சதுரமாகக் கிழித்துவைத்து அதன்மேல் புளியம்பட்டை அரைத்த விழுதைச் சமமாகத் தப்பி அதில் சிறுசிறு குழிகள் உண்டுபண்ணி அதில் காரீயத்துண்டுகளை வைத்து மற்றொரு பட்டுத்துணியினால் அதை மூடிச் சுருட்டி ஒரு வளையமாகச் செய்துகொள்ளவும். பூமியில் ஓர் குழி வெட்டி அதில் வறட்டியை அடுக்கி அதன்மீது சட்டியின் ஓடு ஒன்றைவைத்து அதில் பட்டு வளையத்தை வைத்து மேலே மற்றொரு ஓட்டால் மூடி அதன்பேரில் வறட்டியை அடுக்கி இரண்டு ஜாமம் வரையில் எரித்துப் புடம்போடவும். அது சுத்தமாக ஆறினபிறகு புடத்தைப் பிரித்துப் பார்க்கச் சோளப் பொரிபோல் காணப்படும். அதை எடுத்து ஒரு சிமிழில் பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

அந்தப் பற்பத்தில் ஒரு பணவிடை எடுத்து எருமை வெண்ணெயில் சாப்பிட்டுவரப் பிரமேகங்கள் தீரும். ஒதியம்பட்டைச் சாற்றில் ஒரு பணவிடை வீதம் சாப்பிடச் சுக்கிலப் பிரமேகம் தீரும். செம்பரத்தம்பூவை அரைத்து அதில் ஒருபணவிடைப் பற்பம் வைத்துச் சாப்பிட இரத்தப் பிரமேகம் தீரும். பருத்திக்காய்ச் சாற்றில் ஒரு பணவிடை வீதம் சாப்பிட தந்திமேகம் தீரும். பொன்னாங்காணிச் சாற்றிலாவது, ஈரவெங்காயச் சாற்றிலாவது ஒரு பணவிடை வீதம் கொடுக்க எரிப்பிரமேகம் தீரும்.

## 167. இருபது மேகம், பிரமேக முதலானது, மூத்திர கிருச்சம், யெலும்புருக்கி, உள்ளுருக்கி நீர்க்கடுப்பு, தாகசுர மூத்திரப்பாஜ்ளக்குக் காந்தாதியுண்டை.

சித்திரமூல ங்கல்மத ங்கடலிருஞ்
சிப்பட்டை காந்தங்கல் நாருந்
அத்திவிரையும் புளியங்கொட்டை மேலின்
றோலபினடவிபின் வாகை
வித்து நீர்முள்ளி விரையு மாவாரை
வேர்ப்பட்டை முருங்கையின் விரையுஞ்
சத்துள சாதிக்காய் வேலம் பிசினுஞ்
சாதிலிங்கங் கொஞ்சி விரையே. ௫௪௩

விரையுந் தேற்றான் விரையு முசில் பிசினும்
வேப்பமரத்தின் பிசினுட
னுரமிகுங் கருடப்பச்சை காலெந்து
மொன்றதாய்ச் சரிநிறை யிதலால்
இரத மூன்றேழு மிட்டதை யரைக்க
எருமையின் றயிருந்தென்ன ங்காய்
பருத்தியின்காய் கையாந்தரையின் சாறும்
பன்னீரிந்த வகை ரசமே. ௫௪௪

வகையுள வஞ்சுரசமும் வெவ்வேறாய்
வைத்து மொவ்வொன்ற தாய்விட்டுத்
துகையுடன் வகையொன்றுக் கொருசாமந்
துணிவுடனரைத்து மைபோல்
சகமதில் தேத்தான் விரைப் பிரமாணந்
தானதை யுண்டைசெய் துலர்த்திச்
சுகமதாஞ் சிமிழில் வைத்து மேல்செய்யுந்
தொழிலொரு வுண்டையுந் தானே. ௫௪௫



உள்ளடைமைச் சருக்க ரைமிதுமே தேனி
லுங்கொடு மிருபது மேக
முண்டிடா தோடும் பத்துமேயெட்டு
மூத்திர கிருச்சிரமுந் தீரும்
வண்டப் பிரமேகம் பதினெட்டுந் தீரு
மற்று நீர்க்கடுப்பது வகையு
மண்டிய எலும்புருக்கியு முள்ளுமுருக்கி
மற்றதுவகைக் கிராணியுமே. ௫௪௬

மத்ததுவகைக் கிராணியுந் தாகசுரமுமது
முப்பத்திரண்டுந் தீருஞ்
சுத்தமாய் மூத்திரப்பாஜ்ள யொன்பதுவுஞ்
சூழ்ந்திடு மேக வியாதிகளு
மத்திடுங்காந்த மாதியா முண்டை
வளம்பெறுந் தகுலைசமா ககரை
சத்திய முறையின் வழிப்படி செங்கோல்
தான் நடத்திடும் விபுவுரையே. ௫௪௭

இ-ள்)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | கல்மதம் |
| கடலிருஞ்சிப்பட்டை | காந்தம் |
| கல்நார் | அத்திவிரை |
| புளியங்கொட்டை மேல்தோல் | காட்டுவாகை வித்து |
| அபின் | ஆவாரைவேர்ப்பட்டை |
| நீர்முள்ளி விரை | சாதிக்காய் |
| முருங்கை விரை | சாதிலிங்கம் |
| கருவேலம் பிசின் | தேத்தான் விரை |
| கொஞ்சிவிரை | வேப்பம்பிசின் |
| உசிலம் பிசின் | சுத்திசெய்த பாதரசம் |
| கருடப்பச்சை | |

இவை சமனெடை சேர்த்து அரைத்து அதில் பருத்திக்காய்ச்சாறு, தேங்காய்ப்பால், பன்னீர், கையாந்தகரைச்சாறு, எருமைத்தயிர் இந்த ஐந்தையும் ஒவ்வொன்றையும் தனித்தனியாக விட்டு ஒரு ஜாமம் மைபோல் அரைத்து, தேத்தான்கொட்டைப் பிரமாணம் உண்டை செய்து உலர்த்திச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

தினமும் ஒரு உண்டை வீதம் தேன் சர்க்கரை சேர்த்துக்கொடுக்க 20 வகை மேகமும், 18 வகை மூத்திரக்கிரிச்சிரமும், சுக்லப்பிரமேகம் 18ம், 6 வகை நீர்க்கடுப்பும், எலும்புருக்கி, உள்ளுருக்கியும், 6 வகைக் கிராணி (கிரஹணி)யும், தாகஜுரம் 32 வகையும், மூத்திரப்பாவை (?) 9 வகையும் மற்ற மேகவியாதிகளும் தீரும். இதற்குக் 'காந்தாதி உண்டை' என்று பெயர்.

## 168. மேக மதுமேகத்துக்கு மருந்து.

காட்டினிற் புற்றுன் சோறதை வெட்டிக்
  காயவும் போட்டுத் தூள் செய்து
காட்டமாய் வைத்தோர் விரற்கொண்ட தூளை,
  நல்லதோர் தேனிலே கொள்ள
வாட்டிய மேகமது மேகமெல்லா
  மற்றிடும் கைப்புடன் புளிப்புந்
தேட்டிடாதிரு இம்முறையதை நந்தி
  செப்பின திருடி கடனக்கே. ௫௪௮

(இ-ள்)

புற்றுஞ்சோற்றைக் கொண்டு வந்து காயப் போட்டுத் தூள் செய்து வைத்துக் கொண்டு, ஒரு விரல் கொண்ட தூள் தேனில் கொள்ளவும். மதுமேகம் முதலிய மேகங்கள் தீரும்.

இதற்குப்பத்தியம்—கைப்பு, புளிப்பு நீக்கவும்.



## 169. மேகத்துக்கு சுகபேதி மருந்து.

சுத்திசெய்வாளப் பருப்பதினுடனே
  அடிமிருஞ்சீரகங்கூட்டிச்
சத்துள கரிசாலையின் ரசம் விட்டுத்
  தானரை மையது போல்
உற்றிடு கொட்டைப்பாக்களவுந்தா
  னுண்டிடு பேதியதாகு
மிற்றையுமனு பான விசேடத்தி
  லேயறிந்தே கொடுதானே. ௫௪௯

கொடுத்திடு சீரகமுஞ்சர்க்கரையுங்
  குணமுடன் சேர்த்தரைத்துங்கொள்
தடுத்திடு மேகமறு மினவெந்நீர்
  தன்னிலுமீந்திடு குணமாய்
விடுத்திடுஞ்சுகத்தின் பேதியுந்தானே,
  விளங்கிய கோபுர மதின்சூழ்
திடத்துடன் நஞ்சகரதனை யாளுந்
  தீரனுமாதுயினருளே. ௫௫௰

(இ-ள்)

நேர்வாளத்தைச் சுத்திசெய்து அதன் பருப்பும் அதனுடன் சீரகமும் சமன் சேர்த்து கரிசலாங்கண்ணிச் சாறு விட்டு மைபோல் அரைத்துக் கொட்டைப் பாக்களவு கொடுக்கச் சுகபேதியாகும்.

சீரகமும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க மேகந் தீரும்.

வெந்நீர் முதலிய அனுபானங்களில் அறிந்து கொடுக்க மற்ற ரோகங்களும் தீரும்.

## 170. மேகத்துக்கு மருந்து.

முசுமுசுக்கைச்சார் கழுதையினீரு
முனிவுடன் சரிய தாய்க்கலந்து
விசையுடன்காலை தன்னிலேகொண்ணு
மிருமூன்று நாளது தானே,
பசையறு மேக மறுமி துக்கிச்சாப்
பத்தியமாயிரு தானே
உசிதமாக்தஞ்சை நகர்தனையாளு
மும்பர் கோன் மாலுவினருளே. ௩௫௧

முசு முசுக்கைச்சாறும், கழுதை மூத்திரமும் சமனாய்க் கலந்து காலை வேளையில் 6 நாள் கொள்ள மேகங்கள் குணமாகும். இதற்கு இச்சாபத்தியமாக இருக்க வேண்டும்.

## 171. மேகத்துக்கு மருந்து.

எருக்கினற் பாலிற் பனைவெல்லம் போட்டுமே
நன்றாய்க்கரைத்த தைத்தானே
யுரத்துடன் மூன்று நாளதைக்கொள்ளு
மொழுகிடு மேகமும் நிற்குந்
தூரத்திடும் பழைய வன்னமும்வாய்வின்
றுறைபதார்த்தங்களுந்தள்ளு
காத்தினிற்சந்திரன் வாளதுமுடையகாவலன்
றஞ்சைமானருளே ௩௫௨

(இ-ள்)

எருக்கம்பாலிற் பனைவெல்லம் போட்டு நன்றாய்க் கரைத்து மூன்று நாள் சாப்பிட ஒழுகிடும் மேகம் தீரும்.

இதற்குப்பத்தியம் — பழைய அன்னமும், வாயு பதார்த்தங்களும் தள்ளவும்.



## 172. மேகத்துக்கு மருந்து.

சொச்சியுங்கரிப்பான் கள்ளியும்மூன்றி
னுடகொழுந்துடன் மினகுள்ளி
மெச்சியமருந்து மைந்திலோர் வகைக்கு
மேமூன்று துட்டிடையரைத்து
அச்சமில்லாமற் கலந்து நன்றாக
வஞ்சுநாட்பத்து மேபொழுது.
மூச்சிதமாய்க் கொள்ளிதற்கிச்சாபத்திய
மும்மதாமேக மூமறுமே. ௩௫௩

(இ-ள்)

சொச்சிக் கொழுந்து
கரிசலாங்கண்ணிக் கொழுந்து
இலைக்கள்ளிக் கொழுந்து
மிளகு
வெள்ளைப் பூண்டு

இவை வகைக்குத் துட்டிடை எடுத்து அரைத்துக் கலந்து காலை மாலை இருபொழுதும் ஐந்து நாள் சாப்பிட்டு இச்சாபத்தியமாக இருக்கவும். பலவகை மேகமும் குணமாகும்.

## 173. மேகத்துக்கு மருந்து

கோவையினிலைச்சார் பசுவினற்பாலில்
குணமுடன் மூன்று நாளறு போ
தாவதுகொண்ணு மேகமென்பதுவு
மறுமிதற்கே யுசிதமதா
மேவிடுமிச்சா பத்தியமாக
விமலர்தன் கிருபையினாலே
தாவிய வளைபாய் வயல் சூழ்ந்த
தஞ்சையில் மாலுலாமுறைமே ௩௫௪

(இ-ள்)
கோவையிலைச் சாற்றைப் பசுவின் பாலிற் கலந்து காலை மாலை இருபொழுதும் மூன்று நாள் சாப்பிட்டு இச் சாபத்தியாக இருக்க பலவிதமேகங்கள் தீரும்.

### 174. மேகத்துக்கு மருந்து.

கொச்சியினிலைச்சார் படியதுமரைக்கால்
கோவிலாப்பால் படியரைக்கால்
அச்சமில்லாமற் கலந்து மூன்றே நாள்
அருபொழுதே கொள்ளுமேகம்
லச்சைகெட்டோடும் பத்தியம் புளிப்பும்
கெடுங்கடலுப்புடன்கைப்பி
னிச்சையுந்தள்ளு அன்னமுஞ்சுடுநீ
ரேகொளுமன்புடன்றானே. ௧௱௭௪

(இ-ள்)
கொச்சியிலைச்சாறு அரைக்கால் படியும் நல்ல பசுவின் பால் அரைக்கால் படியும் சேர்த்துக் காலையும் மாலையும் மூன்றுநாள் சாப்பிட்டு உப்பு, புளிப்பு, கைப்பு இவை மூன்றையும் தள்ளி வெந்நீரும் அன்னமுமாகச் சாப்பிடப் பலவகை மேகங்கள் தீரும்.

### 175. மேகத்துக்கு மருந்து

முடக்கொத்தான் சாறும் பன்னியினெய்யு
மூன்று நாளஞ்சு நாட்டானே,
குடித்திட வொழுகு மேகமு மற்றுங்
குணமதாம் பத்தியமு மிதற்கு
வடித்த சோர் சுடு நீரன்றி மற்றொன்று
மாடொ நான் இருமையினால்
வடிப்பமுஞ் செல்வ மிருவனர் தஞ்சை
மபெறி புணர் முறை மிதுவே. ௧௱௭௫



(இ-ள்)
முடக்கொத்தான் சாறும் பன்னி நெய்யும் சேர்த்து மூன்று நாள் சாப்பிட்டு வெந்நீரும் சோறுமாகச் சாப்பிட ஒழுகும் மேகம் பலவகையும் தீரும்.

### 176. மேகத்துக்கு மருந்து

காட்டி னிற்றேற்றான் விரையிரண் டேபாக்
களவரைத் திரண்டு வேளையுமே.
நாட்டமா யஞ்சு நாளது கொள்ள
நகர்ந்திடு மொழுகிய மேக
மோட்டிடு மிச்சாபத்திய மாக
மும்மத வாரணக் கனிமுக்
கூட்டிடுங் கனியைக் கொடுத்திடுஞ் சிவனுக்
குகந்த ருடஞ்சை மாதுரையே. ௧௱௭௬

(இ-ள்)
தேத்தான்கொட்டையை அரைத்துக் காலையும் மாலையும் இரண்டு பாக்களவு ஐந்துநாள் சாப்பிடப் பலவகை மேகங்கள் குணமாகும்.

### 177. மேகத்துக்கு மருந்து

நல்லம்மான் பச்சரிசி பசும்பாலி
னயமுடனிரண்டு பாக்களவு
வெல்லம் போலரைத்து மஞ்சு நாணத்தி
விடித்திடுங் காலையுங் கொள்ளு
சல்லியுஞ்செய்து மொழுகிடு மேகந்
தானறு முண்மை யதாகப்
பல்லியவோசை முழங்கிடு தஞ்சை
பார்த்திப னுணர்ந்த திம்முறையே. ௧௱௭௮

(இ-ள்)
அம்மான் பச்சரிசியை சமூலம் நன்றாக அரைத்து

இரண்டு பாக்களவு காலையும் மாலையும் ஐந்து நாள் சாப்பிடப் பலவித மேகங்கள் தீரும்.

### 178. மேகவாய்வு சூலை, கிறந்தி, புண், அரையாப்புக்குத் தேங்காயாதி கிருதம்

தென்னங்காய்ப்பால் காற்படி புங்கம்பாலுஞ்
சேரொரு காற்படி தானே
வன்னமதாகச் சுத்தியுஞ் செய்நேர்
வாளத்தின் பருப்பது பத்தும்
நன்னயமான பசுவினின் பாலில்
நட்புடன் வேக வைத்தெடுத்து
உன்னிதமாவி லிங்கத்தின் பட்டை
யும் மிரண்டையு மம்மி தனிலே. ௫௮௯

அம்மியில் வைத்து மரைத்து மைப்போல்
வளரவரைப் படியும் நல்லெண்ணெ
யும் மிதைப்போட்டு முன்சொலு பாலு
மொக்க விட்டுப் புளியே
நம்மிய தணலையிட்டதிற் பதமாய்க்
காய்ச்சியே வடித்த ந்தி காலை,
செம்மையாக் துட்டினிடை யதிற் கொள்ளத்
தீர்ந்திடும் வியாதியுங் கேளே. ௫௯௰

கேளிதற்குத் தான் வாய்வுடன் சூலை
கிரந்தியும் புண்ணரையாப்பு
நானொரு வாறு தின மதி காலை
நட்புடன் கொண்டிடு முப்பின்
றானது விட்டு அன்ன மதுடனே
நட்ட நீருண்டிடத் தீரும்
பானைவாய் கமுகிற்-றூவிய தஞ்சைப்
பார்த்திப துணர்ந்த திம்முறையே. ௫௯௧



(இ-ள்)

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு 10.

இதைப் பசுவின்பாலில் வேகவைத்து எடுத்துக்கொண்டு மாவிலிங்கப்பட்டை கூடச் சேர்த்துக்கொண்டு அம்மியில் வைத்து அரைத்து அதனுடன்,

புங்கம்பால் படி ¼
தேங்காய்ப்பால் படி ¼

இவை சேர்த்து அரைப்படி நல்லெண்ணெயும் சேர்த்து அடுப்பிலேற்றி, புளியன் தணல் இட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, காலையும் மாலையும் ஒரு துட்டிடை உட்கொள்ள அடியிற்கண்ட வியாதிகள் தீரும்:—

வாயு, சூலை, கிரந்தி, புண், அரையாப்பு

இதற்குப் பத்தியம்—வெந்நீரும் அன்னமுமாக உப்புச் சேர்த்துச் சாப்பிடவும்.

### 179. மேகவாயு, மேகசூலைக்கு எண்ணெ.

நல்ல மணக்கி னெண்ணெய் சேரிரண்டில்
நட்பு வெட்பாலை யினிலையில்
சொல்லியபடிக்கோர் குத்துமே னருய்த்
துவைத்தூர வைத்து மூன்றே நாள்
நல்ல கஸ்தூரி மஞ்சளுங் கருஞ்சீ
ரகம் கம்பிப்பிசினுடன் வசம்பும்
வல்ல கார்போக வரிசி யுள்ளியு ந்தான்
வராகனிடையது வகைக்கே. ௫௯௨

வகைக் கடுக்காய்த் தானோர் வராகனிடை
வன் பறங்கிப்பட்டை யதுவுந்
துகையுடன் வராகனிடை யதிரண்டுஞ்
சொல்லிய மருந்தெலா மரைத்துச்

சுகமதாய்ப் போட்டுக் குழப்பியே யடுப்பின்
    சூடது மிட்டெரி பதமா
யதன்றி னிலாதி சிவன்றனைப் போற்றி
    யன்புட னிறக்கி வைப்பாயே. ௫௱௫

வைத்ததிகாலை தன்னிலே சேர்கால்
    அந்தியிற்றனரை க்கால் சேர்
தத்துவமதாகக் கொள்ளுப்பும் புளிப்பும்
    காடிடாதிரு சுடு தண்ணீர்
சுத்தசனஞ்சோறு மூன்று காலைக்குண்
    சுகமிகுழப் பையும் வறுத்து
மத்தனாளுண்ணு மேக வாய்வதுவு
    மத்திடு ஞ்சூலையும் போமே. ௫௱௬

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய் 2 சேர் எடுத்துக்கொண்டு அதில்வெட்பாலை இலை ஒரு குத்து இடித்துப் போட்டு மூன்றுநாள் ஊறவைத்துப் பிறகு

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் விராகனெடை | | 1 |
| கருஞ்சீரகம் | ,, | 1 |
| கம்பிப்பிசின் | ,, | 1 |
| வசம்பு | ,, | 1 |
| கார்போக அரிசி | ,, | 1 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 1 |
| கடுக்காய்த்தூள் | ,, | 1 |
| பரங்கிப்பட்டை | ,, | 2 |

இவைகளை அரைத்து முன்சொன்ன எண்ணெயில் குழப்பி அடுப்பிலேற்றிப் பதமாய் இறக்கிவைத்துக்கொண்டு காலையில் கால்சேரும் மாலையில் அரைக்கால் சேருமாக உட்கொண்டு உப்பும் புளிப்பும் தள்ளி வெந்நீரும்



அன்னமுமாக மூன்று காலைக்குப் பத்தியமாக இருந்து மருந்து சாப்பிட்டு, மறுநாள் உப்பை வறுத்து சேர்த்துக் கொள்ளவும். இதனால் மேகவாயுவும் சூலையும் தீரும்.

இதற்கடுத்த முறையுள்ள ஏடு மூலச்சுவடியில் காணப் படவில்லை. 94-ம் கெ. உரை நடைச்சுவடியிலிருந்து அம் முறைகள் எடுத்து எழுதப்படுகின்றன.

## மேகத்துக்கு வாயுவுக்கு எண்ணை

| | | |
|---|---|---|
| 1. இரசகற்பூரம் விராகனெடை | | 3 |
| சுத்திசெய்த சேர்வாளம் | ,, | 3 |

இவைகளை ஒருசேர் ஆமணக்கெண்ணெயில் போட்டு வைத்துக்கொண்டு வேளைக்குத் துட்டிடை கொடுக்க சகல மேகவாயுவும் தீரும்.

2. முத்தின தேங்காயைக் கொண்டுவந்து துருவித் தன் பாலாய்ப் பிழிந்து

| | | |
|---|---|---|
| சுத்திபண்ணின வாளப்பருப்பு துட்டிடை | | 2 |
| சீரகம் துட்டிடை | | 2 |
| வெந்தயம் | ,, | 2 |

இவைகளைப் பால்விட்டு அரைத்துப் பசுவின்பால் ஆழாக்கு 1, பசுவின் கோமியம் ஆழாக்கு 1, பசுவின் சாணிப் பால் ஆழாக்கு 1, புங்கம்பால் ஆழாக்கு 1, புங்கம்பட்டைச்சாறு ஆழாக்கு 1, இவை கூட்டி மெழுகுபதமாயெரித்து வைத்துக்கொண்டு மூன்று நாளைக்கொருதரம் ஒரு துட்டிடை கொடுக்கவும்.

இதற்குப் பத்தியம்—பகலில் ஆட்டுக்கறியும், இராத்திரியில் தேங்காய்ப்பாலும் சோறும் கொடுக்கவும்.

இதனால் மேகசம்பந்தமான சகல வியாதிகளும் தீரும்.

## 180. அஸ்திச்சூடு, மேகச்சூடு, மேகமிருபத் தோன்றுக்கும் மூழ்கவாவரையாதித் தைலம்

ஆவரை வேர் பூ காயிலை சமூல
மடவுடனிறுத்து நூறு பலங்
காவினிற் சித்தாமுட்டி யாமணக்குங்
கடம்பு இம்மூன்றின் வேர்ப்பட்டை
பாவகமுடனே வகையொன்றுக்குத் தான்
பலம் பதினைக்தையு ங்கூட்டித்
தாவியே வளர்ந்த முற்றல் வேம்பின்
பட்டையும் நிறைபலம் பதினைந்தே. ௩௬௫

ஐந்தைந்து பலம் பாதிரியின் பருத்தி
யதினுடவேர் முசுட்டையின்வேர்
கந்த விலாமிச்ச த்தினின் வேருங்
கருது பேராமுட்டியின் வேர்
இந்தஞ்சு மருந்துஞ் சொல்லியபடிக்கி
யே வைத்துப் பலமதாய்க் கூட்டி
விந்தையாய் நறுக்கி நீருமைங்குறுணி
விட்டிடு வாய திற்றனே. ௩௬௬

விட்டைந்து மரக்காற்றண்ணியு ந்தானே
விட்டெரி யனலையைம் படியாய்ச்
சட்டமாய்ச் சுண்ட எரித்திடு கடாயத்
தையும் வடிகொண்டு மென்னெண்ணெய்
இட்டிடு நாலுபடியது மாப்பா
லேபடி நாலிளநீர் தான்
விட்டிடு மிதற்குக் கடைமருந்ததுகே
ளிது வேனதி மதுரமுமே. ௩௬௭

அதிமதுரஞ்சிறு தேக்குடன்தேவ
தாரமு மினகு திப்பிலியு



மதிவிடையஞ்சு க்கேலஞ் சீரகஞ்செவ்
வள்ளிச் செண்பக மொட்டு
இதமிகுஞ்சாதி க்காய் சடாமாஞ்சி
யிலவங்கப்பத்திரி கோஷ்டம்
பதமுள தேத்தான்விரை கரியரிசிப்
பாலுடன் கற்கடக சிங்கே. ௩௬௮

சிங்கி சித்தரத்தைக் கிளியூரம்பட்டைச்
செங்கழுநீர்க் கருஞ்சீர
முங்கெகு ரோகிணிக் கூகைநீறு
முருகு சவ்வாது கல்நாரு
மிங்கிதப் புனுகுசட்டந் தாளிசப்
பத்திரிக்கடலிறஞ் சிமின் பட்டை
யுங்கச் சோலத்தின் கிழங்கு கல்மதமு
முற்பன இலவங்கந் தானே. ௩௬௯

இலவங்க ங்கோரோசனைப் பச்சைப்பூர
மினிய கஸ்தூரியின் மஞ்சள்
லசிறு நாகப்பூவுடன் சரக்கும்
கனிவு வேன் வகைமுப்பத்தாறு
சொலும் வகைக்கொன்று மலைவராகனிடை
தொகுத்தரைத்தே யதிற்கலக்கிப்
பல வடுப்பினில் வைத்தெரித்ததை மெழுகு
பதமதில் வடித்திடு வாயே. ௩௭௰

வடித்து மொன்றோர் விட்டொன்று நாள் முழுகி
வர வஸ்திச் சூட்டுடன் சூலை
துடித்திடு மேகமிருப த்தியொன்றுஞ்
சூரியன்முன் பனியெனவாம்
படியெலாம் புகழுஞ் சோமதே சாதி
பதி யனைக் கொருநீரன்

வடிவுள கடவுளொரு வெனவந்த
வள்ளலி னுயர் விபுவுரையே ௱௭௧

(இ-ள்)

ஆவாரைவேர் பூ, காய், இலை சமூலமாக 100 பலம்
சித்தாமுட்டிவேர்ப்பட்டை 15 பலம்
ஆமணக்குவேர்ப்பட்டை 15 பலம்
கடப்பவேர்ப்பட்டை 15 பலம்
முற்றிய வேம்பின்பட்டை 15 பலம்
பாதிரிவேர் 5 பலம்
பருத்திவேர் 5 பலம்
முசுட்டைவேர் 5 பலம்
விலாமிச்சம்வேர் 5 பலம்
பேராமுட்டிவேர் 5 பலம்

இவைகளையெல்லாம் சிறு துண்டுகளாக நறுக்கி 5 மரக்கால் தண்ணீரில் போட்டு 5 படி கஷாயமாகுமளவும் சுண்டும்படி யெரித்து அதை வடிக்கட்டிக்கொண்டு அதில் 4 படி நல்லெண்ணெயும், பசுவின்பால் 4 படியும் இளநீர் 4 படியும் விட்டு,

| | |
|---|---|
| அதிமதுரம் | சிறுதேக்கு |
| தேவதாரம் | மிளகு |
| திப்பிலி | அதிவிடையம் |
| சுக்கு | ஏலம் |
| சீரகம் | செவ்வள்ளி |
| செண்பகமொட்டு | சாதிக்காய் |
| சடாமாஞ்சி | இலவங்கப்பத்திரி |
| கோஷ்டம் | தேத்தான்விரை |
| கரியரிசிப்பால் | கற்கட சிங்கி |
| சிற்றரத்தை | கிளியூரம்பட்டை |



| | |
|---|---|
| செங்கழுநீர் | கருஞ்சீரகம் |
| கடுகுரோகிணி | கூகை நீறு |
| சவ்வாது | கல்நார் |
| புனுகுசட்டம் | தாளிசபத்திரி |
| கடலிறஞ்சிப்பட்டை | கோரைக்கிழங்கு |
| கல்மதம் | இலவங்கம் |
| கோரோசனை | பச்சைக்கற்பூரம் |
| கஸ்தூரிமஞ்சள் | சிறுநாகப்பூ |

இந்த முப்பத்தாறு சரக்குகளை வகையொன்றுக்கு 1¼ வராகனெடை எடுத்து அரைத்து முன் சொன்ன கஷாயஎண்ணெய்வகையாவில் குழப்பிஅடுப்பில் வைத்து எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவேண்டும்.

இதை ஒருநாள் விட்டொருநாள் தேய்த்து முழுகிவர அஸ்திச்சூடு, சூலை, இருபத்தோரு மேகம் முதலியவை தீரும்.

## 181. தீராத மேகத்துக்கு உள்ளுக்கு எண்ணெய்

பூண்டுடன் மிளகும் வகைக்கொரு பலமும்
புதிய நற்றுளசியோர் குத்து
ஆண்டியே கேகத்தனித்தனி யரைத்து
வோருழக்கெண்ணெ யதன்னில்
வேண்டிய குழப்பி மூன்று நாட்கால
மே கொளு முப்பிலாப் பத்தியம்
பூண்டிடு மேகவியாதி கடீரும்
புண்ணியன் தஞ்சை மானுரையே. ௱௭௨

(இ-ள்)

பூண்டு, மிளகு இவை வகைக்கொருபலம் துளசி ஒரு குத்து இவைகளை நன்றாக அரைத்து ஓர் ஆழாக்கு நல்

லெண்ணெயிற்குழப்பி மூன்றுநாள் காலையில் உட்கொண்டு உப்பில்லாப் பத்தியம் இருந்தால் மேக வியாதிகள் தீரும்.

## 182. மேகநோய்க்கு குழித்தைலப் பொரி

முத்தினவேளை சங்கம் வேர் செக்தில்
 மொழியுஞ் சேங்கொட்டை பூவரசு
சித்திர மூலவேர் நுணப்பட்டை
 சதிரக்கனி வாகையின் பட்டை
சத்துலா சிவனார் வேம்புடனே மரு
 தம்பட்டை பதினொன்று வகையு
மித்தனை மருந்துஞ் சரியதாய்ப் போட்டு
 மே குழித்தைல மதிறக்கே. ௩௭௩

தயிலமதிறக்கி செல்லினிற் பொரிமா
 தன்னிலுங் கலந்துமே கொள்ளு
மியலுடன் காலை யந்தியுந் தானே
 மிடர்செய் மேகநோ யெல்லாம்
பயமுடனோரை விட்டது மோடும்
 பத்திய முப்பதுங் கூட்டு
நயமிகுந் தஞ்சை நகர்தனை யாளும்
 நரபதி மானு வினருளே. ௩௭௪

(இ-ள்)

| | |
|---|---|
| முதிர்ந்த வேளைவேர் | சங்கம் வேர் |
| செக்தில்வேர் | சேங்கொட்டை (சுத்திசெய்தது) |
| பூவரசு | சித்திரமூலவேர் |
| நுணப்பட்டை | சதுரக்கள்ளி |
| வாகைப்பட்டை | சிவனார்வேம்பு |
| மருதம்பட்டை | |

இவைகளைச் சமனெடை போட்டுக்குழித்தைலமிறக்கி நெற்பொரி மாவில் கலந்து காலையும் மாலையும் நாட்டிடை



விதம் உட்கொண்டு உப்புமட்டும் சேர்த்துக்கொண்டு பத்தியமாக இருக்கவேண்டும்.

## 183. பதினெட்டுமேகத்திற்குங் கைகால் பிடிப்பு, சூலைவாய்வுக்கும் பறங்கிப்பட்டைப் பதங்கம்

குக்கிலுஞ் சித்திரமூல மதுடன் கருங்
 குங்கிலியஞ் சாம்பிராணி
பக்குவமாய் நால்வகை யொன்றாக் கைத்து
 பல மரைத்தே வடி(யும்)கட்டி
தக்க பானையிலே போட்டிதைக் கள்ளிச்
 சாற்றை விட்டேயதை வைத்து
முத்திய பறங்கியின்பட்டை யஞ்சுபல
 முனியுடன் றானது செய்யே. ௩௭௫

தானதுசெய்து வடியது கொண்ட
 தூரண மதைத்திறமாயன்
றனிலே சின்னக்கலசமதினிலே
 கப்புடன் போட்டொரு வோட்டால்
மீளவு மூடி வேடது கட்டி
 வெகு பதனங்களாய்க் கவிழ்த்துக்
கோவிலா மூன்று சேலைமண் செய்
 குணமதாங் முன்சொல் பானையிலே. ௩௭௬

பானையில் வைத்து வடுப்பினி லேற்றிப்
 பண்புள வொரு விறகாலே
தீயமாக வனாத் தியிட்டு
 சேருடன் பொங்கி விழாமல்
பானையிலேயே பரிமளவாசம்,
 பார்த்து மற்பக்குவந்தனிலே,

அணியில்லாம லிறக்கி வைத்தாறிய
 வுட னச்சிலே மண்ணனீக்கே.

நீக்கியே வேட்டைத் திறந்து பார்த்திடிலே,
 நேர்த்தியாய்ப் பறங்கியின் பட்டை
யாக்கிய பதங்கமெடுத்து வைத்ததனை
 யடவுள நோய் வலுத்திறமும்
நோக்கியே கொடுக்கப் பதினெட்டு மேகம்
 முடங்கிய கால்கையின் வாய்வும்
போக்கிடு மிச்சா பத்தியமாகப்
 புனிதமாய்க் கொண்டிடு வாயே. ௧௭௮

(இ-ள்)

| | |
|---|---|
| குக்கில் | கொடிவேலிவேர் |
| கருங்குங்கிலியம் | சாம்பிராணி |

இவைகளை வகையொன்றுக்கு 5 பலம் வீதமெடுத்து தரைத்துவடிகட்டிப் பானையில் போட்டு அதில் கள்ளிச் சாற்றைவிட்டுப் பிசறிக்காயவைத்துக்கொள்ளவும். பின்பு பறங்கிப்பட்டை 5 பலமெடுத்துத் தூள் செய்து முன் சொன்ன தூளுடனே கலந்து, ஒரு சிறிய மண்கலசத்தில் போட்டு, ஒரு ஓட்டால் அதன் வாயை மூடி, துணியைச் சுற்றியபின் மூன்று தடவை சீலைமண் செய்யவும்.

நன்றாகக் காய்ந்தபின், இக்கலசத்தை அடுப்பின் மேலேற்றி ஒரே வகையான விறகினால், நிதானமாக எரிக்கவும். சட்டிக்குள் சப்தமேற்பட்டு, ரம்யமான வாசனை வீசும். அத்தருணத்தில், இதை அடுப்பின் மேலிருந்து இறக்கி, நன்றாக ஆறியபின், சீலைமண்ணை நீக்கவும். அந்த ஓட்டிற்கடியிலிருக்கும் பறங்கிப்பட்டைப் பதங்கத்தைச் சுரண்டி வைத்துக்கொள்ளவும்.



இம்மருந்தை, ரோகியின் பலத்திற்குத் தக்கபடி (ஒன்று முதல் 3 குன்றி வரை வெல்லத்துடன்) கொடுக்க, பதினெட்டு வகை; மேகரோகங்கள், கை கால் வாயு, (பிடிப்பு) முதலானவைகள் தீரும். இச்சாபத்தியமாக இருக்கவும்.

## 184. இருபது மேகத்திற்கும் வலி வீக்கஞ் சூலைப் பிடிப்புக்கும் பறங்கிப்பட்டை லேகியம்

தேசத்துப் பறங்கிப்பட்டையும் பலமஞ்
 சே யெடுத்தே பொடிசெய்து
வாச மாமேலன் கிராம்பிதிரண்டும்
 வகைக்குக்காற்பல மிளகோமக்
தேசன் கற்சீரக மிம்மூன்றிற்
 பேரொருபலம் வகைவதற்குத்
துசில திப்பிலியும் பலமதுமரையுங்
 கைமிருஞ்சுளாதிக்கா மிரண்டே. ௧௭௯

இரண்டு சாதிக்கா யெழுவகை மருந்து
 மேயின வறுக்கலாய் வறுத்து
அரைத்ததும் பறங்கிப்பட்டையின் சூர்ண
 மதையு மெடுக்கவே போட்டுச்
சருக்கரை பலமொன்றெனப் படியரைப் பசு
 தன்னுட னெய் படியரையு
மூரத்துடன் விட்டு லேகியஞ் செய்து
 முன்பொர் மண்டலந்தானே. ௧௮௦

மண்டலமுண்க மேக வாய்வுடனே
 வலிவீக்கஞ் சூலையின் கடுப்பு
மிண்டிய பிடிப்பு தன்னுடனிருபது
 மேகமு மற்றிடுந்தானே

உண்டிடு இச்சா பத்தியமாக
வுப்பையுங் கட்டிடுவாயே,
தண்ட மிழ்வாணர் தாரதர மறியுஞ்
சரப பூபதியுமருள் முறையே. ௩௮௧

(இ-ள்)

பரங்கிப்பட்டை 5 பலம் எடுத்துப் பொடிசெய்து

| | |
|---|---|
| ஏலம் $\frac{1}{4}$ பலம் | கிராம்பு $\frac{1}{4}$ பலம் |
| மிளகு 1 பலம் | ஓமம் 1 பலம் |
| சீரகம் 1 பலம் | அரிசித்திப்பிலி $\frac{1}{2}$ பலம் |
| ஜாதிக்காய் 2 | |

இவைகளை இளவறுவலாய் வறுத்து இடித்துப் பரங்கிப் பட்டைச் சூரணத்தோடு சேர்த்து,

| | |
|---|---|
| சர்க்கரை 1 பலம் | பசுவின் நெய் $\frac{1}{2}$ படி |

சேர்த்து லேகியமாகப் பிசைந்து ஒருமண்டலம் சாப்பிடத் தீரும் வியாதிகள் :—

மேகவாயு, வலி, வீக்கம், சூலைக்கடுப்பு, பிடிப்பு இருபது வகை மேகங்கள் முதலியன. இதற்கு உப்புமாத்திரம் சேர்த்துக்கொண்டு இச்சாபத்தியமாக இருத்தல்வேண்டும்.

## 185. இருபது மேகவியாதிகளுக்கும் அஞ்சனக்கல் பற்பம்

அஞ்சனக் கல்லுமுனக்குமே வேண்டி
லதையுமே கொணர்ந்து நன்றுன
விஞ்சையாஞ் சிறுக்கீரையை யரைத்ததனை
வேண்டியபடி குகை செய்து
சஞ்சலமில்லா மதின் மேலுந்தா
னொருகுகை கொண்டு மூடிப்
பஞ்சினால் முடையுஞ்சீலை மண்செய்து
பண்புடன் கெசபுடம் போடே. ௩௮௨



போட்டதை யாறவிட்டெ டுத்துப்பார்
புனிதவஞ்சனக்கல் பற்பமுமாம்
நாட்டமாந் தேனிற் கொடுத்திடு பத்து
நாளதுக் கந்தியுங் காலை
வாட்டிய மேகமிருபதுந் தீரும்
வளதில்லைக் காளியி னுடனே
யாட்டிய பாதத்தருள் பெறுந்தஞ்சை
யண்ணலுமுனர் முறையாமே. ௩௮௩

(இ-ள்)

அஞ்சனக்கல் கொண்டுவந்து, சிறுகீரையை அரைத்துக்குகைசெய்து அதில் வைத்து, அதன்மேல் மற்றொரு குகையால் மூடிச் சீலைமண் செய்து கஜபுடம் போடவும். ஆறினபிறகு எடுத்துப் பற்பத்தை தேனில் (ஒரு பெட்டிகை) விதம் பத்துநாளைக்குக் காலை மாலை இருவேளையும் கொடுக்கவும். இருபதுவகை மேகமும் தீரும்.

## 186. மேகரோகத்திற்குக் கிருஷ்ண அப்பிரகப் பற்பம்

சுத்தி செய்யுங் கிருஷ்ணவப்பிரக மதை
யெருக்கம் பால்தொன்னையில் வைத்
தத்தை விட்டு மைப்போல வரைத்தோர் அகல்
தன்னிலு மேல்தனைத் தானே
மற்றோரகலால் மூடிச்சீலை மண்ணைச்
செய்துமல்த வயணமாக
வொத்த புடமூன்று மிடப் பற்பமாமே
யெத்ததை வைத்துக் கொள்வாயே. ௩௮௪

கொண்டு மற்ற மேக நோய் கொண்ட
வர்க்கதுபான குணமறிந்தி

ரண்டு நோமுங்கொடுக்க மேகமென்ற
  நோய்களெல்லாம் சுழுவியோடு
மூண்டிடிச்சர பத்தியமுடனே
  கற்றனஞ்சூழ்ந்துயர் தஞ்சை
மண்டலாதிபதி சரபேந்திர பூப
  னுணர்ந்த பற்பவகையிதாமே. ௧௮௫

(இ-ள்)

கிருஷ்ண அப்பிரகத்தை (கறுப்பு அப்பிரகத்தை) ஒரு தொன்னையில் எருக்கம்பாலில் ஊறவைத்து, அந்தப் பாலைவிட்டு மைபோல் அரைத்து, ஓர் அகலில் வைத்து மற்றோர் அகலால்மூடிச் சீலைமண்செய்து, புடம்போடவும். புடத்தைப்பிரித்து மறுபடியும் எருக்கம்பால்விட்டரைத்து மறுபுடம் போடவும். இவ்விதம் மூன்று புடம்போட நல்ல பற்பமாகும். இந்தப் பற்பத்தைத் தகுந்த அனுபானத்தில் காலையும் மாலையும் கொடுத்துவர மேகரோகங்கள் தீரும். இச்சாபத்தியத்துடன் இருக்கவேண்டும்.

## 187. இருபத்தோரு மேகம், சூலைவாய்வு, கிரிச்சிரம், வெட்டை, சூதகவாய்வு மூலங்கிராணி குன்மமுதலானதற்கு லேகியம்

அத்திப்பட்டையு ங்காட்டுமல்லிகை
  சமூலமுமாவரசம்பட்டை
மத்துமுள்ளிலவம் பட்டையிவ்வைந்து
  வகைக்குந்தான் வளமாய்த்தானே
உத்தவகையொன்றுக்குப் பன்னிரண்டு
  மரைப் பலமுமொக்கத்தானே
யொத்தமருதம்பட்டை நல்லிலவம்
  பட்டையுடனொதியம்பட்டை. ௧௮௬



பட்டையிலுப்பைப்பட்டையுச்சிதமசம்
  வெம்பாடம் பட்டையூடே
சட்ட கரிப்பூட வேராவரைவேர்
  நீர்ப்பூலாச்சங்கம் வேருந்
திட்டமுடன் செம்முள்ளிவேராகப்
  பத்துவகை சேர்மருந்து
மட்டமாயாறே காற்பலங்கூட்டு
  மின்னமுஞ்சொல் வகைதான் கேளே. ௧௮௭

வகை சிவனார் வேம்பு நிலப்பனைக் கிழங்கு
  வெள்ளறுகு வனத்திற்றேனே
தருந்தூதுவளைமின்வேர் துளசிவேர்
  கண்டங்கத்தரி வேரோடே
சகமீதினன்னாரி வேர்செங்கத்
  தாரிவேர்தானேயெட்டுக்
துகையான வகையொன்றுக்கிரண்டு பல
  நிறையாகத்தூக்கிக்கொள்ளே. ௧௮௮

தூக்கியிதுமுன் சொன்னது இதெல்லா
  மிருபதி மூன்றுள் மருந்துந்
தூக்கியிரண்டு தாழிதனிற் போட்டு
  வதனில் நல்தண்ணீர் வார்த்து
செக்கிரமா முரித்துமதை முக்குறுணி
  யாகக் காய்ச்சிச்சேலைகொண்டு
சாக்கிரதையாக வடிக்கட்டி மறு
  படியும்புத்தன்னில் வையே. ௧௮௯

வைத்து எரித்தே யிதற்கு மேன்பொடிகளு
  ஞ்சொல்வேன் வகையதாகச்
சுத்த சண்பகப்பூவி லவங்கப்பட்டை
  சாதிக்காய் சுக்கின்னுறு

மொத்தவகை யொன்றுக்கோர் பலமேலங்
   கிராம்புமதினுடனே சாதிப்
பத்திரியும் மூன்றுவகைக்கோர் வகைக்கு
   அரைப்பலமும் பண்பாய்க்கூட்டே. ௫௯௰

கூட்டி சமுத்திரசோகி விரையபினுஞ்
   சணல் விரையுங் குணமதாகக்
காட்டினிற் கராம்பும் வலம்புரிக்காயுங்
   கல்மதமுங்கசகசாவும்
கூட்டுமிதெட்டின் வகைக்குங்காற்பலமுங்
   கொச்சி மிளகுடனே தானே
காட்டின் சிறுநாகப்பூ விரண்டுவகைக்
   கிரண்டுபலம் சமமாய்க்கூட்டே. ௫௯௧

சமமான சீரகமும் மூன்று பலங்
   கண்டு பறங்கி தானு
மிவலாக வொன்று பலங்கஞ்சா
   வொன்றுவராகனெடைதானே,
சுயமான விச்சாக்கை யிடித்துத்தூள்
   செய்து வைத்துக்கொண்டேதான்
ஓயிலான சந்தனம் பத்துப்பலமுந்
   தண்ணீரினுட்கலந்தே. ௫௯௨

கரைத்து வைத்து மூன் பாகாகற்றுவேச்
   சந்தனத்தைக்கரைத்த தண்ணீர்
விராகுடனே பிழிந்து பிறகு பசும்பால்
   காறுழி விட்டுத்தேனி
லொருபடியுஞ் சருக்கரையு மய்யஞ்சு
   பலமது போட்டுருக்கமாக
எரிலேயே பக்குவங்கண்டிறக்கியுமே
   யவ்வேளை யிளைத்திருந்திடாயே. ௫௯௩



இருந்து கொட்டைப்பாக்களவு மத்தி [illegible]
   யுறுதியுடனிரண்டுவேளை
பருகுவப்பை வறுத்துக்கொண்டிச்சா பத்
   தியம் வாய்வுப்பண்டந்தள்ளு
இருபதொரு மேகங்கிரிச்சிரங்குலை வெட்டை
   தலைத்தியக்கம்பக்கக்குன்மம்
வருகுதகத்தின் வாய்வுங்கப்பு
   மூஷ்ணம் குன்மவலியுந்தானே. ௫௯௪

வலிமூலக்கிராணியுடன் வயிற்றுவலி
   பித்தவெட்டை வாய் நீருறல்
பலவிதமாய் வயற்றினிறேயுங் குலைதீ
   ரேப் வாயு பழங்கிரச்தி
விலகிப்பயெண்டாகிப் பலதுண்டாம்
   தேகவது வீரியமுண்டாம்
பலகலையினுணர்ந்த இந்தமுறையதனைச்
   சரபேந்திரன் பகரும் வாறே. ௫௯௫

(இ-ள்)

அத்திப்பட்டை 12½ பலம் காட்டுமல்லிகை சமூலம் 2½ பலம்

| | |
|---|---|
| அரசம்பட்டை ,, | மூன்விலவம்பட்டை ,, |
| மாம்பட்டை ,, | மருதம் பட்டை 6¼ பலம் |
| நல்விலவம்பட்டை 6¼ பலம் | இலுப்பைப்பட்டை ,, |
| வேம்பாயம்பட்டை ,, | கரிப்பூட வேர் ,, |
| இதியம்பட்டை ,, | சங்கம் வேர் ,, |
| ஆவாரைவேர் ,, | செம்முள்ளு வேர் ,, |
| நீர்ப்பூலா வேர் ,, | வெள்ளர் வேம்பு 2 பலம் |
| செவ்வள்ளிமுள்ளு 2 பலம் | வெள்ளறுகு ,, |
| தூதுவளை வேர் ,, | துளசிவேர் ,, |
| கண்டங்கத்திரிவேர் ,, | நன்னாரிவேர் ,, |
| சந்தத்தாரி வேர் ,, | |

இவைகளை இடித்து இரண்டு தாழிகளில் போட்டு ஒருகலம் தண்ணீர்வார்த்து அதை முக்குறுணியாகக்காய்ச்சி வடிகட்டி மறுபடியும் அடுப்பில் வைத்துப்பாகு பதத்தில் வரும் காலத்தில்,

| | |
|---|---|
| சண்பகப்பூ 1 பலம் | லவங்கப்பட்டை 1 பலம் |
| சாதிக்காய் ,, | சுக்கு ,, |
| ஏலம் $\frac{1}{2}$ பலம் | இரும்பு $\frac{1}{2}$ பலம் |
| சாதிப்பத்திரி ,, | |

இவைகளைத்தூளாக்கிப்போட்டு,

சமுத்திரச்சோகி (சோழி) $\frac{1}{4}$ பலம்
அபின் $\frac{1}{4}$ பலம்
சணல் விரை $\frac{1}{4}$ பலம்
காட்டுக்கிரும்பு $\frac{1}{4}$ பலம்
வலம்புரிக்காய் $\frac{1}{4}$ பலம்
கல்மதம் $\frac{1}{4}$ பலம்
கசகசா $\frac{1}{4}$ பலம்
மிளகு 2 பலம்
கிருஷ்ணகப்பூ 2 பலம்
சீரகம் 3 பலம்
கண்டு பாறங்கி 1 பலம்
கஞ்சா 1 வராகனெடை

இவைகளை இடித்துத் தூள் செய்துகொண்டு, சந்தனம் 10 பலத்தைத் தண்ணீரில் கரைத்து வைத்துக்கொண்டு பொடிகளைத் தூவிக்கொண்டே சந்தனம் கரைத்த நீரையும் பிழிந்து, பிறகு பசுவின்பால் 2படியும் சர்க்கரை 5 பலமும், தேன் ஒருபடியும் சேர்த்து லேகியப் பக்குவத்தில் இறக்கவும்.

இதில் காலையும் மாலையும் கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு, உப்பை வறுத்துச் சேர்த்துக்கொண்டு வாழ்ந்தால்



தங்கள் தன்னி இச்சாபத்தியமாக இருந்தவர், இருபத்தோரு மேகம், மூத்திரக்கிரிச்சிரம், சூலை, வெட்டை, தலைத்தியக்கம், சூலைக்கட்டு, சூதகவாயு, குன்மம், உடம்புக்கடுப்பு, உஷ்ணம், மூலக்கிராணி, வயிற்றுவலி, பித்தவெட்டை, வாய்நீர் ஊறல், பலவித வயிற்று நோய்கள், மூலம், பழஞ்சுரத்தி இவை தீரும். பசி உண்டாகும். தேகவலுவும் வீரியமும் உண்டாகும்.

## 188. மேகவெட்டைக்கு நல்லெண்ணெய் மருந்து.

நல்ல எண்ணெய் சேருமளை துளசியிலைச்
சார் சேரும் ஒன்றுயொன் றுஞ்
சொல்லிய சொற்படிக் கிரண்டுங் கலந்து
மதிகாலை தனிற் சுகமதாக
அல்லலற வுண்க மேகவெட்டையறு
மூண்மைபதா யளகை யாளும்
வல்லவனுஞ் சரபேந்திர னுணர்ந்
தறிந்த நல்ல எண்ணெய் மருந்து தானே. ௩௩௩

(இ-ள்)
நல்லெண்ணெய் $\frac{1}{4}$ சேர் துளசி இலைச்சாறு 1 சேர்
இவையிரண்டையும் கலந்து அதிகாலையில் சாப்பிட்டால் மேகவெட்டை தீரும்.

## 189. மேகமுதலான பயித்தியப் பித்தஞ், சயங், தலை மயக்கம், பாண்டு, மூலம், நீரடைப்புக்கு, கங்காதரச் சூர்ணம்.

ஏலஞ்சந்தனங்கோரைக்கிழங்கமுங்
கொரக்கிழங்கு மிலுப்பைப்பூவுங்
கோலச்செங்கழுநீர்க்கிழங்கு செவ்வி
முன்னியுந்தக் கோல மல்லி

திருத்திப்பிலி யானைத்திப்பிலி காஞ்
சொரியயில் சிறுநாகப்பூ,
நீலோற்பலக்கிழங்கு ஞ்செந்நிற்சர்க்
கரைபூசினிவிரை தானே ௩௭

விரைசயிலேயப்பச்சைக் கற்பூரங்குங்குமப்பூ
விலாமிச்சம் வேர்
கருஞ்சீரக ஞ்சீரக ஞ்சாதிபத்திரியுந்
நாட்டரத்தி ப்பூ
முருகுவர் சாரப்பருப்பு கன்னாரியதிவிடைய
மூங்கிலுப்பு,
முரமாஞ்செஞ் சந்தனமுங்கொடிமுந்திரிப்பழமூக்
குத்திப்பூண்டே ௩௮

பூண்டிலவங்க ப்பத்திரி நெற்பொரி
கஸ்தூரியு ங்கல்புங்கு மாஞ்சில்
வேண்டு கிலப்பனைக்கிழங்கு கற்கடக
சிங்குடனே சதாவேரி தாளும்
மீண்டுந் தாமரைத்தாது மதிமதுரம்
துடிக்காய் வெள்ளரியின் வித்து
தீண்டிலவம் பிஞ்சுடனே கற்பூரம்
காகமுட்டியு ங்கிராம்பே ௩௯

ஒப்புதமில்லாத சிறுதேக்குடனே
யேழுவகைப் பிச்சிலாமற்
சாதகமாய்ச் சமபாகம் திருத்துச்
சூரணஞ்செய்து தானிதற்கு
விதமிதற்குஞ் சரியாய்ச் சருக்கரையுஞ்
சேர்த்து மொரு வேளைக்குத் தான்
சீதவரு மற்கமிது மந்திரிதன்
டு வராகனிடை தானே. ௪௰



தானே கொள்ளிதற்குப் பயித்திய ரோக
மிரத்தபித்தம் தலைமயக்க
மூனஞ்செய் பாண்டு சயம்
நீரடைப்புத்தாக முமேயோமேழலம்
தானில் கில் வேட்டைனச்சி
லுண்டு தளிகூர்ந்த சிவன் கருணை பெற்ற
தோனுணர் கங்காதர ச்சூரணமிதுவே
கைகண்டகுண மதாமே ௪௧

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலம் | சந்தனம் |
| கோரைக்கிழங்கு | அமுக்கிராக்கிழங்கு |
| இலுப்பைப்பூ | செங்கழுநீர்க்கிழங்கு |
| நெல்லிமுள்ளி | தக்கோலம் |
| கொத்தமல்லி | திப்பிலி |
| யானைத்திப்பிலி | காஞ்சோறிவேர் |
| அகில் | சிறுநாகப்பூ |
| நீலோத்பலக்கிழங்கு | செந்நிற்சர்க்கரை |
| பூசணிவிரை | சயிலேகம் |
| பச்சைக்கற்பூரம் | குங்குமப்பூ |
| விலாமிச்சம்வேர் | கருஞ்சீரகம் |
| சீரகம் | சாதிபத்திரி |
| நாட்டரத்திப்பூ | சாரப்பருப்பு |
| நன்னாரிவேர் | அதிவிடையம் |
| மூங்கிலுப்பு | செஞ்சந்தனம் |
| கொடிமுந்திரிப்பழம் | மூக்குத்திப்பூண்டு |
| இலவங்கப்பத்திரி | நெல்பொரி |
| கஸ்தூரி | கல்புங்கு |
| சடாமாஞ்சி | கிலப்பனங்கிழங்கு |
| கற்கடசிங்கி | தண்ணீர் விட்டான்கிழங்கு |
| தாமரைத்தாது | அதிமதுரம் |

| | |
|---|---|
| கடுக்காய் | வெள்ளரிவிதை |
| இலவம்பிசின் | கர்சூரம் (பேரீச்சம்பழம்) |
| காகமுட்டி | இரும்பு |
| சிறுதேக்கு | |

இவைகளை சமபாகமாக எடுத்துக்கொண்டு சூரணம் செய்து, சூரணத்தின் மொத்த எடைக்குச் சரியாக சர்க்கரைசேர்த்து வைத்துக்கொள்ளவும். வேளைக்கு இரண்டு விராகனிடை விதம் காலையும் மாலையும் சாப்பிட்டுவர,

பயித்தியரோகம்
ரத்தபித்தம்
தலைமயக்கம்
பாண்டு
க்ஷயம்
நீரடைப்பு
தாகம்
இரத்தமூலம்
இவை தீரும்.

இதற்கு "கங்காதாரச்சூரணம்" என்று பெயர்.

## 190. மேகமிருபது, சூடு, வாய்வு, கைகாலெரிவு சயரோக முதலானதுக்கு அமிர்தாதிச்சூர்ணம்

சீந்தில் முற்றக்கொடியை யுந்தான்கொணர்
ந்ததின் மேற் புறணியையுஞ்சீவி த்தள்ளி
வாய்ந்த கத்தியாற் கண்டங்கண்டமா-
கவும் நறுக்கி வல்லுரலிற்
றேய்ந்திட இடித்து மொருபானை
தனிற்றிராவாய் விட்டுப்
பாந்தமுடன் பிசைந்து துணிபோட்டுவடி
கட்டி வைப்பாய் பரிதி முன்னே. சஎஉ



மூன்றுமலரத்து த்தெளிந்த பிறகதின்
மேலினீரதையு முன்பிறந்துப்
பின்று மடியிலிருக்கும் வண்டலை
வெய்யிலிலே வைக்கப்பிசகிடாமல்
உன்னிதசூரணம் வெளுப்பாயிருக்கு மதோர்
பாண்டமதிலும் வைத்துக்கொண்
டின்னமிலாமிச்சம் வேரமுக்கிருக்
கிழங்கு சாதி க்காய் தானே சயிரு

சாதிக்காய் செருஞ்சிற்காய் தேற்
றான் வித்ததி மதுரத்தாம ரைத்தா
தாது மிலவங்க பத்திரி சீரகம்
கோட்டமுமரே ணுகமுஞ்சு க்கு
சேதத் தாமரைக்கிழங்கு செல்விமுள்ளி
குங்குமப்பூ சிறுநாகப்பூ
ஈதலாற் கொடிமுந்திரிப்பழ த்திப்பிலியும்
செற்பொரியு மேல முமே சஎச

ஏலம் கிலப்பனைக்கிழங்கு ஞ்சந்தனஞ்
செஞ்சந்தன முமே தக்கோலம்
கோலபச்சை க்கற்பூரங்கருஞ்சீரஞ்
சதாவேரி கருடக்கிழங்கு
சில யினகிருபத்தி யெட்டும் ரெண்டு
வராகனிடைசேர் வகைக்கி
மேலுமலத யிடித்துத் தூள் செய்து
வடிக்கட்டி க்கொள் மெலிசாற்றுனே. ஹஎஇ

தானேமிந்த த்துடனையு முன்னிருந்த
சீந்திலுடச்சருக்கரையில்
ளனமில்லாமஞற்றிப்பன்னிரண்டு
வராகனிடை யொக்க க்கூட்டு

செனிச்சர்க்கரை சாற்றியறுபத்தெட்டே
திறுகீ திறமதாக
ஆனவராக னிடையெல்லாஞ்சேர்த்து
மொருகலசமதில் வைத்துக்கொள்ளே ௩௱௬

வைத்துக்கொண்டதனில் வராகனிடைரெண்டு
கலயந்தி மறவாமற்கொள்
பத்தியந்தானிச்சா பத்திய மாகத்
தீர் வியாதி பகர் வேன் கேளு
ரெத்தபித்தமுமேகமிருபதுவுஞ்சயங்கைகா
லெரிவு தாகம்
அஸ்திச்சூடுடன் மூத்திரக்கிருச்சமூல
மும் நீரடைப்பும் போமே ௩௱௭

நீரடைப்பு மூத்திரத்தின் பாலையுடனே விசப்பி
கிம்மெப்போகும்
சூரியன் முன்பனிபோல் குபேரனுக்குப்
பொற்கணருள் சோமனுதன்
சிரணபாதத்திலர்ச்சனை செய்த
ருள் பெற்ற சிமோனென் கோன்
பாரில் புகழ்பெற்ற தஞ்சை சரபோஜிமகாராசன்,
பகரும் வாறே ௩௱௮

(இ-ள்)

முற்றின செந்திற்கொடியைக்கொண்டுவந்து மேற்புறணியைச்சீவித்தள்ளிவிட்டு, அதைக்கண்டங்கண்டமாக நறுக்கி இடித்துப்பானையில் போட்டுத்தண்ணீர் விட்டுப் பிசைந்து துணியால் வடிகட்டி அந்தத்தண்ணீரை வெய்யிலிலே வைத்துத்தெளிந்த பிறகு மேல்தண்ணீரை இறுத்துவிட்டு அடியிலிருக்கும் வண்டலை வெய்யிலில் வைக்க வெளுப்பான சூரணம் கிடைக்கும். இதை ஒரு பாண்டத்தில் வைத்துக்கொண்டு,



| | |
|---|---|
| விளாமிச்சம்வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| சாதிக்காய் | நெருஞ்சில்காய் |
| தேத்தான்கொட்டை | அதிமதுரம் |
| தாமரைத்தாது | லவங்கப்பத்திரி |
| சீரகம் | கோஷ்டம் |
| அபிரணுகம் | சுக்கு |
| தாமரைக்கிழங்கு | நெல்லிமுள்ளி |
| குங்குமப்பூ | சண்பகப்பூ |
| கொடிமுந்திரிப்பழம் | திப்பிலி |
| நெற்பொரி | ஏலம் |
| நிலப்பனங்கிழங்கு | சந்தனம் |
| செஞ்சந்தனம் | தக்கோலம் |
| பச்சைக்கற்பூரம் | சீரகம் |

தண்ணீர் விட்டான் கிழங்கு கருடன்கிழங்கு
மிளகு

இவை வகைக்கு 2 வராகனெடை எடுத்துக்கொண்டு இடித்துத்தூள் செய்து மெல்லிய துணியால் வடிக்கட்டிக்கொண்டு இந்தத்தூளுடன் முன் எடுத்து வைத்திருக்கும் செந்திற்சர்க்கரையில் 112வராகனெடையும், சீனிசர்க்கரையில் 168 வராகனெடையும் சேர்த்து ஒரு கலசத்தில் வைத்துக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு 2 வராகனெடை காலையும் மாலையும் சாப்பிட்டு இச்சாபத்தியமாக இருக்க, தீரும் வியாதிகளாவன:—

ரத்தபித்தம்
இருபதுவகை மேகம்
க்ஷயம்
கை கால் எரிவு,
தாகம்
அஸ்திசூடு

மூத்திரக்கிரிச்சிரம்
மூலம்
நீரடைப்பு
மூத்திரப்பாண்டு
விசர்ப்பம் (அக்கிபோன்ற விஷவிரணம்)

### 191. மேகத்துக்கு எண்ணெய்

நல்லெண்ணெய் நாழி பசும் பால் நாழி
　பூண்டுடனல் மிளகுந்தானே
சல்லயமிலாமல் வகைக்கொவ்வொரு சேர்
　சேர்த்துமதை த்தானே காய்ச்சிச்
சொல்லிய சொற்படியுமொரு துட்டினிடையுங்
　கொள்மேகத்துருசாய்த்தானே,
சொல்லு புலிமுன் மானுமைந்தாறு
　நாட்காலை கொண்டிடாயே ௧

(இ-ள்)

நல்லெண்ணெய் | படி
பசுவின்பால் | படி.
இவற்றோடு, பூண்டு | சேர்
மிளகு | சேர்

இவைகளை அரைத்துச் சேர்த்துக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வேளைக்கு ஒரு துட்டிடைவிதம் 5, 6, நாள் சாப்பிட பலவித மேகங்கள் இரும்.

### 192. இருபது மேகம், அரித்திராமேகம், இரத்த பித்தம், சூலை, நீரடைப்புக் கண்காலெரிவுக்கு ஸ்ரீ கண்டாதி சூர்ணம்

ஆவாரம் பூகாயிலையும் பட்டை பிசி
　னிவ்வைந்தும ரசம் வித்தும்



காவினிற்றேற்றான் வித்துஞ்சேந்திற்
　சக்கரை நெருஞ்சிக்காயுங்கோட்டம்
பூவினில் மாதளம்பூவு மாமஞ்சள்,
　பச்சைக்கற்பூரஞ்சந்த
மேவுமதிமதூ ஞ்செங்கழுநீரின்
　கிழங்கறுகம் வேருங்கூட்டே ௧

கூட்டுமிலாமிச்சம்வேர் சதாவேரி
　சாதிக்காய் குங்குமப்பூ
நாட்டினத்திவிரையுந்தக்கோலம்
　திலப்பனையாக ஏலெட்டாச்சு
வாட்டமில்லாமல் வகைக்கு மரைப்பலமு
　மிடித்துமதை வடிகட்டிக்கொண்
டாட்டமுட னிறைக்சர்க்கரை
　யுஞ்சேர்த்துக் கலந்ததின் மேற்கேளே ௨

அதின்மேற்கேளு பானம் செய்தேனும்
　குளிர்ந்த சலமதனிற் கொண்டால்
விதமான மேகமிருபது மரித்திரா
　மேக பித்தமிரத்தஞ்சூலை,
சதமான கண்காலெரிவுடனே
　நீரடைப்பு தாக சோப
மிதுபோகும் ஸ்ரீகண்டாதிச்சூர்ணந்
　தன்னை விபுவியம்பினரே. ௩

(இ-ள்)

ஆவாரம்பூ, காய், இலை, பட்டை, பிசின்

| | |
|---|---|
| அரசம்வித்து | தேத்தான்வித்து |
| சேந்திற்சர்க்கரை | நெருஞ்சில்காய் |
| கோஷ்டம் | மாதுளம்பூ |
| மரமஞ்சள் | பச்சைக்கற்பூரம் |

| | |
|---|---|
| சந்தனம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| அதிமதுரம் | விலாமிச்சம்வேர் |
| அமுக்கம்வேர் | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| ஜாதிக்காய் | குங்குமப்பூ |
| அத்திவிரை | தக்கோலம் |
| நிலப்பனங்கிழங்கு | |

இவை வகைக்கு அரைப்பலம் எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து சூரணத்தின் நிறைக்குச் சமனாக சர்க்கரை சேர்த்து நெய்யிலாவது, தேனிலாவது, குளிர்ந்த ஜலத்திலாவது கொடுக்கப் பலவகை மேகமும், அதிசார மேகமும், ரத்தபித்தமும், சூலையும், கண்காசலெரிவும், நீரடைப்பும், தாகமும், சோபமும் போகும். இதற்கு ஸ்ரீகண்டாதி சூரணம் என்று பெயர்.

## 193. சகலமேகம், வாய்வுசூலைக்கும் மேகத்தெண்ணெய்

திருகுகள்ளி நெற்திராயக நலையரந்தகரை
துளசியிலை யுள்ளி
பருத்திக்கொட்டையும் பிரமியவழுக்கை
சின்னசெருப்படியுந்தானே
தருவேப்பிணிலை கோழியவரைகழற்கொடி
யிலையதனுடனல்லி;
வுரமான வெள்ளறுகுபன்னிரண்டில்
வகைக்கொரு சேரொக்கக்கூட்டே ௫௩

கூட்டியரைத்தே யினகறிலைவேர்ப்
பட்டையதைக் கொணர்ந்து தானே,
நாட்டிக நீர்விட்டு மதைக்காச்சிய
டோயாதனிவிரண்டு



தேட்டமுள சேரும்விட்டுக் கடுக்காய்த்தூள்
வராகனிடை சேருகாலு
காட்டினு மணக்கெண்ணெய் சேர் காலும்
புனித ரச செந்தூரமே ௫௪

செந்தூரம் வராகனிடை யொன்றுநிறு
மிறுதாருசிங்க காலு
மிந்த வராகனிடை யிதையும் பொடித்து
மெழுகுபதத்தெண்ணெய் தன்னிற்
றந்திரமாய்ப்போட்டு மதைக்காச்சி
மிறக்கியும் வாலைதனைநினைத்து
வந்திமேகத்தி ரோயாரம்பத்தினிசும்
வகையுங்கண்டே ௫௫

வகைகண்டு அவரவர்க்குத் தக்கனையா
யெண்ணெய் கொடுமோனிடர்க்குச்
சகலமேகமுமற்று ப்போம் வாய்வுஞ்
சூலையறு ந்தானிதற்குத்
தலைவான இவ்வெண்ணெய்க்கிச்சா
பத்தியமாகத்தானே யுண்ணு
சப்பதி நற்சோறு தோதிபதியனுமதி
யிதன்பாய்க்கொள்ளே ௫௬

(இ-ள்)

திருகுகள்ளி நெர்திராயகம்
நலையாந்தகரை துளசியிலை
வெள்ளைப்பூண்டு பருத்திக்கொட்டை
பிரமியவழுக்கை (ஆற்றுப்பசலி)
சின்ன செருப்படி வேப்பிலை
கோழியவரை கழற்சிக்கொடியிலை
வெள்ளறுகு

இவை வகைக்கு ஒரு சேர் எடுத்து அரைத்து, மிளகறணை வேர்ப்பட்டைக் கஷாயம் 2 சேர் சேர்த்து, கடுக்காய்த்தூள் 4 வராகனெடை, ஆமணக்கெண்ணெய் 4 சேர் இவைகளைச்சேர்த்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி மெழுகுபதம் வரும்போது ரசசிந்தூரம் ஒரு வராகனெடை, மிருதார்சிங்கு 4 வராகனெடை இவைகளைப் பொடித்துச் சேர்த்துக் காய்ச்சி இறக்கிவைத்துக்கொள்ளவும்.

இச்சாபத்தியமாக இருந்து இதைச்சாப்பிட்டு வர சகல மேகமும் வாயுவும் தீரும்.

## 194. மேகவெட்டைக்குப் பருத்திப்பால் பொங்கல்

பருத்திக் கொட்டையை யூறவைத்து
   மருவாவிடித்தப் பாலை வாங்கித்
திருத்து சம்பாவரிசியதிற் போட்டுப்
   பொங்கி வெண்ணெயுங்காற் சேருந்தானே
உரைத்தபடி புட்டி வெல்லமுஞ் சேர்த்து
   மறுபொழுதுண்டாயானால்
வருந்திடுமேகத்தின் வெட்டையறு
   மூப்பும் புகை, புளியு மறந்திடாயே ௪௧௭

(இ-ன்)

பருத்திக்கொட்டையை ஊறவைத்து மருவாள் இடித்து, அதன் பாலைப் பிழிந்து, செம்பா அரிசியைச் சேர்த்துப் பொங்கலாகச் செய்து கால்சேர் நல்லெண்ணெயும், கருப்புட்டியும் சேர்த்து ஆறு வேளை சாப்பிட்டு, உப்பு, புளி, புகையிலை தவிர்த்துப் பத்தியமாக இருந்தால் மேக வெட்டை குணமாகும்.



## 195. மேக வாயு, சூலை, விட்கடிக்குச் சங்காதிச் சூர்ணம்.

சங்கம் வேர் சங்கக்குப்பியின் வேருங்
   கொடிவேலி வேர் தானிம் மூன்றுஞ்
சங்கு வெள்ளைச் சாறணை தூதுவளை
   வெள்ளறுகுடனே சாரணையும்
பொங்குமுளவேளை மூக்கா வேளை
   யுடன் சிவனார் வேம்போடே விழி
பங்கமிலா முத்திருக்கஞ்செவி
   யாடு தீண்டாத பாளைதானே. ௪௧௮

ஆடுதின்னாப் பாளை யுடன் பத்து
   வகையுஞ் சமூல முமெடுத்துத்
தேடுகொச்சி மாவிலிங்கைப் பறங்கிப்
   பட்டை யிம்மூன்று ஞ்சேர்த்துக்கொண்டு
ஈடுசுக்கு த்திப்பிலி மிளகு காரம்பு
   டன் சீரகமு மல்லி
தேட்ரிய வால்மிளகு பெருங்காய
   முடன் கண்டந்திப்பிலி தானே ௪௧௯

திப்பிலியோடே யஞ்சுவகை மருந்துஞ்
   சரியிடையாய்ச்சேர்த்திடித்துச்
செப்பிய சூரண மிதைக்குச் சரியாகத்
   துய்ய வெள்ளைச் சீனி கூட்டித்
தப்பாமல் வெருகடி அளதி காலை,
   யந்தியிலுந் தானே கொள்ள
அப்பவே மேகவாய்வுடன் சூலைவிடகடியு
   மகலுந்தானே. ௪௨௰

(இ-ன்)

| | |
|---|---|
| சங்கம்வேர் | சங்கங்குப்பி வேர் |
| கொடிவேலி வேர் | வெள்ளைச்சாறணை (சமூலம்) |

| | | | |
|---|---|---|---|
| அரத்தை (சமூலம்) | | வெள்ளறுகு | (சமூலம்) |
| சாரணை | ,, | வேளை | ,, |
| முக்காவேளை | ,, | சிவனார் வேம்பு | ,, |
| விழுதி | ,, | மூத்திரக்கஞ்செவி | ,, |
| ஆடுதீண்டாப்பாளை | ,, | கொச்சி | ,, |
| மாவிலிங்கை | | பறங்கிப்பட்டை | |
| சுக்கு | | திப்பிலி | |
| மிளகு | | கிராம்பு | |
| சீரகம் | | மல்லி | |
| வால் மிளகு | | பெருங்காயம் | |
| கண்டத்திப்பிலி | | | |

இவைகளைச் சமனெடையாக எடுத்து இடித்துச் சேர்த்துக் கூடிய சூரணத்தின் சமனிறை வெள்ளைச் சீனி சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

இந்தச் சூரணத்தில் இருவேளையும் வெருகடி வீதம் சாப்பிட்டு வர மேக வாயு, சூலை, விஷகடி இவை தீரும்.

## 196. மேகவெட்டைக்கு மருந்து

எருமையுட தயிரினிலே பறங்கிப்பட்டை
  மின்றூளை யேபோட்டுப்பின்
னுரமாங்கற் சுண்ணும்பிரண்டு வராக
  னிடையதி லொக்கப் போட்டுக்
கரமதினுற் குழப்பியதை மூன்றுநாட்
  கொள்ளு மதிகாலை தானே.
திருகுசெய்யு மேகவெட்டையொழுகி
  யதெல்லா மகன்றுத் தீருந்தானே.

சக்கரையும் பசுவின்பால் நெய் தேனும்
  நால்வகையுஞ் சரியதாய்க் கூட்டிப்
பக்குவமாய்க் காய்ச்சி யதைநன்றாகவே
  லேகிய பதத்திறக்கி,



மக்களையாய்க் காலை மந்தி பிசகாமல்
  வெருகடியளவே யுண்ணு
சிக்கு மூத்திர கிருச்சங்கள் கல்லெரப்புப்
  பிரமேகந் தீருந்தானே. ௨௰௨

(இ-ள்)

1) எருமைத் தயிரில் பறங்கிப்பட்டையைத் தூள் செய்து போட்டு, அதில் கற்சுண்ணும்பு இரண்டு வராகனிடை போட்டுக் கையால் குழப்பி, மூன்று நாட்கள் அதிகாலையில் சாப்பிட மேகவெட்டை தீரும்.

2) சர்க்கரை, பசுவின் பால், நெய், தேன் இவைகளைச் சமனாய்க் கூட்டிப் பக்குவமாய்க் காய்ச்சி லேகிய பதத்திலிறக்கி, காலை, மாலை வெருகடியளவு சாப்பிட்டு வர மூத்திரக் கிரிச்சிரம், மூத்திராசயத்தில் கல், உப்புப் பிரமேகம் இவை தீரும்.

## 197. மேக வெட்டை, உஷ்ண வாயு, எலும்புருக்கி, இருமலுக்கு உருளரிசியாதிச் சூரணம்.

கொத்தமல்லி சுக்குத் திப்பிலி மிளகு
  வெந்தயமூ ங்குணமாமேல
மொத்தவதிமதூரம் லவங்கப்பட்டைப்
  பத்திரியினுடன் சாதிக்கா
யித்தனையும் பத்துவகை யொன்றுக் கரைப்
  பலமுமே யிடித்து
சுத்தமாக்துணி போட்டு வடிக்கட்டிக்
  கலந்து கலசத்துக்குள் வையே. ௨௰௩

தேனு புட்டி கருப்புட்டி யிருகதுவும்
  தூளாக்கி க்கிரமத்தோடே

1. உருளரிசி=கொத்தமல்லி.

கோளில் சருக்கரை பலம் பத்திரண்டு
  மதினுடனே கூடப் போட்டு
நீளும் விறகிட்டெரித்துப் பதத்தில் முன்
  சூரணத்தை நீயும் போடு
தாள்மட்டு ங்கிண்டி கிண்டிவரும்போது
  பசுநெய் சேர்தானு மூன்றே.

சேருமூன்றதில் விட்டு லேகியமாம்
  பக்குவத்திற் சிவனைப் போற்றிக்
காரு மெனை யென்று நியானித்து மலைக்
  கீழிறக்கி க்கருதக் கேளு
ஓரோது மிச்சங்கா யினளவெடுத்துக்
  காலைமந்தி யுண்ணு பத்தியம்
கோர மிலா வாய்வுமு ள்ளபதார்த்தமுடனே
  கசப்புங் கூட்டிடாதே.

கூட்டிடாதே மிச்சாபத்தியம் நாற்பது
  நாளுங் கொண்டாயானால்
வாட்டிடு மேகத்தின் வெட்டை யெலும்புருக்கி
  யிருமலுஷ்ண வாய்வுந்தீரும்
திட்டமில் வானுன் வழியும் படைபுயத்தி
  லணிகுலவு திண்புயஞ் சேர்
வாட்டமிலாத் தஞ்சைநகர்ச் சரபேந்திர
  னுணர் லேகிய மன்பாய்ச் செய்யே.

(இ-ள்)

| | |
|---|---|
| கொத்தமல்லி | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| வெந்தயம் | ஏலம் |
| அதிமதுரம் | லவங்கப்பட்டை |
| லவங்கப்பத்திரி | சாதிக்காய் |



இவை வகையொன்றுக்கு அரைப் பலம் வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து ஒரு கலசத்துக்குள் வைத்துக் கொள்ளவும். புட்டி கருப்புட்டியில் இருபதும், சர்க்கரை 20 பலமும் போட்டு அடுப்பில் வைத்துப் பாகாகக் காய்ச்சி, வஸ்திரகாயம் செய்து வைத்திருக்கும் தூளை அதில் போட்டு நன்றாகக் கிண்டி கிண்டி வரும்போது, மூன்று சேர் பசுவின் நெய்யை அதில் விட்டு லேகிய பதமாக இறக்கிக் கொள்ளவும்.

இதில் காலையும் மாலையும் எலுமிச்சங்காயளவு 40 நாள் சாப்பிட்டு வாயு பதார்த்தங்கள், கசப்புப் பதார்த்தங்கள் நீக்கி இச்சா பத்தியமாக இருக்க, மேகவெட்டை, எலும்புருக்கி, இருமல், உஷ்ண வாயு இவை தீரும்.

## 198. சந்தியைப் பற்றின மேக வெட்டைக்கு மருந்து.

கோவைத்தண்டுடனே வெங்காயமிரண்
  டுந்துவைத்து நல்ல கோவின் பாலி
லே யொருபடியும் விட்டுப் பிசைந்து
  நல்லவெல்ல மதிலே கரைத்து
பரவுமோஞ்சுக்கு நத்தை யரைத்து மதிற்
  போட்டுங்கொள்பத்தி யங்கைப்பு
மேவிதமிலா ப்புளிப்பு ந்தள்ளுமிதிற்
  றீர்வியாதி விளம்பக்கேளே.

விளம்பியநேர்ப்படி மூன்று மைந்தெழு
  நாட்கொண்டு வெட்டைச் சூடு
வளர்ப் சந்தியைப் பற்றி க்கொண்ட
  வெட்டை தீருமிது தப்பாமற்றான்
விளங்குமணி கோபுரமாலயமுங்கும்
  பெருவுடை யீசன்றான்.

வளம் பெறவே பூசனை செய்தகுசை
    சரபேந்திர சிந்தாமணி சொல்லாமே. ௫௨௮

(இ-ள்)

கோவைத் தண்டு, வெங்காயம் இரண்டையும் பசு
வின் பால் ஒரு படி விட்டுப் பிசைந்து, வெல்லத்தை
அதில் கரைத்து, சீரகத்தை அரைத்து அதிற் போட்
3, 5 அல்லது 7 நாள் சாப்பிட்டுக்கைப்புப்புளிப்பு,
நீக்கிப் பத்தியமாக இருந்தால், வெட்டைச் சூடு,
களைப்பற்றிய வெட்டை நீர் இவை தீரும்.

## 199. பீத்தவெட்டை மேகவெட்டைச் சூட்டுக்கு மருந்து.

நெல்லிக்காய்ச் சாறு காற்படி தனிலே
    வெண் சீனிச்சக்கரை தான்
சல்லய மில்லாமற் போட்டுக் காலைமி
    லு மந்திமி லுந்தானே கொள்ளு
அல்லல் செய்யும் பித்தவெட்டை
    மேகவெட்டைச் சூடதுவு மாறிப்போகும்
தொல்லுலகின் மானிடர்க்கு மாறு மிது
    வென்று விபு சொல்லும் வாறே. ௫௨

( இ-ள் )

காற்படி நெல்லிக்காய்ச் சாற்றிலே வெள்ளைச் சீனி
சர்க்கரையைப் போட்டுக் காலையும் மாலையும் கொள்ள பித்
வெட்டை, மேகவெட்டை, வெட்டைச்சூடு இவை தீரும்.

## 200. மேகவியாதிகட்கெல்லாங்கல் நார் பற்பம்.

கல்லினர் பற்பமிது புதுச்சட்டி கொண்டு
    வந்து கரு தாவரை



நல்ல இலை ரெண்டுபிடி போட்டு மரைப்
    பலங்கல்லி னரை வைத்துச்
சொல்லு மிலையை த்தானே யதின்மேலே
    யிரண்டு பிடி தோணப் போட்டு
வல்ல மையார்திலை யிட்டுச் சட்டியையு
    மடுப்பினிலே வைத்தி டாயே. ௫௩௰

வைத்தெரித்துக் கருக்கியதைச் சுத்தி
    பண்ணப் பற்பமாமதை யெடுத்து
சுத்த பாத்திரத்தில் வைத்து மிளகு வரா
    கனிடை வைத்து ஞ்சுகசாதிக்கா
யித்தக்கிராம் பிரண்டில் வகையொன்றுக்கு
    வராகனி டையொன்றும் கூட்டு
நத்திய வால்மிளகு திப்பிலி யசமதாக
    மூடனே நல்ல சுக்கே. ௫௩௧

சுக்குடனே யிக்காலும் வகையின் வகை
    யொன்றுக்குச் சொல்வேன் கேளு
பக்கு வமாய் மும்மூன்று வராகனிடையும்
    கூட்டுப் பதனமாக
தக்க இலவங்கப்பட்டைப் பலமூன்று
    மரைப்பல மூக்தன் சேர்ந்த
ளுக்க வெள்ளைக் குங்குலியம் பலமுமரை
    பத்து வகையும தாச்சே. ௫௩௨

பத்து வகையுமிடித்துச் சூரணித்துக் கல்
    லாரின் பற்பம் கூட்டிச்
சுத்தமாயிருபது ளனத்தி காலை வெருகடி
    தான் சுகமாய்க் கொள்ளு
பத்திய ங்கைப்பும் புளிப்புந்தள்ளு
    மேகத்தி லெழு பல வியாதி

யதறிடு முன்னோர்கள் முறையதனை
யுணர்ந்தவிபு வருள தாமே. சுகூடு

(இ-ள்)

ஒரு புதுச்சட்டியில் 2 பிடி ஆவாரை இலையை வைத்து அதன்மேல் ¼ பலம் கல்லாரை வைத்து அதன்மேல் 2 பிடிக்கு அதிகமாகவே ஆவாரை யிலையை வைத்து கல்ல தியுள்ள அடுப்பில் சட்டியை வைத்து நன்றாகக் கருகிப்போனவுடன் அதை எடுத்து சுத்திபண்ணி, சுத்தமான பற்பத்தை எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

| | |
|---|---|
| மிளகு 5 வராகனிடை | சாதிக்காய் 1 வராகனிடை |
| இரம்பு 1 ,, | வால்மிளகு 3 ,, |
| திப்பிலி 3 ,, | ஓமம் 3 ,, |
| சுக்கு 3 ,, | லவங்கப்பட்டை 3 பலம் |
| சீரகம் ¼ பலம் | வெள்ளைக்குங்கிலியம் ¼ ,, |

இவைகளை இடித்துச் சூரணித்து கல்லுார் பற்பத்தோடு சேர்த்து 20 நாள் காலையும் மாலையும் வெருகடியளவு தான் சாப்பிட்டு, கைப்பு, புளிப்பு தள்ளி பத்தியமாக இருந்தால் மேக சம்பந்தமான சகல வியாதிகளும் தீரும்.

## 201. மேகவெட்டைச் சூட்டுக்குக் கடாயம்

கோணியைப் பட்டையைச் சுட்டகருக்கு
பறம்பைப்பட்டை கூறிரண்டு
காணவரைப் பல மஞ்சள்தேறு மொன்று
முப்புமொரு காசிடையும்
பாணியுது எழிவிட்டு முக்காகக் காய்ச்சி
யுமிப்படி மூன்றே நாட்
காலுமதி காலை யத்தியுத் தள்ளியும் ஓர்
பத்தியமு மகற்று அவனே. சுகூச



கருதுவேன் புளிப்புப் புகை விலக்கியுந்துன்று
வாய்வு முகத்த பண்ட
மொரு போதும் நினையாதே மேகவெட்டைக்
கூட தெல்லா மோடிப் போகும்
மருவார்கள் தேடி பெற்ற அவ வேல்விழி யு
னருள் மைந்தனே கேள்
துரைராசன் சரபோஜி மகாராசனும்
துணர்ந்த கை மருந்தே. சுகூரு

(இ-ள்)

| | |
|---|---|
| கோணிப்பட்டை (பட்டுத் துணியை)க் கட்டிக் | |
| கருக்கியது | ¼ பலம் |
| பறம்பைப்பட்டை | ½ பலம் |
| மஞ்சள் தேறு | 1 |
| உப்பு | 1 காசிடை |

இவைகளை ¼ படி ஜலத்தில் போட்டு காய்ச்சியதைக் காய்ச்சி காலையும், மாலையும் மூன்று நாள் சாப்பிட்டு, புளிப்பு, புகையிலை, வாயு பதார்த்தங்கள் நீக்கிப் பத்தியமாக இருந்தால் மேக வெட்டைச் சூடு தீரும்.

## 202. கணுச்சூலை, வாயு, மேகச் சூடு, மேக வெட்டைக்குக் கற்கம்

சங்கம் வேரழுக்கிரு விழுது பறங்கிப்
பட்டை சருக்கரை தான்
சங்கையில்லாமலு மிக்கால் வகை மருந்து
மொரு வகைக்குத் தானே கேளு
வக்கணமாய் மூன்று பலம் கூட்டி
யரைத்தே வடித்துலாவி செய்வி
லும்மின்றுக் காலையதி நேரம்பார்க்கி
னவளையும் சுண்டிடுமே. சுகூசு

உன்னுதெஷிணு மூர்த்திப் பாதமதைப்
 போற்றி யெட்டு ஒன்பதே நாள்
கன்னுகணு ச்சூலை யுடன் மேக வெட்டையு
 ங்கண்ணிற் காணுதோடு
முன்னி ச்சாபத்தியமாய்க் கும்பமுனி
 யின்பம தாய்க் கூறும் நூலின்
வண்ணமிதை யெகோளாய்த் தஞ்சை
 யிபுவாய்த் துணர்ந்த வண்மை யாமே. ௨௬௭

(இ-ள்)

| | |
|---|---|
| சங்கம் வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| பறங்கிப்பட்டை | சர்க்கரை |

இவை வகைக்கு 3 பலம் எடுத்து அரைத்துப் பசுவின் நெய் விட்டுக் கிண்டி காலையும், மாலையும் உரிக்காத பாக்களவு 8, 9 நாள் சாப்பிட்டு இச்சா பத்தியமாக இருந்து வரத் தீரும் வியாதிகள் :—

கணுச்சூலை, மேக வெட்டை முதலியவை.

## 203. மேக வாய்வுக்குச் சூரணம்.

கரிசாலை கொச்சி யிலையு டனேகாணின்
 கொட்டைக் காந்தை மூன்றி
லொருவகைக்கு மூன்றே காற்பலம்
 கஞ்சாவிலைப் பொடியுமொரு பலந்தான
உரைக்கடுக்காய்க் கொட்டைத ள்ளிமேற்
 றேல் திப்பிலி மிளகு மொரு வகைக்கி
யிரண்டு முக்காற்பலமி தெல்லாஞ்
 சூரணித்து ச்சருக்கரைதேனுங் கலந்தே. ௨௬௮

கலந்துடன் பின் சத்தி வறுவுங்கண்டு
 ளர்வாய் தருணங்காலங்கள் பார்த்து



நலம்பெறவே காலை யந்தியுண் மேக
 வாயு வெல்லாம் நடுங்கி யோடும்,
நலன்றனிலே வுயர் சோழ மண்டலத்தை
 மனுநீதி தவறு தாளும்
மலர் மாலை மணியனுஞ் சரபோசி
 மகாராசன் வசனந் தானே. ௨௬௯

(இ-ள்)

| | |
|---|---|
| கரிசலாங் கண்ணி 3 பலம் | கொச்சியிலை 3 பலம் |
| கொட்டைக்கரந்தையிலை 3 பலம் | கஞ்சா இலை $\frac{1}{4}$ பலம் |
| கடுக்காய் (கொட்டை நீக்கி) | 1 பலம், |
| திப்பிலி $\frac{3}{4}$ பலம், | மிளகு $\frac{3}{4}$ பலம் |

இவைகளைச் சூரணம் செய்து கொண்டு சர்க்கரையும் தேனும் கலந்து உடம்பின் சக்திக்குத் தருந்தபடி, அளவாகக்காலையும், மாலையும் உண்டு வந்தால் மேக வாயு தீரும்.

## 204. கை கால் சூலை, மேக வாயுவுக்கு கந்தகாதி மருந்து.

மருந்து வெள்ளை கெந்தக மிரண்டு
 மொவ்வொரு வகைக்கு த்தானே,
உருக்கமுடனே யைந்து வராகனிடை
 கூட்டியதை யுருக்கித்தானே,
அரைத்து ப்பொடி செய்தொரு வேளைக்கு
 மொரு பணவிடை தேனறுநெய் தன்னி
லுரத்தவனுபானவி சேடமதிலேயுண்ணப்
 போம்நோயு சிதங்கேனே. ௨௭௦

உசிதங்கேள் கைகாலின் சூலையுடன்
 மேக வாய்வுடனே தீருஞ்

சசிகன்கை யறுகரவு கடுக்கை தும்பை
கரந்த வில்வ ஞ்சாற்று மீசன்
சுசிபதமர்ச்சித்துப் பல பூசுரர் நாவலர்
பலர்சந்தோஷிக்கத்தா
னிசைவாக மனக்குறிப்பு மறிந்துதவுஞ்
தஞ்ைசயம்பும் வாறே. ௲௨௪

(இ-ள்)

மரத்து வெள்ளை, கந்தகம் இவை வகைக்கு 5 வராகனிடை எடுத்து உருக்கி அரைத்துப் பொடி செய்து வேளைக்கு ஒரு பண விடை (1/10 வராகனிடை) வீதம் தேன், நெய், அல்லது வேறு தகுந்த அனுபானத்தில் சாப்பிட, கை கால் சூலை, மேகவாயு முதலியவை தீரும்.

## 205. சத்தி வெட்டைக்கு மருந்து.

முசுமுசுக்கை க்கொழுந்து மொருபிடி
கொண்டு வந்து மதை முன்பாய்த்தானே,
பிசகாமற் பொன்னிறமாய் வறுத்தரைத்து
நன்றாய் விபீதகத்தோடே
யிசை யான எருமை வெண்ணெயிற்
குழைத்து த்தின்னு எட்டு நாளுந்தானே,
சசியணியுங் கடவுளுட கிருபையினால்
சத்தி வெட்டை தானும் போமே. ௲௨௫

(இ-ள்)

முசுமுசுக்கைக் கொழுந்தில் ஒருபிடி கொண்டுவந்து பொன்னிறமாய் வறுத்து, தான்றிக்காய் சேர்த்து அரைத்து எருமை வெண்ணெயிற் குழைத்து 8 நாள் சாப்பிட சத்தி வெட்டை தீரும். (சத்தி=வாந்தி)



## 206. மேக விக்கத்துக்குப் பூச்சு.

துரிசுகடலுப் பிரண்டிவ்வகைக்கி ரண்டு
வராகனிடை துகைய தாக
அரிதாரமொன்றரை வராகனிடை
யிவை மூன்று மரைத்து த்தூளா
யுரையுத்தாமணிச் சாறு படி வீசமதிற்
குழப்பி யோங்கு மேகத்
தரு வீக்கமதிற் பூசவவ்வீக்கமுமகன்று
சுகமதாமே. ௲௨௬

(இ-ள்)

துரிசு 2 வராகனிடை உப்பு 2 வராகனிடை
அரிதாரம் 1½ வராகனிடை

இவைகளை அரைத்துத் தூளாக்கி உத்தாமணிச் சாறு 1/16 படியில் குழப்பி மேக வீக்கத்திற் பூச அவ் வீக்கம் அகன்று விடும்.

## 207. சூலை, வாய்வு, கடுப்புக்கு, தலைவலிக்கு எண்ணெ.

அவித்து மூத்தின ஆமணக்கெண்ணெய்,
சேரதுவு மொன்றுமே ரசகற்பூரந்
துவக்கி க்கொள்வோர் வராகனிடையதை
த்தூளாக்கி யவ்வெண்ணெயிற் போட்டிடு
தவிப்பில்லா மலோர் சாம மூன்றிற்குழி
தன்னினால் மத்திக்க நெய்போலவாம்
பவத்தினால் வருமேக வியாதியின்
பலமும் த்தேக வலிவு மறிந்திடே. ௲௨௭

வறுவு ங்கால மறிந்தொரு வேளைக்கு அரை
க்கால் சேர் கொடு காலையிற்றானுஞ்சஞ்

சலஞ்செய் சூலையும் வாய்வுகுடைச்சலுந்
தானறும் வாய்வுக்குத்தல் கடுப்பதே
நலந்தரு மிதற்கு மிச்சாபத்தியம்
மாநிலத்தின் மனிதருக் காகவே
நலங்களிற் புகழ்மால் சரபேந்திரன்
சாற்று மூச்சித எண்ணெ யிதாகுமே. ௪௪௫

(இ-ள்)

அவித்து வாற்றின ஆமணக் கெண்ணெய் 1 சேரில் ஒரு வராகனிடை ரசகற்பூரத்தைத் தூளாக்கிப் போட்டு ஓர் சாமம் (3 மணி நேரம்) மூங்கிற் கழியினால் மத்திக்க நெய் போலாகும்.

தேக வலுவுக்குத் தகுந்தபடி வேளை ஒன்றுக்கு $\frac{1}{8}$ கால் சேர் வீதம் காலையில் சாப்பிட்டு, இச்சா பத்திய மாக இருக்க சூலையும், வாய்வுக் குடைச்சலும் தீரும்.

## 208. மேக வெடி, மேக வாயு, சூலை, புண்ணுக்கிரந்திக்கு எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய் சேரிரண்டு கார்போக
வரிசியுங் கருஞ்சீரகங் கம்பிப்பிசி
னுமிதற்கு வசம்பும் பறங்கிப்பட்டையுந்
துவர் கடுக்காயினித் தூளுமே
நேமணக்குடனே வகையொன்றுக்கு
நிறுத்துக் கொள்ளோர் வராகனிடையதுந்
தாமதமு மிலாமலே தூள் செய்து
தப்பிலாமலவ் வெண்ணெயிற் போட்டிடே. ௪௪௬

போட்டு வெள்ளைப் பூண்டொன்று பெரியதாய்ப்
பிசகில்லாமல் நறுக்கியும் போட்டபின்
காட்டின் வெட்பாலையின் னிலையோர்
குத்துக் கையினாலதை யையநறுக்கியே



போட்டுத் தீயையு மிட்டெரி பக்குவப்
போதறிந்து மிறக்கி வடித்துமே
வீட்டிலே நெல்லின் பானையில் வைத்ததை
மேலும் செய்யும் விதமதைச் சொல்லுவேன். ௪௪௭

சொல்லுவேன் சனிவார முழுகியே
துய்ய ஞாயிறு காலையிற்றானுமே
வல்ல எண்ணெயுங் காற்சேரு மந்திக்கு
மரைக்கால் சேரும் பருகிடு மூன்றுநா
ளில்லை யுப்பு ப்புளிப்பு மேயன்னப்பா
லே கொளுபகலைக்குமி ராத்திரி
நல்லவாவின் பால் சாதமுஞ் சர்க்கரை
நாளு மூன்று மறுபத்திய மதே. ௪௪௮

பத்தியஞ் சொல்வேன் மூன்று நாள்பின்புப்புப்
பாத்திரத்தில் வறுத்ததைக் கூட்டிக் கொள்
சத்தமா மேழு நாளதிற் கஞ்சிதேய்த்துக்கொள்
எட்டாநாள் சாப்பிடெல்லாத்தையும்
உத்தம மேக வெடிகளும் வாய்வு
மோடு ஞ்சூலையும் புண்ணு ங்கிரந்தியுஞ்
சத்திய வாசனருள் மகிபதி
சரப பூபனருளு முறையிதே. ௪௪௯

(இ-ள்)

கார்போகவரிசி 1 வராகனிடை
கருஞ்சீரகம் 1 வராகனிடை
கம்பிப் பிசின் 1 வராகனிடை
வசம்பு ,,
பரங்கிப்பட்டை ,,
துவர்கடுக்காய்த் தூள் 1 வராகனிடை

இவைகளைத் தூள் செய்து ஆமணக்கெண்ணெய் 2 சேரில் போட்டுப் பெரியதோர் வெள்ளைப் பூண்டை

நறுக்கிப் போட்டு, வெட்பாலை இலை ஒரு குத்து நறுக்கிப் போட்டு, அடுப்பில் வைத்துப் பக்குவமாக எரித்து மெழுகு பதத்திலிறக்கி, நல் பானையில் வைத்துக் கொள்ளவும். சனிக்கிழமை தலை முழுகி ஞாயிற்றுக்கிழமை காலையில் இந்த எண்ணெய் கால் சேரும் மாலையில் அரைக்கால் சேருமாக 3 நாள் சாப்பிட்டு உப்பும், புளியும் தள்ளி, பகலில் கஞ்சியும், ராத்திரியில் பால் சாதம் சர்க்கரை சேர்த்தும் சாப்பிடவும். மறுபடியும் இதே விதமாக (மருந்து சாப்பிடாமல்) மறுபத்தியம் இருக்கவும் ஏழாம் நாள் கஞ்சி தேய்த்து முழுகி உப்பு வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும். எட்டாம் நாள் இஷ்டப்படி சாப்பிடலாம்.

இப்படிச் சாப்பிட்டு வர மேக வாயு, மேக வெடி, மேகசூலை, மேகப் புண், கிரந்தியும் தீரும்.

## 209. மேக வியாதிக்குக் கடாயம்.

நெல்லிமுள்ளி வேப்பம் பட்டை பேய்ப்புடல்
 நீள் சீந்திற்கொடி யிவை நாலையும்
நல்ல தண்ணீர் விட் டெட்டொன்றாய்க் காய்ச்சியே
 நலமதாகவே கொண்டிடு காலையில்
சொல்லிய படியை ந்தாறு நாளிலே
 துலைந்திடும் பித்தவெட்டையுமேகமும்
அல்லல் செய்யு பலபல ரோகமு
 மாதித்தன் முன்றுகின மதாகுமே. ௬௫௰

(இ-ள்)

நெல்லி முள்ளி வேப்பம் பட்டை
பேய்ப் புடல் சீந்திற்கொடி

இவை நாலையும் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி; ஐந்தாறு நாள் சாப்பிடப் பித்த வெட்டை, மேகம் முதலியவை சூரியன் முன் பனிபோல் நீங்கும்.



## 210. மேக வியாதிக்குக் கடாயம்.

மூங்கிலினிலை க்கோரை க்கிழங்குடன்
 முற்றப்பாதிரி வேரு ந்திரிபலை
பாங்குடனிந்த நாலு மருந்தையும்
 பாணி விட்டதை யெட்டொன்றாய்க் காய்ச்சியே
தேங்கு தேன்விட்டு ச்சாப்பிட மேகமுந்
 தீருமாதிசிவன் கிருபையினு.
லோங்கு மாமதிள்சூழ் தஞ்சைமா
 நகர்க் குருசிவுஞ்சர பேந்திர னருளிதே. ௬௫௧

(இ-ள்)

மூங்கிலிலை கோரைக் கிழங்கு
முற்றியபாதிரிவேர் திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய்)

இவைகளைத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி, தேன் விட்டுச் சாப்பிட மேகந்தீரும்.

## 211. மேகமிருபது, உஷ்ணம், சூதிகவாயு வுக்கு எண்ணை.

பசுவின் பாலைக் குழம்ப தாய்க் காய்ச்சியே
 பாரிதற்கு க்கடாயமும் வில்வவேர்
இசை வதாஞ்சிறு காஞ்சொறிபூனையு
 மிம்புறு கண்டங்கத்தரி நன்னாரி
பசியதான முசுமுசுக்கை கரிப்
 பயத்தம் வேராடாதொடை கறிமுள்ளி
பிசகிடாமல் கற்றாழுவலையுடன்
 பேசிய வகையும் பதினொன்றதே. ௬௫௨

பத்து மொன்று வகைக்கொரு நாற்பலம்
 பங்கிடாக இடித் தொரு பானையில்

சுத்த நீர் விட்டப் பாலு க்குச்சரியாகச்
　கண்டக் காச்சிய ப்பாலி னுடன் விட்டுக்
கொத்த மல்லி மிளகோமஞ்சீரகங்
　கூகை நீர் சடாமாஞ்சி லுங்திப்பிலி
சித்தரத்தை யிலவங்கப் பத்திரி
　சிறுதேக்கு ங்கருஞ்சீ ரஞ்சா திக்காயே.　　சுருட

சாதிக்காயுமிலவங்கப் பட்டையுந்
　தாளீசப்பத்திரி வாய்விளங்கமுஞ்
சாதிப்பத்திரி வால்மிளகு ங்குரா
　சாணி யோமஞ்சன்ன லவங்கப்பட்டை
யேதமான கிராம்பு டனேவகை
　யிருபத் தொன்றிவ்வகை யதற்கோர்பலம்
சீதப்பாம லிடித்து வடித்துமே
　கிச்சயத்துடனே முன்சொல்பாலிலே.　　சுருச

பாலிலே தூளை ப்போட்டுத் தேற்றுங் கொட்டைப்
　பலமும் நாலுமின நீரு தன்னிலே,
சீலமாகவே யூரவைத்தப்பாலில்
　செம்மையா யரைத்தே முன்னஞ் சொல்லிய
பாலிலே யிட்டடுப் பினிலேற்றியே
　பலமுமைந்து ராயபுரிச்சருக்கரை
ஆலைவெல்லமு மைந்து பலமதா
　மாவினெய்படி யொன்றுங் கூட்டிடே.　　சுருரு

கூட்டுதேன் படியொன்று மிதுவெல்லாம்
　கூடவிட்டு லேகிய பதந்தனில்
காட்டமா யிறக்கியு மருந்தை
　நாளொன்றுக்கு ந்தோம் பாக்களவுன்றிடு
ஆட்டு காலையு மந்தியுந் தானுமே
　உப்புடனே புளிப்பது ங்கைப்புமே



காட்டிடாதே புலகரிலை யுந்தள்ளு,
　கருதுவெம் வெந்நீர் சாதமுங் கொண்டிடே. சுருசு

சாதம் வெந்நீருமுண்டிட மேகம
　தால் வரும் பலநோய்களு முட்டணமு
மாதியாகிய சூசிக வாயுவுமற்றிடுங்
　கதிர்முன் பனிபோலவே
நீதமாங்கவி ப்பாவலர் சங்கமும்
　நித்திய நித்தியம், நிறைந்திடு மற்புத
சாதனை செய்து நீதி செலுத்திய
　தஞ்சை மானுவின் விஞ்சைமுறையிதே.　　சுருஎ

(இ-ள்)

பசுவின் பால் (4 படி) எடுத்து அதைக் குழம்பாய்க் காய்ச்சிக் கொள்ளவும். பிறகு,

| | |
|---|---|
| வில்வ வேர் | சிறுகாஞ்சொரி வேர் |
| பூனை வேர் | இம்புறு வேர் |
| நன்னாரி வேர் | கண்டங்கத்தரி வேர் |
| நரிப்பயத்தம் வேர் | முசுமுசுக்கை வேர் |
| நறுமுள்ளி வேர் | ஆடாதொடை வேர் |
| தூதுவளை வேர் | |

இவை வகைக்கு 4 பலம் எடுத்து இடித்து ஒரு பானையில் சுத்த நீர் விட்டுப்பால்குழம்புக்குச் சரியாகச் சுண்டக் காய்ச்சி அப்பாலுடன் விட்டு,

| | |
|---|---|
| கொத்தமல்லி | மிளகு |
| சுக்கு ஓமம் | சீரகம் |
| கூகை நீறு | சடாமாஞ்சி |
| திப்பிலி | சித்தரத்தை |
| இலவங்கப்பத்திரி | சிறுதேக்கு |
| கருஞ்சீரகம் | சாதிக்காய் |

| | |
|---|---|
| லவங்கப்பட்டை | தாளிசபத்திரி |
| வாய்விளங்கம் | சாதிபத்திரி |
| வால்மிளகு | குராசாணிஓமம் |

சன்னலவங்கப்பட்டை கிராம்பு

இவை வகைக்கு ஒருபலம் எடுத்து இடித்து வஸ்திர காயம் செய்து முன்சொன்ன பாலிலேபோட்டு, 4 பலம் தேத்தான்கொட்டையை இளநீரில் ஊரவைத்து நன்றாய் அரைத்துப் பாலில்போட்டு அடுப்பிலேற்றி,

| | |
|---|---|
| ராயபுரிச்சர்க்கரை (குழைவு சீனி) | 5 பலம் |
| வெல்லம் | 5 பலம் |
| பசுநெய் | 1 படி |

இவைகளைச்சேர்த்து லேகியபதத்திலிறக்கி காலையில் முக்குப்பாக்களவு காலையும் மாலையும் சாப்பிட்டு, புளிப்பு, கைப்பு, புகையிலை இவைதள்ளி, வெந்நீர் சாதம், சாப்பிட்டுப்பத்தியமாக இருந்துவர மேகத்தினால்வரும் பல நோய்களும் தீரும்

## 212. மேகமிருபது, பிரமியம், கல்லடைப்புக்கு, கதலிகந்த கிருதம்

கதலியின் கிழங்கை யிடித்தேரசங்
  காண எட்டுப்படியதில் வாழைப்பூ
வதனில் நூறு பலங்கூடப்போட்டு கா
  லது மொன்றாகவே காய்ச்சி யாப்பால்படி
யதுவுநெய்யும் படியொன்று மேன்பொடி
  யல்லியின் கிழங்கேலத்திரிபலை
பதமதாகிய சந்தனமும் விளாம்
  பழமும்நியக்குரோதாதிக்கணமே    தருஅ

ஆதியாம் வாழைக்கிழங்குடனே சடா
  மாஞ்சிலு ங்கிராம்புடனே தா



ளேது தாமரை க்கிழங்குடனே பத்
  துள்ளதி லோர் வகையது மொன்றுக்கு
நீதமாக வராகனிடையொன்று
  நீயரைத்ததிற்போட்டு நன்றாகவே
ஓத மாங்கதலிக்கந்த கிருதத்தைச்
  செப்பமாம் பதங்கண்டு மிறக்கிடே    சருகூ

பதமுங்கண்டுமிறக்கிச்சதாசிவன்
  பாதம் போற்றி நோய் தேகபலம் கண்டு
நிதமு மந்தியுங்காலை ப்பிரமாணமாய்
  நீயுண்ணதற்கு த்தீரும் வியாதி கேள்
சதிசெய் சுக்கில மேகத்திளேய்களுக்
  தந்தி மேகமுஞ்சோம ரோகங்களும்
அதமதாங்கல்லடைப்புச்சலரோக
  மற்று மூத்திரகிருச்சமுந்தீருமே    ச'சுய

(இ-ள்)

வாழைக்கிழங்கின் சாறு 8 படியில் வாழைப்பூ 100 பலம் போட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி, ப்பசுவின் பால் 1 படியும் பசுவின் நெய் 1 படியும் விட்டு,

| | |
|---|---|
| ஏலம் | திரிபலை |
| சந்தனம் | விளாம்பழம் |
| வாழைக்கிழங்கு | நியக்குரோதாதிகணம் (ஆல், அரசு, அத்தி, கல்லால், நாவல் இவற்றின் பட்டை) |
| சடாமாஞ்சி | கிராம்பு |
| தாமரைக் கிழங்கு | அல்லிக்கிழங்கு |

இவை வகையொன்றுக்கு 1 வராகனிடை எடுத்து அரைத்து அதிற் போட்டுப்பதமாகக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

இதைத்தினமும் காலையும், மாலையும் அளவாக உட்கொள்ள சுக்கில மேகம், தந்தி மேகம், சோம ரோகங்கள் கல்லடைப்பு, மூத்திரக் கிரிச்சிரம் முதலியவை தீரும்.

## 213. மேகநோய்க்குக் கடாயம்

திரிபலையுடன் கோரைக் கிழங்கு பாதிரி
வேர் பாவட்டைவேர் மாமஞ்சளுஞ்
சரியதாக நிறுத்த நினீர் விட்டுத் தானே,
யெட்டொன்றாய் க்காய்ச்சி யுழக்கதாய்
அரைத்து மஞ்சளை ப்பொடியாக ப்போட்டுத்தே
னதிற் குத்தியே கொள்ளதி காலையி
லுரம தாகிய மேகத்தின் ரோகமு
மோடிடுங்க திர்முன் பனிபோலவே. ௨௬௧

(இ:ள்)

திரிபலை கோரைக் கிழங்கு
பாதிரி வேர் பாவட்டை வேர்
மாமஞ்சள்

இவை சரி எடை எடுத்து ஜலம் விட்டு எட்டிலொன்றாய்க்காய்ச்சி, மஞ்சளைப் பொடி செய்து அதில் போட்டுத் தேன் விட்டுச் சாப்பிட மேக ரோகந் தீரும்.

## 214. மேகச் சூட்டுக்குக் கடாயம்

வெட்டி வேரு ங்காட்டாத்திப்பூ லோத்திர
மிதற்குமே சரியாமர மஞ்சளுந்
திட்டமாக ச்சரிநிறையாக வே
சேர்த்தனலிற் கடாயமுங் காச்சியே
விட்டு த்தேன் கொஞ்ச ங்காலையிற்கொண்டிட
மேகமு மற்று வுத்தம மாகுமே.
சட்டமா மதிள் சூழ் தஞ்சை மாநகர்
சரப பூபனருளு ங்கடாயமே. ௨௬௨

(இ-ள்)

வெட்டி வேர் காட்டாத்திப்பூ
வெள்ளிலோத்திரம் மாமஞ்சள்



இவை சமநிறை எடுத்துக் கஷாயம் காய்ச்சித் தேன் விட்டுக் காலையிற் கொஞ்சம் சாப்பிட மேகம் தீரும்.

## 215. மேகச் சூட்டுக்குச் சந்தனாதிக் கடாயம்.

சந்தன மிலாமிச்சம் வேர் லோத்திரந்
தன்னுடன் மருதம் பட்டை சொல்லிய
இந்த நாலு மருந்துஞ்சரிய தா
யிடித்து நீரை விட்டெட்டொன்றாய் க்காச்சியே,
அந்திகாலையு ங்கொண்டிட மேகச்சூ
டறு மிதற்குச் சரியில்லை யொன்றுமே,
சிந்தையான கடாய மிது தஞ்சை
யிபுவுணர்ந்த கடாயம தாகுமே ௨௬௩

(இ-ள்)

சந்தனம் விலாமிச்சம் வேர்
வெள்ளிலோத்திரம் மருதம் பட்டை

இவை காலையும் சரிநிறை எடுத்து இடித்துத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் காலையும், மாலையும் சாப்பிட மேகச் சூடு தீரும்.

## 216. பிரமேகமிருபது, பாண்டு, வாந்தி தாகம், உன்மாதம், மூத்திரக்கிரிச்சிரம், நீரடைப்பு, சோம ரோகத்துக்கு கணேபசிங்க கிருதம்

கோட்டஞ்ச ந்தனமிலாமிச்சம் வேருடன்
கோரையின் கிழங்குமுயர் பஞ்சகம்,
காட்டினெல்லி வேர் கஸ்தூரிமஞ்சளும்
கன்னெருஞ்சி வேராவரையின் விரை
சூட்டும்வில்வவேர் வேப்பம் பட்டையுஞ்
சுகாதிமதுரமும் பற்பாடகம்
காட்டிலுற்ற சிலப்பனையின் கிழங்
கதுவு ந்தேற்றான் விரை யதுவுங்கூட்டிடே. ௨௬௪

கூட்டுசெங்கழுநீர்க்கிழங்கும் நல்ல,
  குணமதாம் பதினாறு வகையதில்
நாட்டமாயோர் வகைக்கு மெட்டுப்பலம்
  நட்புடனிருநாழி தண்ணீர் விட்டு
மூட்டு தீயை யிட்டே யெரிநீரது
  முழுதுஞ்சுண்டியோர் குறுணியாய்க்காய்ச்சியே,
தேட்ட மாகவடித்ததை ப்பின்புமே
  செய்கிற வகையது சொல்வேனே. ௩௬௫

வகைகரும்பு மிளநீரும் வெட்டிவேர்
  வாழையின்கிழங்கு தாழைவிழு
துகையதஞ்சினில் வகையொன்றுக்கு ரசஞ்
  சொல்லியபடி நாலதிற்கூட்டிடு
தகுந்துளசி பொன்னாங்கணியுங்கையாந்
  தகரைப்பூசினிக்காய் பிரமியிலை
திகழுமாதுளம் பழமும்புளியிலை
  செப்பிடும் வெள்ளரிக்கா யுஞ்சேர்த்திடே. ௩௬௬

சேர்த்திடு சதாவேரிக்கிழங்கதுஞ்
  சேர் இந்த வகை யெட்டுமொன்றதின்
சாத்திலொவ்வொன்றுக்கு மிரண்டுபடி
  தானெடுத்திடு மெய்படியெட்டுமே
வைத்திடாவின் பசும்பால்படியது
  முப்பதுமிரண்டுபடி கற்கங்கேள்
எத்திடுங்கொத்தமல்லி திரிபலை
  யே மூங்கிலுப்பு மாமஞ்சளே. ௩௬௭

மஞ்சள் கோட்டமுஞ்சீரகமும் நல்ல
  வாகைவித்துக்கொடிமுந்திரிப்பழம்
விஞ்சையாம் பேரிச்சங்காயிலுப்பைப்பூ
  வில்வத்தின் பழந்தாளிசைபத்திரி,



யுஞ்சடாமாஞ்சிலும் பச்சைக்கற்பூர
  மொக்கவுமிலவங்கத்தின் பட்டையும்
இஞ்சனக்கருஞ்சீரகஞ்சாதிக்காய்
  பொன்முசக்கை தேற்றான்கொட்டையே ௩௬௮

ஏலந்திப்பிலியுஞ்சிறுநாகப்பூ
  வினிய நல்ல கிராம்புடன்மூவெட்டிஞ்
சீலமான வகையது மொன்றுக்குஞ்
  சேர்த்து க்கொள்ளிரண்டே வராகனிடை
கோலக்குங்குமப்பூ வராகனிடை
  கூட்டியேயிவைதத்தூள் செய்துபோட்டிடு
மாலது போலவாஞ்சீனிச்சர்க்கரைப்
  படியதொன்றுஞ்சீந்திற் சர்க்கரையதே. ௩௬௯

சீந்திற்சர்க்கரையும் படி தேன் படி
  சேரப்போட்டுப்பத மதாய்க்காய்ச்சியே,
பாந்தமாகவுமொவ்வொரு வேளைக்குப்
  பருகுமுக்களஞ்சுமது தன்னிலே,
சாந்தமாகவிதற்கிச்சாபத்தியஞ்,
  தானிது மிதற்கு த்தீர் வியாதிகேள்,
வாந்தி தாகம் பிரமேகம் பாண்டுவன்
  மாதமூத்திர க்கிருச்சமுந்தீருமே. ௩௭௰

மிச்சம் நீரடைப்புச்சோமரோகமும்
  கெட்டமேகமிருபது ந்தீர்ந்திடு
மூர்த்திமுடலுக்குரியவிர்த்தியு
  முண்டாமாதருக்குஞ்சந்ததிகளுஞ்
சருக்கரை மொழியார்துவசேந்திரன்,
  றனயன்சரபேந்திர சிந்தாமணி
யுரைத்திடுங்கணேபசிங்கக்கிறுத
  முண்டு பார் குணமுண்மையதாகவே. ௩௭௧

(இ-ன்)

| | |
|---|---|
| கோஷ்டம் | சந்தனம் |
| விளாமிச்சம்வேர் | கோரைக்கிழங்கு |
| பஞ்சகம் (லவங்கம், | செல்லிவேர் |
| ஏலம், கர்ப்பூரம், | |
| ஜாதிக்காய், தக்கோலம்) | |
| கஸ்தூரிமஞ்சள் | செருஞ்சிவேர் |
| ஆவாரைவிரை | வில்வவேர் |
| வேப்பம்பட்டை | அதிமதுரம் |
| பற்பாடகம் | தேத்தான்கொட்டை |
| செங்கழுநீர்க்கிழங்கு | நிலப்பனங்கிழங்கு |

இவை வகையொன்றுக்கு 8 பலம் எடுத்து இடித்து இருதுணி (8 மரக்கால்) நீர்விட்டு அடுப்பில்வைத்துக் குறுணியாகக்காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கரும்புச்சாறு | இளநீர் |
| வெட்டிவேர்ச்சாறு | வாழைக்கிழங்குச்சாறு |
| தாழைவிழுதுச்சாறு | பொன்னாங்கனிச்சாறு |

இவை வகையொன்றுக்கு 4 படி சேர்த்து,

| | |
|---|---|
| துளசிச்சாறு | பிரமியிலைச்சாறு |
| கையாந்தகரைச்சாறு | புளியிலைச்சாறு |
| பூசணிக்காய்ச்சாறு | |
| மாதுளம்பழச்சாறு | |
| வெள்ளரிக்காய்ச்சாறு | தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு |

இவை வகையொன்றுக்கு 2 படி விட்டு அதில் எட்டிபடி செய்யும் பசுவின்பால் 32 படியும் விட்டுக்காய்ச்சி,

| | |
|---|---|
| கொத்தமல்லி | கடுக்காய் |
| செல்லிக்காய் | தான்றிக்காய் |
| மூங்கிலுப்பு | மரமஞ்சள் |
| கோஷ்டம் | சீரகம் |



| | |
|---|---|
| வர்க்கவிரை | |
| கொடிமுந்திரிப்பழம் | பேரிச்சங்காய் |
| இலுப்பைப்பூ | வில்வப்பழம் |
| தாளிசபத்திரி | சடாமாஞ்சில் |
| பச்சைக்கற்பூரம் | இலவங்கப்பட்டை |
| கருஞ்சீரகம் | சாதிக்காய் |
| பொன் முசுக்கை | தேத்தான்கொட்டை |
| ஏலம் | திப்பிலி |
| சிறுநாகப்பூ | கிராம்பு |

இவை வகையொன்றுக்கு 2 வராகனிடை எடுத்து இடித்துத் தூள்செய்து போட்டு அதில்,

சீனிச்சர்க்கரை 1 படி சீந்திற்சர்க்கரை 1 படி

சேர்த்துப் பதமாய்க் காய்ச்சிக் கீழே இறக்கி, ஆறிய பிறகு ஒருபடி தேன் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

வேளைக்கு 3 மழஞ்சு வீதம் சாப்பிட்டு, இச்சா பத்தியமாக இருக்கத் தீரும் வியாதிகள்:—

வாந்தி, தாகம், பிரமேகம், பாண்டு, உன்மாதம் (பயித்தியம்) மூத்திரக்கிரிச்சிரம், நீரடைப்பு, சோமரோகம், 20 வகை மேகம் இவைகள் தீரும். தாது புஷ்டியும், ஸ்திரிகளுக்கு சந்ததியும் உண்டாகும்.

இதற்கு 'சுவேதபசிங்க கிருதம்' என்று பெயர்.

## 217. மேகத்துக்குக் கடாயம்:

ஏலங்கோரைக் கிழங்கிலா மிச்சம் வேர்
இலவங்கப் பத்திரி வெட்டி வேருடன்
கோலச்சந்தன மிலவங்க ப்பட்டையுஞ்

சலநீர் விட்டு மெட்டொன்றாய்க் காய்ச்சியே
தின்னு ஞ்சர்க்கரை போட்டுப் பருகிட
வேல மிட்டு மிருபது மேகமு
மோடிடு மகாண்கர மகண்ட முறைமிதே. ௩௭௨

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலம் | கோரைக் கிழங்கு |
| விளாமிச்சம் வேர் | இலவங்கப்பத்திரி |
| வெட்டி வேர் | சந்தனம் |
| இலவங்கப்பட்டை | |

இவைகளைச் சமனெடை எடுத்து இடித்து மொத்த அளவுக்கு 8பங்குஜலம் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிச் சர்க்கரை போட்டுப் பருகினால் 20 மேகமும் தீரும்.

## 218. மேகமிருபத்தோன்று, கல்லடைப்பு, வெகு மூத்திரம், யோனி ரோகம், வெட்டை, கண்காலெரிவு, பாண்டுவுக்கு சந்திரகாதிச் சூரணம்.

சந்திர காதிச் சூரணமொன்றது
சாற்றுவே னிதைக் கேளு முறுதியாய்
முந்திரிகை ப்பழமுடன் சீரக
மூங்கிலுப்பு நிலக்குமிழ்வேருடன்
அந்த மிலவம் பிசினுடன் கோஷ்டமு
மதிமதுரம் நிலப்பனையின் கிழங்
குந்தக்கோல மிலவங்க ப்பத்திரி
கொத்தமல்லி முருங்கை விரையதே. ௩௭௩

விரை பேரீச்சங்காய் சிறுநாகப்பூ சதா
வேரியும் நெருஞ்சிக்காய் சிலாசித்து
மரமஞ்சள் பூனைக்காலிவிரையேலம்
வல்ல பொன்னாங் கணிவேரறுகம் வேர்



நூருகிலாமிச்சம் வேர் சாதிக்காய் கல்நார்
முற்றக்காசு சன்னலவங்கப்பட்டை
யுரமதாம் பூமிச் சர்க்கரையின் கிழங்
குடனமு க்கிரு வேரதுங் கூட்டிடே. ௩௭௪

கூட்டுசெங்கழு நீரின் கிழங்குடன்
குணமதாகிய பச்சைக் கற்பூரமும்
வாட்டமில்லா வகை முப்பத்தொன்றிலே
வகைக்கொரு பலந்தானே யெடுத்திடு
வீட்டினி லுலக்கை யா லிடித்ததை
மெல்லிய துணியால் வடி கட்டியே
நாட்டமா யிதற்குச்சீரளவாகவே
நல்ல சீந்தியின் சர்க்கரை சேர்த்திடே. ௩௭௫

சேர்த்துப் புத்தப்புது கலசந்தனில்
செவ்வென வைத்துச் சத்திபராபரி
போத்தி யென்றந்தச் சூரணந் தன்னிலே
புனிதமாயிரண்டு வராகனிடை
தேத்து தேனிற் கலந்தந்தி சந்தியுந்
தின்னு மேகமிருபத்தொன்றும் வெட்டை
மூத்திரம் கல்லடைப்பு பெரும்பாடு
மூரக்கண் கைகாலெரிவதும் போகுமே. ௩௭௬

போகும் யோனியின் ரோகமும் வெட்டையும்
போவத ல்லாமலகப்பித்த தாகமு
மேக மீறிய காய்ச்சலு மற்றுமே,
வீரியவிர்த்தியாமெமெற்புத
நாக மீதிற் பவனி வருந்துரை
நன்பனியாவர் க்குமின்பனுலகெனுக்
காகவே பலநூல்களையாய்ந்துணர்
அன்னலாஞ்சர பேந்திர னருளிதே. ௩௭௭

(இ-ள்)

| | |
|---|---|
| முந்திரிப்பழம் | சீரகம் |
| மூங்கிலுப்பு | கிலக்குமிழ் வேர் |
| இலவம் பிசின் | கோஷ்டம் |
| அதிமதுரம் | நிலப்பனங் கிழங்கு |
| தக்கோலம் | இலவங்கப்பத்திரி |
| கொத்தமல்லி | முருங்கை விரை |
| பேரீச்சங்காய் | சிறுநாகப்பூ |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | நெருஞ்சிக்காய் |
| சிலாஜித்து | மரமஞ்சள் |
| பூனைக்காலி விரை | ஏலம் |
| பொன்னாங்கண்ணிவேர் | அறுகம் வேர் |
| விளாமிச்சம் வேர் | சாதிக்காய் |
| கல்நார் | மூத்தக்காசு (கோரைக் கிழங்கு) |
| அமுக்கிரா வேர் | செங்கழுநீர்க் கிழங்கு |
| பச்சைக் கற்பூரம் | |

இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து இடித்து மெல்லிய துணியில் வஸ்திரகாயம் செய்து இவற்றிற்குச் சரி எடைசீந்திற் சர்க்கரை சேர்த்து, புதிய சட்டியில் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

இதில் 2 வராகனிடை வீதம் எடுத்துத் தேனில் கலந்து காலையும், மாலையும் சாப்பிட மேகம் 21ம், வெட்டை, வெகு மூத்திரம், நீரடைப்பு, பெரும்பாடு, கைகால் எரிவு, யோனி ரோகம், தாகம், பித்த உஷ்ணம் மேக ரோகத்தினால் ஏற்படும் காய்ச்சல் முதலியவை தீரும் வீர்ய விர்த்தி உண்டாகும்.

இதன் பெயர் சந்திரசேகரச் சூரணம்.



219. மேக முதலான வாயு, சூலை, சோகை, பாண்டு, மூலவாயு, காமாலை, ஈளை, இருமல், விடப்பாகம், பித்த காசத்துக்கு உகந்த லேகியம்.

சங்கங்குப்பி சித்தாமட்டி சிறுகுறிஞ்
 சாவும் நற்சிறுகாஞ்சோரிவேருடன்
பொன்கமா முக்கா வேளைவேர் முன்னைவேர்
 புகலுந்து துவளையாடா தோடையு
மிங்கிதமிகு காயிறஞ்சியுடன்
 இசைந்த வேரிலை யொன்பதையுமுந்தன்
செங்கையா லோர் வகைக் கைம்பது பலஞ்
 சின்னியுமுற்ற க்காசு மவுரியே. ௨௯௮

அவுரி பொன் மூசுட்டை காட்டுமல்லிகை
 யமுக்கிரா சிறுகீரை நன்னாரியும்
நலமதாஞ் சீதேவிசெங்கழுநீர்
 நல்ல சாரணையு ங்கீழாநெல்லியுங்
குவலய க்கடலிறஞ்சி காட்டாமணக்
 குமுத்தாமணி வேருடன் வில்வமுஞ்
சிவனார் வேம்புடனே சீந்திற்றண்டுமே
 சிறுவழுதலையும் பத்துமொன்பதே. ௨௯௯

பத்துமொன்பது வகையுமோவ்வொன்றில்
 பலமும் பத்திதெல்லா மிடித்துமே
சுத்தநீர் நலம் விட்டுப் பேற்றியே
 கண்டக் காய்ச்சி யிரண்டுபடியதா
யுத்த சேர்முன்னியதனுடன் முடக்
 கொத்தான் கைவரக்கலைப்பிறவிய
மூத்தூற் காட்டாமணக்கு வில்வாகை
 முசுமுசுக்கை யுடன் காட்டு மல்லியே. ௩௦௦

மல்லியும் பொடுதலை கரும்பிஞ்சியு
 மாதளம் பழம் பூசினிக்காயுமே

நல்லெலுமிச்சம் பழம் நார்த்தம் பழம்,
  கனிலுமிப்பதினாறு வகைய தில்
சொல்லிய படிக்கும் வகையொன்றுக்கு
  சுத்த ச்சாறது காற்படி கூட்டியே,
வெல்லமொடு சருக்கரை ரெண்டிலும்
  விதமதொன்று க்குமைந்து பலமதே. ௪௮௧

பலமிரண்டது கூட்டிடுமுக்திரிப்
  பலமும் பேரீச்சம் பழமுமுன்சொற்படி
நல்லபசுவின் நெய் படியொன்று தேன்படி
  நல்லதோர் மிளகும் பரங்கிப்பட்டை
பலமதொன்று வகையது மொன்றுக்குப்
  பகருவேனினி க்கடுகுரோகிணி
நலமதாகிய சீரகங்காந்தமும்
  நாட்டுச்சுக்கு டனே கொத்தமல்லியே. ௪௮௨

மல்லிதிப்பிலி திப்பிலிமூலமும்
  வாய்விளங்க மரத்தை தேசாபுரம்
வல்லதா மசமதாக மாகவும்
  வகையும் பத்து மொன்றில் வகையொன்றுக்குச்
சொல்லிடும்படி வராகனிடை ஐந்துஞ்
  செப்பமாம் வெள்ளை க்குங்கிலிய மதுஞ்
சல்லியங்க ளில்லாமல லைப்பலந்
  தானே புன்னி மூன்று பலம் கூட்டிடே. ௪௮௩

கூட்டுமஞ்சு ப்புமே வகையொன்றுக்குப்
  கொன்னிரண்டு வராகனிடையதும்
நாட்டின் பேய்ப்புடலுங் கடுக்காய்த்தூளும்
  நலமதாய் வகைக்கு ப்பல மூன்றதாங்
கோட்டஞ்சாதிக்காய் சாதிபத்திரியேலங்
  குரோசாணி யோமமுஞ் சிறுநாகப்பூ



வாட்டமில்லா க்கராம்பு சாரப்பூவு
  மதிமதாம் வகையது மொன்பதே. ௪௮௪

வகையதொன்றுக்கு க்கேள் நிறையொவ்வொரு
  வராகனிடையு மாறு மாசாப்பூ
துகைய தாகவுமோர் பலங்கூட்டிடு
  சூடறு தாளிசப்பத்திரியதும்
தரும் பலமொன்று சேர்த்திடு நல்லவ
  சம்பரைப்பலமுங் கருஞ்சீரகம்
சொகுசதாக வராகனிடை யொன்றுஞ்
  சொல்லியபடி க்கெல்லாம் நீ சேர்த்திடே. ௪௮௫

சேர்த்திடித்து மத்தூளை வடியது
  செய்துபோட்டும் பதமதாய்க் கிண்டியே,
ஆத்தி சூடியவம்பல வாணரை
  யகத்திலே நினைத்தே யவர்தன்னையே
போத்தியே வலுவோமின் றிறங்கண்டு
  ஒரு காற்பது காலது கொண்டிட
ஆத்து மேகமும் வாயுவுஞ்சூலையு
  மூற்றசேர்கையும் பாண்டுவு ந்தீருமே. ௪௮௬

திருமூலத்தின் வாய்வுங்காமாலையுஞ்
  சினத்த பீனிசிருமல் விஷப்பாகந்
தீரும் பித்தத்தின் காசமுமேகமுஞ்
  செங்கதிர்முன் பனியென வாகுமே.
யேருலாவு ந்திருமகள் கீர்த்தன
  மிடும் பிரதாப குவவுபுயன்வளச்
சீருஞ்செல்வ மிகுந்த ஞ்சைவாழ்நல்ல
  செல்வ ஞஞ்சரபேந்திர னருளிதே. ௪௮௭

(இ-ன்)
  ஊர்க்கருப்பிவேர்    சிற்றுமுட்டிவேர்

| | |
|---|---|
| சிறுகுறிஞ்சாவேர் | சிறுகாஞ்சொறி வேர் |
| முக்காவேளைவேர் | முன்னை வேர் |
| தூதுவளை வேர் | ஆடாதொடைவேர் |
| காயிறஞ்சிவேர் | |

இவை வகைக்கு 50 பலம் எடுத்து.

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | அவுரி |
| சின்னி | |
| பொன்முசுட்டை | காட்டு மல்லிகை |
| அமுக்கிரு | சிறுகீரை |
| நன்னாரி | சீதேவி செங்கழுநீர் |
| சாரணை | கீழாநெல்லி |
| கடலிறஞ்சி | காட்டாமணக்கு |
| உத்தாமணி வேர் | வில்வம் |
| சிவனார் வேம்பு | சீந்திற்றண்டு |
| சிறுவழுதலை | மிளகறணை [1] |
| (சிறுமுள்ளுக்கத்தரி) | |

இவை வகைக்குப் பத்து பலம் சேர்த்து எல்லாவற்றையும் இடித்து சுத்த ஜலம் ஒருகலம் (12 மரக்கால்) விட்டு அடுப்பில் வைத்து 2 படியாகக் காய்ச்சி,

| | |
|---|---|
| நீர் முள்ளி | முடக்கத்தான் |
| கையாந்தகரை | பிரமியம் |
| காட்டாமணக்கு | நிலவாகை |
| முசுமுசுக்கை | காட்டுமல்லி |
| பொடுதலை | கரும்பு |
| கொச்சி | நார்த்தம்பழம் |
| இஞ்சி | மாதுளம்பழம் |
| பூசினிக்காய் | எலுமிச்சம்பழம் |

1. 'மிளகறணை' மூலச்செய்யுளில் விடப்பட்டிருக்கிறது. உரைச் சுவடியில் கண்டிருக்கிறது. இது சேர்ந்தே செய்யுளில் கண்டபடி 19 சரக்காகிறது.



இவற்றின் சாறுகளில் வகைக்குக் காற்படி சேர்த்துக் கொண்டு,

| | |
|---|---|
| வெல்லம் 5 பலம் | சர்க்கரை 5 பலம் |
| முந்திரிப்பழம் 2பலம் | பேரீச்சம்பழம் 2பலம் |
| பசுவின் நெய் 1படி | தேன் 1 படி |

இவைகளைச்சேர்த்து,

| | |
|---|---|
| மிளகு | பரங்கிப் பட்டை |

இவை வகைக்கு ஒரு பலமும்,

| | |
|---|---|
| கடுகுரோகிணி | சீரகம் |
| காந்தம் | சுக்கு |
| கொத்தமல்லி | திப்பிலி |
| கண்டந்திப்பிலி | வாயுவிளங்கம் |
| சிற்றரத்தை | தேசாபுரம் |
| அசமதாகம் (ஓமம்) | |

இவை வகைக்கு 5 வராகனிடையும்,

வெள்ளைக் குங்கிலியம் ½ பலம்

வெள்ளைப் பூண்டு 3 பலம்

அஞ்சுப்பு (கடலுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, உவர்மண்ணுப்பு) வகைக்கு 2 வராகனிடை

| | |
|---|---|
| பேய்ப் புடல் 3 பலம் | கடுக்காய்த் தூள் 3 பலம் |
| கோஷ்டம் | சாதிக்காய் |
| சாதிப்பத்திரி | ஏலம் |
| குரோசாணி ஓமம் | சிறுநாகப்பூ |
| கிராம்பு | சாராப்பூ |
| அதிமதுரம் | |

இவை வகைக்கு 1 வராகனிடையும்,

| | |
|---|---|
| ஆறுமாசாப்பூ 1 பலம் | தாளிசப்பத்திரி 1 பலம் |
| வசம்பு ½ பலம் | கருஞ்சீரகம் 1 வராகனிடை |

இவைகளையெல்லாம் சேர்த்து இடித்து வஸ்திர காயம் செய்து வேண்டிய அளவு வெல்லம், நெய் சேர்த்து லேகியமாகக் கிளறிக்கொள்ளவும்,

இதை ரோகியின் பலத்துக்குத் தகுந்தவாறு 48 நாள் சாப்பிட தீரும் வியாதிகள்:—

ஊத்து மேகம், வாய்வு, சூலை, சோகை, பாண்டு, மூல வாயு, காமாலை, ஈளை, இருமல், விஷப்பாகம், பித்த காசம், மேகம் முதலியவை தீரும்.

## 220. மேகவூரல், படருகிறதற்குப் பூச்சு

காட்டின்றேற்றான் விரையதைச் சீவியே
  கத்தரி காயகத்தின் விரையதை
காட்டமாக விடித்தந்த ச்சார்விட்டு
  நறுக்கியே யரைத்தே யவ்விழுதையும்
வாட்டுமேகத் தினூரலிற் பூசியே
  மற்ற நாள் வெண்ணெய் தேய்த்து க்குளித்திடு
மோட்டு மேகத்தினூறலு மிப்படி
  யொன்றை விட்டுமோர் நாளதுஞ் செய்திடே
சஅஅ

(இ-ள்)

காட்டுத் தேற்றான் விதையைச்சீவி நறுக்கி, கத்தரி காயகத்தின் விதையை இடித்து அதன் சாற்றை விட்டு அரைத்து அவ்விழுதை மேக ஊறலின்மேல் பூசி மறு நாள் வெண்ணை தேய்த்துக் குளிக்கவும். இப்படி ஒரு நாள் விட்டு ஒருநாள் செய்துவரவும். மேக ஊறல் தீரும்.

## 221. மேக ஈளை, இருமல், பித்தவெட்டைக்கு எண்ணெய்

ஊத்துமா மணக்கெண்ணெய்நாழியி
  ரெண்டு த்திரிபலை திரிகடு



கேத்தமஞ்சள் மரமஞ்சளே லஞ்சாதிக்காய்
  இலாமிச்சம் வேர் கோட்டம் வெட்டிவேர்
சாத்து சீரகம் மதுரமுழுந்தக்கா
  சாதிபத்திரி காரம்பு நற்சந்தனம்
பூத்தபற்பாடகங் கூகை நீர் காரம்
  போடே கானக் கருஞ்சீரகம் பதினெட்டே சஅகூ

பத்துமெட்டும்வகை யதிலொன்றுக்கும்
  பாகமாக வராகனிடை யெடு
மொத்தவம்மியிற் றான்செய்துமே யதை
  யுடனே வஸ்திரகாயங்கள் பண்ணியே
சுத்த எண்ணெயிலே கலந்தேயதைச்
  சூரியனிட புடமாகவே மூன்றுநாள்
வைத்து எண்ணெயிற் சிற்றுக்காண்டியால்
  வன்மையாயோர் காண்டியுமுண்டிடே. சகூ0

உண்ணிராத்திரி போசனஞ் செய்தபின்
  னுறங்கும் போதிச் சாபத்தியமாகவே
எண்ணிலக்க ப்பல ரோகமு
  மீளையும் பித்த வெட்டையுந்தீருமே
கண்ணுஞ்சேடன் முதலாக ப்போற்றிய
  நாகபூஷணர் திங்கள் கங்கையணி
கண்ணுதற்கிருபை பெற்ற விபுதஞ்சை
  காவலன் சரபேந்திரனருளிதே சகூக

(இ-ள்)

திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்)
திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி)

| | |
|---|---|
| மஞ்சள் | மரமஞ்சள் |
| ஏலம் | சாதிக்காய் |
| சாதிபத்திரி | காரம்பு |
| சந்தனம் | பற்பாடகம் |

| | |
|---|---|
| கூகை நீறு | கருஞ்சீரகம் |
| சீரகம் | அதிமதுரம் |
| விளாமிச்சம் வேர் | வெட்டிவேர் |
| கோரைக் கிழங்கு | கோஷ்டம் |

இவை வகைக்கு ஒரு வராகனிடை எடுத்து அம்மி யில் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து 2 படி ஊற்றின விளக்கெண்ணெயில் கலந்து மூன்றுநாள் வெய்யிலில் வைக்கவும்.

தினமும் இரவில் சாப்பிட்ட பிறகு இந்த எண்ணெ யில் ஒரு சிறு கரண்டியளவு சாப்பிட்டு இச்சா பத்திய மாக இருந்துவர ஈளை, பித்த வெட்டை முதலிய வியாதி கள் தீரும்.

### 222. மேகவெடி, வாயு, சூலை, புண் கரப்பான் முதலானதற்கு வல்லாதி

கெந்தகம் பலம் ரெண்டரை சாதிக்காய்
  கிராம்பு சாதிபத்திரி சடாமாஞ்சிலு
மிந்த காலும் வராகனிடையுமூன்
  றேபறங்கிப்பட்டை மூன்றேபலங்
கந்த வால்மிளகு கருஞ்சீரகம் கா
  கணமு மோமமு ங்கஸ்தூரி மஞ்சளு
மைக்கிலே வகையொன்றுக்கு த்தானுமே
  யரைப்பலமதன் மேற்சக்கரையதே சஙஉ

சருக்கரையதெட்டுப்பலம் சேங்கொட்டை
  தானுமுப்பதை வெட்டியே சட்டியில்
வருக்கமாக வருத்து மேற்சொல்லிய
  மருந்தை யெல்லாமிவ வரைகொண்டுதா
னரைப்புடி யென்றுதான் பொய்வரைகொண்டு
  எல்லாம் போட்டிடித்தே வடிகட்டிமு



னுரைத்த சர்க்கரை யுமதிற் போட்டிடி
  த்தொன்ற தாக்கியே பத்திரஞ்செய்திடே சஙங

பத்திரஞ் செய்து மானிடர்தேகத்தின்
  பலமும் நோயறிந்தே பிரமாணமா
யுத்த நோயதுக்கு த்தக்க தாகவே
  யோர் வெருகடியுமே யதிலெடு
நித்தமந்தியு ங்காலையு ங்கொண்டிடு
  நீயுங் காலரை முக்காலோர் மண்டலம்
பத்திய மொன்றுமில்லை யெல்லாத்தையும்
  பருகிப் போசன ஞ்செய்யும் நீதானுமே சஙச

தானிதற்கு மேகத்தின் வெடிமிகுஞ்
  சகல வாயுவுஞ்சூலை யும் புண்களு
மானதோர் கரப்பானது எட்டுமே
  யற்றுக்குணமாம் வல்லாதியே.
தானதர்மமியாக ம்பலவுமே
  தழைக்கு ஞ்சோழவள நாடதிற்றஞ்சை
மானுலா ஞ்சரபே ந்திர பூபதி
  மனதுணர்ந்த வல்லாதியிதாகுமே. சஙரு

(இ-ன்)

| | |
|---|---|
| கந்தகம் 2½ பலம் | சாதிக்காய் 3 வராகனிடை |
| கிராம்பு 3 வராகனிடை | சாதிபத்திரி ” |
| சடாமாஞ்சில் ” | பறங்கிப்பட்டை 3 பலம் |
| வால்மிளகு ½ பலம் | கருஞ்சீரகம் ½ பலம் |
| நாகணம் ” | ஓமம் ” |
| கஸ்தூரி மஞ்சள் ” | |

இவைகளை யெல்லாம் இளவறுவலாக வறுத்துக் கொண்டு உரலிலே போட்டு இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு 30 சேங்கொட்டைகளை சுத்திசெய்து சட்டியில் போட்டு வறுத்து அந்தச் …ருடன் சேர்த்து,

சர்க்கரை 8பலமும் சேர்த்து அரைப்படி என்னை வருத்துப் பொடி பண்ணிக்கொண்டு, எல்லாவற்றையும் சேர்த்து இடித்து வைத்துக்கொள்ளவும்.

இந்த மருந்தில் வெருகடிப் பிரமாணம் காலையும், மாலையும் வியாதிக்குத் தகுந்தவாறு கால், அரை, முக்கால் மண்டலம் சாப்பிடவும். இதற்குப் பத்தியமில்லை. இதனால் மேகவெடி, வாயு, சூலை, புண், எட்டு வகைக்கரப்பான், இவை தீரும்.

## 223. மேக வியாதிக்குக் கடாயம்

செல்விமுன்னியுந் தேற்றான் விரையுட
  னேதுவர்கடுக்காய் புரசம்பட்டை
சொல்லும் நாலுஞ்சமனாய்க்கடாயம் வைத்
  துக்கொள்ளத்தியுங்காலையுந்தானுமே
வல்லதோர் பல மேக பலவியாதியு
  மதுவின் மேகமு மற்றிடு முண்மையாய்
சொல்லுங் கும்பமுனியுரை தானிது
  சுகமுமாங்கரங்கண்ட முறையிதே. ௨௯௬

(இ-ள்)

| | |
|---|---|
| செல்விமுன்னி | தேத்தாங்கொட்டை |
| துவர்கடுக்காய் | புரசம்பட்டை |

இவை நான்கும் சமனிடை எடுத்து இடித்துக் கஷாயம் வைத்துக் காலையும் மாலையும் சாப்பிட்டுவரப் பல மேக வியாதிகளும், மது மேகமும் தீரும்.

## 224. மதுமேக மிரத்தமேகத்துக்கு ஆவாரை வித்தாதிச் சூர்ணம் மருந்து

ஆவரை விரையும் படியொன்றரை
  யாது பத்து நாழிகை யதை யூறவைத்து



தேவையாங்கல்லுரலி லாட்டியே
  செங்க திரின்முன் காயவே வைத்ததை
ஆவலாக நன்றாகவே சூரணித்ததையு
  மேவடிக்கட்டியும் வைத்துக்கொள்
ளிவிமின மீதில் மலாக்காயின்
  றேசத்திலுறுஞ் சந்தனக் கட்டையே ௨௯௭

கட்டையும் பதினைந்து பலமது
  கருதிய விளநீரிலூறவைத்
திட்டுப்பின் கையாந்தரை ரசமதிற்
  சேருடன தையூறவும் வைத்திடித்
திட்டுக்காயவும் போட்டதை த்தூளாய்ச்
  செய்து வேறே யதை வைத்துக்கொண்டுநீ
மட்டமாக வாவரைத்தூள் பத்துக்கு
  வன்மையாய்ச் சந்தனத்தூளிரண்டதே. ௨௯௮

இரண்டுஞ் சேர்த்திரா விற்சோறுமுண்டபின்
  இதைக்கடாயமாய் வைத்துக்கொண்டிடு
திரண்டு குக்கியது விடுங்காலமே
  செய்திடும் வகைசொல்லவுங்கேட்டிடு
மரத்தின் மஞ்சளும் வாய்விளங்கம் ரெண்டும்
  வகைக்கொரு பல மேல மதாமுங்
தருவிலுற்ற பேரிச்சம் பழத்தோடு
  தன்ன தாமுந்திரி ப்பழந்தானுமே ௨௯௯

முந்திரிப்பழ த்தோடே யிந்நால்வகை
  மொழியுமொன்று வகையதுமொன்றுக்கு
பத்த பாக விராகனிடை நாலும்
  பச்சைப்பூரமுங்குங்குமப்பூவது
மிந்திரண்டும் பணவிடைதா
  விசைந்த கஸ்தூரி நாலு பணவிடை

அந்த மாயாதி யொன்றது சூரணமாக்கி
 கன்றாய் வடிகட்டி வைத்திடே ௫௱

வைத்துக்காலை வெருகடி தாடேனில்
 வண்மையாய்க்கொண்டு மேலுக்தயிருங்கொள்
ளித்தை காற்பது நாளது க்கொண்டிட
 பிரத்த மேக மது மேகந் திருமே
சத்தியாதி பராபரையா யிந்திரை
 சகல லோக புராதனி தன்னிட
மொத்த லாதி சிவனருள் பெற்றிடும்பர்
 கோன் சர பேந்திரனருளிதே. ௫௱௪

(இ-ள்)

ஆவாரை விரை $1\frac{1}{2}$ படியை 60 நாழிகை ஊற வைத்துக் கல்லுரலில்போட்டு அரைத்து வெய்யிலில் காய வைத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும். மலாக்கா சந்தணக் கட்டை 15 பலம் சீவி முதலில் இளநீரிலும், பிறகு கையாந்தரைச் சாற்றிலும் ஊறவைத்து இடித்துக் காயவைத்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

ஆவாரைத் தூள் 10க்கு 2 பாகம் சந்தணத் தூள் போட்டுக் கொள்ளவும்.

இந்தத் தூளைக் கஷாயம் வைத்துக்கொண்டு இரவில் சாப்பிட்ட பிறகு கஷாயம் சாப்பிடவும். மலப் பிரவர்த்தி யாகும்.

காலையில்,

மரமஞ்சள் 1 பலம் வாய்விளங்கம் 1 பலம்
ஏலம் 4 வராகனிடை அதிமதுரம் 4 வராகனிடை
பேரீச்சம் பழம் ,, கொடிமுந்திரிப்பழம் ,,
பச்சைக் கற்பூரம் 1 பணவிடை குங்குமப்பூ 1 பணவிடை
கஸ்தூரி 4 பணவிடை



இவற்றைச் சூரணமாக்கி வஸ்திரகாயம் செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் சாப்பிட்டுத் தயிர் குடிக்கவும். இப்படி நாற்பது நாள் சாப்பிட்டு வர ரத்தமேகம், மது மேகம் முதலியவை தீரும்.

## 225. சோமரோகத்துக்கு மருந்து

மேல்தோலைவாங்கி சதாவரிக்கிழங்கை
 மேல் துண்டுதுண்டாக நறுக்கியேதான்
சாத்திரவி தனிலுலர்த்தி யிடித்துத்தூளாய்க்
 கடுகவே வடிக்கட்டிப்பசுவின் பாலில்
லாத்தி சர்க்கரை தேனுங்கலந்துகொண்டு
 மேரடிடுமே சோமரோகந்தான் கல்ல
சாத்திரத்தையுணர்ந்துணர்ந்து தஞ்சையாளுஞ்
 சரபேந்திரனிர்ணயித்தசூரணந்தானே. ௫௱௨

(இ-ள்)

தண்ணீர் விட்டான் கிழங்கின்மேல் தோலைச்சீவி, துண்டு துண்டாக நறுக்கி வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம்பண்ணிப் பசுவின் பாலில் சர்க்கரையும், தேனும் கலந்து சாப்பிட சோமரோகம் தீரும்.

## 226. சுக்கிலமேகங்கல்லடைப்பு, மூத்திரக் கிருச்சிரத்துக்கு கிருதம்

பசுவின் பாலி லேரிலைத்தாமரையின் சாறும்
 பண்பாம் பொன்னாங்கணிச்சார் வாழைத்தண்டு
பிசலான சாறும் பூசினிக்காய்ச்சாறு
 மிளகீரும் சிர்முன்னி கரும்பின்சாறும்
அசவாமெட்டிச்சாற்றில் வகைக்குநாழி
 யாவினெய் நாழியிதற்கு க்கற்கங்கேள்

பசையான எள்ளுடனே யேலங்கொள்ளு
பண்பான கொத்தமல்லி யிலுப்பைப்பூவே. ருாங

பூவுங்கல் மதங்கல்நார் கூகைநீறும்
பூனைக்காலியின் விரையும் நெருஞ்சிவேருங்
காவில்வளர் தேற்றாங்கொட்டையுமே பொன்னாங்
கண்ணி வேரத்தித்திப்பிலியுங்கூட
பாவகமாய் வெள்ளரியின் விரையுமுந்திரிப்
பழமுடனே நீர்முள்ளிக்கிழங்கும்வித்தும்
பூவினதிமதுரம்பூசினியின் வித்தும்
பொருந்தவிது பத்துமொன்பதுவு மாச்சே. ருாச

ஆனவகையொன்றுக்கு வகைக்கு மொன்று
மரைவராகனிடையதில் நிறுத்துக்கொண்டு
ஈனமிலாமலரைத்துக்கரைத்து மந்தாக்
கினியில்பதத்தில் வடித்து அந்த நெய்யிலேதான்
தேனதிலே நாழிவிட்டக்நெய்யினுள்ளே
சீனியுடன் கூகைநீர் வகைரெண்டுக்குத்
தானதிலே வகைக்கு மொன்றரைப்பலந்தான்
தப்பாமற் பொடித்துமதிற் போட்டிடாயே. ருாரு

போட்டுதாராதரமறிந்தோர் நிதானமாகப்
புசியிரண்டு வேளையுந்தானே பன்னெட்டு
மூட்டிய சுக்கிலமேக ங்கல்லடைப்பு
மூத்திரக்கிருச்சமென்னும் நோய்களெல்லா
மோட்டுமி ரவியைக்கண்ட பனியைப்போலு
முண்மையிது தப்பாது செய்து பாரு
மூட்டிடு மூனுண்டு கண்ணப்பாவென்று.
உரைத்த சிவனருள் பெருமானுரையிதாமேருநக

(இ-ள்)

பசுவின்பால் ஓரிலைத்தாமரைச்சாறு



பொன்னாங்கண்ணிச்சாறு வாழைத்தண்டுச்சாறு
பிசலான்சாறு (?) 1

பூசினிக்காய்ச்சாறு இளநீர்
நீர்முள்ளிச்சாறு கரும்பின்சாறு

இவை வகைக்கு ஒரு நாழியும் பசுநெய் ஒரு நாழியும் விட்டுக்காய்ச்சி அதில்

எள்ளு ஏலம்
கொத்தமல்லி இலுப்பைப்பூ
கல்மதம் கல்நார்
கூகைநீறு பூனைக்காலி விரை
நெருஞ்சிவேர் தேத்தாங்கொட்டை
பொன்னாங்கண்ணிவேர் யானைத்திப்பிலி
வெள்ளரி விரை முந்திரிப்பழம்
அதிமதுரம் பூசினி விரை
நீர் முள்ளிக்கிழங்கு,
வித்து, பூ

இவை வகைக்கு 1¼ வராகனிடை எடுத்து மைய அரைத்துக்கரைத்து, சிறுதீயாகக்கொடுத்து எரித்து வடித்து அந்த நெய்யில் தேன் ஒருநாழி விட்டு, அதில்

சீனி 1¼ பலம் கூகை நீறு 1¼ பலம்

இவற்றைப்பொடி செய்து போடவும்.

இந்த நெய்யை இரண்டு வேளையும் நோயின் தாரதரமறிந்து சாப்பிடவும். இதனால் சுக்கிலமேகம், கல்லடைப்பு, மூத்திரக்கிருச்சிரம் முதலிய நோய்கள் தீரும்.

---

1. 'வாழைத்தண்டுச்சாறு' என்ற சாற்றுக்குப்பிறகு மூலச் செய்யுளில் 'பிசலான்சாறு' என்று கண்டிருக்கிறது. இதன் பொருள் விளங்கவில்லை. 'பிசு' என்றால் பருத்தி என்ற பொருள் நிகண்டுகளில் இருப்பதால் பருத்திச்சாறாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. உரைநடைச்சுவடியில் இந்தச்சாற்றைச் சொல்லாமலே விட்டப்பட்டிருக்கிறது.

## 227. மது மேகத்துக்கு மருந்து

மிளகுடனே வாழைப்பூ மாவின் பட்டை
வெள்ளைப்பூண்டிது சாலுஞ்சமமாய்ச் சேர்த்து
வளமுடனே யரைத்துத்தூளாக்கிக்கொண்டு
வண்மையுள்ள வநுபான விசேடந்தன்னி
லளவுடனே நோய் நிதானங்கள் பார்த்து
அன்பாகவுண்க மதுமேகந்தீரும்
அலிகள் கிதம்பாடு நக்தனஞ்சூ
மூன்பான தஞ்சை விபு வருளதாமே. ருஎ

(இ-ள்)

| | |
|---|---|
| மிளகு | வாழைப்பூ |
| மாம்பட்டை | வெள்ளைப்பூண்டு |

இவை சமனெடை எடுத்து அரைத்துத்தூளாக்கி, தகுந்த அநுபானத்தில், தகுந்த அளவு, நோய் நிதானங்களுக்குத்தகுந்தவாறு சாப்பிட மதுமேகந்தீரும்.

## 228. மதுமேக, மிரத்தமேகம், ஈமெய்க்கிறமேகம் மூத்தி கிருச்சம், கல்லடைப்புத் தசை யடைப்பு, நீரடைப்பு, கைகாலெரிவு, வீரிய நஷ்டம், கர்ப்பநாசஞ், சூட்டுக்கு ஆவரை வித்தாதிச்சூர்ணம்.

ஆவரை விரையதனைக்கொண்டு வந்து
அத்திப்பட்டை வாழைக்கிழங்கின்
மேவிய சார் மருதம்பட்டையும் நெருஞ்சி
வேர்ச்சாறும் செல்விப்பழத்தின் சாறும்
தாவிய சீந்திற்கொடியின் சாறுங்கூட
தண்ணிமிட்டான் கிழங்குசண்பகப்பூவின்சாறு
தேவையரான் கற்றாழஞ்சாறுமித்தத்
திறமானவொன்பது வகைச்சாறுதானே. ருஅ



சாத்திலே யொவ்வொரு நாளூறப்போட்டுத்
தானெடுத்து நிழலுலர்த்த லாயுலர்த்திப்
பாத்திடித்து வடிக்கட்டி வைத்துக்கொண்டு
பலமும் நோய் பண்பறிந்து தேனிலாவ
தேத்தவநுபான மறிந்தே கொடுத்தால்
தீருமென்ற வியாதி மது மேகமிரத்த
மூத்துமேக மீக்கள் மெய்க்குமேக
மூத்திரக்கிருச்சங்கல்லடைப்பும்போமே. ருகூ

கல்லடைப்பு த்தசையடைப்பு நீரின்கட்டு
கையெரிவு க்கால்லெரிவு வீரிய நஷ்டம்
வல்லெலும்பைப்பற்றுசுரங்கெர்ப்பநாசம்
வளவான சரீரத்தின் சூடுந்தீரும்,
பல்லியமுழங்க ரதகெசமாவோடே
பதாதிசதுரங்கதனஞ்சூழக்காவில்
வல்லியத்தின் வேட்டைசெய்து களிறுமீதில்
வருஞ்சரப ராசேந்திரனருளிதாமே. ௬0

(இ-ள்)

ஆவாரைவிரையை,

| | |
|---|---|
| அத்திப்பட்டைச்சாறு | வாழைக்கிழங்குச்சாறு |
| மருதம்பட்டைச்சாறு | நெருஞ்சிவேர்ச்சாறு |
| செல்விப்பழச்சாறு | சீந்திற்கொடிச்சாறு |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | |
| சண்பகமொட்டுச்சாறு | பொடுதலைச்சாறு |

இந்த ஒன்பது வகைச்சாறுகளிலும் ஒவ்வொருநாள் ஊறப்போட்டு நிழலுலர்த்தலாய் உலர்த்தி இடித்து, வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு தேகபலமும், நோயின்குணமும் அறிந்து தேனிலாவது, ஏற்ற அநுபானத்திலாவது கொடுக்கத்தீரும் வியாதிகள்---

மதுமேகம், இரத்தமேகம், மூத்திரக்கிரிச்சிரம, கல்லடைப்பு, தசையடைப்பு, நீர்க்கட்டு, கையெரிவு, காலெரிவு, வீரியநஷ்டம், அஸ்திஜுரம், கர்ப்பாசம், சரீரச்சூடு முதலியவை தீரும்.

## 229. மதுமேகத்துக்குத் தினையாதிச்சூர்ணம்

தினை சாமை கேழ்வரகு கம்பு சோளந்
  தின்னும் நெல்லினரிசி வரகரிசிகூட
இனிதான குறப்பரிசி யுடும்பின் சென்னி
  யிசைந்தாவாரை யினரிசியிதனின்பட்டை
வனத்தினி லுறும் விடத்தரையினிலையுங்கூட
  வின்பான விளாம்பிசினும்மதிமூன்றுந்தான்
கனிவாகவோரிடையாய் நிறுத்துக்கொண்டு
  கனலிலேசட்டிவைத்து வறுத்துக்கொள்ளே ௫௧௧

கொண்டு நன்றாயிடித்து ச்சூரணமதாக்கிக்
  குற்றமிலாச்சீனியினல்வடியு ங்கட்டி
யுண்டிடு நீவெறுகடித்தான் பிரமாணந்தா
  னுற்ற மதுமேகமென்பதுடனே தீரும்
கண்டுமொழி யான்றனசபூபனின்ற
  காதலனிப்பூமிமனுக்காய் நிச்சித்த
மண்டலாதிபதி சரபேந்திரபூபாலன்
  மனதுணர்ந்த தினையாதிச்சூர்ணந்தானே ௫௧௨

(இ-ள்)

| | |
|---|---|
| தினை | சாமை |
| கேழ்வரகு | கம்பு |
| சோளம் | அரிசி |
| வரகரிசி | குறப்பரிசி |
| உடும்புத்தலை | ஆவாரையரிசி |
| ஆவாரைப்பட்டை | விடத்தேரியிலை |
| விளாம்பிசின் | |



இந்தப்பதின்மூன்று சரக்கையும் சமனிடையாயெடுத்து சட்டியில் போட்டு வறுத்துக்கொண்டு நன்றாய் இடித்துச் சூரணமாக்கி வஸ்திரகாயம் பண்ணி ஒருவெருகடித்தான் உண்ண மதுமேகந்தீரும்.

குறிப்பு : மதி = 1  மதி மூன்று = 13

## 230. சோமரோகத்துக்கு

நெல்லிக்காய்ச்சார்தனிலேவாழைப்பிஞ்சை
  நேகவுமே, மைப்போலரைத்துக் கொண்டு
நல்ல தேன் சர்க்கரையு ங்கூட்டிமூன்று
  நாட்பருகு காலையந்திரண்டுநேரம்
புல்லுத்திருப்பாலு ஞ்சாத முண்ணு
  போமெடுமே சோமரோகந்தானிந்த
நல்ல காவிரிநாடன் றஞ்சையாளும்
  நரபதியாஞ்சரபேந்திரனருளிதாமே ௫௧௩

(இ-ள்)

நெல்லிக்காய்ச்சாற்றிலே வாழைப்பிஞ்சை மைபோல அரைத்துக்கொண்டு நல்லதேன், சர்க்கரைகூட்டி மூன்று நாள் காலையும், மாலையும் சாப்பிட்டு, புல்மேய்கிற (பருத்தி நான் காலையும், மாலையும் சாப்பிட்டு, புல்மேய்கிற (பருத்திக்கொட்டை, புண்ணாக்கு முதலிய தீனிகள் வைக்காத) பசுவின்பாலும், சாதமும் சாப்பிட சோமரோகம் தீரும்.

## 231. பிரதரரோகம், வெளும்புருக்கி, சுக்கிலமேகம், தாதுவிருத்திக்கு அளர்க்காதி லேகியம்.

ஆதுவளம்பூ முருங்கைப்பூ விரண்டில்
  சொல்லும் வகையொன்றுக்குப் படியிரண்டு
சாதக சதாவேரிக்கிழங்கு தானும்
  தப்பாமல் மூன்றுபலம் நெருஞ்சிக்காயும்

பூதல கன்னுரி நிலப்பனைக்கிழங்கு
புனிதமாமேல மதிமதுரமைந்து
மேதப்பாமல் வகைக்குமோர் பலந்தான்
விதமுடன் சேர்த்திடித்துப் பொடியதாக்கே. ருகச

பொடிசெய்து வடிக்கட்டிக் கொண்டாப்பாலில்
புனிதமாய் நாலுபடி யடுப்பில் வைத்து
அடவாக வாடைதட்டாமற் காச்சி
யதிற்றூளைக் கொஞ்சங் கொஞ்சமாய்த்தூவித்
திடமுடனே சுண்டியுண்டையாகும்போது
தேனுடனே சருக்கரையும் வகையொன்றுக்கு
மிடுசேரு மொன்றதிலே கிண்டிக்கிண்டி
யிறக்கி வைத்துமப்பாற் செய்வலகையுங்கேளே. ருகரு

வகைகேளு மதிகாலைக்கறண்டி கொள்ளு
மாது பிரதர ரோகமெலும்புருக்கி
தகைவான சுக்கில மேகங்களெல்லாந்
தானற்றுப்பின் தாது விர்த்தியுண்டாம்
புகையிலையும் புளிப்பு கைப்புத்தள்ளி யுண்ணு
பொங்க மிகுந் தஞ்சையை யாள்மன்னர்மன்னன்
அகமகிழ்வுணர்ந்த வளர்க்காதிலேகிய
மன்பாகவுண் சகலவியாதிபோமே. ருகசா

(இ-ன்)

ஆதுவளம்பூ முருங்கைப்பூ

இவை வகைக்கு 2 படியும்

தண்ணீர் விட்டான் கிழங்கு 3 பலம்

| | |
|---|---|
| நெருஞ்சிக்காய் | 1 பலம் |
| கன்னுரி | ,, |
| நிலப்பனங்கிழங்கு | ,, |
| ஏலம் | ,, |
| அதிமதுரம் | ,, |



இவைகளையும் சேர்த்து இடித்துப் பொடியாக்கி வஸ்திரகாயம் செய்து பசும்பால் 4 படியை ஏடு தட்டாமல் காய்ச்சி, இந்தத்தூளைக்கொஞ்சம்கொஞ்சமாய்த் தூவி, சுண்டி உண்டையாக வரும்போது சர்க்கரை ஒருசேரும், தேன் ஒரு சேரும் விட்டுக்கிண்டி யிறக்கவும்.

தினமும் காலையில் இந்த மருந்தை ஒரு கரண்டி சாப்பிட்டுப்புகையிலையும், புளிப்பும், கைப்பும், தள்ளிப்பத்தியமாக இருந்தால், பிரதரரோகம், எலும்புருக்கி, சுக்கிலமேகம் முதலியவை தீரும். வீரிய விருத்தி உண்டாகும்.

## 232. தசையடைப்பு, கல்லடைப்பு, மேக வெட்டை, மூத்திர கிருச்சிரம், வெள்ளை காண்கிறதற்கு மருந்து

கதலியின் பூவு மொன்றதை த்தானே,
கறிசமைக்கிறது போலாய்ந்து
பதவாய்தனிலே துவைத்துச்சட்டியினிற்
பரப்பிச் சுக்கான்கலைக்கொணர்ந்து
இதமுள தூளாய் வடியது கொண்டு
மேயொரு சிறங்கை யுமதின் மேல்
சுகமுடன் தூவிப் பனியிலே வைத்துத்
தாலுதய த்தினிலே யெடுத்தே. ருகஎ

எடுத்து மாப்பாலு மரைப்படி தான்விட்
டேபிழிந்தொரு துணியாலே
வடித்து நற்சீனிச் சருக்கரை யதிலே
வகையுடனரைப்பலம் போட்டுக்
கொடுத்திடு மிந்த ப்படி யுமூன்றே நாள்
குணமது கேள் தசையடைப்பு
முடுக்கிடு ங்கல்லினடைப்பு மேக வெட்டை
மூத்திரக் கிரிச்சமும் போமே. ருகஅ

மூத்திர க்கிருச்சம் வெள்ளை காண்மிறது
  மோடிடும் பத்திய ங்கேளு
சேர்த்திடா திருதுர்ப்புகையிலை ப்புளிப்புத்
  தின்றிடாதே கைப்பும் வாய்வுந்
தோத்திடு ங்கறியை த்தள் முனியோர்கள்
  சொல்லிய பல வைத்திய த்தின்
சாத்திரமுணர்ந்து உரைத்திடும் முறையுஞ்
  சரபபூபதி யருளிதுவே. ௫

(இ-ள்)

ஒரு வாழைப்பூவைக்கறி சமைப்பதற்கு ஆய்வது போல் ஆய்ந்து நறுக்கி, உரலில் துவைத்துவை துக்கொண்டு ஒரு சட்டியிலே பரப்பி, சுக்கான் கல்லைப் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணி ஒரு சிறங்கை அதின்மேல் தூவி இரவில் பனியில் வைத்து உதயத்தில் எடுத்துப் பசுவின் பால் ½ படி விட்டு ஒரு துணியால் பிழிந்து சீனிச் சர்க்கரை ½ பலம் போட்டு மூன்று நாள் கொடுத்திட, தசையடைப்பு, கல்லடைப்பு, வெட்டை, மூத்திரக் கிருச்சிரம், வெள்ளை முதலிய வியாதிகள் தீரும்.

பத்தியம்—புகையிலை, புளிப்பு, கைப்பு, வாயு பதார்த்தங்கள் தள்ளவும்.

## 233. மேகத்தின் மேல்சூடு, கடுப்பு, நாபி புண்ணுக்கு மருந்து

எருமைப்பாலைத் தண்ணீர் விடாம
  லே தோய்த்தே வைத்துக்கொண்டு
இருநிலப்பனையின் கிழங்கதின் மேலே
  யிருக்கிற தோலையு ஞ்சுரண்டி



அரைத்தெலுமிச்சங் காயின் மாத்திர
  மத்தயிர் தன்னி லேகுழப்பிப்
பருகிடு மூன்று காலமே யிதற்குப்
  பத்தியம் புளிப்பு மாகாதே. ௫௨௰

ஆகிடா வாய்வு பதார்த்தமுந் தள்ளு
  அணுகிய மேகமு மதின்மேல்
வேக மாங்கடுப்பும் நாபியின் புண்ணும்
  விமலர்தன் கிருபை யினாலே
போகிடுமிந்த முறையது முன்பு
  பொதிகை மாமுனி யுரைத்ததையும்
வாகுள தஞ்சை நகர்தனை யாளும்
  மன்னர் கோன் விபுவுரையாமே. ௫௨௫

(இ-ள்)

எருமைப்பாலைத்தண்ணீர் விடாமல் காய்ச்சித் தயிர் தோய்த்து வைத்துக் கொண்டு, 2 நிலப் பனங்கிழங்கை மேல் தோலைச்சீவி விட்டு அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து அந்தத்தயிரில் குழப்பி மூன்றுநாள் காலையில் சாப்பிடவும். பத்தியம்—புளிப்பு, வாயு பதார்த்தங்கள் தள்ளவும். மேகத்தினால்ஏற்படும் மேல்சூடும், கடுப்பும், நாபிபுண்ணும் தீரும்.

## 234. மேக முதலான பதினெட்டு குட்டத்துக்கு மருந்து

நிலத்தில் மிளிர் கட்டுக்கொடியிலைச்சாறு
  நேருள படியது மிரண்டு
வறுத்த பேய்முசுட்டை ச்சார்படி யிரண்டு
  வளர் புதுச்சட்டியில் வைத்து
வுலர்ந்துமே கட்டி யாமிதுவுமிருக்கு
  மொரு வெருகடி ப்பிரமாணம்

கலத்துடனோர் மண்டல மதுவுண்ணு
  கவிலுவேன் பத்திய க்கைப்பே. ரு௨௨

கைப்புடன் புளிப்பு க்தள்ளு வாய்வுப்பண்டம்
  கடலினிலே வளர்ந்திடு நிண
டுப்பது க்கூட்டு பதினெட்டு க்குட்ட
  மோடிடு மேக கோயெல்லாம்
அப்பர் சம்பந்தர் சுந்தரர் பாடு
  மருந்த மிட்கிரங்கி யேயருள் செ
யற்புத வீசனருளது பெற்ற
  அன்புள தஞ்சை மானுரையே. ரு௨௩

(இ-ள்)

கட்டுக் கொடியிலைச் சாறு 2 படி
பேய் முசுட்டைச் சாறு 2 படி

இதை ஒரு சட்டியில் விட்டு வைத்து அது உலர்ந்த கட்டியானதில் வெறுகடிப் பிரமாணம் ஒரு மண்டலம் சாப்பிட மேக முதலான 18 குஷ்டமும் தீரும். கைப்பு புளிப்பு, வாயுப்பண்டம் தள்ளி பத்தியமாக இருக்கவேண் டும். உப்பு சேர்த்துக்கொள்ளலாம்.

## 235 மேகமிருபத்தோன்று, சூலையாறு, பித்தசேட்டுமகாசத்துக்கு கெங்காதி லேகியம்

சித்திரமூல க்குராசாணி யோமஞ்
  சீரகம் பருத்த சீரகமுஞ்
சுத்த செண்பகப்பூ கொப்பரை த்தேங்காய்
  துடிமிகும் பறங்கியின் பட்டை
சத்தும்வால் மிளகும் லவங்க பத்திரியும்
  சாடிய லவங்கப் பட்டையுமே
புத்திமெ ஞ்சிலாசித்துடன் மனிதர்க்குரிமை
  யாஞ்சிறு நாகப்பூ வே. ரு௨௪



பூவுடனே யன்னிரண்டு வகையும்
  புகலுவேன் வகைக்கொரு பலமும்
பாவனையுடனே யெடுத்து சேர்ஞெய்மைம்
  பலமது பத்து வெள்ளுள்ளி
சாலியினி ல்லாமற் பலமதுமைந்து
  சாதி பத்திரியுடன் காரம்பு
மேவலுவா யொவ்வோர் வராகனிடை
  மெய்ப்புள சாதிக்காயிரண்டே. ரு௨௫

இரண்டு காசிடையு மேலம் கந்தகமு
  மெழிலுடன் வராகனொன்றரையுந்
திரண்ட சாணிப்பால் பசுவின் பாலிளநீர்
  செப்பிலு மூன்றிலுந் தானே.
அருந்திடாதே சுத்தியதுமே பண்ணி
  யாக பத்தொன்பது வகையு
மூரண்டிடாதே தூள்செய்து வரசெய்யு
  மொழிந்திடு படி யரை க்காலே. ரு௨௬

ஏலுடன் விட்டு க்கிண்டியே யதனி
  லே சிறு கொட்டைப் பாக்களவு
காலமே யந்தி கொள்ளநுபது கால்
  கனைந்திடு மேகமிருபத்தொன்று
சூலைகளாறு மருள் மிக்கவன் மூன்றும்
  துர்ப்பித்த சேட்டும காசம்
ஓலமிட்டோடுஞ் சிவன் கிருபை மிகு
  முலகத்தை யாள்கிபு வுளையே. ரு௨௭

(இ-ள்)

| | |
|---|---|
| சித்திர மூலம் | குராசாணி யோமம் |
| சீரகம் | பெருஞ்சீரகம் |
| செண்பகப்பூ | கொப்பரைத்தேங்காய் |
| பறங்கிப்பட்டை | வால்மிளகு |

| | |
|---|---|
| லவங்கப்பத்திரி | லவங்கப்பட்டை |
| லொஜித்து | சிறுநாகப்பூ |
| இவை வகைக்கு | 1 பலம்எடுத்து, |
| சேங்கொட்டை (சுத்திசெய்தது) | 10 பலம் |
| வெள்ளைப் பூண்டு | 5 பலம் |
| சாதிபத்திரி | 1 வராகனிடை |
| சோம்பு | 1 வராகனிடை |
| சாதிக்காய் | 2 காய் |
| ஏலம் | 2 காசெடை |
| கந்தகம் | 1½ வராகனிடை |

இவைகளைச் சாணிப்பால், பசுவின் பால், இளநீர் இவைகளில் சுத்திபண்ணி எடுத்துக் கொண்டு, சரக்குகள் எல்லாவற்றையும் தூள் செய்துகொண்டு ¾ படிநெய் விட்டு அடுப்பில் வைத்துக் கிண்டி வைத்துக்கொள்ளவும்.

தினமும் காலையும் மாலையும் சிறு கொட்டைப் பாக்களவு 20 நாள் சாப்பிட்டுவர 20 மேகமும், 6 குலைகளும் தீரும்.

## 236. மேகச்சூடு, நீர்க்கடுப்பு, காபிப் புண்ணுக்கு மருந்து

கலைமின் கொம்பை சீண்டிடு சாணைக்
கல்லினிற் றுட்டிடை யிழைத்து
நலபசு வெண்ணெய்த்துட்டிடையேலம்
நவில் வராகனிடை யரையே
கலந்து நன்றாக மத்தித்து அந்தி
காலையு மைந்து நாட் கொள்ளு
வதுமின காயும் கைப்புடன் புளிப்பும்
வளமிலைப் புகையிலை தள்ளே. ௨௧௮



தள்ளியே யுண்டால் காபியின் புண்ணும்
தானறுமுடம்பு மக்கினியா
புள்ளது மருளிரும் நீர்க்கடுப் பற்று
மோடிடுஞ்சிவகிருபையினால்
தெள்ளிய வாணர் சொல்லிய கவியின்
திறமையு மறிந்தவருவப்ப
வள்ளிய செம்பொன்னளித்திடுந்தஞ்சை
யண்ணலி லுயர்விபு வுரையே. ௨௧௯

(இ-ள்)

கலைமான் கொம்பை சாணைக் கல்லில் ஒரு துட்டிடை யிழைத்து அதனோடு பசுவெண்ணெ 1 துட்டிடை, ஏலம் ½ வராகனிடை கலந்து நன்றாக மத்தித்து, காலையும் மாலையும், 5 நாள் சாப்பிட்டு மிளகாய், கைப்பு, புளிப்பு, புகையிலை தள்ளிபத்தியமாக இருக்க, மேகச்சூடு, நீர்க் கடுப்பு, காபிப்புண், இவை தீரும்.

## 237. மேகமிருபத்தோன்று, சயமிருமல், எலும்புருக்கி, காமாலை, பாண்டு, மேகச் சூட்டுக்கு ஏலாதி கிருதம்

நாகவின் பட்டை க்கருங்காலி ப்பட்டை
நன்னிலப்பனை க்கிழங்குடனே
பாகமுள்ளில வங்கம்பிட்டையுமோதியம்
பட்டையு மைவகை மருந்தும்
வாகுடன் வகைக் கிருபத்தஞ்சு பலமும்
வளமுடனிடித்திரு கலநீ
ராகவும் விட்டு எட்டிலொன்றாக
வதை க்காச்சி வடித்திடு வாயே. ௨௨௦

வடித்து த்தண்ணீர் விட்டான் கெழுங்கின்சார்
வளபுளியாரையின் சாறுங்

திடமுடன் பசுநெய் யதினுடபாலுஞ்
செப்பிய நால் வகையிலுந்தான்
விடுத்திடு வகைக்கு மிரண்டது படியு
மேவிடு கற்கந்திப்பிலியு
முடக்கொத்தா னோதியம் பட்டையுஞ் சுக்கு
முந்திரிப்பழ ங்கொத்த மல்லியே. ௫௧

கொத்தமல்லியு ஞ்செஞ்சந்தனமும் பெருங்
குமிழ் ம்பழம் பொன் முசுட்டையின் வேர்
நத்திய பேரிச்சம் பழ ங்கல் நார்
நாகப்பூ புளிவிரை த்தோலும்
முத்தக்காசிலவம் பிசின் வில்வ ப்பிஞ்சு
முதிர்த்திறு காஞ்சோறி வேரும்
சுத்த மாங்கொட்டைப் பருப் பதிவிடையஞ்
சொற் றிரிபலையுமு மேலமுமே. ௫௨

ஏலம் காட்டாத்திப்பூ வெள்ளி லோத்திர
மிலாமிச்சு மோம மஞ்சனக்கல்
ஞால மாதுளை மொட்டுடன் வெள்ளைக்
குங்கிலிய ங்கீழாநெல்லி
சிலந் தக்கோல ஞ்சாத்திர வேதி
செப்பில வங்கமு மழுக்கிரு
மூலந் தாமரையின்றாது கன்னாரி
மூலங் கோரோசனை தானே. ௫௩

தானிது முப்பத்தறுவகை மருந்து
தன்னிலோர் வகைக்கொரு கழஞ்சு
ஈனமில்லாத பசுவின்ற பாலி
லே யரைத்தே யதிற் கலந்து
தானெரித்தே பதங்கண்டதை யிறக்கிச்
சச்சிதானந்தரை ப்போற்றி



யேயமாக க்காலமே கால
மே கொளோர் மண்டலந்தானே. ௫௪

மண்டலந்தான் சேறித்த தையளவு
மாகவே கொண்டிட விரும
லண்டிய சயமேக மிருபத்தொன்ற
தல்லாலெரும் புருக்கியுமே
மண்டு காமாலை பாண்டுடன் சூடு
மற்றிடு ஞ்சிவ கிருபையினா
லண்டினோர் தம்மை க்காத்திடும் தஞ்சை
யாசர் கோன் விபுவருள் முறையே. ௫௫

(இ-ள்)

| | |
|---|---|
| நாகப்பட்டை | கருங்காலிப்பட்டை |
| கிலப்பனங்கிழங்கு | முள்ளிலவம்பட்டை |
| ஓதியம்பட்டை | |

இவை வகைக்கு 25 பலம் எடுத்து இடித்து 2 கலம் (24 மரக்கால்) ஜலம் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடிக்கட்டவும்.

தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு
புளியாரைச் சாறு

இவை வகைக்கு 2 படியும் முன்சொன்ன கஷாயத்தில் 2 படியும் பசு நெய் 2 படியும் விட்டுக் காய்ச்சி,

| | |
|---|---|
| திப்பிலி | முடக்கொத்தான் |
| ஓதியம்பட்டை | சுக்கு |
| முந்திரிப்பழம் | கொத்தமல்லி |
| செஞ்சந்தனம் | பெருங்குமிழ்ப்பழம் |
| பொன்முசுட்டைவேர் | பேரிச்சம்பழம் |
| கல்நார் | நாகப்பூ |

| | |
|---|---|
| புளியம்விதைத் தோல் | முத்தக்காசு (கோரைக்கிழங்கு) |
| இலவம் பிசின் | வில்வப் பிஞ்சு |
| சிறுகாஞ்சொறி வேர் | மாங்கொட்டைப் பருப்பு |
| அதிவிடையம் | திரிபலை (கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய்) |
| ஏலம் | காட்டாத்திப்பூ |
| வெள்ளி லோத்திரம் | இலாமிச்சம் வேர் |
| ஓமம் | அஞ்சனக்கல் |
| வெள்ளைக் குங்கிலியம் | மாதுளம் பூடு |
| தக்கோலம் | சீரா செல்வி |
| அமுக்கிறாக்கிழங்கு | லவங்கம் |
| சகஸ்ரவேதி | தாமரைத் தாது |
| கன்னாரி | கோரோசனை |

இவை வகைக்கொரு கழஞ்சு பசுவின்பால் விட்டரைத்து அதில் கலந்து எரித்துப் பதத்தில் நெய்யை இறக்கவும்.

இந்த நெய்யை தினமும் காலையில் ஒரு மண்டலம் சாப்பிட க்ஷயமிருமல், மேகம் 21, எலும்புருக்கி, காமாலை, பாண்டு, மேகச் சூடு முதலியவை தீரும்.

## முடிவுரை.

கலியுகம் காலாயிரத்துத் தொளாயிரமும்
  கணக்குடனிருபத்தி யெட்டும்
கலமிகு ஞ்சாலிய வாகனத்தா னும்
  கவிலுமாயிர த்தெழு நூறும்
பலனுறு காற்பத் தொன்பதின் மேவிற்
  பற்றிய சருவ சித்துதனில்
வலுவுள மகர மாத முப்பதனில்
  வண்மை தென்னளகை யிற்றுனே. ௫௬௬



தென்னளகை யை ச்செங்கோல் மனுநீதி
  செலுத்திய வள்ள லிலுயர்ந்த
மன்னர் கோன் சரபேந்திரன் பூமி
  மனுக்குபகார மதாக
வுன்னிய மேக வியாதி கட்கெல்லா
  முயர் பற்ப சூரண லேகியம்
வன்னமதாஞ் செந்தூர முங்கிருதம்
  வளமுள நெய் வடகமுமே. ௫௬௭

வடகமு மெண்ணெய பலவிதமான
  மருந்துகள் நோய்கள் தீருதற்கு
மடவுள செய்யுளைந்து நூற்றின் மேல
  றுபது கவிபதாயு ரைத்து
வடிவுள வாணி யருளது பெற்ற
  வாணருக் கெல்லும் புரிவோன்
றிடமுள காரை க்குறிச்சி வேலப்பச்
  செல்லப் பாவல னுரை நூலே. ௫௬௮

இந்த மேகரோக சிகிச்சை முறைகள் தஞ்சை சரபோஜ மகாராஜனால் கைகண்டதாகத் தெரிந்தெடுக்கப் பட்டுக் கலியுகம் 4928ம் வருஷம், சாலிவாகனசகம் 1749ம் வருஷம், இங்கிலீஷ் 1827 இவற்றிற்குச் சரியான சர்வஜித்து வருஷம் தை மீ 30 உ யில் காரைக்குறிச்சி வேலப்பப் பாவலரால் 560 செய்யுளாகப் பாடி முடிக்கப் பட்டது.

சுபம்.

# சரபேந்திரர் வைத்ய முறைகள்

## நீரிழிவு ரோக சிகித்ஸை முறைகளிலுள்ள மருந்துகளின் அகராதி


| மருந்துகள் | பக்கம் |
|---|---|
| * (அல்லிப்பூச்) சூரணம் (கோபிக்கும் பிரமேகம், வாதப்பிரமேகம், முதலியவைகளுக்கு) | 118 |
| (அதிமதுரச்) சூரணம் (பிரமிய உட்டினத்திற்கு) | 135 |
| அம்ருதாதிச் சூரணம் (மேகமிருபது, சூடு, வாயு, கைகாலெரிவு, சயரோகத்திற்கு) | 214 |
| அத்திப்பட்டை லேகியம் (இருபத்தோரு மேகம், சூலை, வாயு, இரிச்சரம், வெட்டை, சூதக வாயு, மூலம், இராணி, குன்மத்திற்கு) | 206 |
| அஞ்சனக்கல் பற்பம் (இருபது மேக வியாதிகளுக்கும்) | 204 |
| அப்பிரக பற்பம் (மேக ரோகங்களுக்கு) | 206 |
| அப்பிரகச் செந்தூரம் (நீரிழிவுக்கு) | 11 |
| அப்பிரகச் செந்தூரம் (நீரிழிவுக்கு) | 16 |
| அப்பிரகச் செந்தூரம் (பிரமேகத்திற்கு) | 108 |
| (அத்திப் பிஞ்சுச்) சாறு மருந்து (இரத்தப் பிரமேகம் முதலிய 20 மேகங்களுக்கு) | 157 |
| (அம்மான் பச்சரிசி) மருந்து (மேகத்திற்கு) | 191 |


*பிறைக் குறிகளுள் காணப்படும் பெயர்கள் நமது கற்பனைப் பெயர்களே.

பக்கம்


(அத்திப்பட்டை)க்குளி (இரத்தப்பிரமியத்திற்கும், சுக்கிலப்பிரமியத்திற்கும்) 137

(அமுக்கிராக்கிழங்காதி)ப்பிட்டு (மேகவாய்விற்கு) 160

ஆவாரம் விதைச்சூரணம் (நீரிழிவிற்கு) 10

ஆவாரம் விதைச்சூரணம் (நீரிழிவிற்கு 31

ஆவாரம் விதைச்சூரணம் (நீரிழிவிற்கு) 33

ஆவாராதிப்பட்டைச்சூரணம் (நீரிழிவிற்கு) 48

ஆவாரை விதைத்தூள் 67

ஆவாரை வித்தாதிச்சூரணம் (மதுமேகம், இரத்த மேகத்திற்கு) 262

ஆவாரைக்கஷாயம் (நீரிழிவிற்கு) 28

ஆமலகத்தைலம் (பிரமேகத்திற்கு) 92

ஆவாரையாதி எண்ணெய் (21 மேகத்திற்கும்) 165

ஆவாரைத்தைலம் (அஸ்திச்சூடு, மேகச்சூடு, மேகம் இருபத்தொன்றுக்கும் மூழ்க) 196

(ஆவாரையிலை)ச்சாறு மருந்து (பிரமியம், எலும்புருக்கிக்கு) 130

(ஆவாரையாதி உருண்டை (நீரிழிவிற்கு) 59

(ஆவாரையாதி) உருண்டை (பிரமேகமெல்லாம் தீர) 100

ஆவாராதி விழுது (வலுத்த நீரிழிவுக்கு) 25

ஆவாராதி விழுது (நீரிழிவிற்கு) 26

ஆவாரங்கொழுந்து மருந்து (நீரிழிவுக்கு) 64

ஆவார வேர் விழுது (நீரிழிவிற்கு) 64

(ஆடாதோடை)ப்பால் மருந்து (பிரமேகத்திற்கு) 121




பக்கம்


ஆவாராதிப்பிட்டு (நீரிழிவிற்கு) 32

ஆவாராதிந்தயிர் (நீரிழிவிற்கு) வேறு 28

ஆவாராதி அடை (நீரிழிவிற்கு) 51

ஆவாரைத்தோற்பை மருந்து (நீரிழிவிற்கு) 68

இரதச்செந்தூரம் (மேகரோகம், மேகவாயு, மேக சூலைக்கு) 164

(இண்டங்காய்) வெண்ணெய் (பிரமேகத்திற்கு) 116

(இலந்தை) விழுது (பிரமேகத்திற்கு) 123

(ஈரவெங்காய) மருந்து (இரத்தப்பிரமேகத்திற்கு) 153

ஈர வெங்காயப்பிட்டு (நீரிழிவிற்கு) 52

உருளரிசியாதிச்சூரணம் (மேகவெட்டை, உஷ்ண வாயு, எலும்புருக்கி, இருமலுக்கு) 225

(உகா வேர்ப்பட்டை) மருந்து (பிரமியத்திற்கு) 87

(ஊணான்கொழுந்து) விழுது (இரத்தப்பிரமியத்திற்கு) 127

(எருக்கம்பால்) மருந்து (மேகத்திற்கு) 188

(ஏலாதி)ச்சூரணம் (பிரமியத்திற்கு) 110

ஏலாதி கடாயம் (நீரிழிவிற்கு) 14

(ஏலாதி) கடாயம் (மேகத்திற்கு) 249

ஏலாதி கிருதம் (மேகம் 21, சயம், இருமல், எலும்புருக்கி, காமாலை, பாண்டு, மேகம், சூடு இவைகளுக்கு) 279

ஏலாதி உருண்டை (நீரிழிவிற்கு) 48

(ஏலக்காய்) சுரசம் (பிரமியத்திற்கு) 89

ஓட்டுருஞ்சியாதிப்பட்டைச் சூரணம் (நீரிழிவிற்கு) 60

## க

| | பக்கம் |
|---|---|
| கரிசலாங்கண்ணி மருந்து (பிரமியத்திற்கு) | 81 |
| (கருங்குங்கிலியச்) சூரணம் (பிரமேகத்திற்கு) | 120 |
| கங்காதரச் சூரணம் (மேகம் முதலான பயித்தியப் பித்தம், சயம், தலை மயக்கம், பாண்டு, மூலம், நீரடைப்பிற்கு) | 211 |
| கந்தகாதிச் சூரணம் (கைகால், சூலை, மேக வாயுவிற்கு) | 233 |
| கரிசாலைச் சூரணம் (மேக வாயுவிற்கு) | 232 |
| (கடலிரஞ்சிப் பட்டைக்) கஷாயம் (அரோசகத்திற்கும், நீரிழிவிற்கும்) | 37 |
| (கஞ்சாயிலைச் சுடர்) தைலம் (பிரமேகத்திற்கு) | 115 |
| கருணைக் கிழங்கு லேகியம் (இரத்தப் பிரமேகம் முதலான 20 பிரமேகத்திற்கும்) | 155 |
| கருணைக் கிழங்கு நெய் (இரத்தப் பிரமியத்திற்கு) | 126 |
| கல்யாண கிருதம் (இரத்தப் பிரமேகத்திற்கு) | 153 |
| கதலீகந்த கிருதம் (மேகமிருபது, பிரமியம், கல்லடைப்பிற்கு) | 242 |
| கணேபசிங்க கிருதம் (பிரமேகம் 20, பாண்டு, வாந்தி, தாகம், உன்மாதம், மூத்ரகிரிச்ரம், நீரடைப்பு, சோம ரோகத்திற்கு) | 245 |
| கல்நார் பற்பம் (மேக வியாதிகட்கு) | 228 |
| (கட்டுக்கொடிச்) சாறு மருந்து (நீரிழிவிற்கு) | 275 |
| (கரிப்பாலைப் பால்) மருந்து (சுக்கிலப் பிரமேகத்திற்கு) | 119 |
| (கலைமான் கொம்பு)க் கல்கம் | [illegible] |

## கி

| | பக்கம் |
|---|---|
| (கற்றாழை) மருந்து (பிரமியத்திற்கு) | 108 |
| (கற்றாழை) ஒத்தடம் (பிரமியம், பிரமியக் கடுப்பிற்கு) | 128 |
| காரை நீர் (நீரிழிவிற்கு) | 22 |
| (கார்ப்பாஸாஸ்தியாதி) தைலம் (நீரிழிவிற்கு மூழ்க) | 39 |
| (கார்போகி) எண்ணெய் (மேக வெடி, மேக வாயு, சூலை, புண், கிரந்திகளுக்கு) | 236 |
| காரிய பற்பம் (மேக வியாதிக்கு) | 173 |
| காரிய பற்பம் (விந்துப் பிரமேகம், சுக்கிலப் பிரமேகம், இரத்தப் பிரமேகம், எரிப் பிரமேகம் முதலான மேக வியாதிகளுக்கு) | 181 |
| காரியச் செந்தூரம் (பிரமிய ரோகங்களுக்கு) | 72 |
| காந்தாதி மருந்து (நீரிழிவிற்கு) | 55 |
| காந்தாதி உருண்டை (மேகம் 20, மூத்திரகிருச்ரம், எலும்புருக்கி, உள்ளுருக்கி, நீர்க்கடுப்பு, தாகசாந்திற்கு) | 184 |
| (காரைமிலை) மருந்து (நீரிழிவு, பெரும்பாடு, பிரமேகத்திற்கு) | 157 |
| கிருஷ்ணப்பிரக பற்பம் (மேக ரோகத்திற்கு) | 205 |
| கீழாநெல்லி விழுது (நீரிழிவிற்கு) | 30 |
| (கீழாநெல்லி) வெண்ணெய் (பிரமேகத்திற்கு) | 106 |
| குழித் தைலப் பொரி (பிரமேகத்திற்கு) | 208 |
| (குங்கிலிய) மெழுகு (பிரமியத்திற்கு) | 101 |
| (கூஷ்மாண்ட) கிருதம் (நீரிழிவிற்கு) | 146 |

பக்கம்


கெங்காதி லேகியம் (மேகம் 21, சூலை 6, பித்த ச்லேஷ்ம காசங்களுக்கு) 276

(கையாந்தகரை) வெண்ணெய் (பிரமியத்திற்கு) 90

கொன்றைச் சூரணம் (நீரிழிவிற்கு) 47

(கொம்பரக்குச்) கஷாயம் (பிரமியத்திற்கு) 74

கொன்றை மருந்து (பிரமியத்திற்கு) 76

கோவையிலைச் சூரணம் (நீரிழிவிற்கு) 67

(கோவையிலை) மருந்து (எட்டுவகை பிரமியத்திற்கு) 87

(கோவையிலை, பால்) மருந்து (மேகத்திற்கு) 189

(கோவைத் தண்டு) மருந்து (சந்தியைப்பற்றின மேக வெட்டைக்கு) 227

கோழிமுட்டை மருந்து (பிரமியத்திற்கு) 75

சந்தனாதிச் சூரணம் (பிரமேகத்திற்கு) 95

சங்காதிச் சூரணம் (மேக வாயு, சூலை, விடகடிக்கு) 228

சந்திரகாதிச் சூரணம் (மேகம் இருபத்தொன்று, கல்லடைப்பு, வெகு மூத்திரம், யோனி ரோகம், வெட்டை, கண்காலெரிவு, பாண்டு ரோகங்களுக்கு) 250

சந்தனாதி கடாயம் (மேகச் சூட்டிற்கு) 245

[illegible]பிர எண்ணெய் (பிரமியம் முதலான மேக வியாதிகளுக்கு) 77

(சர்க்கரை) லேகியம் (மூத்திர கிருச்ரம், மூத்ராசயத்தில் கல், உப்புப் பிரமேகம் முதலானவைகளுக்கு) 225

(சங்கங்குப்பி) லேகியம் (மேகம், சூலை, சோகை, பாண்டு, மூலவாயு, காமாலை, ஈளை, இருமல், விடப்பாகம், பித்த [illegible]ற்கு) 253


பக்கம்


(சங்கிலைச் சாறு) மருந்து (மேகத்தினுல் கை, கால், பிடிப்பிற்கு) 179

(சங்கம் வேர்)க் கல்கம் (கணுச் சூலை, வாயு, மேகச் சூடு, மேக வெட்டைக்கு) 234

சாணிப்பால் மருந்து (நீரிழிவிற்கும், காமாலைக்கும்) 16

சிவனார் வேம்பு (வெண்ணெய்) பிரமியத்திற்கு 105

சிக்கில் நெய் (பிரமியத்திற்கு) 148

(சிக்கில், பால்) மருந்து (சீழ்ப் பிரமேகத்திற்கு) 143

சுகபேதி மருந்து (மேகத்திற்கு) 187

சுக்காதி மருந்து (சுக்கிலப் பிரமேகத்திற்கு) 69

(சூரையாதி) கஷாயம் (நீரிழிவிற்கு) 45

செஞ்சோள விழுது (நீரிழிவிற்கு) 53

(செம்முள்ளி) மருந்து (நீர்க்கடுப்பு, சுக்கிலப் பிரமியத்திற்கு) 145

(செப்பு நெருஞ்சிப்) பிட்டு (பிரமேகத்திற்கு) 122

செங்கலாதி மருந்து (நீரிழிவிற்கு) 65

சேங்கொட்டை நெய் (மேக வாயு, மேக வியாதிக்கு) 180

தழுதாழைச் சாறு மருந்து (மேகத்திற்கு) 178

(தண்ணீர்விட்டான் கிழங்கு) கனி (நீர்மோராய்க் கழிகிற கழிச்சலுக்கு) 143

(தாழை விழுதுச்) சாறு மருந்து (சுக்கிலப் பிரமேகத்திற்கும், இரத்தப் பிரமேகத்திற்கும்) 140

(தாழை விழுதுச்) சாறு மருந்து (பிரமேகத்திற்கு) 122

தாளீசபத்திரி வடகம் (பிரமியம் முதலான ஸகல ரோகத்திற்கும்) 82

பக்கம்

(தாழை விழுதுச் சாறு) மருந்து (சுக்கிலப் பிரமியம், இரத்தப் பிரமியம், சீழ்ப் பிரமியம், சதை நீரடைப்பிற்கு) 103

தாமரை வளையாதிப் பிட்டு (நீரிழிவிற்கு) 59

திருகடு உருண்டை (நீரிழிவிற்கு) 58

(திரிபலாதி) எண்ணெய் (மேகம், ஈளை, இருமல், பித்த வெட்டைக்கு) 258

(திருக் கள்ளி) எண்ணெய் (ஸகல மேகம், வாயு, சூலை, மேகம் முதலியவைகளுக்கு) 220

(திரிபலாதி) கடாயம் (மேக நோய்க்கு) 244

(திரிகடுகோதி) சூரணம் (பிரமேகத்திற்கு, நீரடைப்பிற்கு, உட்டினத்திற்கு) 136

துளசி, நல்லெண்ணெய் மருந்து (மேக வெட்டைக்கு) 211

(தும்பையிலை) மருந்து (சுக்கிலப் பிரமேகத்திற்கு) 152

(துரிசாதிப்) பூச்சு (மேக வீக்கத்திற்குப் பூச) 235

(தூதுவேளை, பால்) மருந்து (நீர்மோராய் கழிகிறதற்கு) 143

(தென்னம்பாளைப், பால்) மருந்து (பிரமியத்திற்கும், இரத்தப் பிரமியத்திற்கும்) 132

(தென்னம்பாளை) விழுது (பிரமியத்திற்கு) 99

(தேத்தான் வித்துப்) பூச்சு (மேக வீக்கத்திற்கு) 235

(தேத்தான்கொட்டை) மருந்து (மேகத்திற்கு) 191

(தேத்தான் வித்து) விழுது (வெள்ளைப் பிரமேகத்திற்கு) 98

(தேங்காய்) மருந்து (பிரமேகத்திற்கு) 106



பக்கம்

(தேத்தான்) வித்து விழுது (நீரிழிவிற்கு) 44

(தேங்காய்ப்) பாலெண்ணெய் (மேக வாயுவிற்கு) 195

(தேங்காய்ப்) பாலெண்ணெய் (தவறுதலாகக் 'ஒருதம்' என்று கூறப்பட்டிருக்கிறது, (மேக வாயு, சூலை, ஒரத்தி, புண், அரையாப்பிற்கு) 192

(தேற்றும் விதைச் சூரணம்) (நீரிழிவிற்கு) 29

தேற்றான்கொட்டைச் (சூரணம் நீரிழிவிற்கு) 12

(தை வேளை) அடை (பிரமியம், சூலைக்கு) 128

நல்லெண்ணெய் மருந்து (பிரமியத்திற்கு) 74

நல்லெண்ணெய் மருந்து (மேகத்திற்கு) 218

(நந்தியாவட்டை) நெய் (பிரமேகம், மேகவெட்டைக்கு) 96

நார்த்தம்பழ மருந்து (பிரமியத்திற்கு) 159

(நிலக்குமிழ்) நீராகாரம் (சுக்கிலப் பிரமியத்திற்கும், நீர்க்கடுப்புக்கும்) 144

நிலப்பனைக் கிழங்கு நெய் (மேகம் 20, சூலை, காமாலை, பாண்டு, எலும்புருக்கி, நெஞ்சுவலி, கெர்ப்ப அழிவு, மேல் மூச்சு, இருமல், ஸகலத்திற்கும்) 168

நிலப்பனைக் கிழங்கு நெய் (அபஸ்மாரம், விப்புருதி, விடபாகம், பிரமேகம், இருபதுக்கும்) 149

நிலக்குமிழ் கடாயம் (மேகத்திற்கு) 29

நிலயாவாரைச் சூரணம் (நீரிழிவிற்கு) 21

நீர்ப்பூலா வேர் மருந்து (சீழ்ப் பிரமியத்திற்கு) 160

நீராகார மருந்து (பிரமியத்திற்கு] 80

(நீர்முள்ளி விரைச்) சூரணம் (நீரிழிவுக்கு) 23

| | பக்கம் |
|---|---|
| நெல்லியாதிக் கடாயம் (நீரிழிவுக்கும், மூத்திரக்ருச்ரத்திற்கும்) | 15 |
| (நெல்லி முள்ளி)க் கடாயம் (மேக வியாதிக்கு) | 238 |
| (நெல்லி முள்ளி)க் கடாயம் (மேக வியாதிக்கு) | 262 |
| (நெல்லிக்காய்ச்) சாறு மருந்து (பித்த வெட்டை, மேக வெட்டைச் சூட்டிற்கு) | 228 |
| (நொச்சியிலை, பால்) மருந்து (மேகத்திற்கு) | 190 |
| (நொச்சிக் கொழுந்து) மருந்து (மேகத்திற்கு) | 189 |
| (பரங்கிப்பட்டைச்) சூரணம் (பிரமேகத்திற்கு, வயிற்றில் புண்ணுக்கு) | 114 |
| பஞ்ச சர்க்கரை (நீரிழிவிற்கு) | 36 |
| பரங்கிப்பட்டைப் பதங்கம் (மேகம் 18, கைகால் பிடிப்பு, சூலை, வாய்வுக்கும்) | 201 |
| பட்டுத்துணிக் கருக்குக் கடாயம் (மேக வெட்டை, சூட்டுக்கு) | 230 |
| (பருத்திப் பிஞ்சு) எண்ணெய் (பிரமியத்திற்கு) | 104 |
| பரங்கிப்பட்டை லேகியம் (மேகத்திற்கு) | 177 |
| பரங்கிப்பட்டை லேகியம் (மேகம் 20, வலி, வீக்கம், சூலை, பிடிப்பிற்கு) | 203 |
| பஞ்சகவ்விய கிருதம் (பிரமேகங்களுக்கு) | 123 |
| (பரங்கிப்பட்டை) நெய் (பிரமியம், பிரமிய வாதத்திற்கு, புண் சூலைக்கு) | 133 |
| (பற்ப) மாத்திரை (பிரமேகத்திற்கு) | 101 |
| (பச்சரிசி) மருந்து (பிரமேகத்திற்கு) | 108 |
| பனை நுங்கு மருந்து (நீரிழிவுக்கு) | 16 |





| | பக்கம் |
|---|---|
| (பருத்திவிதைப் பால்) மருந்து (நீரிழிவுக்கு) | 53 |
| பருத்திவிதை மருந்து (நீரிழிவுக்கு) | 63 |
| பருத்திப் பால் பொங்கல் (மேக வெட்டைக்கு) | 222 |
| (பரங்கிப்பட்டைத் தயிர்) மருந்து (மேக வெட்டைக்கு) | 224 |
| பனம்பழங்குத்) தயிர் (மேகத்தின்மேல் சூடு, எரிப்பு, சாபிப் புண்ணுக்கு) | 274 |
| பாலொடிசிப்) பொங்கல் (பிரமேகத்திற்கு) | 121 |
| பாதிரிப்புட்டு (நீரிழிவிற்கு) | 20 |
| பார்லியாதிக் கடாயம் (பிரமியத்திற்கு) | 142 |
| பாதிரிக் கஷாயம் (நீரிழிவிற்கு) | 27 |
| பிராய்த்தான் மருந்து (வயிற்றுப்பேதி, இரத்தம் விழுகிறதற்கு) | 158 |
| (பிருங்காமலக)த்தைலம் (பிரமேகத்திற்கு) | 92 |
| (பிரக்கம் வேர்) மருந்து (பிரமேகத்திற்கு) | 123 |
| (புழுக்கொல்லியிலைப்) புட்டு (பிரமேகத்திற்கு) | 120 |
| (புளியம் வேர், பால்) மருந்து (பிரமேகத்திற்கு) | 107 |
| (புளியிலைச் சாறு) மருந்து (மேகத்திற்கு) | 177 |
| (புற்றுஞ் சோறுச்) சூரணம் (மேக, மதுமேகத்திற்கு) | 186 |
| புளியங்கொட்டைத் தோல் சூரணம் (நீரிழிவிற்கு) | 69 |
| பூர) எண்ணெய் அல்லது வெள்ளை எண்ணெய் (மேகத்திற்கும், வாயுவிற்கும்) | 195 |
| பூண்டு) எண்ணெய் (நீராத மேகத்திற்கு உள்ளுக்கு) | 199 |
| பெருமருந்துச் சூரணம் (நீரிழிவிற்கு) | 12 |

பக்கம்

(பெருந்துத்திப், பால்) மருந்து (நீர்மோராய் கழிகிற கழிச்சலுக்கு) 143

பொடுதலை மருந்து (பிரமியத்திற்கு) 81

(மஞ்சள்) மருந்து (நான்குவகைப் பிரமியத்திற்கும், வாயுவினாலெடுத்ததற்கும்) 141

மஞ்சிக்கிழங்குச் சூரணம் (இரத்தப் பிரமேகம், நீரிழிவிற்கு) 158

மருதம்பட்டைக் கஷாயம் (நீரிழிவிற்கு) 13

(மயிர்மாணிக்க) மருந்து (இரத்தப் பிரமியத்திற்கும், சுக்கிலப் பிரமியத்திற்கும்) 140

(மாக்கல்) பொடி மருந்து (சுக்கிலப் பிரமேகத்திற்கும், இரத்தப் பிரமியத்திற்கும்) 140

(மிளகு) எண்ணெய் (பிரமேகத்திற்கு) 142

(முதியார் கூந்தல்) மாத்திரை (பிரமியத்திற்கு) 109

(முடக்கொத்தான்) சூரணம் (இரத்தப் பிரமியத்திற்கும், சீழ்ப் பிரமியத்திற்கும்) 86

மூத்தக்காசுக் குழம்பு (நீரிழிவுக்கு) 17

(முடக்கொத்தான் சாறு) எண்ணெய் (பிரமேகத்திற்கு) 91

(முசுமுசுக்கைச் சாறு) மருந்து (சுக்கிலப் பிரமியத்திற்கும், நீர்க்கடுப்பிற்கும்) 145

(முசுமுசுக்கை) மருந்து (மேகத்திற்கு) 188

(முடக்கொத்தான்) மருந்து (மேகத்திற்கு) 190

(முசுமுசுக்கை) வெண்ணெய் (சத்தி வெட்டைக்கு) 234

(மூங்கிலிலைக்) கடாயம் (மேக வியாதிக்கு) 239



பக்கம்

மேகத்தைப் போக்கும் ஔடதங்கள் 112

(லவங்காதி) வடகம் (பிரமியத்திற்கும், ஜுரபாத தாகத்திற்கும்) 109

(வட்டத்துத்திச்) சூரணம் (சேற்றும பிரமிய தாகத்திற்கு) 141

வல்லாதி லேகியம் (மேகவாயு, மேகசூலைக்கு) 179

வல்லாதி லேகியம் (மேக வெடி, வாயு, சூலை, புண், கரப்பான் முதலானதற்கு) 260

வங்க பற்பம் (பிரமியத்திற்கு) 138

வங்க பற்பம் (மேக வாயு, சூலைக்கு) 162

(வட்டத்துத்தி) வேர் மருந்து (பிரமியத்திற்கு) 159

(வாழைப்பூ) வடகம் (தசையடைப்பு, கல்லடைப்பு, மேக வெட்டை, மூத்திரகிரிச்சரம், வெள்ளை முதலான மேக ரோகங்களுக்கு) 273

(வாழைக் கிழங்கு) மருந்து (பிரமியத்திற்கு) 98

(விடத்தேரிலைக்) களி (பிரமியத்திற்கு) 117

விடத்தேரியிலை விழுது (நீரிழிவுக்கு) 21

விடத்தலை மருந்து (நீரிழிவுக்கு) 68

(வில்வாதி) லேகியம் (முறையில் 'எண்ணெய்' எனக் கூறப்பட்டிருப்பது சரியல்ல) (மேகம் இருபது, உஷ்ணம், சூதிகா வாயுவுக்கு) 239

(வில்வாதி) எண்ணெய் (சீழ்ப் பிரமேகத்திற்கு) [illegible]

வில்வாதி கஷாயம் (நீரிழிவுடன் தாகத்திற்கு) 24

வில்வக் கடாயம் (மற்றொரு முறை) 24

(வெள்ளைக் குன்றி வேர்ச்) சூரணம் (பிரமியத்திற்கு) 88

| | பக்கம் |
|---|---|
| வெல்லாதிக் கடாயம் (நீரிழிவுக்கு) | 38 |
| (வெட்டிவேர்க்) கடாயம் (மேகச் சூட்டுக்கு) | 244 |
| (வெள்ளை வெங்காய) எண்ணெய் (பிரமியம், பிரமிய வாதம், பிரமியக் கடுப்பிற்கு) | 128 |
| (வெட்பாலை) எண்ணெய் (மேக வாயு, மேக சூலைக்கு) | 193 |
| (வெள்ளை) எண்ணெய் (சூலை, வாயு, கடுப்பிற்கு, தலை வலிக்கு) | 235 |
| வெள்வங்க பற்பம் (நீரிழிவிற்கு) | 30 |
| வெள்வங்க பற்பம் (நீரிழிவிற்கு) | 49 |
| (வெங்காய) மருந்து (பிரமியம், கல்லடைப்பிற்கு) | 103 |
| (வெள்ளெரிக்காய்) மருந்து (பிரமியம், இரத்தப் பிரமியத்திற்கு) | 132 |
| வெள்ளி லோத்திர மா (நீரிழிவுக்கு) | 54 |
| (வெள்ளை இண்டுப்) பிட்டு (பிரமியத்திற்கு) | 130 |
| (வேப்பம் பட்டைக்) குழித்தைலம் (முடக்கல், கூன் கட்டு, கடுப்பிற்கு) | 131 |
| வேப்பம் பிசினிச் சூரணம் (நீரிழிவிற்கு | 62 |
| வேலம்பூவாதிச் சூரணம் (நீரிழிவிற்கு) | 63 |
| ஸ்ரீகண்டாதிச் சூரணம் (இருபது மேகம், அரித்ரா மேகம், இரத்த பித்தம், சூலை, நீரடைப்பு, கண் காலெரிவுக்கு] | 218 |
| ஜாதிலிங்க குளிகை (நீரிழிவிற்கு) | 56 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 14 | (ஒருகாசிடை கூட்டவும்) | (3 காசிடை கூட்டி) |
| 19 | 13 | மெருகங்கிழங்கின் | அறுகின் |
| ,, | 15 | வைத்துக்கொண்டு | என்பதின் பிறகு 'கெய் சேர்த்து' என்பதைச் சேர்த்துக்கொள்ளவும். |
| 20 | 10 | சம எடை | சமஎடை (வகைக்கு 1 சேர்) |
| ,, | 11 | வரட்டியில் | 100 வரட்டியில் |
| ,, | 17 | ஒகு | ஒரு |
| 21 | 19 | பிரமானம் | பிரமாணம் |
| 27 | 22 | சுக | சுஉ |
| ,, | 29 | பக்கத்தின் அடியில் இதைச் சேர்க்கவும். | |

## 22. a நீரிழிவுக்கு மருந்து

ஆவாரந்துளிர் கல்மதங் கொன்றை வேர்
நீயரைத்துப் புளிமோரில் உண்பீரால்
தீவிரைந்து வருகினும் திரைகடல்
காவிரைந்து வரினும் கடக்குமே. சுங

(இ-ள்)

ஆவாரந்துளிர், கல்மதம், கொன்றை வேர் இவை சமனெடை சேர்த்து அரைத்துப் புளித்தமோரில் சாப்பிட நீரிழிவு தீரும்.

| | | | |
|---|---|---|---|
| 35 | 13 | சுக்கு } என்ற வார்த்தைகளை நீக்கவும். | |
| ,, | 17 | சுக்கு } | |
| 37 | 11 | வரியின் கடைசியில் 'நிலப்பனங்கிழங்கையும்' என்று சேர்க்கவும். | |
| 38 | 24 | 'இச்சா பத்தியமாக இருக்கவும்' என்பதைச் சேர்க்கவும். | |
| 42 | 7 | வரிக்குப் பிறகு 'அத்திப் பட்டை' சேர்க்கவும். | |
| 45 | 8 | வேருங் | வேருக் |
| 51 | 26 | தேய்த்து | தோய்த்து |
| 55 | 5 | கழஞ்சளவால் | கழஞ்சளவாக |
| 56 | 8 | சாபபிட | சாப்பிட |
| 57 | 25 | ஒது | ஒரு |
| 61 | 5 | வாரகனிடை | வராகனிடை |
| 65 | 8 | சரப்பூபதி | சரபபூபதி |
| 66 | 23 | சம்பளி | கம்பளி |
| 67 | 17 | படி | பிடி |
| 70 | 1 | படுத்தி | பருத்தி |
| 72 | 2 | காரிய | காரீய |
| 84 | 7 | மேலேசொன்ன 3பலம் | தக்கபடி |
| 85 | 15 | வாயவுஞ் | வாயுவுஞ் |



| | | | |
|---|---|---|---|
| 96 | 16 | மிளகாணை | மிளகரணை |
| 99 | 19 | அனிவலபக்கல்லு | அனிபலபக்கலு |
| 100 | 10 | கல்லுப் பொடி | மாக்கல் பொடி |
| 103 | 17 | நெய் விட்டு | நெய் ஒரு உழக்கு விட்டு |
| 104 | 13 | ½ படி | உரி (¼ படி) |
| 110 | 4 | புசு | பசு |
| 113 | | பக்கத்தின் அடியில் தேன், நிலப்பனங் கிழங்கு, சுத்திசெய்த இரும்பு என்று சேர்க்கவும் | |
| 118 | 5 | களியாக | தண்ணீர் விட்டுக் களியாக |
| 125 | 8 | முதல் 13 வரை 1 படி | ¾ படி |
| 132 | 10 | 236-ம், 237-ல் முதல் 3 அடிகளும் | 238-ம் 239-ல் முதல் அடியும் |
| ,, | 11 | முந்திய முறையின் | முந்திய 121-ம் நெ. முறையின் |
| 141 | 5 | வேளை வீதம் | வேளை வீதம் வெய்யிலிருக்கும் தினங்களில் |
| 143 | 6 | 1½ பலம் | ½ பலம் |
| 146 | 11 | சுக்கிலப் பிரமேகம் | சுக்கிலப் பிரமேகம், நீர்க்கடுப்பு முதலியவை |
| 164 | 8 | தின ளவிடியிலே | தினள வடியிலே |

| | | | |
|---|---|---|---|
| 165 | 9 | கொடுக்க | கொடுக்க வாயு ரோகம் தீரும். பசு வெண்ணெயிற் கொடுக்க |
| 172 | 10-வது வரிக்குக் கீழ் 'ஏலக்காய்' சேர்க்கவும். | | |
| 178 | 16 | நல்லெண்ணெய் இவ்விரண்டையும் | நல்லெண்ணெய், வெள்ளைப்பூண்டின் சாறு இவை மூன்றையும் |
| 189 | 16 | வகைக்குத் துட்டிடை | வகைக்கு 3 துட்டிடை |
| 191 | 3 | மூன்று நாள் | 3 அல்லது 5 நாள் |
| 193 | 14 | சேர்த்துச் | சேர்க்காமல் |
| 197 | 7 | சித்தரத்தை | சிற்றரத்தை |
| 199 | 5 | கோரைக்கிழங்கு | பூலாங்கிழங்கு |
| 202 | 21 | இக்கலசத்தை | இக்கலசத்தைக் கவிழ்த்துவைத்து |
| 210 | 26 | 5 பலமும் | 25 பலமும் |
| 213 | 18 | சயிலேகம் | சைலேயம்(சிலாஜது) |
| 214 | 2 | இலவம்பிசின் | இலவம் பிஞ்சு |
| 216 | 1 | நாற்றி | நூற்றி |
| 217. | 13 | சீரகம் | கருஞ்சீரகம் |
| 242 | 12 'பதத்திலிறக்கி' என்றதன்பின் 'ஆறியபின் தேன் 1 படி விட்டு' என்று சேர்க்கவும். | | |
| ,, | 16 | நோய்களும் | நோய்களும், சூதிகா வாயு, உஷ்ணமும் |



| | | | |
|---|---|---|---|
| 248 | 16 'பொன்னுங்கணிச்சாறு' என்பதை எடுத்து 22வது வரிக்குப் பிறகு சேர்க்கவும். | | |
| 249 | 10 | 2 வராகனிடை | 2 வராகனிடையும் குங்குமப்பூ 1 வராகனிடையும் |
| ,, | 15 | மழஞ்சு | கழஞ்சு |
| 252 | 18-ம் வரிக்குக் கீழ் 'பூமிச்சர்க்கரைக் கிழங்கு, சன்னலவங்கப்பட்டை' சேர்க்கவும். | | |
| 258 | 4 | 48 நாள் | 40 நாள் |
| 264 | 12 | $1\frac{1}{2}$ படியை | $1\frac{3}{4}$ படியைத் தண்ணீரில் |
| 269 | 23 | பொடுதலைச் சாறு | கற்றாழஞ்சாறு |
| 278 | 10 | கந்தகம் | சுத்திசெய்த கந்தகம் |
| ,, | 17 | 20 நாள் | 60 நாள் |
| ,, | 18 | தீரும் | குன்மம் 3ம், பித்த ச்லேஷ்ம காசம் முதலியவைகளும் தீரும். |

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 101719
EGMORE, MADRAS
LB:4:6
N51